# தமிழ்ப் பேராய்வு
# ஆய்விதழ்

தொகுதி - 7 (பகுதி 2)
Volume - 7 (Issue 2)

டிசம்பர் / December 2018

# JOURNAL OF TAMIL PERAIVU

Published by
**Department of Indian Studies**
**Faculty of Arts and Social Sciences**
**University of Malaya**

Indexed by MyJurnal
Malaysian Citation Centre

UNIVERSITY OF MALAYA
*The Leader in Research & Innovation*

**ISSN 2289- 8379**

# Editorial Board

2016-2019

## Editor–in–Chief

## Professor Dr. M. Rajantheran, Malaysia

Indian civilization, Tamil culture and literature, early cultural relations between India and Southeast Asia & culture and life of the Malaysian Indians

## Chief Executive Editor

## Assistant Professor Dr. Silllalee S. Kandasamy

Media, Tamil literature and culture, Malaysian Indians & sociology

## Editorial Board Members

**Era. Kamarasu,** Professor Dr – Tamil Language, Classical literature, modern literature & culture, Department of Tamil Literature. Tamil University, Tanjavur, Tamil Nadu, India.

**G. Singaravelu,** Professor Dr- Primary Education, Teacher Education, English Education, Head, Department of Education, Syndicate member of the university, Bharathiar University, Coimbatore, Tamil Nadu, India.

**Ira. Kurinji Vendan,** Professor Dr- Tamil literature, Culture & Diaspora. Post graduate section, Arinyar Anna College, University of Pondicherry.

**Jeevendiran Chemen,** Associate Professor Dr- Ethic identity of Mauritian Tamils, Tamil language and Linguistic & Sociology. Mahatma Gandhi Institute, University of Maurititus.

**Kizhambur S. Sankara Subramanian,** Tamil journalism, Tamil Literature and Culture & Tamil Civilization, India.

**K. Chidamparam,** Assistant Professor Dr. - Linguistics, English, Human rights, International Institute of Tamil Studies,CPT Campus,Taramani, Chennai, Tamil Nadu.

**Kanmani Munusamy, Dr. -** Software Engineering, ontology, Data Mediation - Information Technology, Centre of Information Technology, University of Malaya, Kuala Lumpur, Malaysia.

**Mohanadass Ramasamy,** Senior Lecturer Dr- Language and linguistics, Head Department of Indian Studies. University of Malaya, Malaysia.

**P. Sivakumar,** Professor Dr – Educational Technology, Environmental Education & Biology Education, Dean, Faculty of Education, Alagappa University, Tamil Nadu, India.

**Paramasivam Muthusamy,** Associate Professor Dr- Tamil language and literature, socio-linguistics, pedagogy and Tamil culture. Department of Foreign Languages. Faculty of Modern Languages and Communication, University Putra Malaysia.

**Ponsamy Tiroumalechetty,** (Retired) Associate Professor Dr – Socio- linguistics, Socio Culture of Tamils. Head, School of Indian Studies, Mahatma Gandhi Institute, Mauritius.

**Rakkappan Velmurugan,** Senior Lecturer Dr- Linguistics, Pedagogy, Tamil language, Literature & Grammar. Asian Languages and Cultures Academic group, National Institute of Education, Nanyang Technological University, Singapore.

**Samikkanu Jabamoney Ishak Samuel,** Associate Professor Dr – Malaysian Tamil Literature, Modern Tamil Literature, Tamil Language and Pedagogy. Tamil unit Coordinator, Sultan Idris Educational University.

**Seethalakshmi,** Associate Professor Dr- Tamil lexicography, teaching Tail as a second language, Tamil Pedagogy, Sociolinguistics & Literature through Mass Media. Department of Asian Languages & Cultures (ALC), Nanyang Technological University, Singapore.

**V. Maheswaran,** Professor Dr- Epigraphy, Tamil culture, folklore, literature. Department of Tamil, University of Peradeniya, Peradeniya, Sri Lanka.

**Vasu Aranganathan,** Dr- History of Tamil language, literature, religion, inscriptions & Teaching and learning of Tamil language. South Asia Studies, University of Pennsylvania, USA.

Journal of Tamil Peraivu Editorial office

Office of the Editor – in – Chief
No. 132, Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences,
University of Malaya, 50603 Kuala Lumpur, Malaysia
Tel: +60379675670
rajanmun@um.edu.my / rajantheran@gmail.com
Website: www.tamilperaivu.um.edu.my

**Publisher**
Department of Indian Studies,
Faculty of Arts and Social Sciences,
University of Malaya,
50603 Kuala Lumpur, Malaysia.
Tel: +60379675510

**Sponsored by**
Almaa Herbal Nature Pvt ltd
No.1/8, Pinjala Subramanian street,
T. Nagar, Chennai – 600 017
Tamilnadu, India
mglv@rediffmail.com/ www. Almaaherbal.com

**Printed at**
Big C Graphics (M) Sdn. Bhd
No. 36, Ground Floor, Jalan Tun Sambanthan 3, Brickfilds, 50470,
Kuala Lumpur, Malaysia

---

The publisher of Tamil Peraivu Aivithal (Journal of Tamil Peraivu), will not be responsible for the statement made by the authors in any articles published in the journal. Under no circumstances will the publisher of this publication be a liable for lost of damage cost by your reliance on the advice, opinion or information obtained either explicitly or implied through the contents of this publication.

© Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences, University of Malaya. All rights reserved. No part of this journal may be reproduced in any forms or by any means without publisher's prior permission.

# PREFACE

The Department of Indian Studies, University of Malaya brings out the seventh volume (issue 2) of *Tamil Peraivu* which is a bi-annual journal. Academicians around the globe contribute their articles to this journal. The present volume consist of fifteen research articles. The leit –motive of a research has to be scientific and this is the sole objective of this journal.

The article, 'Alchemy in Siddha Literature' by Dr. L. Pushpa Latha (India), focuses on Alchemy in Siddha literature. The writer of this article establishes that discussion about Alchemy which to be found in Siddha literature is mainly about treating diseases and retaining youth. There is also valuable information about the early traces of Alch emy in this article. The following article is by Associate Professor Dr. Samikkanu Jabamoney Ishak Samuel (Malaysia) entitled. "The Contributions of Tirunelveli Tamil Christians in the Development of Tamil Education in the State of Perak" is an attempt to expose the contribution of Thirunelveli Tamil Christians in the growth of Tamil education in the state of Perak, Malaysia.

The third article by Gauthama Sanna is entitled," Thiruvalluvar's birth, place of birth and upto his demise : A study based on the perspective of Ayotthidasa Pandithar".This article provides a new perspective about the life history of Thiruvalluvar as compared to the existing body of the knowledge in the field. These findings are supported by some valid data from the inscriptions and research works. The main evidence for this study has been obtained from the research findings of Thirukkural by Ayothitasar. The next article is by Dr Uma Allaghery (Mauritius) deals with problems and solutions in the implementation of Communication Skills in the Primary schools of Mauritius. The author highlights problems that both the teachers and the students are facing during the implementation and also suggests probable solutions which might help to make Communication Skills interesting.

'The Puzzles and Riddles - A Study - A Study", by Associate Professor Dr. Stalin (India) is the next article in this of Tamil Peraivu journal. This article explains the difference between the Tamil words, 'Vidi' (puzzles) and 'Vidukathai' (riddles). 'Vidi' involves short questions made up of one or two words, whereas, 'Vidukathai' involves a question asked based on a brief situation or a story. In this article, the special characteristics on 'Vidi' and 'Vidukathai' are well explained based on field work conducted in Kancipuram, India. The following article of Parvathi Vellachami and Professor Dr.M.Rajantheran (Malaysia) entitled, "Mahakavi Bharathiar's Intellectual Thinking in Teaching and Learning of Moral Education". This article mainly establishes as how to integrate Mahakavi Bharathiar's poems in teaching and learning of Moral Education.

The next article entitled, "Fate in Tamil Tradition" was written by Dr.P.Mohan. This article surveys and analyses the concept of fate found in the Tamil literature. The writer quotes incidents that portray fate from various Tamil literary texts. He further establishes that fate is an important aspect in the life of the Tamils. The following article by Dr. Jothi S. Themozhi (United States of America) explains the contributions of Buddhadatta to the History of Tamil Nadu. This article identifies some passages from Buddhadatta's literary work that mentions the Kalabhra ruler of Buddhadatta's time, King Achyutavikranta. Based on earlier scholars' research, this article also attempts to identify the location of Buthamangalam, where the monk Buddhadatta resided while penning his work during the fifth century Chola country.

This following paper by Dr.S.Kanmani Ganesan deals with the fact that a communal sector (cast) derived from the '*thinai maanthar' parathavar* - the specific people who lived in the *neithal* land i.e.area near sea. This article defies those researchers who are reluctant to accept the fact that there were communal sectors prevailing in the ancient Tamil Nadu. The next article by Dr M S Shri Lakshmi describes the state of Children's literature during the period prior to the freedom of Singapore from Malaya and proceeds to highlight how it has sprouted ever since independence of the country in 1965**.** The following article written by Dr.Satyaraj is entitled, "Uyirmei Ezhuthu: History and the contemporary state", focuses on Tamil grammar, mainly discusses about Uyirmei ezhuthu. This article is an outcome of a research regarding the history of Uyirmei ezhuthu and the contemporary level of it at present.

"The records of Halle Franckeischestifftung (Germany) Tamil palm leaves and paper manuscript collections" by Dr.K.Subashini (Germany) is the next article in this volume of Tamil Peraivu journal. This article examines selected number of Tamil palm leaves and paper manuscripts from the archives of Francke Foundations in Halle, Germany and set path to further research in this area to study and understand the social system, culture, history and life style of Tamils and Tamil Nadu that has significat potentials in filling the gaps in the Tamil Nadu history. The next paper by K.S. Sangeetha, entitled, "Tamil Language Syllabus at the primary level 1957 – An Analysis". This paper is to written to investigate the content used for teaching Tamil 60 years ago. The author evaluates how the syllabus has been effectively used as a tool to transform students as future resources of the society.

The following article by Sharmila Sathasivam and Dr.Silllalee S. Kandasamy, entitled. "The Glory of Maran Sri Marathandavar Temple "is an attempt to expose the history and the tradition of this well-known temple located in Pahang, Malaysia. The last article of this volume is entitled, "Portrayal of women in creative writings of *Imayam Padaippugal*" authored by Dr. R. Vijayasamundeswary and M.Saraladevi. This article highlights the concept of real feminism based on the creative writing of Imayam Padaippugal, a collection of Tamil creative writings.

This Journal in its sustaining effort records the innovate ideas of many researchers. The Editorial Board feels immense pleasure in bringing this seventh Volume (Issue 2) of *Tamil Peraivu* expressing heartfelt thanks to all the contributors and evaluators of this volume. Last but not least, we would like to thank Mr.MGL.Velayutham – Alma Herbal Nature Pvt. Ltd for his sincere generosity in sponsoring this journal.

**Professor Dr.M.Rajantheran**
**Chief Editor**
**20.12.2018**

# முகவுரை

தமிழ்ப் பேராய்வு ஆய்விதழின் ஏழாவது தொகுபின் இரண்டாவது பகுதியாகிய இவ்விதழை மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை வெளியீடு செய்கிறது. அறையாண்டிதழாக வெளியீடு காணும் இவ்விதழில் பன்னாட்டு அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெறுகின்றன. ஆய்வு என்பது அறிவியல் பூர்வமாக இருக்க வேண்டும் என்பதால் இவ்வாய்வேடு அதனை முன்னிருத்தி உருவாக்கம் கண்டுள்ளது. இந்தத் தொகுப்பில் மொத்தம் பதினைந்து ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

'சித்த இலக்கியத்தில் இரசவாதம்' எனும் தலைப்பிலான முனைவர் ல.புஷ்பலதா (இந்தியா) அவர்களின் கட்டுரையானது சித்தர் இலக்கியங்களில் இரசவாதம் குறித்த தகவல்கள் எப்படி வெளிப்படுகின்றன என்பதனை விளக்குன்றது. கட்டுரையாளர் சித்தர் இலக்கியங்களில் காணப்படும் இரசவாதம் நோய்களுக்கான மருந்தாகவும் இளமையாக இருப்பதற்கான வழியாகவும் உள்ளது என்பதனை இக்கட்டுரையில் விளக்கியுள்ளார். இக்கட்டுரையில் இரசவாதம் குறித்த பின்புலத் தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன. அடுத்து, இணைப் பேராசிரியர் முனைவர் சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல் (மலேசியா) அவர்களின் 'பேரா மாநிலத் தமிழ்க்கல்வி வளர்ச்சியில் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களின் பங்கு' எனும் கட்டுரையானது மலேசிய நாட்டின் பேராக் மாநிலத்தில் தமிழ்க் கல்வியின் வளர்ச்சியில் திருநெல்வேலியில் வாழ்ந்த தமிழ்க் கிருத்துவர்கள் எவ்வாறெல்லாம் பங்களிப்பும் சேவையும் செய்துள்ளனர் என்பதனை ஆய்வுப் பூர்வமாக விளக்குவதாக வரையப்பட்டுள்ளது.

இவ்வாய்விதழில் மூன்றாவது கட்டுரை, "திருவள்ளுவரின் பிறப்பு, பிறந்த இடம் மற்றும் மறைவு வரையிலான ஆய்வு: க.அயோத்திதாசப் பண்டிதர் ஆய்வு ஒளியில்" எனும் கௌதம சன்னா (இந்தியா) அவர்களின் கட்டுரையானது திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாறு குறித்த தகவல்களைப் புதிய பார்வையில் இதுவரை வெளிவந்துள்ள தகவல்களில் இருந்து முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் பதிவு செய்துள்ளது. இக்கட்டுரையில் பெறப்பட்டுள்ள கண்டுபிடிப்புகள் யாவும் கல்வெட்டுகள் மற்றும் ஆய்வு நூல்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் வழி நிறுவப்பட்டுள்ளது. இதற்கான ஆய்வுத் தளத்தினை உருவாக்கியவர் பண்டிதர்.க.அயோத்திதாசர் எனும் முன்னோடி அறிஞர். இதனை அடுத்து வரும் உமா அழகிரி (மொரீசியசு) அவர்களின் கட்டுரையானது மொரீசியசு நாட்டில் உள்ள தொடக்கநிலைப் பள்ளிகளில் பேச்சுத் திறனை அமல்படுத்துவதில் எத்தகைய சிக்கல்கள் உள்ளன என்பதனையும் அதனைத் தீர்ப்பதற்கான வழித்துறைகளையும் ஆராய்வதாக அமைக்கப்பட்டுள்ளது. கட்டுரையாளர், தொடக்கநிலைப் பள்ளிகளில் பேச்சுத் திறனை அமல்படுத்துவதில் மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களிடத்தும் சிக்கல் நிலவுவதாகவும் இச்சிக்கல்களைக் களைய பேச்சுத் திறனை மாணவர்கள் விரும்பும் முறையில் அமல்படுத்துவது சிறந்த முறை எனக் கூறியுள்ளார்.

இவ்வாய்விதழின் அடுத்த கட்டுரை இணைப்பேராசிரியர் முனைவர் செ.ஸ்டாலின் (இந்தியா) அவர்களின் 'விடிவிடுகதை ஓர் ஆய்வு' எனும் தலைப்பில் எழுதப்பட்டுள்ளது. இக்கட்டுரை 'விடி' மற்றும் 'விடுகதை' ஆகியவற்றின் மாறுபாட்டை விளக்குகிறது. பொதுவில் உடனுக்குடன் ஓரிரு சொல்லில் கேள்விகளாக கூறப்படுவது விடி எனப்படுகிறது. ஒரு கதையாகக் கூறப்பட்டால் அது விடுகதை என்ற வகையாகிறது. விடி / விடுகதைகளாவன இடத்திற்குத் தக்கவாறு மாறுபாடும் தனித்தன்மையும் உடையதாக உள்ளன. இதனடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் களஆய்வின் மூலம் அறியப்பட்ட விடி / விடுகதை ஆகிவற்றின் தனித்தன்மைகளையும் வேறுபாடுகளையும் இக்கட்டுரை விளக்குகிறது. தொடர்ந்து வருவது, பார்வதி வெள்ளைச்சாமி மற்றும் பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் (மலேசியா) ஆகியோரின் 'நன்னெறிக் கல்வி கற்றல் கற்பித்தலில் மகாகவி பாரதியாரின் அறிவார்ந்த சிந்தனைகள்' எனும் கட்டுரையாகும்.

இக்கட்டுரையானது மகாகவி பாரதியாரின் கவிதைகள் எவ்வாறு நன்னெறிக் கல்வி கற்றல் கற்பித்தலில் ஒருங்கிணைக்கப்படக்கூடும் என்பதனை விளக்கிகிறது.

அடுத்தது, 'தமிழர் மரபில் ஊழ்வினை' எனும் தலைப்பிலான முனைவர் பெ.மோகன் (இந்தியா) அவர்களின் கட்டுரையாகும். இக்கட்டுரை தமிழர் பாரம்பரியத்தில் ஊழ்வினை குறித்த செய்திகளைத் தமிழ் இலக்கியத்தினை முன்னிருத்தி ஆய்வு செய்கிறது. இதன் அடிப்படையில் தமிழர் வாழ்க்கையில் ஊழ்வினையின் முக்கியத்துவம் எத்தகையது என்பதனைக் கட்டுரையாளர் நன்கு நிறுவுகிறார். தொடர்ந்து முனைவர் ஜோதி எஸ். தேமொழி (அமெரிக்கா) அவர்களின் கட்டுரை புத்ததத்தரால் மூலம் கிடைக்கப்பெறும் தமிழ்நாட்டு வரலாற்றுக் குறிப்புகள் யாவை என்பதனை ஆய்வு செய்கிறது. இக்கட்டுரை புத்ததத்தரின் படைப்புகளில் இருந்து களப்பிர மன்னனாகிய அச்சுத விக்கிராந்தாவின் ஆட்சியைப் பற்றிய சில குறிப்புகளைத் தருகிறது. இதற்கு முந்தைய ஆய்வாளர்களின் ஆய்வுகளைக் கொண்டு சோழர் ஆட்சி காலமாகிய ஐந்தாம் நூற்றாண்டில் புத்ததத்தர் புத்தமங்கலம் எனும் இடத்தில் இருந்த போது அவர் படைத்த படைப்புகளையும் இக்கட்டுரை அடையாளம் கண்டுள்ளது.

தொடர்ந்து வரும் கட்டுரையானது முனைவர் ச.கண்மணி கணேசன் (இந்தியா) அவர்களின் கட்டுரையானது "பண்டைத் தமிழகப் பரதவரிடம் திணை மாந்தரிடம் தோன்றிய சாதிப்பிரி வினை" எனும் தலைப்பில் கடலும் கடலைச் சார்ந்த நிலப்பரப்பாகிய நெய்தல் திணையில் வாழ்ந்த மக்களிடையே நிலவிய சாதிய அமைப்பைப் பற்றிப் பேசுகின்றது. இக்கட்டுரை பழங்காலத்துத் தமிழ் மக்களிடையே சாதிப்பிரிவு இல்லை என்பதாகக் கூறும் கருத்தை மறுக்கும் வகையில் தரவுகளையும் தகவல்களையும் முன்வைக்கிறது.

அடுத்தது முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி (சிங்கப்பூர்) அவர்களின் "சிங்கப்பூரில் குழந்தை / சிறுவர் இலக்கியச்சூழல்: நலிவும் நன்னிலை நோக்கிய நகர்வும்" எனும் கட்டுரையானது, 1965இல் சிங்கப்பூர் சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு குழந்தை இலக்கியத்துறையின் வளர்ச்சியையும் இன்றைய நிலையை ஆய்வதோடு, அவை நலிவடைந்துள்ளமைக்கான காரணங்களைக் கண்டறிந்து அதனை மீட்பதற்கான வழித்துறைகளையும் முன்வைக்கிறது. இதனைத் தொடர்ந்து வரும் "உயிர்மெய்: வரலாற்றுநிலைசமகாலநிலை" எனும் தலைப்பிலான முனைவர் த.சத்தியராஜ் (இந்தியா) அவர்களின் கட்டுரையானது தமிழ் இலக்கணத்தில் உயிர்மெய் எழுத்தினை ஆய்வதாக உள்ளது. இக்கட்டுரை உயிர்மெய் எழுத்தின் தொடக்ககால வரலாற்றையும் அதன் பயன்பாட்டையும் ஆராய்வதோடு தற்காலப் பயன்பாட்டு நிலையையும் விளக்குகிறது.

முனைவர்.க.சுபாஷிணி (ஜெர்மன்), ஆக்கத்தில் உருவான 'ஜெர்மனி ஃப்ராங்கன் கல்வி நிறுவனத்தின் தமிழ் ஓலைச்சுவடி மற்றும் காகித ஆவணங்கள் கூறும் செய்திகள்' எனும் கட்டுரை தமிழ்பேராய்வு ஆய்விதழின் ஏழாவது தொகுதியின் இரண்டாவது பாகத்தில் அடுத்த கட்டுரையாக வருகின்றது. இக்கட்டுரையில், ஜெர்மனியின் கிழக்குப் பகுதி நகரமான ஹாலே நகரில் உள்ள ஃப்ராங்கன் கல்வி நிறுவனம் பாதுகாத்து வைத்துள்ள ஓலைச்சுவடிகள் மற்றும் காகித ஆவணங்களில் இருந்து கிடைக்கப்பெறும் தகவல்களைக் கொண்டு தமிழ் மற்றும் தமிழ்நாட்டின் அமைப்பு, கலாச்சாரம், வரலாறு மற்றும் வாழ்க்கை முறை தாகியவற்றை ஆய்வு செய்து தமிழ்நாட்டின் வரலாற்றில் உள்ள இவற்றிற்கான இடைவெளிகளை நிரப்பும் பணியைச் செய்வதாக அமைகிறது. இதனை அடுத்து வருவது, "பாடத்திட்டப் பகுப்பாய்வுதொடக்கப்பள்ளி தமிழ்மொழிப் பாடத்திட்டம் 1957" எனும் தலைப்பில் அமையப்பெற்ற க.சு.சங்கீதா (இந்தியா) அவர்களின் கட்டுரையாகும். இக்கட்டுரை 60 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்க் கல்வி கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தப்பட்ட உள்ளடக்கங்களை ஆய்வு செய்கிறது. அடுத்த நிலையில் மாணவர்கள் எதிர்காலத்தில் சமுதாயத்தின் மூலங்களாக இந்த உள்ளடக்கங்களை எப்படி ஆக்ககரமாக மாற்றம் செய்து பயன்படுத்தலாம் என்பது குறித்தும் கருத்துரைகின்றது.

தொடர்ந்து வரும், "மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் கோயிலின் மகிமை" எனும் சர்மிளா சதாசிவம்

மற்றும் முனைவர் சில்லாழி கந்தசாமி (மலேசியா) ஆகியோரின் கட்டுரையானது மலேசியாவின், பகாங் மாநிலத்தில் அமைந்துள்ள புகழ்பெற்ற ஸ்ரீ மரத்தாண்டவர் கோயிலின் வரலாற்றையும் அதன் சிறப்புகளையும் விளக்குவதாக உள்ளது. இத்தொகுப்பில் இறுதிக் கட்டுரையாக வந்துள்ள “இமையம் படைப்புகளில் பெண்களின் நிலை ஒரு ஆய்வு” எனும் படைப்பை முனைவர். ஆர்.விஜயசாமுண்டீஸ்வரி மற்றும் மு.சரளாதேவி (இந்தியா) ஆகியோர் இணைந்து ஆக்கம் செய்துள்ளனர். இக்கட்டுரை இமையம் படைப்புகளில் பெண்ணியம் எவ்வாறு பேசப்படுகின்றது என்பதனை ஆய்வு செய்து முன்வைத்துள்ளது.

இந்த ஆய்விதல், பல்வேறு ஆய்வாளர்களின் சிந்தனைகளைத் தொகுக்கும் பெறும் பணியில் ஈடுபட்டுள்ளது. பல அறிஞர்களின் சிறந்த ஆய்வுகளைப் பதிவு செய்வதன் மூலம் ‘தமிழ்ப் பேராய்வு’, தொடர்ந்து நிலைநிறுத்தப்படுகிறது. பதிப்பாசிரியர் குழு இவ்வேளையில் இந்த ஏழாவது தமிழ்ப் பேராய்வின் இரண்டாவது பகுதியின் வெளியீட்டிற்கு துணை புரிந்த கட்டுரையாளர்கள், மதிப்பீட்டாளர்கள் ஆகியோருக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றது. இத்தொகுப்பின் பதிப்புச் செலவை மனமுவந்து ஏற்றுக் கொண்ட அல்மா ஹெர்பல் நேச்சர் நிறுவணத்தில் தோற்றுனரும் தலைமை நிர்வாகியுமாகிய திருமிகு விநிலி. வேலாயுதம் அவர்களின் தாராள மனதை இவ்விடம் நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றோம்.

**பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்**
**தலைமைப் பதிப்பாசிரியர்**
**20.12.2018**

# தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ் / Journal of Tamil Peraivu
## Vol 7, December 2018

பொருளடக்கம் / Contents — பக்கம் / Page


1 சித்த இலக்கியத்தில் இரசவாதம் 12
Alchemy in Siddha Literature
முனைவர் ல. புஷ்பலதா / Dr. L. Pushpa Latha

2 பேரா மாநிலத் தமிழ்க்கல்வி வளர்ச்சியில் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களின் பங்கு 18
The Contributions of Tirunelveli Tamil Christians in the Development of Tamil Education in the State of Perak
இணைப் பேராசிரியர் முனைவர் சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல் / Assoc. Prof. Dr. Samikkanu Jabamoney Ishak Samuel

3 திருவள்ளுவரின் பிறப்பு, பிறந்த இடம் மற்றும் மறைவு வரையிலான ஆய்வு: க. அயோத்திதாசப் பண்டிதர் ஆய்வு ஒளியில் 27
Thiruvalluvar's birth, place of birth and up to his demise: A study based on the perspective of Ayotthidasa Pandithar
கௌதம சன்னா / Gauthama Sanna

4 மொரீசியசு தொடக்கநிலைப் பள்ளிகளில் பேச்சுத் திறனை அமல்படுத்துவதில் சிக்கலும் தீர்வும் 40
Problem and solution in the implementation of Communication Skills in the Primary Schools of Mauritius
முனைவர் உமா அழகிரி / Dr. Uma Allaghery.

5 விடிவிடுகதை ஓர் ஆய்வு 48
The Puzzels and Riddles – A Study
இணைப் பேராசிரியர் முனைவர் செ.ஸ்டாலின் / Associate Professor Dr. Stalin

6 நன்னெறிக் கல்வி கற்றல் கற்பித்தலில் மகாகவி பாரதியாரின் அறிவார்ந்த சிந்தனைகள் 56
Mahakavi Bharathiar's Intellectual Thought in Teaching and Learning Moral Education
பார்வதி வெள்ளச்சாமி / Parvathi Vellachami
பேராசிரியர் முனைவர். மு. இராசேந்திரன் / Professor Dr.M.Rajantheran

7 தமிழர் மரபில் ஊழ்வினை 64
Fate in Tamil Tradition
முனைவர் பெ. மோகன் / Dr.P.Mohan

| | | |
|---|---|---|
| 8 | புத்ததத்தரால் கிடைக்கப்பெறும் தமிழ்நாட்டு வரலாற்றுக் குறிப்புகள்<br>Buddhadatta and his contributions to the History of Tamil Nadu<br>முனைவர் ஜோதி எஸ். தேமொழி / Dr. Jothi S. Themozhi | 69 |
| 9 | பண்டைத் தமிழகப் பரதவரிடம் திணை மாந்தரிடம் தோன்றிய சாதிப்பிரிவினை<br>Communal Sector Rising From Parathavar - People of the Neithal Land in Ancient Tamil Nadu<br>முனைவர் ச.கண்மணி கணேசன் / Dr.S.Kanmani Ganesan | 80 |
| 10 | சிங்கப்பூரில் குழந்தை / சிறுவர் இலக்கியச்சூழல்: நலிவும் நன்னிலை நோக்கிய நகர்வும்<br>Landscape of Children's Literature in Singapore: Setback and Surging towards Progress<br>முனைவர் எம் எஸ் ஸ்ரீலக்ஷ்மி / Dr. M S Shri Lakshmi | 85 |
| 11 | உயிர்மெய் : வரலாற்றுநிலை சமகாலநிலை<br>Uyirmei Ezhuthu: History and the contemporary state<br>முனைவர் த.சத்தியராஜ் / Dr.Satyaraj | 96 |
| 12 | ஜெர்மனி ஃப்ராங்கன் கல்வி நிறுவனத்தின் தமிழ் ஓலைச்சுவடி மற்றும் காகித ஆவணங்கள் கூறும் செய்திகள்<br>The records of Halle Franckeischestifftung (Germany) Tamil palm leaves and paper manuscript collections<br>முனைவர்.க.சுபாஷிணி / Dr.K.Subashini | 103 |
| 13 | பாடத்திட்டப் பகுப்பாய்வு : தொடக்கப்பள்ளி தமிழ்மொழிப் பாடத்திட்டம் 1957<br>Tamil Language Syllabus at the primary level 1957 – An Analysis<br>திருமதி க.சு. சங்கீதா / K.S. Sangeetha | 115 |
| 14 | மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் கோயிலின் மகிமை<br>The Glory of Maran Sri Marathandavar Temple<br>சர்மிளா சதாசிவம் / Sharmila Sathasivam<br>முனைவர் சில்லாழி கந்தசாமி / Dr.Silllalee S. Kandasamy | 125 |
| 15 | இமையம் படைப்புகளில் பெண்களின் நிலை ஒரு ஆய்வு<br>Portrayal of women in creative writings of Imayam Padaippugal<br>முனைவர்.ஆர்.விஜயசாமுண்டீஸ்வரி / Dr. R. Vijayasamundeswary<br>மு.சரளாதேவி / M.Saraladevi | 132 |

# சித்த இலக்கியத்தில் இரசவாதம்

# Alchemy in Siddha Literature

முனைவர் ல. புஷ்பலதா / Dr. L. Pushpa Latha[1]

**_Abstract_**

After the Discover of nuclear structure and radioactivity, transmutations of elements becomes routine. Previously people thought that it is through chemical changes but it is actually physical transformation. In ancient Siddha literature, Alchemy was discussed for treatment of diseases and retaining youth. A Philosophical tradition recognized as protoscience that includes the application of Hermetic principles and practices related to mythology, religion and spirituality. Alchemy and chemistry were seen in medieval Islam Medicine, Chinese medicine and Indian traditional medicine. It was born in ancient Egypt here the word Khen was used in reference to the fertility of the flood plains around the Nile. Al-Khemia meaning the black land is now seen as a possible origin for the word for alchemy.

Date of submission: 2018-09-14
Date of acceptance: 2018-11-15
Date of Publication: 2018-12-30
Corresponding author's
Name: Dr. L. Pushpa Latha
Email: Lathaa_ramesh@yahoo.com

**Key Words:** Alchemy, Hermetic principles, Medicine, Chemistry, Cure, Siddha Literature.

## முன்னுரை

*ஐயனாரிதனார் செப்பியது போல,*

*“கல்தோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு*

*முற்றோன்றிய மூத்தகுடி”*

*(அகத்தியல் 12,000, ஒன்பதாவது காண்டம்: பாடல் 637)*

என்ற பெருமைக்குரிய நம் தமிழ் சமுதாயம் பல்வேறு நோய்களைத் தீர்ப்பதற்கான மருத்துவம், அனைவரும் விரும்பும் இளமை நீட்டிப்பு, நீண்ட ஆயுள், ஆரோக்கியம் ஆகியவற்றிற்கான தீர்வுகளை சித்தர்களின் மருத்துவமுறை வாயிலாக வரமாகப் பெற்றிருக்கிறது (Sivaraman,2013,23). ஆயினும் குடத்திலிட்ட விளக்காக இருந்த அரிய இவ்வகை மருத்துவ முறைகள் அரசு மற்றும் அறிஞர்களின் முயற்சியால் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இன்றைய நவீன அறிவியல் முன்னேற்றம் மனித குலத்தின் வாழ்வினை ஐயந்திரிபற மேம்படுத்தியுள்ளது. அதே அளவில் தீய விளைவுகளும் ஏற்பட்டுள்ளதை மறுக்க இயலாது. கூரிய கத்தியைக் கொண்டு கழுத்தையும் அறுக்கலாம், பழத்தையும் நறுக்கலாம் என்பது போல் நவீன அறிவியல் முன்னேற்றங்கள் தீமையையும், நன்மையையும் தன்னகத்தே கொண்டுள்ளன. வெடிகுண்டுகள், இராக்கெட்டுகள், அணுகுண்டுகள் முதலியவற்றால் உலக மக்களிடையே அச்சம், நடுக்கம்,

[1] The author is a Associate Professor, PG & Research Department of Chemistry, National College, Thiruchy, Tamil Nadu, India. Lathaa_ramesh@yahoo.com

ஒருவரை ஒருவர் நம்பாமை, வாழ்விலே அவநம்பிக்கை, எப்போது என்ன நடக்குமோ என்ற பீதி மனப்பிறழ்சி, மனக்கலக்கம் போன்றவை காணப்படுகின்றன. இதற்கு அறிவியல் வளர்ச்சி வேண்டாம் என்ற பொருளில்லை. நன்மை பயப்பனவற்றைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதே இன்றைய வாழ்வியல் நிலைப்பாடு.

பண்டைய தமிழகத்து விஞ்ஞானிகள் மனித குலத்தின் வாழ்வுக்காகவே உழைத்தார்கள். ஆதலால் அவர்கள் மக்களையோ, உலகத்தையோ, இயற்கைப் பொருட்களையோ நாசமாக்கக் கூடிய தீய சக்திகளைக் கண்டுபிடிக்கவில்லை. இவைகளைக் கண்டறிவதில் தங்கள் அறிவையும் காலத்தையும் செலவிட்டு வீணாக்கவில்லை. மனித சமூகம் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கான வழிவகையில் அவர்கள் உழைத்தார்கள், காலங்கடத்தினார்கள், கருத்தைச் செலுத்தினார்கள்.

## ஆய்வு முன்னோடிகள்

சாமி. சிதம்பரனார் தமது ‘சித்தர்கள் கண்ட விஞ்ஞானம்தத்துவம்’ *(1974,* p.*15)* எனும் நூலில் குறிப்பிட்டுல்ளது போல இத்தகைய சமூக நலன் செறிந்த செயல்பாடுகளில் வெற்றியும் கண்டனர். இத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த தமிழ் விஞ்ஞானிகள் சித்தர்கள் ஆவர். சித்த வைத்தியம் தமிழ் நாட்டு வைத்தியம்; சிறந்த வைத்தியம்.

சீர்காழி மருத்துவர் சி.எஸ்.நாராயணசாமி அய்யரின் ‘சித்தர் சிவவாக்கியர்’ *(2003)* எனும் நூலுன் கருத்துப்படி பல சித்தர்களால் ஏற்பட்ட இரசாயன சாஸ்திரங்களே ஆயுள்வேதமாகும். இவைகள் குகைகளில் வைக்கப்பட்டிருந்தன. தவிர, சரக்குகளைக் கூட்டும் வகை ஆயுர்வேதத்தில் கிடையாது. தென் இந்தியாவில் மூலிகைகள், இரச வர்க்கங்களைக் கையாளும் அகத்திய வைத்தியம் காணப்படுகிறது. உலோக வகைகள், இரச வகைகளால் செய்யும் மருந்து முறைகள் தமிழ் நாட்டுடைய தனி முறைகளாகவே காணப்படுகின்றன *(2003,* p.*9)*.

உலோகங்களையும், தாதுவகைகளையும் கொண்டு செய்யப்படும் பஸ்பம், செந்தூரம், திராவகம் முதலிய பலவகை முறைகள் வட மொழியில் உள்ள ரச சாஸ்திரங்களுக்கு வேறு பட்டவைகளாகவே இருக்கின்றன. தமிழ் முறைகளின் படி உலோகங்கள், ரசவர்க்கங்கள் ஆகியவற்றை நீற்று பஸ்மம், சிந்தூரங்களாக எளிதில் செய்து விடலாம். செயநீரால் பாஷாணம் முதலியவற்றைக் கட்டி தேன் முதலிய அனுபானங்களில் வாதரோகம், சன்னி வாதம் முதலிய மிகக் கடுமையான நோய்களுக்குக் கொடுத்தனால் குணம் அடைகிறது. கட்டு மருந்துகளை மிகக் கொடுமையான நோய்களுக்கு மிகவும் சிறிய அளவில் இரண்டு வேளைக்கு மேல் உபயோகிப்பதில்லை. இவ்வகையில் மிகச் சிறந்த நூற்றுக்கணக்கான முறைகள் தமிழ் வைத்தியத்தில் உண்டு *(சிதம்பரனார், 1974,* p.*25)*.

## ஆய்வு நெறி தனித் தன்மை (Uniqueness)

நாடிகளைப் பிடித்தும் பார்த்து நோய் இன்னது என்று அறியும் முறை சித்த வைத்தியத்துக்கே உரிய தனிச்சிறப்பாகும். ஆயுர்வேத முறையில், ஏன் ஆங்கில மருத்துவ முறையிலும் நோயாளியைத் தொடுதல், பார்த்தல், விசாரித்தல் மூலமே நோயின் தன்மையை அறிய முடியும். உலோக வகைகளை மருந்தாக மாற்றும் வேதியியல் முறை தமிழ்ச்சித்த மருத்துவத்திற்கே உரிய சிறப்பியல்பு என்பது மிகையில்லை *(நாராயணனன், 2003,* p.*7)*.

மற்ற மருத்துவ முறைகளுக்கும் சித்த மருத்துவத்திற்கும் இடையேயான மிக முக்கிய வேற்றுமை: அம்மருத்துவ முறைகள் மக்களுக்குச் சாவு உண்டு என்பதை ஒப்புக்கொள்ளுகின்றது ; சாகாமல் வாழ மருந்துண்டு என்பதை ஒப்புக்கொள்ளவில்லை. சித்தர்களின் கொள்கை, மக்கள் சாகாமல் வாழலாம் என்பதே நீண்ட நாள் வாழலாம் என்பதே. இதற்கான பயிற்சியும், காயகல்பம் என்ற மருந்தும் சித்தர் நூல்களில் சொல்லப்படுகின்றன *(சிதம்பரனார், 1974,* p.*15)*.

*“நோய் நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*

*வாய்நாடி வாய்ப்பச் செயல்”* (திருக்குறள்: 948)

என்ற வள்ளுவன் வாக்கை மெய்ப்பித்தவர் சித்தர்கள்.

இயற்கையான உலோக வகைகளின் மாறுதல்களை மாறுதலால் ஏற்படும் குணங்களை செயற்கை முறைகளால் ஆராய்ந்து காண்பதையே வாதம் எனக் கூறினர். சித்தர்கள் மருத்துகளின் குணங்களையும், மருந்துகளுக்குப் பயன்படும் மூலப்பொருட்களின் பண்புகளையும் அறிந்தவர்கள்

*“வாதம் கெட்டால் வைத்தியம்”*

*“வாதம் சுட்டு வதை;தியம் ;ஆனான்”* (தமிழ் பழமொழி)

என்ற பழமொழிகள் இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளன.

மந்திரங்களைப் பற்றியும் உருவேற்றுதல் மற்றும் மந்திர எழுத்துக்களை அடைக்கும் சக்கரங்களைப் பற்றியும் சித்தர் நூல்கள் உரைக்கின்றன.

*“நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்*

*மறைமொழி தானே மந்திரம் என்ப”*

(தொல்காப்பியம், பொருளதிகாரம், 480 வது சூத்திரம்)

என்பது தொல்காப்பியம் செய்யுள் இயலில் காணப்படும் சூத்திரம்.

## விவாதம்ரசவாதம்

சாமி. சிதம்பரனார் குறிப்பிட்டுள்ளபடி தமிழ் சித்த மருத்துவமுறையில் ரசவாதம் என்பது ஒரு தனிமத்தை மற்றொரு தனிமமாக மாற்றுதலைக் குறிக்கும். ‘ரச’ என்பது பாதரசத்தையும், வாத என்பது பாதரசத்திலிருந்து அல்லது மற்ற தனிமத்திலிருந்து தங்கத்தைத் தயாரிப்பதைக் குறிக்கும். இதனைச் சித்த மருத்துவத்தில் வகார வித்தை, ஏம வித்தை, தங்க வித்தை, என்ற பெயர்களால் அழைக்கின்றனர் (சிதம்பரனார், 1974, p.15).

“வாதி மகன் வைத்தியன்” என்பது புகழ்பெற்ற பழமொழி இதன் மூலம் ரசவாதம் மற்றும் சித்த மருத்துவமும் பிரித்துணர முடியாதவை என்பது விளங்கும் எனவே ரசவாதியின் மகன் மருத்துவனாவான். நம் தமிழ் ரசவாதம் ஐரோப்பிய, சீன மற்றும் அரேபிய ரசவாதங்களுக்கு முன்னோடியாகும்.

சித்த மருத்துவ முறையில் ரசவாதம், மருத்துவ மற்றும் வேதியியல் துறைகளுக்கு துணையாக இருப்பது விளங்கும். இம்முறை அனைத்துப் பிணிகளையும் குணப்படுத்தும் மருந்துகள் தயாரிப்பதற்கும், ஆன்ம, உடல் சார்ந்த மற்றும் அடிப்படை தனிமங்களை தங்கமாக மாற்றுவதற்கும் உதவுகிறது.

## சிறப்புகள்

ரசவாதம் என்பது மாபெரும் சித்த அறிவியலில் உரைகல்லாகும். சித்தர்கள் இத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள். அவர்கள் இதனை பயபக்தியுடன் செய்தனர். ஏனெனில் இது ஆன்மீக அடிப்படையிலானது இதனை பொருளிட்டுவதற்காகச் செய்யாமல் தெய்வீக சத்தியமாக செய்தனர்.

ரவசாதி ஆவதற்கான முதற்படி ஆன்மிகவாதியாக இருப்பதே. இதற்கு மத நம்பிக்கை உடையவர் என்ற அர்த்தம் இல்லை. உண்மையில் சித்தர்கள் சாதீய முறைகளை கடுமையாக எதிர்த்தனர் என்பது சித்தர் சைவ (திருமந்திரம், நான்காம் தந்திரம்: 903) வாக்கியப் பாடலில் தெரியவருகிறது.

*“மருவாத பூசைவிட்டால்*

*வாதமில்லை! மவுனமான*

*பொருள்விட்டால்*

*ஞானமில்லை”*

(கொங்கணர் வாத காவியம் பாடல்: 7)

ஏனெனில் சித்தர்கள்

1) உயிர்க்கொல்லி நோய்களுக்கு மருந்து தயாரித்தனர்

2) தங்கம், வெள்ளி, தாமிரம், ஆகிய

உலோகங்களை உயர்ரகத்தில் தயாரித்தனர்.

3) உலக பொருள் வாழ்விலிருந்து யோக நிலையில் வாழ்வதற்கு வேறு உடல் உழைப்பை செய்யாதிருந்தனர்.

4) இளமையை மீட்டெடுக்கும் மருந்துகள் தயாரித்ததன் மூலம் அவர்கள் ஆயட்காலத்தை நீட்டித்தனர்.

5) விஷக்கடி மற்றும் நோய்களிலிருந்து தங்கள் உடலைப் பாதுகாக்க இரசவாத மருந்துகளை உட்கொண்டனர்.

6) தங்களின் யோக வாழ்வினை வாசி யோகம் மூலம் (பிராணயோகம்) நிலை நிறுத்தினர்.

## ரசவாதியாவதற்கான தகுதிகள்

ஆன்மிகம், மன உறுதி, இரக்கம், ஈகை, எல்லாவற்றிற்கும் மேலாக மனத்தூய்மையுடன் இருக்க வேண்டும். தங்கம் மற்றும் பொருள் மேல் பேராசை இல்லாதவராக இருக்க வேண்டும். முன்வினையின் கர்மபலன் மற்றும் கிரக குறிப்பிட்ட அமைப்பினால் ரசவாதியாகப் பிறக்க வேண்டும்.

பஞ்ச பூதங்களின் கூட்டுப்பலனாக குழந்தை உருவாவது போல் ரசவாதியின் பொருள் விளங்க வேண்டும். ஏதேனும் ஒரு பூதத்தின் அளவு மிகுதியானாலே அல்லது குறைந்தாலோ அம்முயற்சி குறைப்பிரசவம் போல் தோல்வியில் முடியும் (சிதம்பரனார், 1974. p.16).

## ரசவாதத்தின் வகைகள்

- ஆத்தும வாதி மனித குலத்தை ஆன்ம கல்வியில் வழிநடத்தி வீடு பேற்றினை அடைய வழிகாட்டுவர்.
- உண்மைவாதி உலோகங்களை தங்கமாக்கி அவற்றின் பயன்களை நிரூபிப்பவர்.
- வேதியியல் வாதி உலோகங்களின் பண்புகள் அறிவதில் விருப்பமுடையவர்.
- பேராசைவாதி எல்லையில்லா பொருள் செல்வத்தைக் குவிக்கும் எண்ணமுடையவர்.
- வணிகவாதி தன்னிழைவாக உலோகங்களை இயல்பு மாற்றத்தைச் செய்து பொருளீட்டுவதில் நிபுணத்துவம் பெற்றவர்.

மனம்பழுத்தால் பொன் பழுக்கும். வாசி யோகத்தை போல இது ஒரு மனம் சார்ந்த ரசவாதமாகும். மனிதனின் ஆழ் மனதின் ஆற்றல் கடவுளுடன் ஒன்றும் வகையில் மாற்றப்படும். இதில் அடிப்படை கூறுகளான கந்தகம், பாதரசம், ஆகியன ஐம்புலன்களுடன் ஒப்புநோக்கத்தக்கன. அவற்றை செறிவுறச் செய்வதன் மூலம் யோகத் தேன் அல்லது அம்பராஸ்டல் திரவம் ஊறும். இதனை உண்மைத் தங்கம் என்பர் (நாராயணனன், 2003, p.23.).

## சித்தர்களின் ரசவாதத்தில் உலோகங்களின் பங்கு

அடிப்படை உலோகங்கள் தங்கம் அல்லது அதிக மதிப்புள்ள தூய உலோகமாகவோ (Soni, Mohan Katyal, 2007, p.2.575.) அதன் ஆக்சைடாகவோ மாற்றப்பட்டு மருந்துகளில் பயன்படுத்தப்படுகின்றன. பாதரசம், குரு மருந்து, கந்தகம், உப்பு (முப்பு) ஆகியன அவற்றில் முக்கியமானவை

## சித்தர்கள் பயன்படுத்திய பல்வேறு வகையான ரசவாதத்தின் வடிவங்கள்

- சிடிகை வேதை
- மாற்றுயர்வு வேதை
- கட்டு வேதை
- தூம்பிர வேதை
- குரு வேதை
- குளிகை வேதை
- பரிசன வேதை
- களங்கு வேதை (நாராயணனன், 2003, p.11)

## உலோக ரசவாததிற்கான சித்தர்கள் பயன்படுத்திய விதிகள்

சோனி கூறியபடி, "காரம் விட்டால் உருக்கினம் போச்சு" (Soni, Mohan Katyal, 2007, p.2.575), மதன் வாக்கிற்கிணங்க "வீசம் விட்டால் நிற்றினம் போச்சு" (Madan, 2006, p.170.), பாலகுருசாமி மொழிந்தபடி "புடம் விட்டால் சாரணை போச்சு" (Balagurusamy, 2010, p.32), ஹாரிசிஸ்லர் கூற்றுப்படி "உப்பை விட்டால் கட்டு போச்சு" (Harry H Sisler, 1969, p.53), உசேன்ரெட்டி சொல்லிற்கிணங்க "ரசம் விட்டால் வாதம் போச்சு", "சாரம் விட்டால் செயநீர் போச்சு", "துரிசு விட்டால் குருவே போச்சு", "கெந்தி விட்டால் வர்ணம் போச்சு" (Hussain Reddy, 2003, p.100.) மற்றும் ஆல்பர்ட் காட்டன் கூறியபடி "ஊதுதல் விட்டால் சுண்ணம் போச்சு" (Albert Cotton, 2000, p.302.) ஆகிய வேதியியல் அறிஞர்கள் திருமூலரின் "சிரவணம் விட்டால் சத்து போச்சு" (திருமூலர் திருமந்திரம், நான்காம் தந்திரம், பாடல்:903) என்பதுடன் ஒத்திருப்பது வியப்புக்குரியதாகும்.

"அகத்தியர் பரிபூரணம்" புறப்பொருள் வெண்பா மாலை, கரந்தைப் படலம் என்ற நூலில் பித்தளையை தங்கமாக மாற்றும் ரசவாத முறையொன்றை அருளியிருக்கிறார்.

*"இன்னொரு கருமானங்கேள்*
*பதிவான பிருதிவியைப்*
*பழச் சாற்றாலே*
*கெதியாகத் தானரைத்து மைந்தாகேளு*
*கெணிதமுடன் துருசுவெடி சாரங்கட்டி*
*மதியான சருகுடனே பூரஞ்சேர்த்து*
*மைந்தனே பழச்சாற்றாலரைத் துருட்டி*
*விதியான பித்தளையை தகடுசெய்து*
*உழம்பியந்த மருந்திலே*
*சேர்த்து முட்ட*
*சேர்த்து நன்றாய் மூடியபின்*
*மைந்தா கேளு*
*சிவசிவா நிதானமுடன்*
*புடத்தைப்போடு*
*பார்த்திபனே புடமாறி*
*யெடுத்துப் பார்த்தால்*
*பத்தியுள்ள பித்தளை தான்*
*செம்பாய் போச்சு*
*போற்றியந்தச் செம்பதனைப்*
*புதனம் பண்ணி*
*புண்ணியகனே வெள்ளிதனில்*
*நூலுக்கொன்று*
*வாத்திமிக்க தாங்கொடு*
*உருக்கிப் பார்க்க*
*மயங்காதே மகத்தான*
*பொன் தான் பாரே"*

க.நாராயணன் சுட்டியுள்ளபடி ரசவாதம் என்பது ரசம் என்னும் இயற்கைப் பொருளின் தன்மைகளை ஆராய்ந்து அறிதல். ரசபஸ்பம், ரச செந்தூரம், ரசக்கட்டு, முதலான மருந்துகள், தீராத பல, கொடிய நோய்களுக்கு அளிக்கப்படுவன. இந்த வாத வித்தையே சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சியாகும். இன்றும் சிறப்பாகச் சொல்வதானால் வேதியியல் ஆராய்ச்சியாகும்.

உலோக வகைகள், உப்பு வகைகள், பாஷான வகைகள், வேர் வகைகள், இலை வகைகள், விதை வகைகள், பட்டை வகைகள், பூ வகைகள், முத்து, பவளம், முதலிய, கடல்படு திரவியம் வகைகள், பிராணிகளின் உடம்பிலே உற்பத்தியாகும், கோரோசனை, கஸ்தூரி, முத்திரம், மலம், முதலிய வகைகள், இவைகளின் குணங்களையெல்லாம் அவர்கள் ஆராய்ந்து கண்டுபிடித்திருப்பது ஆற்புதமான செயல்.

## அற்புதப் பலன்கள்

பண்டங்களின் பண்புகளை ஆராய்ந்ததனால் இன்னின்ன சரக்குகளைச் சேர்ந்து இன்னின்ன மருந்துகளைச் செய்யலாம் என அறிந்தனர். இன்னின்ன மருந்துகள் இன்னின்ன நோய்களைத் தீர்க்கும் என்று கண்டனர். ஒரு நோய்க்குப் பல மருந்துகள், பல நோய்களுக்கு ஒரே மருந்து, சாப்பிடும் மருந்து, உடம்பில் பூசிக்கொள்ளும் மருந்த முக்கினால் முகரும் மருந்து, நோய்க்கு

மருந்து, பலவீனத்துக்கு மருந்து, நீண்ட நாள் உயிர் வாழ்வதற்கு மருந்து இவ்வாறு பலவகையான மருந்துகளை கண்டறியத் துணை செய்தது, ரசவாதம் என்னும் ஒப்பரிய வேதியியல் ஆராய்ச்சியேயாகும்.

ரசவாதத்தின் சிறப்பு இன்றைய காலகட்டத்தைப் போல் ஆராய்ச்சிக் கூடங்கள் அக்காலத்தில் இல்லை. ஆய்வு மேற்கொள்ளும் கருவிகள் இல்லை இருப்பினும் காட்டிலும், மலைகளிலும், குகைகளிலும் வாழ்ந்த அறிஞர்களான சித்தர்கள் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, உயிர்காக்கும் மருந்துகளைக் கண்டறிந்துள்ளனர். ஆவர்களின் ஆராய்ச்சித் திறன் தற்கால அறிவியல் அறிஞர்கள் திறனை ஒத்திருப்பதனைக் கண்டால் வியப்பு மேலிடுகிறது. இந்த வைத்தியத்தில் தீராத நோயே இல்லை. கர்ம வியாதி, தீர்க்க முடியாத நோய், முன்வினைப்பயன் எனப்படும் குட்டம் போன்ற பெருநோய்களுக்கெல்லாம் மருந்துகள் உண்டு.

## முடிவுரை

ரசவாதம் என்பது ரசம் என்னும் இயற்கைப் பொருளின் தன்மைகளை ஆராய்ந்து அறிதல். ரச பங்கம், ரச செந்தூரம், ரசக்கட்டு முதலான மருந்துகள், தீராத பல கொடிய நோய்களுக்கு அளிக்கப்படுவன. இந்த வாத வித்தையே சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சியாகும். இன்னும் சிறப்பாகச் சொல்வதானால் வேதியியல் ஆராய்ச்சியாகும்.

உலோக வகைகள், உப்பு வகைகள், பாஷாண வகைகள், வேர் வகைகள், இலை வகைகள், விதை வகைகள், பட்டை வகைகள், பூ வகைகள், முத்து, பவளம், முதலிய கடல்படு திரவிய வகைகள், பிராணிகளின் உடம்பிலே உற்பத்தியாகும் கோரோசனை, கஸ்தூரி, முத்திரம், மலம் முதலிய வகைகள் இவைகளின் குணங்களையெல்லாம் அவர்கள் ஆராய்ந்து கண்டுபிடித்திருப்பது அற்புதமான செயல்.

## References


*Akathiyal.*

*Akathiyar Paripuranam.*

Albert Cotton, F. (2000). *Advanced Inorganic Chemistry.* New York: Wiley Eastern Private Ltd.

Balagurusamy, E. (2010). *Object Oriented Programming* with C++. New Delhi: Tata McGraw-Hill Publishing Company Ltd.

Harry, H., Sisler & Calvin, A., Vander Werf. (1969). *Food Chemistry*. London: VanNostrand.

Hussain Reddy. (2003). *Bio-Inorganic Chemistry.* Chennai: New Age International Ltd.

*Konganar Vathakaaviyam.*

Madan, R., D. (2006). *Modern Inorganic Chemistry.* New Delhi: S.Chand & Company Ltd.

Narayanan, Ka. (2003). *Sithar Sivavakiyar.* Pondicherry: Maari Pathipakam.

Sivaraman,G.(2013). "Role of Siddha Medicine in the management of Carcinoma, one of the major non-communicable diseases", *Journal of Indian Studies, special issue: Articles on Siddha & Ayurveda Traditions*. (Pp. 23-26).

Sithambaranar, Sami. (1974). *Sithargal Kanda Vinjanam-Thathuvam.* Chennai: Ilakiya Nilayam.

Soni, P., L. Mohan Katyal. (2007). *Text Book of Inorganic Chemistry.* New Delhi: Sultan Chand & Sons.

*Thirukural.*

*Thirumanthiram.*

*Tholkapiyam.*

# பேரா மாநிலத் தமிழ்க்கல்வி வளர்ச்சியில் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களின் பங்கு

# The Contributions of Tirunelveli Tamil Christians in the Development of Tamil Education in the State of Perak

இணைப் பேராசிரியர் முனைவர் சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல் /
Assoc. Prof. Dr. Samikkanu Jabamoney Ishak Samuel [1]

***Abstract***

Tamils migrated to Malaysia from the different districts of Tamil Nadu. Among them were the Tamil Christians from the Thirunelveli District. In the late 18th and early 19th centuries, Tirunelveli Tamils converted to Christianity village by village. From 1820 to 1835, 370 villages in Thirunelveli converted to Christianity due to spreading of the gospel by Rev. Charles Theophilus Ewald Rhenius. A Seminary was founded in 1818 in Palayamkottai to train preachers and teachers to work in these churches and schools. This Seminary is currently established as the Bishop Sargent Teacher Training School. At the end of the 19th century, the Sarah Tucker Teacher Training School and Ooliyasthanam Teacher Training College were started as the need for teachers increased in church schools. As the number of Tamil schools in Malaysia increased in the 20th century, teachers trained in these three teacher training schools in Thirunelveli migrated to Malaysia. This article explains the contributions made by the Thirunelveli Tamil Christians in the growth of Tamil education in the state of Perak, Malaysia.

Date of submission: 2018-08-15
Date of acceptance: 2018-10-05
Date of Publication: 2018-12-30
Corresponding author's
Name: Dr. Samikkanu Jabamoney
Email: samjabarose@yahoo.com.my

**Key Words:** Perak State, Tirunelveli Tamil Christians, Tamil Education, Tamil Schools, Malaysian Tamils

## முன்னுரை

தமிழர்கள் மலாயாவிற்கு மூன்று அலைகளில் வருகை புரிந்தனர். முதல் அலை இராஜ ராஜ சோழன் ஆட்சிக் காலத்திலும், இரண்டாவது அலை மலாக்கா மன்னர்களின் ஆட்சிக் காலத்திலும், மூன்றாவது அலை ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்திலும் நடைபெற்றன(Silllalee,K & Rajantheran,M.,2014,p.38) பினாங்குத் தீவை ஆங்கிலேயர்கள் கைவசப்படுத்திய பின்னர் இந்தியாவில் இருந்து தமிழர்கள் அதிகமாகப்

[1] The author is an Associate Professor in Tamil Language Programme, Sultan Idris Education University, Malaysia. samjabarose@yahoo.com.my

பினாங்கிற்குக் கொண்டுவரப்பட்டனர். மலாயா முழுவதும் ஆங்கிலேயர்களின் கைவசமான பின் ரப்பர் தோட்டத்தில் வேலை செய்வதற்கு அதிகமானத் தமிழர்கள் மலாயாவிற்குக் கொண்டுவரப்பட்டனர். மலாயாவிற்குத் தமிழர்கள் ஒப்பந்தமுறை, கங்காணிமுறை, ஆங்கிலேயர்கள் உதவிபெற்ற சுயேட்சைக் குடியேற்றமுறை, வியாபாரக் குடியேற்றமுறை போன்ற நான்கு முறைகளில் வந்தனர் (சாமிக்கண்ணு ஜெபமணி - கிங்ஸ்டன், 2018). இவர்களில் திருநெல்வேலி மாவட்டத்தில் சீர்த்திருத்தக் கிறிஸ்துவத் திருச்சபையைச் சார்ந்த தமிழ்க் கிறிஸ்தவர்களும் ஆங்கிலேயர்கள் உதவிபெற்ற சுயேட்சைக் குடியேற்றமுறை, வியாபாரக் குடியேற்றமுறை ஆகிய முறைகளில் மலாயாவிற்கு வருகை புரிந்தனர்.

## ஆய்வு முன்னோடிகள்

மலேசியத் தமிழ்க்கல்வி வரலாறு தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. சாமிக்கண்ணு ஜெபமணியும் கிங்ஸ்டனும் (2018) இணைந்து மலேசியத் தமிழ்க்கல்வி வரலாறு என்ற தலைப்பில்ஓர் ஆய்வு நூல்வெளியிட்டுள்ளனர். இவ்வாய்வு நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது. இவ்வாய்வு நூலின் இரண்டாவது இயலில் மலேசியத் தமிழ்க்கல்வி வளர்ச்சியில் கிறிஸ்துவச் சமயத்தின் பங்கு ஆராயப்பட்டுள்ளது (சாமிக்கண்ணு ஜெபமணி - கிங்ஸ்டன், 2018). ஆனால், இந்நூலில் தமிழ்க்கல்வி வளர்ச்சியில் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் ஆற்றிய பங்கு ஆராயப்படவில்லை.

மேலும், சாமிக்கண்ணு ஜெபமணி (2014) இலங்கையில் நடைபெற்ற ஒன்பதாவது உலகக் கிறிஸ்துவத் தமிழ் மாநாட்டில் பேரா மாநிலத் தமிழ்க்கல்வி வளர்ச்சியில் கிறிஸ்துவச் சமயத்தின் பங்கு என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையைப் படைத்துள்ளார். இவ்வாய்வுக் கட்டுரையிலும் தமிழ்க்கல்வி வளர்ச்சியில் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களின் பங்கு ஆராயப்படவில்லை.

இதற்கிடையில், சாமிக்கண்ணு ஜெபமணி (2011) சிங்கப்பூரில் நடைபெற்ற உலகத் தமிழாசிரியர் மாநாட்டில் மலேசியத் தமிழ்க்கல்வி என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையைப் படைத்துள்ளார். இவ்வாய்வுக் கட்டுரையிலும் பேரா மாநிலத் தமிழ்க்கல்வி வளர்ச்சியில் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களின் பங்கு ஆராயப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து, முரசு நெடுமாறன் (2007), மலேசியத் தமிழரும் தமிழும் என்ற தலைப்பில் ஓர் ஆய்வு நூலை எழுதியுள்ளார். இவ்வாய்வு நூலில் மலேசியத் தமிழ்க்கல்வி வரலாறு தொடர்பாக எழுதியுள்ளார். ஆனால், இந்நூலிலும் மலேசியத் தமிழ்க்கல்வி வளர்ச்சியில் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களின் பங்கு ஆராயப்படவில்லை.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் கள ஆய்வு, நூலாய்வு ஆகிய இரண்டு அணுகுமுறைகள் கையாளப்பட்டுள்ளன. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன. மேலும், ஆய்வாளர் திருநெல்வேலித் தமிழ்க்கிறிஸ்தவப் பணி ஓய்வுபெற்ற ஆசிரியர்களைச் சென்று கண்டு கள ஆய்வு வழியும் தரவுகளைத் திரட்டியுள்ளார். கள ஆய்வில் நேர்க்காணல் அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. ஈப்போவில் வாழும் பணி ஓய்வுபெற்ற தலைமையாசிரியர்களான பியுலா டேவிட், மாணிக்கராஜ் ஆகிய இருவரிடம் இந்த நேர்காணல் மேற்கொள்ளப்பட்டுத் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

## ஆய்வுத் தரவுகள் பகுப்பாய்வு

ஆய்வுத் தரவுகள் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களின் வருகை; பேரா மாநிலத் தமிழ்க்கல்வி வளர்ச்சியில் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களின் பங்கு ஆகிய இரண்டு தலைப்புகளில் ஆய்வுத் தரவுகள் பகுப்பாயப்பட்டுள்ளன.

## மலாயாவிற்குத் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களின் வருகை

தொடக்க காலத்தில் சென்னை நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளை ஒட்டிய மக்களே அதிகமாகத் தோட்டத் தொழில் செய்வதற்கு மலாயாவிற்கு வருகை புரிந்தனர். திருநெல்வேலியில் கிறிஸ்துவச் சமயம் பரவியபின் திருநெல்வேலித் தமிழர்களிடையே பெரிய விழிப்புணர்வு ஏற்பட்டது. திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் கொழும்பிற்கும் மலாயாவிற்கும் திரவியம் தேடச் சென்றனர் (இராபர்ட் எல். ஹார்டுகிரேவ், 1979). அந்த வகையில், திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் மலாயாவிற்கு 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வருகைபுரிய தொடங்கினர். ஆங்கிலேயர்கள் உதவிபெற்ற சுயேட்சைக் குடியேற்ற முறை, வியாபாரக் குடியேற்ற முறை ஆகிய இரண்டு முறைகளில் மலாயாவிற்கு வந்த திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களை இரண்டாகப் பிரிக்கலாம். முதல் பிரிவினர் கல்வி கற்காதவர்கள். இரண்டாம் பிரிவினர் கல்வி கற்றவர்கள். மலாயாவிற்கு வருகைபுரிந்த திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் தோட்டத் தொழிலில் ஈடுப்படாமல் சிறு வணிகம் செய்ய முற்பட்டனர்.

## வியாபாரத்திற்காக வருகை

கல்வி கற்காத திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் வியாபார நோக்கிற்காக மலேசியாவிற்கு 19ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வருகைபுரிந்தனர். இவர்கள் பெரும்பாலும் ஈப்போ, கோலாலம்பூர், பினாங்கு போன்ற பெரிய நகர்களைத் தங்கள் வாழ்விடமாக அமைத்துக்கொண்டு அங்கு வாழும் தமிழர்களிடையே சிறு சிறு வியாபாரம், குறிப்பாக ஆட்டிறைச்சி வியாபாரம், பலசரக்கு வியாபாரம், ரொட்டி வியாபாரம், நாளிதழ் வியாபாரம், மீன் வியாபாரம், எண்ணெய் வியாபாரம், மசாலை பொருட்கள் வியாபாரம் போன்ற வியாபாரங்களைச் செய்து வந்தனர். தொடக்க காலத்தில், ஆண்கள் மட்டுமே வருகைபுரிந்து வியாபாரங்களை மேற்கொண்டனர். தனியாக வந்த ஆண்கள் தங்கள் வியாபாரத்தை மற்ற திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களிடம் ஒப்படைத்துவிட்டு இந்தியாவிற்குச் சென்று விட்டனர். காலப்போக்கில் சிலர் தங்களின் குடும்பங்களை மலாயாவிற்கு வரவழைத்துக்கொண்டனர். இவர்கள் தங்களின் வியாபாரங்களை மேம்படுத்திக்கொண்டு மலாயாவிலேயே தங்கத் தொடங்கிவிட்டனர் (மாணிக்கராஜ், 16.11.2018).

இவர்களில் சிறிது கூடுதல் விழிப்புணர்வு கொண்டவர்கள் தங்களுடைய வியாபாரங்களை மேலும் மேம்படுத்தித் தொழிலைப் பெரிய அளவில் மாற்றிக் கொண்டனர். காட்டாக, திருநெல்வேலியில் இருந்து வருகைபுரிந்த செல்லையா, தேவதஞ்சம் போன்றோர் ஈப்போவில் செக்கடி திறந்து தொழில் செய்துள்ளனர். இதன் காரணமாக கம்போங் செக்கடி என்ற ஒரு கிராமமே உருவாகியுள்ளது (மாணிக்கராஜ், 16.11.2018).

## அரசாங்கப் பணிக்காக வருகை

திருநெல்வேலியில் ஓரளவு படித்த தமிழ்க் கிறிஸ்தவர்கள் அரசாங்கத் துறையில் பணியாற்றுவதற்கு வருகைபுரிந்துள்ளனர். குறிப்பாக அதிகமான திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் இரயில் போக்குவரத்துத் துறையிலும் மராமத்துத் துறையிலும் பணியாற்றியுள்ளனர். இவர்கள் குடும்பமாக வந்து ஈப்போ, தைப்பிங், பிராய், கோலாலம்பூர், சிரம்பான், ஜொகூர் பாரு ஆகிய இடங்களில் உள்ள இரயில் போக்குவரத்துத் துறையிலும் மராமத்துத் துறையிலும் பணியாற்றியுள்ளனர் (மாணிக்கராஜ், 16.11.2018).

## ஆசிரியர் பணிக்காக வருகை

1500ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் கிறிஸ்தவச் சமயம் திருநெல்வேலிக் கடற்கரை ஓரம் வாழ்ந்த மீனவ மக்களிடையே பரவியது. பின், 1600ஆம் ஆண்டுகளில் கிறிஸ்தவச் சமயம் திருநெல்வேலி உட்பகுதிகளில் வாழ்ந்த கிராம மக்களிடையே பரவத் தொடங்கியது. மேலும், சீர்த்திருத்தக் கிறிஸ்துவச் சபை

1700ஆம் ஆண்டுகளின் இறுதியிலும் 1800ஆம் ஆண்டுத் தொடக்கத்திலும் திருநெல்வேலியில் பரவியது. 1820ஆம் ஆண்டு முதல் 1835ஆம் ஆண்டு வரை திருநெல்வேலியில் சார்ல்ஸ் தியாப்விலஸ் ஈவால்ட் ரேனியஸ் ஐயரின் நற்செய்தி பரப்புதல் காரணமாக 370 கிராமங்கள் கிறிஸ்துவக் கிராமமாக மாறின (கிறிஸ்துதாஸ் ஐயர், தே. அ. 1976). கிறிஸ்துவக் கிராமங்களாக மாற்றப்பட்ட கிராமங்களில் வாழும் குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட பள்ளிகள் தொடங்கப்பட்டன. இப்பள்ளிகளில் வேலை செய்ய அதிகமான ஆசிரியர்கள் தேவைப்பட்டனர்.

இக்கிராமத் திருச்சபைகளிலும் பள்ளிகளிலும் பணியாற்றுவதற்கு உபதேசியரையும் ஆசிரியரையும் பயிற்றுவிப்பதற்காகப் பாளையாங்கோட்டையில் இறையியல் கல்லூரி (செமினெரி) 1818ஆம் ஆண்டுத் தொடங்கப்பட்டது. இக்கல்லூரி தற்போது பிஷப் சார்ஜன் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியாக இயங்கி வருகிறது (கிறிஸ்துதாஸ் ஐயர், தே. அ. 1990). திருச்சபைப் பள்ளிகளில் ஆசிரியர்களின் தேவை அதிகரித்ததால், 19ஆம் நூற்றாண்டு இறுதியில் சாரா டக்கர் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியும் ஊழியஸ்தானம் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியும் தொடங்கப்பட்டன. 20ஆம் நூற்றாண்டில் மலேசியாவில் தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்ததால், திருநெல்வேலியில் இயங்கும் இம்மூன்று ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மலேசியாவிற்குப் புலம்பெயர்ந்து வந்தனர்.

## மலாயாவில் தமிழ்க்கல்வி

மலாயாவில் முதலாவது தமிழ் வகுப்பு 1816இல் பினாங்கு இலவசப் பள்ளியில் தொடங்கப்பட்டது. தொடர்ந்து, கிறிஸ்துவத் தொண்டூழியங்கள் பினாங்கு, பேரா சிலாங்கூர், நெகிரி செம்பிலான் போன்ற மாநிலங்களில் தமிழ்ப்பள்ளிகளைத் தொடங்கினர். 1912ஆம் ஆண்டுத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் ஒரு தோட்டத்தில் ஏழு முதல் பத்து வயது மாணவர்கள் பத்துப் பேர் இருப்பின் அத்தோட்டத்தில் ஒரு தமிழ்ப்பள்ளி அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. இச்சட்டத்தின் காரணமாக எல்லாத் தோட்டங்களிலும் தமிழ்ப்பள்ளிகள் அமைக்கப்பட்டன. இத்தோட்டத் தமிழ்ப்பள்ளிகளில் பணியாற்றுவதற்குக் கோவில் பூசாரி, கங்காணி, ஓரளவு படித்தவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர் (சாமிக்கண்ணு ஜெபமணி - கிங்ஸ்டன், 2018).

மேலும், நகரப்புறங்களில் ஆங்கில அரசாங்கத்தாலும், கிறிஸ்துவத் தொண்டூழியங்களாலும் தமிழ்ப்பள்ளிகள் அமைக்கப்பட்டன. இப்பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களாகப் பணியாற்றுவதற்குத் திருநெல்வேலியில் தமிழாசிரியர்களாகப் பயிற்சி பெற்ற தமிழ்க் கிறிஸ்தவர்கள் வருகை புரிந்தனர். திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் சீர்த்திருத்தக் கிறிஸ்துவச் சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்களாக இருந்தனர். திருநெல்வேலிக் கிறிஸ்தவர்கள் அதிகமாக மலாயாவிற்குப் புலம் பெயர்ந்த பின்னர் இவர்களுடைய வழிபாட்டிற்காக பினாங்கு, தைப்பிங், ஈப்போ, கோலாலம்பூர், சிரம்பான் போன்ற பகுதிகளில் தமிழ் மெதடிஸ்ட் திருச்சபைகளும் ஆங்கிலிக்கன் திருச்சபைகளும் தொடங்கப்பட்டன. இத்திருச்சபைகள் தங்கள் சபைப் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்பதற்காகத் தமிழ்ப்பள்ளிகளைத் தொடங்கின. தைப்பிங்கில் ஆங்கிலிக்கன் தமிழ்த் திருச்சபை, கோரனேசன் தமிழ்ப்பள்ளியைத் தொடங்கியது.

தற்பொழுது இப்பள்ளி கமுண்டிங் தமிழ்ப்பள்ளியாகச் செயல்பட்டு வருகிறது. ஈப்போ தமிழ் செட்டில்மெண்ட் தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை, புந்தோங் மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளி, மாலிம் நாவார் மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளி, தஞ்சோங் மாலிம் மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளி, சுங்கை சிப்பூட் மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளி ஆகிய தமிழ்ப்பள்ளிகளைத் தொடங்கின (சாமிக்கண்ணு ஜெபமணி - கிங்ஸ்டன், 2018). தொடக்க காலங்களில் இப்பள்ளிகளில் பணியாற்ற தமிழாசிரியர்களாகப் பயிற்சி பெற்ற திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள்

கொண்டுவரப்பட்டனர். இவர்களுக்குச் திருச்சபைகளே சம்பளம் வழங்கின.

மேலும், நகர்ப்புறங்களில் அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட தமிழ்ப்பள்ளிகளில் பணியாற்றுவதற்கும் ஆசிரியர் பயிற்சிபெற்ற திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்துவர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டனர். மலாயாத் தமிழ்ப்பள்ளிகளில் தொடக்க காலத்தில் பணியாற்றிய தமிழாசிரியர்களில் முறையாகப் பயிற்சிபெற்ற ஆசிரியர்களாக திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவ ஆசிரியர்கள் திகழ்ந்தனர்.

## மலாயாவில் தமிழாசிரியர் பயிற்சி

மலாயாவில் தமிழ்க்கல்வி 1816ஆம் ஆண்டுத் தொடங்கிய போதிலும் 1938ஆம் ஆண்டு வரை பயிற்சிபெறாத ஆசிரியர்களே தமிழ் கற்பித்து வந்தனர். 1938ஆம் ஆண்டுத் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்குற்காகத் தமிழ்ப் போதனா முறை வகுப்புகள் சிங்கப்பூர் மலாக்கா, பினாங்கு, சிலாங்கூர், பேரா, பஹாங், நெகிரி செம்பிலான் ஆகிய மாநிலங்களில் தொடங்கப்பட்டன. தமிழ்ப் போதனா முறை வகுப்புகள் ஜப்பானியர் ஆட்சிக் காலமாகிய 1941ஆம் ஆண்டு முதல் 1945ஆம் ஆண்டு வரை நிறுத்திவைக்கப்பட்டன. ஜப்பானியர் ஆட்சிக் காலத்திற்குப் பின் 1946ஆம் ஆண்டு, தமிழாசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக, ஏழாம் வகுப்புத் தொடங்கப்பட்டது. இது தமிழாசிரியர் ஆயத்தப் பயிற்சி என்று அழைக்கப்பட்டது (சாமிக்கண்ணு ஜெபமணி - கிங்ஸ்டன், 2018). மலாயாவில் ஆசிரியர் பயிற்சி தொடங்குவதற்கு முன்னால் தமிழ்ப்பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாகத் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் பணியாற்றினர்.

## பேரா மாநிலத் தமிழ்க்கல்வி வளர்ச்சியில் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களின் பங்கு

மலேசியத் தமிழ்க்கல்வி வளர்ச்சியில் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களின் பங்கு போற்றத்தக்க ஒன்றாகும். இவ்வாய்வுக் கட்டுரையில் பேரா மாநிலத் தமிழ்க்கல்வி வளர்ச்சியில் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் ஆற்றியுள்ள பங்கு மட்டுமே ஆராயப்படவுள்ளது. பேரா மாநிலத்தில் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் தமிழ்ப்பள்ளிகளை அமைத்தல், தமிழ்ப்பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாகப் பணியாற்றுறதல், தலைமையாசிரியர்களாகத் தமிழ்ப்பள்ளிகளை வழிநடத்துதல், ஏழாம் வகுப்புக்கு ஆசிரியர்களாகப் பணியாற்றுதல், போதனா முறை வகுப்புகளுக்கு ஆசிரியர்களாகப் பணியாற்றுதல், பாடப் புத்தகம் தயாரித்தல் போன்ற தமிழ்ப்பணிகளை ஆற்றியுள்ளனர்.

## தமிழ்ப்பள்ளிகளைத் தோற்றுவித்தல்

பேரா மாநிலத்தில் ஐந்து தமிழ்ப்பள்ளிகள் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களால் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் மூன்று தமிழ்ப்பள்ளிகளை அருட்திரு. பாக்கியநாதன் அவர்கள் மெதடிஸ்ட் திருச்சபை வழித் தொடங்கியுள்ளார். அருட்திரு. பாக்கியநாதன் அவர்கள் திருநெல்வேலியில் மருதகுளம் என்ற கிராமத்தைச் சார்ந்தவர். மருதகுளம் 1850இல் கிறிஸ்துவக் கிராமமாக மாறியது. இதனால், இக்கிராமத்து மக்களில் அநேகர் கல்வி கற்று உயர்நிலையை அடைந்தனர் (ஜேக்கப், ஆர்.எஸ். 2004). இவர் பாளையங்கோட்டை செமினெரியில் உபதேசியராகவும் ஆசிரியராகவும் பயிற்சி பெற்று, 1908இல் தொடங்கப்பட்ட ஈப்போ தமிழ்ச் செட்டல்மெண்ட் தமிழ் மெதடிஸ்ட் தேவாலாயத்திற்குப் போதகராக 1930இல் அமர்த்தப்பட்டார். தொடர்ந்து, இவர் 1932இல் பேரா மாநில மெதடிஸ்ட் தேவாலயங்களுக்கு மேற்கண்காணிப்பாளராகப் பணி உயர்வு பெற்றார். இவர் பேரா மாநில மேற்கண்காணிப்பாளராகப் பணியாற்றும் பொழுது புந்தோங் மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளி, மாலிம் நாவார் மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளி, தஞ்சோங் மாலிம் மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளி ஆகிய மூன்று தமிழ்ப்பள்ளிகளைத் தொடங்கியுள்ளார் (தமிழ் மெதடிஸ்ட்

தமிழ் செட்டல்மெண்ட் திருச்சபையின் நூற்றாண்டு நிறைவு விழா மலர், 2008). இன்று, புந்தோங் மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளியும் மாலிம் நாவார் மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளியும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. தஞ்சோங் மாலிம் மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளி, டான் ஸ்ரீ மாணிக்கவாசகம் தமிழ்ப்பள்ளியாக மாற்றம் கண்டுள்ளது.

அருட்திரு. பாக்கியநாதனைத் தவிர்த்து, இரயில்வே துறையில் வேலை செய்த நேசமணி என்பவர் இரண்டாம் உலகப் போருக்கு முன்னால் சுங்கை சிப்பூட்டில் மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளியைத் தொடங்கியுள்ளார். இப்பள்ளி 1954இல் மகாத்மா காந்தி தமிழ்ப்பள்ளியுடன் இணைக்கப்பட்டுவிட்டது (மகாத்மா காந்தி தமிழ்ப்பள்ளி வரலாறு). தொடர்ந்து, ஆங்கிலிக்கன் திருச்சபையைச் சார்ந்த ஓ. எம். ஞானசிகாமணி என்பவர் 1936இல் கமுண்டிங் பசார் லாமாவில் ஒரு தமிழ்ப்பள்ளியைத் தொடங்கியுள்ளார். இப்பள்ளி பின்பு 1940இல் ஆல் செயிண்ட் தொடக்கப்பள்ளி கட்டடத்திற்கு மாற்றப்பட்டு கோரனேசன் தமிழ்ப்பள்ளி என்ற பெயரில் இயங்கி வந்தது. பின் 1984இல் கமுண்டிங்கில் புதிய பள்ளி கட்டப்பட்டு கமுண்டிங் தமிழ்ப்பள்ளி என்ற பெயரில் இயங்கி வருகின்றது (கமுண்டிங் தமிழ்ப்பள்ளி வரலாறு).

## பயிற்சிபெற்ற ஆசிரியர்களாகப் பணியாற்றுதல்

மலேசியத் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களுக்கு 1938ஆம் ஆண்டு வரை ஆசிரியர் பயிற்சி வழங்கப்படவில்லை. அக்காலக் கட்டங்களில் மலேசியத் தமிழ்ப்பள்ளிகளில் கோயில் பூசாரிகள், கங்காணிகள், கணக்காளர்கள், கிராணிகள், ஓரளவு படித்த தொழிலாளர்கள் போன்றோர் பயிற்சிபெறாத ஆசிரியர்களாகப் பணியாற்றினர் (சாமிக்கண்ணு ஜெபமணி - கிங்ஸ்டன், 2018). அரசாங்கத் தமிழ்ப்பள்ளிகளிலும் கிறிஸ்துவச் சமயத் தமிழ்ப்பள்ளிகளிலும் பணியாற்றுவதற்குத் திருநெல்வேலியில் செயல்பட்டு வந்த பிஷப் சார்ஜன் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி (1818), சாரா டக்கர் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி (1858), ஊழியஸ்தானம் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி (1895) ஆகிய மூன்று ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகளில் பயின்ற திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் கொண்டுவரப்பட்டனர்.

தொடக்க காலத்தில் திருநெல்வேலியில் தமிழாசிரியர் பயிற்சி பெற்ற ஆண்கள் குடும்பத்தைத் திருநெல்வேலியிலேயே விட்டுவிட்டுத் தனியாக வந்து ஆசிரியராகப் பணியாற்றியுள்ளனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் துரைபாண்டியும் இவருடைய தம்பி சாமுவேலுமாகும். துரைபாண்டியும் சாமுவேலும் டோனாவூர் என்ற கிராமத்தில் பிறந்தவர்கள். இவர்களுடைய தந்தை, தேவதாசிகளுக்கும் அவர்களுடைய பிள்ளைகளின் நலவாழ்வுக்கும், ஏமி கார்மைக்கல் அம்மையாரால் தொடங்கப்பட்ட டோனாவூர் ஐக்கியத்தில் நிருவாகியாகப் பணியாற்றியவர். டோனாவூர் 1827இல் சார்ல்ஸ் தியாப்விலஸ் ஈவால்ட் ரேனியஸ் ஐயரால் உருவாக்கப்பட்ட கிறிஸ்துவக் கிராமமாகும் (கிறிஸ்துதாஸ் ஐயர், தே. அ. 1976).

மேலும் சிலர் கணவன் மனைவியாக மலாயாவிற்கு வந்து தமிழ்ப்பணியாற்றியுள்ளனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். ராசையா டோராத்தி ஞானக்கண், டேவிட் பியூலா, துரைபாண்டியன் கமலா போன்ற தம்பதிகளும் அடங்குவர். இவர்கள் தெலுக் இந்தான் பகுதியில் தமிழாசிரியர்களாகவும் தலைமையாசிரியர்களாகவும் நீண்ட நாட்கள் பணியாற்றியுள்ளனர் (பியூலா டேவிட், 11.11.2018). ராசையா டோரத்தி ஞானக்கண் திருநெல்வேலியில் தமிழாசிரியர்ப் பயிற்சியைப் பெற்று, 1950இல் மலாயா வந்து சிலிம் ரிவர், தெலுக் இந்தான் தமிழ்ப்பள்ளிகளில் பணியாற்றியுள்ளனர் (பத்துமலை, ச. 2006). 1937ஆம் ஆண்டில் இருந்த 547 தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களில் 25% ஆசிரியர்கள் மட்டுமே ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றவர்களாக இருந்தனர் (சாமிக்கண்ணு ஜெபமணி - கிங்ஸ்டன், 2018). 1937ஆம் ஆண்டில்

மலாயாவில் தமிழாசிரியர்ப் பயிற்சி இல்லாத காலக் கட்டத்தில் 25% பயிற்சிபெற்ற தமிழாசிரியர்களில் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களும் அடங்குவர்.

## தலைமையாசிரியராகப் பணியாற்றுதல்

திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் பயிற்சிபெற்ற ஆசிரியர்களாகத் திகழ்ந்ததால் பள்ளி நிருவாகம் இவர்களைப் பள்ளித் தலைமையாசிரியர்களாக அமர்த்தினர். 1957ஆம் ஆண்டு மலாயா சுதந்திரம் பெற்றது. அந்தக் காலகட்டத்தில் மலாயா தமிழ்ப்பள்ளிகள் அனைத்தும் அரசங்கக் கட்டுப்பாட்டுக்குள் வந்தன (சாமிக்கண்ணு ஜெபமணி - கிங்ஸ்டன், 2018). அந்தக் காலக்கட்டத்தில் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் பயிற்சிபெற்ற ஆசிரியர்களாகத் திகழ்ந்ததால் அனேக தமிழ்ப்பள்ளிகளுக்குத் தலைமையாசிரியர்களாகப் பதவி உயர்வுபெற்றனர். பேரா மாநிலத்தில் துரைபாண்டி அவர்கள் செங்காட் தோட்டத் தமிழ்ப்பள்ளியிலும் சாமுவேல் அவர்கள் பத்து காஜா சங்காட் தமிழ்ப்பள்ளியிலும் இராசையா சிம்பாங் அம்பாட் பாரதி தமிழ்ப்பள்ளியிலும் டேவிட் அவர்கள் ஈப்போ குனோங் ராப்பாட் தமிழ்ப்பள்ளியிலும் பியூலா டேவிட் அவர்கள் ப்லென்ஹிம் தோட்டத் தமிழ்ப்பள்ளியிலும் திரு. வேதமணி அவர்கள் தஞ்சோங் மாலிம் மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளியிலும் திருமதி வேதமணி அவர்கள் கம்போங் சிமி தமிழ்ப்பள்ளியிலும் ஆசீர்சேம் அவர்கள் காந்தி நினைவு தமிழ்ப்பள்ளியிலும் ஆசீர்வாதம் அவர்கள் கட்டி தோட்டத் தமிழ்ப்பள்ளியிலும் இயேசுதாஸ், தம்பிதுரை, சுந்தர், ஆபிரகாம் போன்றோர் புந்தோங் மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளியிலும் தலைமையாசிரியர்களாகப் பணியாற்றியுள்ளனர் (மாணிக்கராஜ், 16.11.2018).

## ஏழாம் வகுப்பு ஆசிரியர்கள்

1946ஆம் ஆண்டில் மலாயாத் தமிழ்ப்பள்ளிகளில் ஏழாம் வகுப்புத் தொடங்கப்பட்டது. ஆறாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் ஏழாம் வகுப்புக்குச் செல்லும் தகுதியைப் பெற்றனர். ஏழாம் வகுப்பு உயர்தரத் தமிழ்க்கல்வியைக்கொண்ட தரமான ஆசிரியர்களை உருவாக்கத் தொடங்கப்பட்டது. இஃது, ஆசிரியர் ஆயத்தத் தேர்வு என அழைக்கப்பட்டது. ஈராண்டுக் கல்வியான ஏழாம் வகுப்பில் தமிழ்மொழி, கணிதம், அறிவியல், நிலநூல், வரலாறு, நலக்கல்வி போன்ற பாடங்கள் தமிழ்மொழியில் கற்பிக்கப்பட்டன. ஏழாம் வகுப்புக்கான பாடத்திட்டமும் பாடநூலும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவையாகும் (முரசு நெடுமாறன், 2007). திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் பயிற்சிபெற்ற ஆசிரியர்களாகத் திகழந்ததால் ஈப்போ, தெலுக் இந்தான், தைப்பிங் போன்ற நகர்களில் தொடங்கப்பட்ட ஏழாம் வகுப்பிற்குப் பாடம் கற்பிக்க ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். ஈப்போவில் நடைபெற்ற ஏழாம் வகுப்பிற்குத் துரைபாண்டி, சாமுவேல், வேதமணி போன்றோர் ஆசிரியர்களாகப் பணியாற்றியுள்ளனர் (மாணிக்கராஜ், 16.11.2018).

## தமிழ்ப் போதனா முறை வகுப்பு ஆசிரியர்கள்

தமிழ்ப்பள்ளிகளின் ஆசிரியர் தேவையை நிறைவு செய்ய 1938இல் தமிழ்ப் போதனா முறை வகுப்புகள் சிங்கப்பூர், மலாக்கா, பினாங்கு, சிலாங்கூர், பேரா, பகாங், நெகிரி செம்பிலான் ஆகிய மாநிலங்களில் தொடங்கப்பட்டன. இப்பயிற்சிக்குத் தொடக்க காலத்தில் தமிழ்ப்பள்ளிகளில் கற்பித்த பூசாரிகளுக்கும், கங்காணிகளுக்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன. காலவோட்டத்தில், குறைந்தது ஐந்தாம் வகுப்புத் தேர்ச்சிப் பெற்றவர்கள் மட்டுமே ஆசிரியர் பயிற்சிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டனர். ஜப்பானியர் ஆட்சி காலத்திற்குப்பின் தமிழ்ப் போதனா முறை வகுப்புகள் மீண்டும் திறக்கப்பட்டன. தமிழாசிரியர்களுக்கு மூன்று ஆண்டுகள் ஆசிரியர் பயிற்சி வழங்கப்பட்டது. 1946ஆம் ஆண்டுக்குப் பின், ஏழாம் வகுப்பில் தேர்ச்சியடைந்தவர்கள் மட்டுமே

தமிழாசிரியர் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் (முரசு நெடுமாறன், 2007). தமிழ்ப் போதனா முறை வகுப்புகளுக்கும் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் ஆசிரியர்களாக இருந்துள்ளனர். இவர்கள் திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சிபெற்று சிறந்த தமிழறிவு பெற்றவர்களாகத் திகழ்ததால், தமிழ்ப் போதனா முறை வகுப்புகளுக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். செங்காட் தோட்டத் தமிழ்ப்பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றிய துரைபாண்டி இவ்வகுப்புகளுக்கு ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார் (மாணிக்கராஜ், 16.11.2018).

## பாடப் புத்தகங்கள் தயாரித்தல்

தொடக்க காலத்தில் தமிழகத்திலிருந்தும் இலங்கையிலிருந்தும் வரவழைக்கப்பட்ட தமிழ்மொழிப் பாட நூல்களே மலாயாத் தமிழ்ப்பள்ளிகளில் பயன்படுத்தப்பட்டன. விடுதலைக்குப் பின், மாறுதலுக்கு ஏற்ப உள் நாட்டிலேயே பாட நூல்கள் உருவாயின (சாமிக்கண்ணு ஜெபமணி - கிங்ஸ்டன், 2018). அவ்வேளையில் ஊழியஸ்தானம் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியில் பயிற்சி பெற்று மலாயாவிற்கு 1954ஆம் ஆண்டு ஆசிரியராக வருகைபுரிந்த பியுலா டேவிட் அவர்கள் சுகாதாரமும் ஆட்சிமுறையும் என்ற பாடத்திற்கு நான்காம், ஐந்தாம், ஆறாம் வகுப்புகளுக்குப் பாட நூல் எழுதியுள்ளார். மேலும், கணிதப் பாடத்திற்கு முதலாம் வகுப்புத் தொடங்கி ஆறாம் வகுப்பு வரைக்கும் பயிற்சி நூல்கள் எழுதியுள்ளார். இப்புத்தகங்கள் யாவும் கிருஷ்ணா புத்தக நிலையத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது (பியூலா டேவிட், 11.11.2018).

## திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களின் இளைய தலைமுறையினர்

திருநெல்வேலியில் இருந்து புலம்பெயர்ந்த தமிழ்க் கிறிஸ்தவக் குடும்பங்களில் பிறந்த பிள்ளைகள் இங்குள்ள தமிழ்ப்பள்ளிகளில் பயின்று ஏழாம் வகுப்புப் பயின்று தமிழாசிரியர்களாகவும் தலைமையாசிரியர்களாகவும் பணியாற்றியுள்ளனர். மேலும், மலாயாவிலே தங்கி விட்ட திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவ இரண்டாம் மூன்றாம் தலைமுறைப் பிள்ளைகள் இங்குள்ள தமிழ்ப்பள்ளிகளில் பயின்று தமிழாசிரியர் பயிற்சி பெற்று தமிழ்ப்பள்ளிகளிலும், இடைநிலைப்பள்ளிகளிலும் தமிழாசிரியர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

## முடிவுரை

தற்காலத்தில், திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிக்கு அனுப்புவது குறைந்து வருகின்றது. இதன் காரணமாக, தமிழ்த்துறையில் பணியாற்றுகின்ற திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து வருகின்றது. எதிர்க்காலங்களில் மலேசியாவில் இயங்கும் தமிழ்த் துறைகளில் பணியாற்றுவதற்கு ஏதுவாக திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிகளுக்கு அனுப்பவேண்டும்.

## References

Arasaratnam, S. (1970). *Indians in Malaysia and Singapore*. Kuala Lumpur: Oxford University Press.

Batumalai, S. (2006). *Kiristuvil Marurupamakkappaddavarkal*. Kuala Lumpur: Anglican West Malaysia Diocese.

Christadoss, D.A. (1976). *Rhenius Apostle of Tirunelveli*. Tirunelveli: A Bethel Publication.

Christadoss, D.A. (1990). *Life of Bishop Sargent*. Tirunelveli: Diocese of Tirunelveli.

David Pakiamuthu. (2003). *Tirunelvelikku Kristuvam Vantathu*. Palayamkottai: Yatumagi Publication

Jacob, R.S. (2004). *Urum Perum Irandam Tokuti*. Shanti Nagar: Palai Jaya Publication

Murasu Nedumaran, (2007). *Malaysia Tamilarum Tamilum*. Chennai: International Institute of Tamil Studies.

Paul Kadambavanam. (1967). *The Foundation of the Diocese of Tirunelveli*. Chennai: Veperi.

Robert L, Hardgrave. (1979). *Nadars of Tamil Nadu*. California: The University of California Press.

Sambath Seenivasan. (2016). *Nadarkalin Purvikamum Samathuvathirkana Poraddamum*. Madurai: World Literature Books Centre and Publisher Pvt. Ltd.

Samikkanu Jabamoney & Kingston. (2018). *Malaysia Tamil Kalvi Varalaru*. Chennai: International Institute of Tamil Studies.

Sandhu, K.S. (1969). *Indians in Malaya Imigration and Settlement 1786-1957*. London: University of Cambridge.

Silllalee,K & Rajantheran,M. (2014). "Hindu Religious Practises Exposed in Malaysian Tamil Movies", *Journal of Indian Culture and Civilisation*, Vol.1, 2014, pp. 37-43.

Tamil Methodist Church, Tamil Settelment, Ipoh, (2008). Centennial Souvenir Magazine.

Veerappan. (1988). *Malaysia Tamilar*. Selam: Puratchi Pannai.

# திருவள்ளுவரின் பிறப்பு, பிறந்த இடம் மற்றும் மறைவு வரையிலான ஆய்வு: க.அயோத்திதாசப் பண்டிதர் ஆய்வு ஒளியில்

# Thiruvalluvar's Birth, Place of Birth and upto His Demise: A Study Based on the Perspective of Ayotthidasa Pandithar

கௌதம சன்னா / Gauthama Sanna [1]

***Abstract***

Thiruvalluvar composed the great Tamil literature, Thirukkural. However there is no clear evidence about the life history of Thiruvalluvar. But there are some made up stories among the commoners. This article is an effort to establish some findings about Thiruvalluvar's birth, death, birth place, his parents and also about the religion that he practiced. This article provides a new perspective about the life history of Thiruvalluvar as compared to the existing body of the knowledge in the field. These findings are supported by some valid data from the inscriptions and research works. The main evidence for this study has been obtained from the research findings of Thirukkural by Ayothitasar.

Date of submission: 2018-09-04
Date of acceptance: 2018-11-08
Date of Publication: 2018-12-30
Corresponding author's
Name: Gauthama Sanna
Email: writersannah@gmail.com

**Key Words:** Thiruvalluvar, Thirukural, Ka.Ayothi Pandithathasar, History, Tamil Inscriptions

## முன்னுரை

திருவள்ளுவர் என்று அழைக்கப்படும் திருவள்ளுவ நாயனார் அவர்களின் பிறப்பு மற்றும் மறைவு வரையிலும், அவர் பிறந்த நாள், பிறந்த நாடு மற்றும் அவரது பெற்றோர், அவரின் மதம் உள்ளிட்ட முதன்மைத் தகவல்களை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ள கட்டுரை இது. இது நாள் வரை தமிழகத்தில் திருவள்ளுவர் மீது நிகழ்த்தப்பட்டுள்ள ஆய்வுகளிலிருந்து முற்றிலும் வேறான தளத்தில் இயங்குகிறது இக்கட்டுரை. இதற்கான ஆய்வு தளத்தினை உருவாக்கியவர் பண்டிதர்.க.அயோத்திதாசர் எனும் முன்னோடி அறிஞர். இப்பண்டிதரின் ஆய்வுகளைப் பின்பற்றி திருவள்ளுவரின் பிறப்பு, பிறந்த இடம் மற்றும் மறைவு வரையிலான ஆய்வு எனும் தலைப்பில் இக்கட்டுரை அமைகிறது.

## ஆய்வு முறை

திருவள்ளுவரின் பிறப்பு, பிறந்த இடம் மற்றும் மறைவு வரையிலான ஆய்வு எனும் தலைப்பில் இக்கட்டுரை முதன்மைத் தரவுகளையும், துணை நூல்களையும்,

[1] The author is a Lawyer in Chennai High Court and a serious researcher and a freelanse writer. writersannah@gmail.com

கள ஆய்வுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டதின் அடிப்படையில் அமைதிருக்கிறது. பின்னிணைப்பில் தேவைப்படும் அளவிற்கு மட்டுமே அடிக்குறிப்புகள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

## தென்னிந்திய சமூக சீர்திருத்தத்தின் முன்னோடி பண்டிதர் க.அயோத்திதாசர்.

சாதி மத பிற்போக்குத் தனங்களும், காலனிய ஆட்சியின் வரலாற்று இடைமாற்றங்களும் நிகழ்ந்து கொண்டிருந்த 19ஆம் நூற்றாண்டில், கல்வி பின்புலமும், மருத்துவம், சோதிடம், இலக்கியம் ஆகியவற்றில் புலமைப்பெற்ற மருத்துவர். கந்தசாமி பிள்ளை அவர்களுக்கு மகனாக 1845ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் நாள், மெட்ராஸ் ஆயிரம் விளக்குப் பகுதியின் கூவம் ஆற்றங்கரையோரம் உள்ள மக்கிஸ் தோட்டம் என்னும் இடத்தில் பிறந்தார் காத்தவராயன். வங்கக் கடலோரம் அமைந்த வடசென்னை காசிமேடு என்னும் இடத்தில் வசித்த வல்லக்காளத்தி வீ.அயோத்திதாசப் பண்டிதரிடம் காத்தவராயன் கல்வி பயின்றார். அதன் நன்றி கடனாக தனது பெயரை க.அயோத்திதாசர் என மாற்றிக் கொண்டார். எனவே காத்தவராயன் அவர்கள் க.அயோத்திதாசப் பண்டிதர் என்றே தொடர்ந்து அழைக்கப்படலானார். இனி கட்டுரையில் பண்டிதர் எனக் குறிப்பது இவரையே குறிக்கும்.

நீலகிரியில் இருந்தபோது தோடர் பழங்குடி பெண் ஒருவரைத் திருமணம் செய்தார் பண்டிதர். இத்தம்பதியருக்குப் பிறவிக் குருடான குழந்தை பிறந்து விரைவில் இறந்து போனதுடன், பண்டிதரின் மனைவியும் இறந்துப் போனார். பின்பு பர்மாவில் பத்தாண்டுகள் தங்கிவிட்டு, நீலகிரி திருப்பிய பண்டிதர் தீவிர அத்வைதியாக அத்வைதானந்த சபையைத் தொடங்கி நடத்தியதுடன் சித்த மருத்துவராகவும் வாழ்ந்து வந்தார். இதற்கு இடையில் ரெட்டமலை சீனிவாசம் அவர்களின் தங்கை தனலட்சுமியைத் திருமணம் செய்து கொண்டார் இத்தம்பதியருக்கு நான்கு ஆண் பிள்ளைகளும், இரண்டு பெண் பிள்ளைகளும் பிறந்தனர்.

1882ல் ஆல்காட் மற்றும் பிளவாட்ஸ்கி அம்மையார் ஆகியோரைச் சந்தித்த பண்டிதர் தமது தொடர்புகளை விரிவாக்கிக் கொண்டார். இதே காலக்கட்டத்தில் பண்டிதரின் தோழர் ரெவரென்ட். ஜான் ரத்தினம் அவர்களின் 1882ல் திராவிடர் கழகம் மற்றும் 1885ல் திராவிடப் பாண்டியன் இதழ் உருவாக உறுதுணையாக இருந்தார் பண்டதர் (கௌதம சன்னா, 2007, p.40) பின்பு அவர் 1890ஆம் ஆண்டு திராவிட மகாஜன சபை என்னும் அமைப்பை உருவாக்கினார். இந்த அமைப்புதான் இந்தியாவிலேயே முதல் மாநாட்டை 1891ல் நீலகிரியில் நடத்தியது. 1887ம் ஆண்டிலிருந்து அத்வைதத்திலிருந்து மாறி பௌத்ததை நோக்கிப் பயணித்த பண்டிதர், இலங்கையில் பௌத்ததை ஏற்றப்பின்னர், 1898ல் தென்னிந்திய சாக்கைய பௌத்த சங்கத்தை உருவாக்கி பௌத்த மறுமலர்ச்சியை உருவாக்கினார். சாதி பேதங்கள், மத வேறுபாடுகளை தொடர்ந்து எதிர்த்து வந்த பண்டிதர் 1907ஆம் ஆண்டு ஒரு பைசாத் தமிழன் எனும் பத்திரிக்கையைத் தொடங்கினார் (கௌதம சன்னா, 2007, pp.46 47). பின்னர் அதை தமிழன் எனப் பெயர் மாற்றி 1914ஆம் ஆண்டு தனது மறைவு வரை நடத்தினார் (கௌதம சன்னா, 2007, p.47). தமிழர்களுக்கான தமிழன் என்கிற முதல் அரசியல் அடையாளம் பண்டிதரின் முயற்சியால் நிலைநிறுத்தப்பட்டது.

இயக்கத் தலைவராக, தத்துவாதியாக, வரலாற்று ஆய்வாளராக, இலக்கியவாதியாக, பதிப்பாளராக, பத்திரிக்கை ஆசிரியராக, வைதீக, பார்ப்பனீய எதிர்ப்பாளராக, பெண்ணடிமை எதிர்ப்பாளராக, பௌத்த மறுமலர்ச்சியாளராக, மருத்துவராக, வரலாற்றை மறுவாசிப்பு செய்தவராக, தனித்தமிழ் இயக்கத்தை உருவாக்கியவராக என ஏராளமான பணிகளை முன்னெடுத்த பண்டிதர் தான் வாழ்ந்த காலத்தில், காலத்தால் அழியாத இலக்கியப் பணிகளையும் மேற்கொண்டார். அதில் அவர் எழுதிய நூல்களின் தலைப்பும் கூட மாற்று வரலாற்று

பார்வையை முன்வைப்பதைக் காணலாம். உதாணத்திற்கு.

வேஷ பிராமண வேதாந்த விவரம், யதார்த்த பிராமண வேதாந்த விவரம், அரிச்சந்திரன் பொய்கள், நந்தன் சரித்திரம், திரிவாசகம், விபூதி விளக்கம், முருகக்கடவுள் வரலாறு, ஆதி வேதம், திருக்குறள் வரலாறு, திரிக்குறள் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட நூல்களையும் ஏராளமான கட்டுரைகளையும் எழுதினார் (கௌதம சன்னா, 2007, p.69) அவரது கருத்தியல் ஆழத்தின் காரணமாக ஆய்வாளர்கள் அவரை தென்னிந்தியாவின் சமூக சீர்த்திருத்தத்தின் தந்தை என குறிப்பிடுகின்றனர் (கௌதம சன்னா, 2007, pp.4963).

இந்த வரலாற்றுப் பின்புலத்தில் பண்டிதர் குடும்பத்தினர் திருக்குறளைப் பதிப்பிக்க மேற்கொண்ட முயற்சிகளையும், பண்டிதர் தனிப்பட்ட முறையில் மேற்கொண்ட பணிகளையும் இக்கட்டுரையில் பார்ப்போம்.

## திருக்குறள் முதல் பதிப்பும் முரண்களும்.

திருக்குறளின் முதல் பதிப்பு ஆண்டு குறித்து பல்வேறு முரண்பாடுகள் இன்றும் நிலவி வருகின்றன. அது 1812, 1816, 1819 மற்றும் 1831 என ஆண்டுகளின் முரண்பாடுகள் நிலவுகின்றன. 1936ஆம் ஆண்டு திருவள்ளுவர் திருநாட் கழகம் வெளியிட்டுள்ள ஆண்டு மலரில் திருக்குறள் 1812ஆம் ஆண்டு எல்லீசன் முயற்சியால் வெளியிடப்பட்டது என்றும் (puthagampesuthu.com/2015/02/26/), அண்மையில் ரோஜா முத்தையா நூலகம் வெளியிட்டுள்ள மூலபாட பதிப்பிலும் இ.ஆண்டு சூஅளயஉ அதாவது 1812 என்றும் குறிக்கப்பட்டுள்ளத (திருக்குறள் மீள் பதிப்பு, 2016).

இது குறித்து ஆராய்ந்த பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி தமது ஆய்வுச் சுருக்கத்தில் ஒரு குறிப்பை அளித்திருக்கிறார். அதில்.

> கல்கத்தா தேசிய நூலகத்தில் கிடைக்கும் திருக்குறள் ஓலைச் சுவடி மூலம் இவ்வரலாறு தெரியவருகின்றது. அந்த ஓலைச் சுவடியில் தரும் குறிப்பு வருமாறு. "இது பொத்தகம் கலியுகாப்தம் 4900 க்கு ஆங்கிரச தொண்டை மண்டலம் சென்னைப் பட்டணத்தில் தஞ்சை நகரம் மலையப்ப பிள்ளை குமாரன் ஞானப்பிறகாசனால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. மாசம் தினச் சரிதையின் அச்சுக்கூடம், ஆண்டு 1812..." (சுந்தரமூர்த்தி, 1995).

ஆண்டு கணக்கு ஏறக்குறை ஏற்றுக்கொள்ள கூடியதுதான், எனினும் மேற்கண்ட தகவல்களையும் வெளிவந்திருக்கும் பிற தகவல்களையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும் போது எழும் கேள்வி என்னவெனில், திருக்குறள் மூலச் சுவடியினைப் பதிப்பிக்க அளித்தது யார்..? இந்தக் கேள்விக்கு பதிலை பெரும்பாலான ஆய்வாளர்கள் தவிர்த்துள்ளனர். சிலர் முயன்றுள்ளனர். ஆகவே, உலகிற்குத் திருக்குறள் சுவடி எப்படி கொடுக்கப்பட்டது என்பதை பண்டிதரின் வாக்கிலேயே பார்ப்போம்.

> "அக்காலத்தில் பிரிட்டிஷ் இராஜாங்கததில் சிவில் சர்விசில் தேர்ந்து வந்த மிஸ்டர். எலீஸ் துரையவர்கள் 1825ஆம் வருடத்திற்குப் பின்பு ஓர் தமிழ்ச் சங்கம் சென்னையிலேற்படுத்தி, அதனை விருத்தி செய்வதற்கு பலரிடங்களிலு முள்ள ஓலைப் பிரிதிகளைக் கொண்டு வரசெய்து, அச்சிட்டு தமிழ் நூற்களைப் பரவச்செய்து வந்தார்.
>
> அதையறிந்த ஜார்ஜ் ஆரிங்டன் துரை, பட்லர் கந்தப்பனென்பவரால் தன்னிடமிருந்த ஓலைப்பிரிதி திரிகுறள் மூலமும் திருவள்ளுவர் மாலையும் நாலடி நானூறுங் கொண்டு போய் மேம்பட்ட (எல்லீஸ்) துரையிடம் கொடுக்க, அவரும் சந்தோஷித்து அக்கால் தன்னிடமுள்ளத் தமிழ் வித்வான்களாகும் தாண்டவராய முதலியாராலும், மானேஜர்

> முத்துசாமிப்பிள்ளை அவர்களாலும் 1831ம் வருஷம் அக்குறள் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றார் (அயோத்திதாசர், 2011, p.460)".

இதன்படி திருக்குறள் ஆரிங்டன் மற்றும் எல்லீசன் முயற்சியினால் அச்சேற்றப்பட்டு வெளியிடப்பட்டது என்பதும், அச்சுவடியினைக் கொடுத்தவர் கந்தப்பன் என்பதுவும் தெளிவாகிறது. அப்படியெனில் யார் அந்த கந்தப்பன்?

கந்தப்பன் அவர்கள் மையிலாபூரில் வசித்து வந்த ஒரு மருத்துவர். பட்லர் கந்தப்பனார் என்றும் கந்தப்பன் பிள்ளை எனவும் அழைக்கப்பட்டவர். கல்விமான். தனது வீட்டில் ஏராளமான தமிழ் ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்து வைத்திருந்தார். அவை அவரின் பரம்பரைச் சொத்து. இவரது மகன் கந்தசாமி பிள்ளை, இவரும் மருத்துவர், இலக்கிய விற்பன்னர். மயிலாப்பூரில் மருந்து தயாரித்து விற்கும் நிறுவனத்தை நடத்தி வந்தார். இந்த கந்தசாமி பிள்ளையின் மகன்தான் காத்தவராயன். அவரே பண்டிதர் அயோத்திதாசர். எனவே கந்தப்பனார் அயோத்திதாசரது பாட்டனார் (கௌதம சன்னா, 2007, pp.1620). இருந்தபோதிலும், மேற்கண்ட சான்றுகளில் ஒரே முரண் மட்டும் உள்ளது. அதாவது பண்டிதர் குறிப்பிடும் 1831 ஆண்டும், திருக்குறள் முதற்பதிப்பு வெளியான 1812ஆண்டும் முரண்படுகின்றன. இதற்கு எப்படி தீர்வு காண்பது.

திரு.பிரான்சிஸ் வைட் எல்லீஸ் (17771819) என்னும் அரசு அதிகாரி மெட்ராஸ் பிரிட்டிஷ் கவர்னர்களான சர் ஜார்ஜ் பார்லோ 1808 1813) ஜான் அபேர் க்ராம்பே (18131814) யூக் எலியட் (18141820) காலத்தில் புனித ஜார்ஜ் கோட்டையில் பணியாற்றியவர். இவர் 1812ல் கோட்டையில் ஆங்கிலேயர் மற்றும் மெட்ராஸ் மக்கள் கற்பதற்காக மெட்ராஸ் கல்விக் கழகம் ஒன்றை உருவாக்கினார். எல்லீசன் அவர்கள் அதற்கு இயக்குநராக இருந்தது (நரசய்யா, 2006, p160) மட்டுமின்றி, அதற்கு மேலாளராக முத்துசுவாமி பிள்ளை அவர்களையும், தாண்டவராய முதலியார் அவர்களை ஆசிரியராகவும் நியமித்திருந்தார். இவர்கள் இருவரும் கல்விக் கழகத்தின் அச்சு பொறுப்பையும் ஏற்றிருந்தனர். அதன் விளைவாய் 1813ஆம் ஆண்டுதான் கோட்டையில் தனி அச்சகமும், காகித கொள்முதலும் தொடங்கப்பட்டது.

இந்த எல்லீசன் அவர்களிடம்தான் ஜார்ஜ் ஆரிங்டன் அவர்கள் கந்தப்பனாரிடம் பெற்ற திருக்குறள் சுவடியினைக் கொடுத்தார். அதை மேற்கண்ட பணியாளர்களிடம் கொடுக்க அவர்கள் மூலமாக முதல் பதிப்பு வெளியானது. எனினும் முதல் பதிப்பு 1812 என்று புத்தகத்தில் குறிக்கப்பட்டிருந்தாலும், கல்விக்கழகத்தின் முதல் நூலாக வீரமாமுனிவர் எழுதியத் தமிழ் இலக்கணம் 1813ல்தான் வெளியானது என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன (https://en.wikipedia.org/wiki/Francis_Whyte_Ellis). எனவே வீரமாமுனிவரின் நூல்தான் முதலில் வந்தது என்றாலும், 1812ல் வெளியான திருக்குறள் எல்லீசரின் அச்சகத்தில் அச்சடிக்கப்படாமல் "மாசத் தினச்சரிதையின் அச்சுக்கூடத்தில்" அச்சிடப்பட்டது. எனவே முற்பதிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆண்டு உறுதியான ஒன்று. ஆனால் தமிழை நன்கு கற்று குறளின் மேன்மையை உணர்ந்த எல்லீசன் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கத் தொடங்கியிருந்தார். அறத்துப்பால் விளக்கங்களை கொண்ட நூல் அவரது அச்சகத்தில் அச்சாகி 1819ல் வெளியாகியுள்ளது. அதே ஆண்டில் எல்லீசன் அவர்கள் மறைந்தும் விட்டார். எனவே இந்த வெளியீடுகளின் கால முரண் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதற்கு விடையளிக்கும் விதமாக பெ.விஜயகுமார் அவர்களின் முனைவர் பட்ட ஆய்வேட்டில்,

> "1812ல் எல்லீசர் தமிழ்ச்சங்கம் ஏற்படுத்தப்பட்டது. இதனை 1825க்குப் பின்பு என்று பதிவு செய்திருக்கிறார். அதேப் போன்று திருக்குறள் நூல் வெளிவந்தது 1831 என்று குறித்திருப்பது தவறு என்றும் அறிய முடிகிறது. ஏனெனில் எல்லீஸ் 1819ல் இறந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் பண்டிதர் அயோத்திதாசரின் இப்பதிவில் ஆண்டு மாறியிருந்தும்

மற்ற தகவல்கள் அனைத்தும் சரி என்பதை உறுதி செய்ய முடிகிறது. சென்னைத் தமிழ்ச் சங்கத்தின் தலைமை பொறுப்பில் இருந்தவர்கள் முத்துசாமிப் பிள்ளை மற்றும் தாண்டவராய முதலியார் பற்றியும் அறிய முடிகிறது" (விஜயகுமார், 2015, p.170).

எனவே தொண்டை மண்டலப் பகுதியான மெட்ராஸில் கந்தப்பனார் அவர்களிடமிருந்து ஜார்ஜ் ஆரிங்டன் அவர்கள் மூலமாக எல்லீசன் அவர்களிடம் போய் சேர்ந்த திருக்குறள் சுவடி, ஞானபிரகாசரால் அச்சிற்பதிக்கப்பட்டது. அதன் உண்மைத் தன்மைக்காகத்தான் திருக்குறள் முதற் பதிப்பின் முன்னுரை என்னும் வரலாறு பகுதியில் ஞானப்பிரகாசர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"இஃதுண்மை பெற திருபாசூர் முத்துச்சாமி பிள்ளை, திருநெல்வேலி சீமை அதிகாரி ம.ராமசாமி நாயக்கர் முன்னிலையில் அந்நாட்டிலிருந்தழைப்பித்து சுத்த பாடங்களுடன் எழுதின வரலாறு.

இந்தப் பொத்தகத்தி லெழுதிய தெய்வப்புலமைத் திருவள்ளவ நாயனா ரருளிச் செய்த திருக்குறள் மூலபாடமும், நாலடியார் மூலபாடமும், திருவள்ளுவமாலையும் ஆக மூன்று சுவடியும் வெகு மூலபாடங்கள் உரை பாடங்கள் அதற்கு கருவியாக வேண்டும் இலக்கண விலக்கியங்களல்லாம் ஆய்ந்துப் பரிசோதித்துப் பாடந் தீர்மானஞ் செய்து ஒரெழுத்து, ஓர் சொல் நூதனமாகக் கூட்டாமற் குறையாமல் அநேக மூலபாடங்களுரை பாடங்களுக்கு இணங்கினதாகத் தீர்மானம் பண்ணி அந்தப் பாடம் பார்த்தெழுதிச்சரவை பார்த்தப் படமாகையாலும் அந்தப்படி தீர்மானம் பண்ணி யெழுதின பாடமென்பதும் இவடங்களிலிருக்குந் தமிழாராய்ச்சியுடைய மகாவித்துவ செனங்களாற்பார்க்கும் பொது மலாகளா கருத்திற் ரூருன்றபடும் ஆகையாலும் பாடங்களி லெவ்வளவெனுஞ் சந்தெகப்பட வேண்டுவதின்று..

இந்தப் பாடங்களை திருவாடுதுறை ஆதின வித்துவான் அம்பலவாணத் தம்பிரான், சீர்காழி வடுகநாத பண்டாரம் இவர்களாலும் மறுபடி கண்ணொட்டத்துடன ஆராயப்பட்டன" ( திருக்குறள் மீள் பதிப்பு, 2016, p.உ ங).

எனவே ஞானபிரகாசரின் முதற் பதிப்பில் மேலாளர் முத்துசாமி பிள்ளையின் பெயர் தீர்க்கமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது தெளிவு. இந்த தரவுகளைக் கொண்டு பார்க்கும் போது பண்டிதரின் குறிப்பில் ஆண்டுக் கணக்கில் சிறு முரண்கள் இருந்தாலும் திருக்குறள் சுவடி பண்டிதரின் பாட்டனார் கந்தப்பனார் அவர்கள் மூலம் தமிழ்க்கூறு நல்லுகத்திற்கு கிடைத்தது என்பது ஐயமறப் புலனாகிறது.

## திருவள்ளுவர் கட்டுக்கதை எதிர்ப்பு.

எல்லீசர் மூலமாக அச்சான திருகுறளில் திரிபுகள் ஏதுமில்லை. ஆனால் திருவள்ளுவ மாலையில் மட்டும் நான்கு பாடல்கள் நூதனமாக சேர்க்கப்பட்டிருப்பதாய் கந்தப்பனவர்கள் கண்டுபிடித்து அதுபற்றி ஜார்ஜ் ஆரிங்டன் அவர்களிடம் முறை யிட்டதை "சூர்யோதையம்" (வேங்கிடசாமி பண்டிதர், 1869, p.25) எனும் பத்திரிக்கையில் வெளிவந்த தகவலைக் கொண்டு பண்டிதர் உறுதி செய்திருக்கிறார். மேலும், அப்பதிப்பில் திருவள்ளுவர் பார்ப்பானுக்குப் பிறந்தார் என்னும் கட்டுக் கதைகள் ஏதும் இல்லை என்பதை குறித்தப் பண்டிதர் (அயோத்திதாசர், 2011, p.460) கட்டுகதை எப்படி உருவானது என்பதை அம்பலப்படுத்தினார்.

1835ஆம் ஆண்டு விசாகப் பெருமாள் ஐயர்

பதிப்பித்த திருக்குறளின் பின்னிணைப்பில் ஓர் அகவற்பாவை இணைத்து, அதன் ஆசிரிய விவரங்கள் ஏதும் அதில் குறிக்காமல் பின்வரும் கதையை கூறியிருக்கிறார். அதில் "ஆதி என்னும் பறைச்சிக்கும் பகவன் என்னும் பிராமணனும் இருந்ததாகவும், அவ்விருவர் விபச்சாரத்தால் ஏழு பிள்ளைகள் பிறந்ததென்றும், அவர்களில் நாயனார் மயிலாப்பூரில் தங்கி இல்லறம் நடத்துங்கால் இக்குறளைப் பாடினார்" *(அயோத்திதாசர், 2011, p.461)* என்று அந்த அகவற்பாவில் குறித்திருக்கிறார்.

மேலும், ஏழு பிள்ளைகள் பிறந்தார்கள் என்கிற தகவலோடு விசாகப் பெருமாள் ஐயர் நிறுத்திக் கொண்டார், தொடரவில்லை. மாறாக அவருடைய தம்பி சரவணப் பெருமாள் ஐயர் அதை தொடர்ந்திருக்கிறார் என்று அம்பலப்படுத்திய பண்டிதர், மேலும் கூறுகிறார்.

> "சரவணப் பெருமளையர் நான்காவது அச்சிட்ட புத்தகத்தில் ஏழுப் பிள்ளைகளில் ஒவ்வோர் பிள்ளை மீயிற் பிறந்தவுடன் ஒவ்வோர் வெண்பாக்களைப் பாடிவிட்டதென்றும், அப்போது இச்சரவணப் பெருமாளையர் அருகினின்று ஒலை எழுத்தாணிக் கொண்டு உடனுக்குடன் எழுதிக் கொண்டது போலும் ஏழு வெண்பாக்களை பாடி சேர்த்துவிட்டார். விசாகப் பெருமாளையர் அச்சிட்ட புத்தகத்தில் நாயனார் வைசியக் குலப் பெண்ணை மணந்தாரென்று வரைந்திருக்கிறார். அதன்பின் சரவணப் பெருமாளையைர் அச்சிட்ட புத்தகத்தில் நாயனார் வேளாளக்குலப் பெண்ணை மணந்தாரென்று வரைந்திருக்கிறார். விசாகப் பெருமாளையர் அகவலில் ஆறு பிள்ளைகள் பிறந்தயிடங்களையும் தங்கிய இடங்களையும் காண்பிக்காமல் நாயனால் பிறந்தயிடம் மட்டும் மயிலை என்று குறித்திருக்கின்றார்"
>
> *(அயோத்திதாசர், 2011, p.461).*

என்று சுட்டிக்காட்டியப் பண்டிதர் 1847ம் ஆண்டு திண்டுக்கல் முத்துவீரப் பிள்ளை என்பவரின் உத்திரவின்படி வேதகிரி முதலியார் அவர்கள் கொண்டு வந்த பதிப்பில் மேலும் கதைகள் சேர்க்கப்பட்டன என்பதையும் காட்டுகிறார். அதில்,

> "பிரமன் விவாகஞ் செய்துக்கொண்டு மறுபடியும் அகஸ்தியராகத் தோன்றி சமுத்திர கன்னிகையை மணந்து பெருஞ் சாகரனென்பவரைப் பெற்றானாம். அப்பெருஞ்சாகரன் திருவாரூர் புலைச்சியைத் சேர்ந்து பகவன் என்பவரைப் பெற்று அவர் வளர்ந்தப் பின்பு,
>
> பிரம்ம வம்சத்தில் தவமுனி என்பவர் அருண்மங்கை என்னும் பிராமண மாதைச் சேர்ந்து, ஓர் புத்திரியைப் பெற்றுவைத்து விராலி மலைக்குத் தவஞ்செய்யப் போய்விட்டாராம். (தாய் எங்குப் போனாளோ தெரியவில்லை) அப்பெண் குழந்தையை உரையூர் பெரும்பறையன் கண்டெடுத்து வளர்த்து வருங்கால் அச்சேரி யிலுள்ளோர் எல்லாம் மண் மாரியால் மடிந்து இப்பெண் ஒருத்தி மட்டும் பிழைத்து, மேலூர் அகரத்தில் நீதி ஐயன் வீட்டில் வளர்ந்து பகவன் என்பவருக்கும் ஆதி என்பவளுக்கும் நீதி ஐயன் ஐந்து நாளைய விவாகமும் மங்கள ஸ்நானமுஞ் செய்த பின்னர் வெளியேறி, ஏழு பிள்ளைகள் பெற்றதாக விவரித்து விட்டார். நாயனார் தோன்றிய காரணத்தையும் எவ்வகையில் எழுதியிருக்கின்றார்கள் என்னில்:
>
> இன்ன அரச காலம், கலியுக இன்ன வருட காலம் என்னும் யாதொரு காலமுமின்றி முதற் சங்கம், நடுச்சங்கம், கடைச்சங்கம் என்னும் நிலையற்ற சங்கத்தார் ஒரு காலத்தில் சிவனென்பவரை

அவமதித்து விட்டதாகவும் அந்த கோபத்தால் சங்கத்தை அழிக்க வேண்டி பிர்மாவை திருவள்ளுவராகவும், சரஸ்வதியை அவ்வவையாகவும், விஷ்ணுவை இடைக்காடராகவும் பூமியில் அவதரிக்கச் செய்தாராம். அற்ப வித்வாக்களை ஜெயிக்கலாகாத சிவன் அவதாரம் செய்யும் அதிகாரத்தை எவ்வகையில் நடத்தினாரோ விளங்கவில்லை” (அயோத்திதாசர், 2011, pp.461462).

என்று திருவள்ளுவர் பற்றின பொய்க் கதைகளை நையாண்டியுடன் அம்பலப்படுத்திய பண்டிதர், திருவள்ளுவர் குறித்த உண்மையான வரலாற்றை விரைவில் எழுதப்போவதாக 1908ம் ஆண்டு சூலை 15ம் நாள் தமிழன் இதழில் அறிவித்தார். அதன்படி ’புத்தர் எனும் இரவு பகலற்ற ஒளி’ என்ற தலைப்பில் கட்டுரை தொடரை நிறைவு செய்த பின்னர், பல்வேறு தலைப்புகளில் திருவள்ளுவர் பற்றின செய்திகளைத் தொடர்ந்து வெளிக்கொண்டு வந்தார்.

## திருவள்ளுவர் பற்றின இலக்கிய கல்வெட்டு ஆதாரங்கள்

பண்டிதரிடம் முதன்மைத் தரவுகளெல்லாம் ஓலைச் சுவடிகளாகவே இருந்தன. சில கையேட்டுப் பிரதிகளாகவும், கல்வெட்டு சாசனங்களாகவும் கிடைத்தன. அவற்றை பட்டியலிட்டுள்ளார் அவை.

முன்கலை திவாகரம், பின்கலை நிகண்டு, மணிமேகலை, சீவக சிந்தாமணி, சூளாமணி, திருக்கழு குன்றம் சீர்காழி தம்பிரான் கையேட்டுப் பிரதி, பலியனாரின் கையேட்டுப் பிரதியில் இருந்து நல்கூர் வேள்வியார் சாற்றுக்கவிதை, பொன்முடியார், நரிவெருத்தலையார், வெள்ளி வீதியார், கீரந்தையார் ஆகியோரின் திரிகுறள் சாற்றுக் கவிதைகள், பாகுபலி நாயனார், மார்கலிங்கப் பண்டாரம் ஆகியோரின் கையேட்டுப் பிரதிகள், பண்டிதரின் நண்பர் ஏ.ஜெயராம் நயினார் சேகரித்துக் கொடுத்த சகச விளக்கம், நூறு பாடல், விபூதி விளக்கம், பத்துப்பாடல், பஞ்சரத்தின பாடல் அடங்கிய சுவடி, அச்சிடப்பட்ட அசோதரைக் காவியம். ஆகியன. இதில் நல்லுரையார் எழுதிய பஞ்ச ரத்தினப் பாடல் திருவள்ளூர் வீரராகவ பெருமாள் கோயில் கல்வெட்டில் பதிக்கப்பட்டதை ஓலைச்சுவடியில் எழுதி வைக்கப்பட்டதாகும். ஆனால் அக்கல்வெட்டை ஆய்வு செய்ய பண்டிதர் நேரில் போனபோது அது உடைத்தெறியப்பட்டு புதைக்கப்பட்டதாக கண்டறிந்தார் (கௌதம சன்னா, 2007, p.85). தமது ஆதாரங்களை முறைப்படுத்தி திருவள்ளுவர் பற்றின வரலாற்றை வரைந்தார் பண்டிதர். அதனை விரிவாகக் காண்போம்.

## திருவள்ளுவர் யார்..?

திருவள்ளுவ நாயனார், திருவள்ளுவ சாம்பவனார் என வேறுபட்ட இருவர் இருந்தனர். திருவள்ளுவ சாம்பவனார் காலத்தால் பிற்பட்டவர். இவர் இயற்றியது நொண்டிச் சிந்து, ஞானவெற்றி ஆகியன. இந்த இரண்டையும் எழுதியது திருவள்ளுவ நாயனார் என கூறப்படுவது இடைச்செறுகல் என பண்டிதர் கண்டித்தார் (கௌதம சன்னா, 2007, p.88). எனவே திருக்குறளை எழுதியது திருவள்ளுவ நாயனாரின் வரலாற்றை பின்வருமாறு விளக்கினார்.

> “இந்துதேசம் முழுவதும் புத்த தன்மமாம் மெய்யறம் பரவியிருந்த காலத்தில் இந்திர வியார சங்கங்களில் தலைமெயாய் அறஹத்து என்றும், பிராமணர்கள் என்றும், அந்தணர்கள் என்றும் வழங்கி வந்த ஞான குருக்கள் நீங்கலாக, சாக்கையர் என்றும், வள்ளுவர் என்றும், நிமித்தகர் என்றும் பெயர் பெற்று அரசர், வணிகர், வேளாளர் என்ற முத்தொழிலாளருக்கும் கன்ம குருக்களாக விளங்கி தன்ம கன்மங்களை நடத்தி வந்தனர்...
>
> இவர்கள் பூர்வம் வடதேசத்தில் கணித வல்லபத்தால் சாக்கையர் என்னும் பெயர் பெற்று கலிவாகு, குலவாகு, வீரவாகு, இட்சுவாகு

என்னும் சக்கிரவர்த்திகளாக, தலைத்தார் வேந்தர்களாக விளங்கினார்கள்ஞ் இவர்களின் வம்சத்தினர் தென்னாட்டில் வள்ளுவர், சாக்கையர், நிமித்தகர் என்று அழைக்கப்படுகின்றனர் *(அயோத்திதாசர், 2011, p.455).*

இத்தகையோர் வரிசையில் கருமத் தலைவர் வம்ச வரிசையில் *(அயோத்திதாசர், 2011, p.544)* மாமதுரை கச்சன் என்றும் வடமதுரைக் *(அயோத்திதாசர், 2011, p.455)* கச்சனெனுங் கூர்வேல் வழுதி என்றும் அழைக்கப்பட்ட அரசனுக்கும், உபகேசி என்னும் அரசிக்கும் மகனாக பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர் நாயனார்" *(அயோத்திதாசர், 2011, p.568)*

நாயனார் இளமையிலேயே கல்வியில் சிறந்து விளங்கினார். அக்கால பௌத்த அரசர்கள் சாக்கைய வம்சத்தை சேர்ந்தவர்கள் என்பதால் நாயனார் பௌத்த திரிபிடகங்களையும், மற்ற நூல்களையும் கற்று தமிழ், பாலி, வடமொழி ஆகிய மொழிகளில் புலமைப் பெற்றார். பின்பு பெற்றோர் அனுமதியுடன் துறவு மேற்கொண்டு பிக்குவாகத் இந்திர வியாரம் என்ற பௌத்த சங்கத்தில் சேர்ந்தார். பௌத்த அற நூல்களான தம்ம பிடகம், சூத்ர பிடகம், விநய பிடகம் என்னும் திரிபிடகத்தை வழி நூலாகக் கொண்டு மெய்யறம், மெய்ப்பொருள், மெய்யின்பம் என்பதாக வகுத்து ஈரடி வெண்பாவில் திருக்குறளை எழுதினார். இவையே அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என வழங்குகின்றன *(கௌதம சன்னா, 2007, p.86).*

மேற்கண்ட குறிப்புகளின் அடிப்படையில் பார்க்கும் போது நாயனார் ஓர் அரசனின் மகன் என்பதும், இளவரசர் என்பதும் உறுதியாகிறது. மேலும் அவர் பௌத்த பிக்குவாக மாறினார் என்பதை பஞ்ச ரத்தினப் பாடல்கள் பறைசாற்றுகின்றன

## சிலாசாஸனப் பெயர்ப்பு

*நல்லுரையார் நாயனாரை சிந்தித்த தியான பஞ்சுரத்தினப்பா*

*மலர்கலியுகத்துன்னிய மேலோன் வள்ளலெணகுணன றவாழி*

*குலகுமரபோன் கொற்றவனென்னுங் குடமதுராபுரிகச்சன்*

*தவமதிலுதித்த தண்டமிழ்மறையோய் சருவமுமுணர்ந்த பாவலனே*

*தலமெலா முதற்சீராகுல வியார சங்கமெய் நாயனேயருளே*

*சங்கமெய்க்குருவாய் சாதனத்துரைந்து தரணியோர் குறைமிகுவாற்றி*

*பொங்கிரு வினையின் பகுப்பினை யுணர்த்தி புத்தமுதுய்ந்த மெய்ப்பொருளே*

*தங்குமின்னமுதே தாதைமுப்பால்போற் சமணமுற்றோர்க் கருளூட்டுந்*

*திங்கணன் முடியோன் வழிவழிகாட்டுத் செந்த நற்புலவ நாயகனே.*

*செந்நாப்புலவர் சீர்பெயர்பெற்றுத் தெண்ணிறை திரிக்குற ளருளி*

*நந்நாவலர்க்கு நாவுற மீய்ந்து நானிலத்தோர் நலமுற்றார்*

*புந்நாவடியோன் போற்றவுமறியேன் புநிதமெய்ஞ்ஞான மாவமுதே*

*திந்நநூர் மேலோய் திருவளு ரானீர் சின்மய நாயனே யருளே.*

*சின்மயனாந்த நாயனே நின்னை சேவைசெய் தேற்றுதற் கருளாய்*

*முன்னுமிச்சங்க முதலவனாகி மேடமே சதுர்த்தசி பின்னாள்*

*துன்னிய மூத்தித் தூயமெய்ப்பொருளாய் சுடரொளி காட்டிய வருளே*

*மின்னுபூம்பிண்டி வேந்தணன் வழியோய்*
*வள்ளலுண் நாயனே யருளே.*

*வள்ளலந் நிறைந்த வள்ளுவர் வழியோய்*
*மாதவ ரேற்று மெய்ஞ்ஞான*

*உள்ளமேகொண்டா யுலகெலா முணர்ந்தாய் உமதுமுப்பா லதையுணர்ந்தோர்*

*கள்ளமே யகற்றி காட்சியைப் பெறுவர் கமலநாயகன் கழல்கண்டு*

*வள்ளுவநாயன் காட்டிய வழிநூல் மணந்திரு வள்ளுவரூரே.*

*(அயோத்திதாசர், 2011, p.457)*

மேற்கண்டப் பாடல்கள் திருவள்ளூர் வீரராகவப் பெருமாள் கோயிலில் கல்வெட்டாக வடிக்கப்பட்டிருந்ததைக் கேள்விப்பட்டு அதைப் படியெடுக்க பண்டிதர் திருவள்ளூருக்கு சென்றார். ஆனால் கோயிலில் எங்குத் தேடியும் அது கண்ணுக்கு அகப்படவில்லை. எனவே அதை கண்டுப் பிடிக்கும் பொருட்டு அங்கே வசித்து வந்த கல்விமான்களாகிய முத்துசுவாமி ஜோசியர், சௌந்திரப்பாண்டிய முதலியார் ஆகியோரை சந்தித்து விவரங்களைக் கோரினார். அவர்கள் அந்த கல்வெட்டு இருந்தது உண்மையென்றும், அந்தக் கல்வெட்டை உடைத்து குளத்தில் போட்டிருக்கலாம், அல்லது பறைப்பொருள் கோவிலுக்கு அடிக்கல்லாக போட்டிருக்கலாம் என்று சொன்னதுடன், அக்கல்வெட்டுப் பாக்களை மனப்பாடம் செய்து வைத்திருந்த முத்துசுவாமி ஜோசியர் பாடிக்காட்டினார். அதை பண்டிதர் பதிவு செய்துக் கொண்டார். அதுதான் மேற்கண்டப் பாடல்கள். பண்டிதர் மட்டும் இப்பாடலைப் பதிவு செய்யாமல் போயிருந்தால் அது அழிந்தே போயிருக்கும், எனவே இந்தப் பாடல்கள் பண்டிதரால் மட்டுமே தமிழுக்கு கிடைத்த அரிய சான்றாவணமாகும்.

## திருவள்ளுவர் பிறந்த இடம்

திருவள்ளுவ நாயனாரின் வரலாற்றுக் குறிப்பை காணும் போது அவர் பிறந்த இடம் உத்திர மாமதுரை என்னும் வட மதுரை குறிக்கப்படுகிறது. அந்த வட மதுரை எங்குள்ளது. அதற்கான குறிப்பை பண்டிதர் பின்வருமாறு அளிக்கிறார். அதில்

> *“தின்னனூருக்கு மேற்கே இந்திர வியாரத்திலுள்ள புத்த சங்கத்தில் சேர்ந்து..” (அயோத்திதாசர், 2011, p.455)*

> *“திருவள்ளுவ நாயனார் தந்தை கச்சனென்னும் அரயன் வட மதுரையை ஆண்ட அனுபவம் கொண்டு நாளது வரையில் அந்நாட்டை கச்சயம் என்னும், கச்சம் என்றும் வழங்கி வருகிறார்கள்” (அயோத்திதாசர், 2011, p.459).*

இதற்கு ஆதாரமாக நல்கூர் வேள்வியாரின் சாற்றுக் கவியை முன்வைக்கிறார் பண்டிதர். எனவே இந்த வட மதுரை நாடு எது என்பதை உறுதி செய்ய வேண்டும்.

வடமதுரை (திருநின்றவூரிலிருந்து பெரிய பாளையத்திற்கு போகும் வழியில் வெங்கல் எனும் கிரமத்திற்கு அடுத்து வருவது), கச்சம் என்பதின் மருவலான கச்சூர் (திருவள்ளூரிலிருந்து ஊற்றுக்கோட்டைக்கு போகும் பாதையில் ஆரணி ஆற்றுக்கு அருகில்) மற்றும் தின்னனூர் என்கிற திருநின்றவூர் ஆகியன திருவள்ளூர் தாலுக்காவில் இருப்பதை 1930ல் வெளியான அரச ஆவணம் உறுதி செய்திருக்கின்றது (Alphabete list of village in Taluk an District of Madras presidency, 1933, pp.108)

பழைய செங்கல்பட்டு மாவட்டத்தில் இருந்த திருவள்ளூர் தற்போது தனி மாவட்டமாக இருக்கிறது. திருவள்ளூரை நகரை மையமாக வைத்துப் பார்க்கும்போது, திருவள்ளூரிலிருந்து வடமதுரை 28 கி.மீம், தின்னனூரிலிருந்து வடமதுரைக்கு 26 கி.மீம், தின்னனூரிலிருந்து திருவள்ளூருக்கு 14 கி,மீ ம், திருவள்ளூரிலிருந்து கச்சூருக்கு 20 கி.மீ ம், கச்சூரிலிருந்து வடமதுரைக்கு 22கி.மீம் என குறுகிய தூரங்களே இருக்கின்றன. மிக அருகருகே அமைந்துள்ள இந்த வரலாற்று

சிறப்பு மிக்க இடங்களில் புகழ்பெற்ற பழைமையான சைவ மற்றும் வைணவக் கோயில்கள் இன்றும் இருக்கின்றன. இந்த பகுதியில் இருக்கும் ஊர்ப் பெயர்கள் பெரும்பாலும் பௌத்த பெயர்களே என்பது தற்செயலானதல்ல.

எனவே பண்டிதர் குறிப்பிடும் பகுதிகள் அனைத்தும் இந்த பகுதியில் இருப்பது கண்கூடு என்பதில் ஐயமில்லை. அதே நேரத்தில் பண்டிதர் குறிப்பிடும் இந்திர வியாரம் எது..?

இந்திர வியாரத்திற்கு மற்றொரு பெயர் இராகுல வியாரம் அல்லது வீரராகுல வியாரம் என்பதாகும் (அயோத்திதாசர், 1999, p.605). இந்த வீரராகுலர் என்ற பெயர்தான் தற்போது மருவி வீரராகவர் கோயிலாக மாற்றப்பட்டுள்ளது. எனவே திருவள்ளூரில் இருக்கும் வைணவக் கோயிலான வீரராகுல வியாரத்தில் திருவள்ளுவர் மறைவிற்குப் பிறகு அங்கே அடக்கம் செய்யப்பட்டதை பஞ்சரத்தினப்பா தெளிவு படுத்துகிறது (காண்க அடிக்குறிப்பு 29)

இத்தகவலை ஒருங்கிணைத்துப் பார்க்கும்போது திருவள்ளுவர் பிறந்தது தற்போதைய திருவள்ளூர் என்ற பண்டிதரின் கருத்து உறுதியாகிறது. திருக்குறளை ஆராய்ந்த அறிவாணர்கள் திருவள்ளூர் என்னும் பெயர் திருவள்ளுவரை குறிக்கிறது என்பதை துளியும் கண்கொள்ளாதது பெரும் வரலாற்றுப் பிழை. குறைந்தபட்சம் பெயர் ஒலிப்பு ஒற்றுமையைக்கூட அவர்கள் கவனிக்காதது பெரும் வியப்பை அளிக்கிறது.

## திருவள்ளுவர் காலம்

திருவள்ளுவரின் காலம் குறித்த பல வேறுபாடுகள் தமிழ் ஆய்வு உலகில் நிலவினாலும். அவர், கடைச்சங்க காலத்தைச் சேர்ந்தவர் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் பண்டிதர் தமது ஆய்வில் இதிலிருந்து முற்றிலும் வேறுபடுகிறார். ஏற்கெனவே கடைச்சங்க கால புலவர்களின் திமிர்தனத்தை அடக்க சிவன் மூலம் அனுப்பப்பட்டவர் என்கிற கட்டுக்கதையை அவர் முற்றாக நிராகரித்திருந்தார். அப்படியெனில் பண்டிதர் குறிக்கும் காலம் எது..?

கடைச் சங்கத்திற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தவர் திருவள்ளுவர் என்று சுதேசமித்திரன் எழுதியதை குறித்துக் காட்டியப் பண்டிதர் கடைச்சங்கத்தை சேர்ந்தவரல்ல திருவள்ளுவர் என்பதை ஏற்றுக் கொள்கிறார் (அயோத்திதாசர், 2011, p.543). ஏற்கெனவே குறிப்பிட்டதைபோல திருவள்ளூர் வீரராகவர் கோயில் சுவற்றில் பொறிக்கப்பட்டிருந்த பஞ்ச ரத்தின பாடல்களை தேடி அவர் திருவள்ளூருக்குப் போய், அங்கே வேலூர் மார்கலிங்க பண்டாரம் அவர்களின் மைத்துனர் முத்துசுவாமி ஜோசியர், காசி விசுவநாத முதலியார் அவர்களின் சம்பந்தியின் தம்பியான சௌந்திரபாண்டி முதலியார் ஆகியோரை சந்தித்தார். அவர்கள் பல தொடர்புடையத் தரவுகளை வைத்திருந்தனர். எனவே விவரங்களைக் கோரினார். அவர்கள் சொன்ன செய்திகள் பின்வருமாறு.

- இக்கோயில் குறித்து பூசல் உருவான காலத்தில் சாக்கைய வள்ளுவர்களிற் சிலர் நல்லுரையார் என்கிற பாணரால் பஞ்சரத்தின தியானப்பா பாடி கற்பலகையில் பொறித்தனர்.
- பிற்காலத்தில் அச்சிலாசாசனம் உடைக்கப்பட்டு கோயில் குளத்தில் போடப்பட்டிருக்கலாம் அல்லது பறைப்பொருள் கோயிலுக்கு அடிக்கல்லாகப் போடப்பட்டிருக்கலாம்.
- வேலூர் விநயலங்கார வியாரம், தின்னனூர் வியாரம், திருவள்ளூர் வியாரம் ஆகியன ஒரே காலத்தில் கட்டப்பட்டவை. திருவள்ளுவரின் மறைவிற்கு முன்பு அது இந்திர வியாரம் என்றும் இராகுலர் வியாரம் என்றும் வழங்கப்பட்டது. பின்பு திருவள்ளுவரின் பெயர் சூட்டப்பட்டது. அக்கோயில் புத்த விகாரை என்பதற்கு உள்ளிருக்கும் பௌத்த நிர்வாண சிலையே சான்று.

- *நல்கூர் வேள்வியாரின் வெண்பாவிற்கு வேலூர் மார்கலிங்க பண்டாரம் இயற்றியுள்ள கருத்துரையினாலும் மேற்கண்ட தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்று அப்பஞ்ச ரத்தின பாவை பாடியதுடன், அவர் தம்மிடமிருந்த திருக்குறள் பிரதி ஒன்றை தமக்களித்தாக பண்டிதர் கூறுகிறார் (அயோத்திதாசர், 2011,* pp.*458459).*

எனவே மூன்று விகாரைகள் ஏக காலத்தில் கட்டப்பட்டன என்பது தெளிவானால் அது எந்த காலம்? அதற்கு பண்டிதர் கொடுக்கும் குறிப்பு என்னவெனில் முற்றிலும் அழிக்கப்பட்ட வேலூர் விநயலங்கார வியாரம் சாம்ராட் அசோகரால் கட்டப்பட்டதாகும் என்பதுதான் (அயோத்திதாசர், 1999, p.605). அசோகர் பிறந்தது கி.மு304, அவர் ஆட்சிக் கட்டிலில் ஏறிய ஆண்டு கி.மு.268 மறைந்த ஆண்டு கி.மு.232. இந்தக் காலக்கணக்கு தற்போதைய ஆய்வுகளின்படி இன்னும் முன்னே போகின்றன. எனினும் அசோகரின் விநயலங்கார வியாரம் கட்டப்பட்டக் காலத்தில் திருவள்ளுவர் வாழ்ந்தார் எனபதே வரலாற்று அமைதிக்கு பொருத்தமாயிருக்கும்.

## திருவள்ளுவ நாயனாரின் மதம் அல்லது தம்மம்.

திருவள்ளுவ நாயனார் பௌத்த மதத்தைச் சார்ந்தவர் என்பதையும், திரிபிடகங்களை வழி நூலாகக்கொண்டு தமது முப்பாலை எழுதினார் என்பதை உறுதியாகத் தெரிவிக்கும் பண்டிதர், நாயனாரின் போதனைகளைப் பற்றி கூறும்போது வேறுவிதமான கருத்தை முன் வைக்கிறார். அது முற்றிலும் தமிழகத்திற்குப் புதிது. பண்டிதர் கூறுவதாவது..

> “புத்தபிரானால் ஓதியுள்ள திரிபீட வாக்கியம், திரிபேத வாக்கியம், திரிமறை வாக்கியம், திரி சுருதி வாக்கியமென வழங்கும் முதநூலாதாரங் கொண்டே இந்திர தேசத்திலுள்ள சகல மதங்களுந் தோன்றியுள்ளபடியால், ஒவ்வோர் மதஸ்தரும் தமிழ் பாஷையில் வரைந்துள்ள வழி நூலாந் திரிக்குறளில் ஒவ்வோர் பாடல்களை எடுத்துக் கொண்டு திருவள்ளுவர் மதம் எங்கள் மதம்ஞ் எங்கள் மதமெனத் தங்கள் மதங்களைச் சிறப்பித்துக் கொள்வது இயல்பாம். திருவள்ளுவருக்கோ மதமென்பது கிடையாது. தங்கள் மதமே மதம், தங்கள் தேவனே தேவனென்று கூறி மதக்கடைப் பரப்பி சீவிப்பவர்கள் யாரோ அவர்களுக்கே மதம் என்பது சான்றாம். திரிபிடகத்தை புத்த தன்ம மென்றும், திரிக்குறளை திருவள்ளுவர் தன்மென்றே கூறத்தகும்” (அயோத்திதாசர், 2011, p.544).

எனவே பண்டிதரின் கருத்துப்படி திருவள்ளுவரின் தத்துவம் என்பது தனியானது. தனி மதம் போன்றது. புத்தரின் தம்மத்தைப் போல தனித்த தம்மம். அதுவே திருவள்ளுவர் தம்மம் என்பது துலங்குகிறது.

## திருவள்ளுவ நாயனார் மறைவு

திருவள்ளுவர் எந்த ஆண்டு மறைந்தார் என்பதைப் பற்றின துல்லியமான ஆண்டுக் கணக்கு இல்லை. அதை பண்டிதரும் ஏற்றுக் கொள்கிறார். ஆனால் காலக் கணக்கு இருப்பதை அவர் தெளிவுப்படுத்தினார். அதன்படி

> “அறகத்து நிலையடைந்த நாயனார், தமது தம்ம அறத்தை விளக்கி வந்த நிலையில் சித்திரை மாதம் சதுர்த்தி பின்னாள் வந்த அமரவாசி (அமாவாசை) இரவில் நிர்வாணம் அடைந்தார். அல்லது மறைந்தார். பின்பு அவரது தேகத்தை பௌத்த முறைபடி தகனம் செய்து சாம்பலை இந்திர வியாரம் எனும் இராகுலர் வியாரத்தில் புதைத்தனர் வியார அங்கத்தினர்” (கௌதம சன்னா, 2007, p.87 - அயோத்திதாசர், 2011, p.457).

இந்த வழக்கத்தையொட்டி திருவள்ளூர்

வீரராகவர் கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை அமாவாசை வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுவதுடன், ஒவ்வோர் மாத அமாவாசைக்கும் கோயிலைச் சுற்றி மக்கள் கூடி வழிபட்டு, இரவு முழுவதும் கோயில் வளாகத்தில் தங்கி வணங்கும் வழக்கம் தொடர்ந்து வருகிறதை இத்தோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம்.

## திரிக்குறள் என பெயர்க்காரணம் மற்றும் பண்டிதரின் திருக்குறள் உரை.

திருக்குறள் என பொதுவாக வழங்கப்படுவதை அயோத்திதாசப் பண்டிதர் ஏற்றுக்கொண்டாலும் திரிகுறள் என்பதே அதன் உள்ளார்ந்த பெயர் என்பதை வலிறுத்தி தமது நூல்களில் முழுமைக்கும் திரிகுறள் என்றே வழங்கி வந்தார். அதற்கான காரணத்தை பின்வருமாறு விளக்குகிறார்.

> “உலகுப் புகழ் அரிய திரிபேத வாக்கியங்கள் என்றும், வழங்கிய மூவறு மொழியாம் முதநூலுக்கு வழி நூலாகத் தோன்றியவை திரிகுறளும், சார்பு நூலாகத் தோன்றியவைகள் திரிமந்திரம், திரிவாசகம், திரிவெண்பா, திரிமாலை, திரிகடுகம், சித்தர்கள் நூல்கள் முதலியவைகளேயாம். இத்திரிகுறளுக்கு திருவென்னும் அடைமொழி சேர்த்துத் திருக்குறளென சிறப்பு வழங்கினும் தன்ம பிடகம், சூத்ர பிடகம், விநய பிடகம் என்னும் மகட பாஷா முந்நூலுக்கு திராவிட பாஷா வழி நூலாம் அறத்துப்பால், பொருட்பால், காமப்பால் என்னும் திரிகுறளே உடன்பாடாதாலின் திருவென்னும் அடைமொழி சிறப்பென்றண்ணி திருக்குறளென ஏற்பது மும்மணிகளென்பதை அழகு மணிகள் என்பற்கு ஒக்கும். ஆதலில் திரிபேதங்களாம் முதனூலுக்குத் திரிகுறளே வழி நூலாதலின் திருவென்னும் அடைமொழி நீக்கி திரியென்னும் மூவரு மொழிகளை விளக்கியுள்ளதே முதற் சிறப்பாகும்” (அயோத்திதாசர், 2011, p.569).

தாம் கண்டடைந்த உண்மைகளின் அடிப்படையில் பண்டிதர் திருக்குறள் எனும் திரிகுறளுக்கு அறிவித்தவாறே உரையெழுத 1910ம் ஆண்டு ஆகத்து மாதம் தொடங்கினார். திருவள்ளுவ நாயனார் இயற்றிய திரிகுறள் எனும் தலைப்பில் ஒவ்வோர் இதழிலும் பத்து குறளுக்கு தனித்தனியாக பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, மற்றும் விரித்துரை என விரிவாக பிற இலக்கிய ஆதாரங்களுடன் எழுதத் தொடங்கி 155 அதிகாரங்களை நிறைவு செய்தார். இடையில் 1914ஆம் ஆண்டு மே மாதம் 5ம் நாள் அவரது மரணம் குறுக்கிட்டு அவரது அரும் பணிகளைத் தடுத்து நிறுத்தியது. குறளுரையும் முற்றுப் பெறாமல் 155 அதிகாரங்களுடன் நின்றது என்பது தமிழ் உலகத்திற்குப் பெரும் இழப்பு.

## முடிவுரை

திருக்குறள் தொடர்பான பண்டிதரின் ஆய்வுகளைச் சுருக்கிப் பார்ப்பதெனில். திருவள்ளுவர் ஓர் அரச குமாரனாக பிறந்தார், வாழ்ந்தார், துறவியாக மறைந்தார், அவர் பிறந்த இடம் அவரது பெயராலே இன்றும் வழங்கும் திருவள்ளூர், அவரது தம்மம் தனியான நாயனார் தம்மம். அவரது காலம் அசோகர் வாழ்ந்த காலம், அவர் மறைந்தது சித்திரை மாதம். தூயத் தமிழ் மறைத் தந்த பேராசான் வள்ளுவரின் திருக்குறள் ஓலைச்சுவடிகளின் படிகள் இன்று உலகின் பல நாடுகளில், குறிப்பாக ஐரோப்பிய ஆவணப் பாதுகாப்பகங்களில் பாதுகாக்கப்படுகின்றன. அவற்றினையும் வாசித்து பாடபேதங்களை கண்டறிவது ஆய்வுலகத்திற்கு முன் உள்ள கடமையாகும்.

## References

*Alphabete list of village in Taluk a District of Madras presidency*. (1933). Chennai: Superintendent, Government Press.

Ayothidasar, Ka. (1999). *Ayothidasar Sinthanaigal*. (Vol.2). Chennai: Nattar Valakkariyal Aivu Maiyam.

Ayothidasar, Ka. (2011). *Ayothidasar Sinthanaigal*. (Vol.2). Chennai: Nattar Valakkariyal Aivu Maiyam.

Gauthama Sanna. (2007). *Ka.Ayothidasa Pandithar*. New Delhi: Sahitya Akadami.

Narasaiya, K.,R.,A. (2006). *Madarasapaddinam: Chennai Perunagarathin Kathai 1600-1947*. Chennai: Pazhaniyappa Brothers.

Sutharamurthi, I. (1995). *Thirukural*. Chennai: Chennai University.

*Thirukural Miil Pathippu*. (2016). Joja Muthaiya Nulagam.

*Velli Vizha Malar, 1970-1975*. Chennai: Institute of International Tamil Studies.

Vengidasamy Pandithar, Puthupettai. (1869). *Sivavakiyam*.

Vijayakumar. (2015). *Pandithar Ayothidasarin Thirikural*. Unbublish Ph.D Thesis. Chennai: Chennai University.

https://en.wikipedia.org/wiki/Francis_Whyte_Ellis

puthagampesuthu.com/2015/02/26/குடிசைத்தொழில்செய்தாரா.

# மொரீசியசு தொடக்கநிலைப் பள்ளிகளில் பேச்சுத் திறனை அமல்படுத்துவதில் சிக்கலும் தீர்வும்

# Problem and solution in the implementation of Communication Skills in the Primary schools of Mauritius

முனைவர் உமா அழகிரி / Dr. Uma Allaghery [1]

*Abstract*

This article describes the problem in the implementation of Communication Skills in the Primary schools of Mauritius. Some of the solutions will also be given so as to help the teachers gain confidence in the implementation and so that students too show more interest in speaking the Tamil language. The main sources for this paper were based on Tamil Textbooks of Mauritius, National Curriculum Framework of Mauritius and interview. The period that had been considered was since the implementation of the same that is as from 2015. This essay is written in a descriptive mode, exploratory mode and quantitative reference was done. The research shows the following aspects: the themes that had been integrated in the Tamil Textbooks, the endeavour of the teachers in the implementation, what are the problems that both the teachers and the students are facing during the implementation and what are the probable solutions which might help so as to make Communication Skills interesting. Since the Communication Skills is an examinable component at school level as from the Grade 5 Examination the teachers are trying their best to make the students speak in the language either individually or in groups. This is a challenge to all the teachers and the students in a context where the exposure of Tamil language is less in the society. What are the mechanisms that the teachers put forward to carry out this task are worth to be noted and what is the way forward so that they become successful in the implementation. The Standard Tamil is being used in the Communication Skills and how far this helps the students to write in the language correctly; How far the students are showing interest in speaking in the language and how far the Communication Skills have helped in the creative writing of the students are the points that will be dealt with in this paper.

Date of submission: 2018-10-17
Date of acceptance: 2018-11-10
Date of Publication: 2018-12-30
Corresponding author's
Name: Dr. Uma Allaghery
Email: u.allaghery@gmail.com

**Key Words:** Communication Skills, implementation, Primary schools, Tamil Textbooks, Teacher's Guide, National Curriculum Framework, Examination component

[1]The author is a lecturer in the Department of Tamil, Mahatma Gandhi Institute, Mauritious.
u.allaghery@gmail.com

## முன்னுரை

உலக மேம்பாட்டிற்குக் கல்வி ஒரு முக்கியக் கூறாக விளங்குகிறது. கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பியர்சன் என்பவர் மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார் (Pearson, 19962018). மொரீசியசு நாட்டில் தமிழ்க் கல்வியின் வளர்ச்சிக்குப் பல கட்டங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. வீட்டுத் திண்ணையில் தொடங்கிய தமிழ்க் கல்வி தற்போது பல்கலைக்கழக நிலைக்கு வந்துவிட்டது என்பது போற்றுதற்குரிய ஒரு செய்தி ஆகும். நம் முன்னோர்களுக்குத் தமிழ்மொழி தாய் மொழியாகவும் அன்றாடத் தொடர்பு மொழியாகவும் விளங்கியது (உமா, 2017,pp. 3233). ஆனால் பல்வேறு காரணங்களினால் காலப் போக்கில் தமிழ்மொழி இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படுகிறது.

மொரீசியசின் கல்வித்திட்டத்தில் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மாற்றங்கள் கொண்டு வருவது உண்டு. அதில் உள்ள நோக்கங்களையும், கூறுகளையும் மொழித் திறன்களையும் தமிழ்ப் பாடநூல்களில் இணைப்பது உண்டு. 2015ஆம் ஆண்டில் வெளியான கல்வித்திட்டத்தில் பேச்சுத் திறன் என்னும் கூற்றுக்கும் அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அதாவது பேச்சுத் திறனை வளர்ப்பதற்கான பயிற்சிகள் தமிழ்ப் பாடநூல்களில் அளிக்கப்பட்டுள்ளன (தமிழ்ப் பாடநூல்கள் தரம் 5 மற்றும் தரம் 6, 2017). அப்பயிற்சிகளைச் செய்தபோது ஏற்பட்டுள்ள சிக்கல்களும் அச்சிக்கல்களுக்கான தீர்வுகளும் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படும்.

## முந்தய ஆய்வு

தமிழ்க் கல்வி முறையாகச் சொல்லிக் கொடுத்ததிலிருந்து வாய்மொழிப் பயிற்சி ஒரு முக்கிய அங்கமாக விளங்குகிறது (இராசாராம், 1991, p.513). முதல் தரம் தொடங்கி ஆறாம் தரம் வரை வாய்மொழிப் பயிற்சி இடம்பெறுவது உண்டு. பகுதியை விளக்கும் முன் முன்னறிவைச் சோதிப்பதற்கும், இலக்கணக் கூற்றை விளக்கியபின் மாணவர்களுடைய புரிந்துணர்தலைச் சோதிப்பதற்கும் பல நிலைகளில் வாய்மொழிப் பயிற்சி நடத்தப்படுவது உண்டு. மாணவர்களுடைய அறிவையும் புரிந்துணர்தலையும் செய்தி மனதில் பதிந்துள்ளதையும் அறிவதற்குத்தான் வாய்மொழிப் பயிற்சி செய்யப்படுகிறது. ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன் வாய்மொழிப் பயிற்சியைத் தவிர, தமிழ்மொழியில் சிந்தித்து உரையாடுவதற்கும் தமிழ்மொழியைக் கற்பதில் ஊக்குவிப்பதற்கும் பேச்சுத் திறனை ஒட்டித் தேர்வு செய்யத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அதனால்தான் கற்றல் கற்பித்தலில் பேச்சுத் திறனுக்கும் நேரம் வழங்கக் கட்டாயம் ஏற்பட்டுள்ளது (The Government Gazette Of Mauritius, No. 43, p.32).

தமிழ்ப் பாடநூல்களில் உள்ள பேச்சுத் திறனுக்கான பயிற்சிகளின் அடைப்படையில் மாணவர்கள் தங்களுக்குள் பேசுவதற்கும் உரையாடுவதற்கும் வகுப்பளவில் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனவே மாணவர்கள் தமக்குத் தெரிந்த சொற்களஞ்சியத்தையும் சொற்றொடர் அமைப்புகளையும் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட தலைப்பை ஒட்டிப் பேச வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. பட்டப் படிப்புக்காக மாணவர்கள் ஆய்வேடுகள் வழங்க வேண்டும். அவ்வகையில் மாணவர்கள் வகுப்பில் வாய்மொழிப் பயிற்சியைச் செய்யும் முறையைப் பற்றி ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது (Coonjbeeharry, 2016). ஆனால் புதுக் கல்வித்திட்டத்தின் அடிப்படையில் பேச்சுத் திறனை நடைமுறைக்குக் கொண்டுவந்தபோது ஏற்பட்டுள்ள சிக்கல்களைப் பற்றி ஆய்வு செய்யப்படவில்லை.

## தரவுகளும் ஆய்வுகளும்

இக்கட்டுரை மொரீசியசு தொடக்கநிலைப் பள்ளிகளில் பேச்சுத் திறனை அமல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கலும் தீர்வும் பற்றியது. இப்பணிக்குப் பண்பு சார் நூலக ஆய்வும் விளக்கமுறை ஆய்வும் பின்பற்றப்பட்டுள்ளன. இக்கட்டுரையின் துணை ஆதாரங்கள் தேசியக் கல்வித் திட்டம், தமிழ்ப் பாடநூல்கள், ஆசிரியர் கையேடுகள்,

ஆசிரியர்களுக்கான பேட்டிகள் என்பவை ஆகும்.

## மொரீசியசு கல்வித்திட்டத்தில் உள்ள கூறுகள்

மொரீசியசில் பாடநூல்கள் கல்வித்திட்டத்தின் அடைப்படையில்தான் எழுதப்படுகின்றன. நாட்டு மற்றும் சமுதாயத்தின் தேவைகளுக்குத் தொடர்பாக அக்கல்வித்திட்டம் தயாரிக்கப்படுகிறது. மொரீசியசில் 2015 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ள கல்வித்திட்டத்தில் மொழிகளுக்கு ஒரு தனி முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு கட்டாய மொழிகளாகக் கற்பிக்கப்படுகின்றன. தமிழ், இந்தி, உருது முதலிய மொழிகள் மூதாதையர் மொழிகளாகக் கருதப்படுகின்றன. அந்தந்தக் குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் பொதுவாகத் தம் மூதாதையர் மொழி ஒன்றைத் தேர்ந்தெடுத்து விருப்பப் பாடமாகக் கற்பது உண்டு (இராசாராம், 1991, p.529).

கடந்த என்பது ஆண்டுகளாக இதே முறைதான் பின்பற்றப்பட்டுள்ளது. மொரீசியசு பல்லின மொழிகளை வழங்கிய நாடாக விளங்குவதால் இவ்விடம் மொழிகளுக்கிடையில் ஆய்வு செய்வதற்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது (ஆராய்ச்சிக் கருத்தரங்கு, மகாத்மா காந்தி நிறுவனம், செம்டம்பர் 2018). இது நம் நாட்டு அடையாளத்தையும் பண்பாட்டு அடையாளத்தையும் வலுப்படுத்தவும் மற்ற நாடுகளோடு தொடர்பு கொள்ளவும் வழி அமையும்.

ஒரு மொழியின் முக்கியத்துவங்களாவன: கற்றல், தொடர்பு கொள்ளுதல், செயல்பாட்டு நோக்கங்கள், படைப்பாற்றலை வளர்த்தல், அடையாளத்தை வளர்த்தல் என்பவை ஆகும் (National Primary Curriculum Framework, 2015, p.23). ஒரு மொழியைக் கற்பதன் முதல் நோக்கம் அம்மொழியில் மற்றவர்களோடு பேசுவதற்காகவே ஆகும். இது நாடு, சமூகம், வீடு, பள்ளி ஆகியவற்றின் அளவில் பேசுவதற்குரிய ஒரு சாதனம் ஆகும். மாணவர்கள் வெவ்வேறான மொழிகளைக் கற்றுக்கொள்வதற்கும் மாணவர்கள் மொழிகளில் தன்னம்பிக்கையுடன் பேசுவதற்கும், நம் நாட்டுச் சூழலிலும் பன்னாட்டுச் சூழலிலும் செயல்படுத்துவதற்கும் மாணவர்கள் தயாரிக்கப்படுகிறார்கள் (National Primary Curriculum Framework, 2015, p.23).

மாணவர்கள் தமிழ்மொழியைக் கற்கும்போது கேட்டலிலும் பேசுதலிலும் வளர்த்துக் கொள்கிறார்கள். அவை:

➢ மாணவர்கள் கேட்கின்றவற்றைப் புரிந்துகொள்ளுதல்,

➢ அவர்களிடம் பேசும்போது உரிய பதில் அளித்தல்,

➢ செய்திகளை அறிந்துகொள்ளுதல்,

➢ பொழுது போக்குதல்,

➢ மாணவர்கள் பல்வேறு சூழல்களில் தன்னம்பிக்கையுடன் பேசுதல்,

➢ மாணவர்கள் பல்வகைச் சூழல்களில் பொருத்தமாகப் பேசுதல் என்பவை கேட்டலின்போதும் பேசுதலின்போதும் பெற்றுக் கொள்ளக் கூடிய திறன்கள் ஆகும்.

## தமிழ்ப் பாடநூல்களில் உள்ள பேச்சுத் திறன் பயிற்சிகள்

தொடக்கநிலைப் பள்ளி மாணவர்களுக்கு முதல் தரம் தொடங்கி ஆறாம் தரம் வரை தமிழ்ப் பாடநூல்கள் தயாரிக்கப்படுகின்றன. எல்லாப் பாடநூல்களிலும் வாய்மொழிப் பயிற்சிகள் தரப்படுகின்றன. ஆனால் பேச்சுத் திறனுக்கான பயிற்சிகள் ஐந்தாம் மற்றும் ஆறாம் தரங்களுக்கு மட்டுமே தரப்படுகின்றன. அப்பயிற்சிகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை வாசித்தல், தனிவேலை, குழு வேலை என்பவை ஆகும். பத்து (10) தலைப்புகளின்கீழ் இப்பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. அத்தலைப்புகளாவன:

தன்னை அறிமுகப்படுத்துதல், குடும்பம், பள்ளி, சந்தை, நாடு, திருவிழா, விழா, உணவு வகைகளும் குடி வகைகளும்,

நல்லொழுக்கம், பொழுதுபோக்கு என்பவை ஆகும் (பாடநூல்கள் தரம் 5 மற்றும் தரம் 6, 2017). மாணவர்களுடைய அன்றாடச் சூழல்களுக்கு ஏற்ப தலைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஐந்தாம் மற்றும் ஆறாம் தரங்களுக்கு ஒரே தலைப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் ஆறாம் தரத்துக்குரிய பயிற்சிகள் வேறானவை. தலைப்புகளை ஒட்டி படங்களும் சொற்களும் தரப்பட்டுள்ளன; இவற்றை ஒட்டி வினாக்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் இவ்வினாக்களைக் கொண்டு மாணவர்களைப் பேச வைக்க வேண்டும்.

## தமிழாசிரியருக்குரிய குறிப்புகள்

பாடநூல்களிலேயே ஆசிரியர்களுக்குக் குறிப்புகள் தரப்படுகின்றன. பேச்சுத் திறனை வளர்ப்பதற்கான நோக்கங்கள் யாவை? என்றும் குறிப்புகளைக் கொண்டு என்ன செய்ய வேண்டும்? என்றும் கூறப்படுகின்றன. ஆசிரியர் குறிப்புகள் பின்வருமாறு:

### i. வாசித்தலுக்கான ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் கீழ்க்காணும் பகுதியை வாசிக்கச் செய்தல். மாணவர்கள் இதை வாசிக்கும்போது ஆசிரியர் அவர்களுடைய உச்சரிப்பு, குரல் ஏற்றத்தாழ்வு, தொனி ஆகியவற்றின்மீது கவனம் செலுத்த வேண்டும். மாணவர்கள் பகுதியை நன்றாகப் புரிந்துகொண்டு வாசிக்க ஊக்கம் அளிக்க வேண்டும்.

### ii. தனிவேலைக்கான ஆசிரியர் குறிப்பு

கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு மாணவன் தன்னைப் பற்றிப் பேசச் செய்தல்.

### iii. குழு வேலைக்கான ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் கீழ்வரும் குறிப்புகளைக் கொண்டு குழுவேலை நடத்துதல். கீழே தந்துள்ள சொற்களை ஒட்டி மாணவர்களைப் பேச வைத்தல்.

உரையாடல், கலந்துரையாடல், விளம்பரம், அழைப்பிதழ், பட்டியல் ஆகியவை குழு வேலையாக அளிக்கப்பட்டுள்ளன (ஆசிரியர் கையேடு, தரம் 5 மற்றும் தரம் 6, 2017).

iv. பேச்சுத் திறனை ஒட்டிய அமர்வுகள்

பேச்சுத் திறன் என்னும் கூறு நடைமுறைக்குக் கொண்டுவருவதற்குத் தொடக்கநிலைப் பள்ளித் தமிழாசிரியர்களுக்கு 2016ஆம் ஆண்டில் அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன (மகாத்மா காந்தி நிறுவனம், டிசம்பர் 2016). பேச்சுத் திறனைப் பற்றியும், அதன் மதிப்பீட்டைப் பற்றியும், பயிற்சி வகைகளைப் பற்றியும், அதை மேற்கொள்ளக்கூடியவிதத்தைப் பற்றியும் விவாதிக்கப்பட்டுள்ளன. அமர்வுகளுக்குப் பிறகு பின்னூட்ட வினாநிரல்கள் தரப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் அவற்றை நிரப்பித் திருப்பிக் கொடுத்தார்கள்.

v. பேச்சுத் திறனுக்குரிய தேர்வுகள்

ஐந்தாம் மற்றும் ஆறாம் தரப் பாடநூல்களில் மட்டும் பேச்சுத் திறனுக்கான பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. Primary School Achievement Certificate (PSAC) மதிப்பீடு ஒன்றை ஆறாம் தரத்து மாணவர்கள் எழுத வேண்டும். இது மொரீசியசு தேர்வு குழுவின் ஏற்பாட்டின்கீழ் நாட்டு அளவில் நடைபெற்றுள்ளது. மாணவர்கள் முதல் தரம் தொடங்கி ஆறாம் தரம் வரை பெற்றுள்ள அறிவும் வளர்த்துள்ள திறன்களும் இம்மதிப்பீட்டில் சோதிக்கப்படுகின்றன (The Government Gazette Of Mauritius, No. 43, page 32).

பேச்சுத் திறனுக்கான பயிற்சிகள் ஐந்தாம் தரத்திலும் ஆறாம் தரத்திலும் செய்யப்படுகின்றன. ஐந்தாம் தரத்திலும் ஆறாம் தரத்திலும் பேச்சுத் திறனை ஒட்டி வகுப்பு அளவில் சோதனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு தமிழ் ஆசிரியரும் பேச்சுத் திறனுக்கான தேர்வுத் தாள்களைத் தயாரித்துப் பேச்சுத் திறனுக்கான சோதனை செய்ய வேண்டும். பேச்சுத் திறனுக்கான மதிப்பீடு ஒவ்வொரு தொடக்க நிலைப் பள்ளி அளவிலும் கவனிக்கப்படுகிறது. அதற்குக் கண்காணிப்பு நடைபெறுகிறது. மாணவர்களுடைய அடைவுகளை ஒவ்வொரு

தொடக்க நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரும் மொரீசியசு தேர்வுக் குழுவுக்கு அனுப்ப வேண்டும். PSAC என்பதற்கான சான்றிதழில் பேச்சுத் திறனில் மாணவர்களுடைய அடைவு சேர்க்கப்படுகிறது. மாணவர்கள் அடைய வேண்டிய தரங்கள்:

1. Basic - அடித்தரம்
2. Intermediate - நடுத்தரம்
3. Proficiency - மீத்திரம்

என்பவை ஆகும்.

## பேச்சுத் திறனை அமல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள்

### 1) நேரமின்மை (ஆசிரியர் பேட்டி 28.06.18)

பேச்சுத் திறனை அமல்படுத்தியபோது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. பகுதி அல்லது இலக்கணத்தை ஒட்டி விளக்கங்களை அளிக்கும்போது ஆசிரியர்கள் வினாக்களின் மூலமாக மாணவர்களைப் பேசச் செய்வது அவர்களுடைய கடமையாகும். ஆனால் ஒரு குறிப்பிட்ட தலைப்பை ஒட்டித் தனியாகவோ குழுவாகவோ பேசிப் பழகியபோது மாணவர்களிடம் சில தயக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. மொரீசியசில் தமிழ்மொழிச் சூழல் குறைவாக உள்ளது. மாணவர்கள் பெரும்பாலோர் வீட்டில் தமிழ்மொழியில் பேசுவது இல்லை. ஊடகங்களில் வழங்கிய தமிழ்மொழிக்கான செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் பார்ப்பது வழக்கம் இல்லை. ஆசிரியர்கள் மொழிப் பாடங்களின் அறிமுகம், அவற்றின் விளக்கம் அவற்றை ஒட்டிய பயிற்சிகள், அவற்றின் திருத்தங்கள், திருத்தக் கல்வி முதலிய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். ஆசிரியர்கள் திட்டம் செய்து வகுப்பை நடத்தினாலும்கூட சில வேளை அவர்களுக்குப் போதிய நேரம் இல்லை. ஆனாலும் ஆசிரியர் பாடத்திட்டங்களின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ள பாடநூல்களை முடித்து ஆக வேண்டும். பேச்சுத் திறனுக்குத் தனியாக நேரத்தை ஒதுக்காததால் ஆசிரியர் 45 அல்லது 50 மணித்துளிகளில் மேலே குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும். எனவே பேச்சுத் திறனுக்குரிய பயிற்சிகளைச் செய்வதற்குப் போதிய நேரம் இல்லை என அறியப்படுகிறது.

### 2) மாணவர்களுடைய தரம் (ஆசிரியர் பேட்டி 28.06.18)

மேலும் மாணவர்களுடைய தரங்கள் வெவ்வேறானவை. எல்லாத்தர மாணவர்களும் ஒரே வகுப்பில் சேர்க்கப்படுகிறார்கள். ஆசிரியர்கள் நாட்குறிப்பைத் தயாரித்து, துணைக்கருவிகளைக் கொண்டு பாடங்களைச் சொல்லிக் கொடுப்பது வழக்கம். பலவகைச் சிக்கல்களால் பாதிக்கப்படுகின்ற பின்தங்கிய மாணவர்கள் தமிழ் வகுப்புக்கு வருகிறார்கள். அவர்கள் படிப்பில் அக்கறை காட்டுவது இல்லை. ஆசிரியர் பாடத்தைச் சொல்லிக்கொடுக்கும்போது பெரும் முயற்சி செய்ய வேண்டும். மேலும் ஒவ்வொரு பின்தங்கிய மாணவனுக்கும் தனிக் கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய மாணவர்கள் மொழிப் பயிற்சிகளை எழுதுவதற்கும் பேசுவதற்கும் அதிக நேரம் எடுக்கிறார்கள். மேலும் அவர்களிடம் ஒரு தாழ்வு மனப்பான்மை இருப்பதால் அவர்கள் வகுப்பில் கலந்து பேசுவது இல்லை, தனியாக ஒதுங்கி உட்காருகிறார்கள். இரண்டு ஆசிரியர்கள் அதே பள்ளியில் பணியாற்றினால் வேலையைப் பகிர்ந்துகொண்டு செய்யலாம். ஆனால் ஒரே ஆசிரியர் இருந்தால் செய்ய வேண்டியவற்றுக்குத் தடை ஏற்படுகிறது.

### 3) மாணவர்களுடைய தொகை

வகுப்புகளில் மாணவர்களுடைய தொகை வெவ்வேறானது. சில பள்ளிகளில் மாணவர்கள் பலர் இருக்கிறார்கள். வேறு சில பள்ளிகளில் மாணவர்கள் தொகை குறைவாக இருக்கிறது. சில வேளை ஒன்று அல்லது இரண்டு மாணவர்கள் இருக்கிறார்கள். அப்போது ஆசிரியர்கள் குழுவேலையை வெற்றிக்கரமாகச் செய்ய வாய்ப்பு இல்லை. அதே வேளையில் அந்த

ஒரு மாணவர் அல்லது இரண்டு மாணவர்கள் மற்ற மாணவர்கள் பேசுகின்ற முறையைப் பார்க்க வாய்ப்பு இல்லை. இந்நிலையில் மாணவர்களின் பேச்சுத் திறன் ஓரளவு பாதிக்கப்படுகிறது. மேலும் குழுவேலைத் தேர்வைச் சரியாக நடத்த முடியாது. ஒரு மாணவர் இருந்தால் குழு வேலை நடத்த ஆசிரியர் அதில் கலந்துகொள்ள வேண்டும். அப்போது தேர்வுவின் நம்பகத்தன்மையை இழந்துவிடுகிறது.

### *4) ஆசிரியருடைய தன்மை*

பேச்சுத்திறன் நடத்துவதற்கு ஆசிரியர்களுக்கு ஒரு முக்கியப் பங்கு உண்டு. அவர்கள் தங்களை நன்றாகத் தயாரித்துக்கொள்ள வேண்டும். பேச்சுத் திறனை வளர்த்துக்கொள்வதற்கான பொருத்தமான துணைக்கருவிகளையும் வினாக்களையும் தயாரித்துக்கொண்டு வகுப்பை நடத்த வேண்டும். இவற்றோடு ஆசிரியர் தம் பேச்சு ஆற்றல் செம்மையாக இருந்தால்தான் அவர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க முடியும். அவர்களுடைய உச்சரிப்பு, தொனி, பேச்சின் வேகம் முதலியவை தெளிவாகவும் திருத்தமாகவும் இருந்தால்தான் மாணவர்களுக்கு உதவியாக இருக்கும். இவ்வகையில் சூழல் காரணமாக ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒரு தனி அணுகுமுறை இருக்கிறது.

### *5) மாணவர்களுடைய சொற்களஞ்சியம்*

தமிழ்மொழிச் சூழல் குறைவாக இருக்கிறது என்று ஏற்கனவே இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாணவர்கள் பாடநூல்களில் உள்ள சொற்களஞ்சியத்தை மட்டும் ஓரளவு கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் மேற்கொண்டு படிப்பதற்குப் போதிய கதை நூல்கள் இல்லை. மேலும் அவர்கள் பெரும்பாலோர் கதை நூல்களை வாசிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. தமிழகத்தில் படைக்கப்பட்டுள்ள கதை நூல்கள் மொழி அளவில் அவர்களுக்குக் கடினமாக இருக்கின்றன. அக்கதைகளில் உள்ள சொற்கள் அவர்களுக்குப் புரியாது அதனால் அவர்களுக்கு அவற்றின்மேல் ஈடுபாடு வருவதில்லை. மேலும் அகராதியைப் பயன்படுத்த அவர்களுக்குப் பழக்கம் இல்லை. மாணவர்களுக்குப் போதிய சொற்களஞ்சியம் இருந்தால்தான் அவர்கள் தங்கள் கருத்துக்களைச் சரியாக வெளிப்படுத்த முடியும். இது மாணவர்களுக்கு ஒரு சிக்கல் உண்டாகுகிறது.

### *6) மாணவர்களுடைய தயக்கம்*

மாணவர்கள் தமிழ்மொழியில் பேசிப்பழகுவதற்கும் வாய்ப்பு இல்லை. வகுப்பில் ஆசிரியர் தொடுத்த வினாக்களுக்கு மட்டும் முழுச் சொற்றொடரில் பதில் அளித்துவிடுகிறார்கள். இரண்டு அல்லது மூன்று மணித்துளிகளில் பேசுவதற்கு அவர்களுக்குப் பயிற்சி இல்லை. மாணவர்கள் பொதுவாகத் தாய்மொழியான கிரியோலில் சிந்தனை செய்து பேசுவதால் சொற்றொடர் அமைக்க அவர்களுக்குச் சிக்கல் ஏற்படுகிறது (இராசாராம், 1991, p.530). கிரியோல் மொழியின் அமைப்புக்கும் தமிழ்மொழியின் அமைப்புக்கும் பலவகையில் வேறுபாடுகள் உண்டு. ஒன்பது அல்லது பத்து வயதுள்ள மாணவர்களுக்கு இது தயக்கம் தருகிறது. அவர்கள் பல முறை சிந்தனை செய்து பேசுவதற்கு முயற்சி செய்கிறார்கள்.

### *7) சொற்றொடர் அமைப்பில் பிழைகள் (ஆசிரியர் பேட்டி 27.07.18)*

மாணவர்கள் பேசும்போது பல பிழைகள் செய்கிறார்கள். பொதுவாக அவர்கள் சொற்றொடர்களை எழுதும்போது இலக்கணப் பிழைகளும் கருத்துப் பிழைகளும் இன்னும் வேறு பிழைகளும் செய்கிறார்கள். அவர்கள் பேசும்போது பிழையுடன் பேசுவது இயல்புதான். அவர்களுக்குப் பேசுவதற்குப் பயிற்சி அளித்தால் பையப் பையப் பேசும்போது பொருள் உணர்ந்து பொருத்தமான வேற்றுமை உருபுகளைப் பயன்படுத்திக்கொள்வார்கள். இது அவர்களுடைய எழுத்துவேலைக்கு உறுதுணையாக இருக்கும். மாணவர் ஒருவர் பேசும்போது பிழை செய்கிறேனா என்ற அச்சமும் தயக்கமும் அவனுடைய மனதில் இருக்கும். அதனால் அச்சத்தைப் போக்க ஆசிரியர் மாணவர்களிடம்

தன்னம்பிக்கையும் மனவுறுதியையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

### 8) மாணவர்களுடைய உச்சரிப்பு

மாணவர்கள் வகுப்பில் மட்டும் பேச வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அவர்கள் சொற்களைச் சொல்லும்போதும் வாசிக்கும்போதும் பேசும்போதும் த, ட ஆகிய தடையொலிகள், ண, ந, ன ஆகிய மூக்கொலிகள் ல, ள, ழ ஆகிய மருங்கொலிகள் ர என்னும் வருடொலி ற என்னும் ஆடொலி ஆகியவை சொற்களில் வந்தால் பொருத்தமான உச்சரிப்புடன் ஒலிப்பது இல்லை. எடுத்துக்காட்டாக, அது, ஆடு, சந்தை, சண்டை, அலமாரி, அவள், வாழை, மரம், பறவை முதலிய சொற்களைச் சரியான முறையில் உச்சரிக்கவில்லை. மேலும் குற்றியலுகரம் சொல்லுக்கு முதலிலும் இடையிலும் ஈற்றிலும் வரும்போது ஒலிப்புமுறை வேறானது என்று மாணவர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டிய கட்டாயம் ஆசிரியர்களுக்கு உண்டு. ஆசிரியர் மீண்டும் மீண்டும் அவற்றை உச்சரிக்கப் பயிற்சி அளிக்க வேண்டும்.

## சிக்கல்களுக்கான தீர்வுகள்

- பள்ளி நிர்வாகத்தின் ஒத்துழைப்பு
- தயக்கமின்றிப் பேசுதல்
- தளர்ச்சியின்றிப் பேசுதல்
- பல்வகைத் துணைக்கருவிகளைப் பயன்படுத்திக்கொள்ளுதல்
- மேற்பார்வையாளர் ஆசிரியர் களையும் மாணவர்களையும் ஊக்குவித்தல்
- பலவகை வாசித்தல் பயிற்சி அளித்தல்
- தலைப்புகளுக்கு ஏற்பப் பொருத்தமான சொற்களஞ்சியத்தைப் பட்டியலிட்டு அளித்தல்
- பேசுவதற்கான பயிற்சிகள் வீட்டிலோ வகுப்பிலோ தயாரிப்பதற்கு வழிகாட்டுதல்
- கதை சொல்லுதல் பயிற்சி அளித்தல்
- சிறு நாடகத்தில் நடிக்கச் செய்தல்
- நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும் படத்தைக் கொடுத்து அதிலுள்ள செய்திகளை எடுத்துரைத்தல்
- படங்களுக்கான சொற்களைச் சொல்ல வைத்தல்
- இலக்கியப் பகுதிகளை ஒப்புவித்தல்
- பகுதிக்கான செய்திகளைச் சுருக்கமாகச் சொல்ல வைத்தல்

## தொகுப்புரை

பேச்சுத் திறனை வளர்த்துக்கொள்வதன் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கன. இவற்றால் மாணவர்கள் பேசுவதற்குப் பல வாய்ப்புகள் ஏற்படுகின்றன. மாணவர்கள் சிந்தனை செய்து பேசும்போது அவர்களுடைய சிந்தனை ஆற்றலும் பேச்சாற்றலும் வளரும். அவர்கள் சொற்றொடர்களை அமைக்கவும், கட்டுரைகளை எழுதவும் பேச்சுத் திறனுக்கான பயிற்சிகள் உறுதுணையாய் விளங்குகின்றன. முதல் ஆண்டில் பேச்சுத் திறனை வளர்த்துக் கொண்டபோது பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் காலப் போக்கில் பேச்சுத் திறனுக்குரிய நடவடிக்கைகளைப் பொறுமையாகவும் செம்மையாகவும் நடத்தியதோடு மேலே குறிப்பிட்டுள்ள தீர்வுகளைச் செயலாற்றினால் நிச்சயமாக மாணவர்களிடத்தில் உள்ள குறைகளை நீக்கலாம். ஆசிரியர்களும் மாணவர்களும் செய்துள்ள முயற்சிகளைப் பாராட்ட வேண்டும். கதை, நாடக, பேச்சு ஆகிய போட்டிகளை நடத்தினால் வகுப்பில் பேச்சுத் திறனை வளர்த்துக்கொள்ளும் பயனை மாணவர்கள் உணர்ந்துகொண்டு தமிழ்மொழியில் பேச அக்கறை காட்டுவார்கள். தமிழ்மொழியில் பேசுவதற்கு எடுக்கப்பட்டுள்ள இம்முயற்சி போற்றுதற்குரியது. அதில் அடைய செயலாற்றுவதில் போற்றத்தக்கது.

## References

*Asiriyar kaiyedu, Taram 5*. (2017). Ministry of Education and Human Resources, Tertiary Education and Scientific Research, Republic of Mauritius.

*Asiriyar kaiyedu, Taram 6*. (2017). Ministry of Education and Human Resources, Tertiary Education and Scientific Research, Republic of Mauritius.

Coonjbeeharry, M. (April 2016). *Moriciyacu Totakka Nilai Palligalil Tamil Molik Kattral Karpittalil Vaymolip Payirci Perumidam-Or Ayvu*.

*National Primary Curriculum Framework*. (2015).

Rasaram, Su. (1991). *Mauritius Tamilarum Tamilum*. Thanjavur: Thanjavur Tamil University.

*Tamil Padanuul, Taram 5*. (2017). Ministry of Education and Human Resources, Tertiary Education and Scientific Research, Republic of Mauritius.

*Tamil Padanuul, Taram 6*. (2017). Ministry of Education and Human Resources, Tertiary Education and Scientific Research, Republic of Mauritius.

*The Government Gazette of Mauritius*, No. 43, (29th April 2017).

https://www.pearson.com/corporate/about-pearson/the-importance-of-education.html

Uma Allaghery. (2017). *"Morisiya Naaddut Tamililakkiyamum Mozhipeyarpukalum"*.

Journal of Tamil Peraivu, Vol.5. Pp.32-41.

# விழவிடுகதை ஓர் ஆய்வு

# The Puzzles and Riddles - A Study

இணைப்பேராசிரியர் முனைவர் செ.ஸ்டாலின் / Associate Professor Dr. Stalin [1]

***Abstract***

'The Puzzles and Riddles - A Study', explains the difference between the Tamil words, 'Vidi', which means puzzle and 'Vidukathai' which means riddles in English language. 'Vidi' involves short questions made up of one or two words, whereas, 'Vidukathai' involves a question asked based on a brief situation or a story. In this article, the special characteristics on 'Vidi' and 'Vidukathai' are well explained based on field work conducted in Kancipuram, India

Date of submission: 2018-10-30
Date of acceptance: 2018-12-08
Date of Publication: 2018-12-30
Corresponding author's
Name: Dr. Stalin
Email: stalinwilliams@gmail.com

**Key Words:** Riddles, Tamil Literature, Tamil Grammar, Kanjipuram, Folk Literature

## முன்னுரை

மனித இனக்குழுவின் ஆகச் சிறந்த அறிவு வளர்ச்சியின் பரிமாணங்கள் பலவற்றுள் இலக்கியங்களும் ஒன்று. அனைத்தும் எழுத்து வடிவில் இலக்கண வரம்பில் எழுதப்பட்டன. ஏட்டிலக்கியங்களின் முன்னோடி வாய்மொழி இலக்கியங்கள். இவ்வகை இலக்கியங்கள் பல உண்டு. கதை, பாடல், கதைப்பாடல், பழமொழி, விடுகதை எனப் பல வகைகளுண்டு. இவற்றுள் அறிவூட்டுதலையும் அறிவுநுட்பத்தினை வளர்ப்பதையும் முதன்மையாகக் கொண்டவை விடிகளாகும். பொதுவாக வாய்மொழி இலக்கியங்கள் எக்காலக்கட்டத்தில் தோற்றம் பெற்றன என்பதை அரிதியிட்டுக் கூறமுடியாது. விடிகளும் அத்தன்மையதே. வினாவை விடுத்து விடைப்பெறுவதாகும்.

அறிவுடன் செயல்படவும் அறிவு வளர்ச்சிப்பெறவும் விடிகள் தொடர்ந்து போடப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. உறவுமுறை, உயிரினங்கள், புழங்குப்பொருட்கள், இயற்கைப்பொருட்கள், கணிதம், உளவியல், நிலப்பரப்பு, பொருளாதாரம், பொழுதுபோக்கு உட்பட அனைத்து கருத்துருவிலும் விடிகள் போடப்படுகின்றன. ஆண், பெண், பெரியவர், சிறியவர் என்ற வேறுபாடின்றி விடுக்கப்படுகின்றன. இரண்டிற்கு மேற்பட்டோர் அல்லது குழுவாக இணைந்து தொழில் செய்யப்படுமிடம், விளையாடுமிடம், ஓய்விடம், மங்கல நிகழ்விடம், வீடுகள், பயண நேரங்கள் என விடிகள் போட்டு விடிக்கின்றனர். விடிகளின் முதன்மை நோக்கம் அறிவுத் திறனைச் சோதிப்பதும் மேலும் அறிவை வளர்ப்பதுமேயாகும்.

உடனுக்குடன் ஓரிரு சொல்லில் பதில் பெறப்படுவது விடிகளாகும். இதிலிருந்து சற்று மாறுபட்டு விடிக்கப்பட்ட வினாவின் பதில், ஒரு கதையாகக் கூறப்பட்டால் அது விடுகதை என்ற வகையாகிறது. விடுகதையில் விடுக்கின்றவர்கள் தான் பதில் கூறமுடியும். பல மேனாட்டு அறிஞர்களும் தமிழறிஞர்களும் விடுகதை என்றும் புதிர்கள் என்றும்

[1]The author is a Associate Professor in the Department of Tamil, Gurunanak College (Autonomous), Chennai, Tamil Nadu, India. stalinwilliams@gmail.com

தலைப்பிட்டு ஆய்ந்து பல வகைகளாகப் பிரித்துள்ளனர். இவற்றில் விடி போன்ற சொல்லாடல்களைப், பேச்சு வழக்குகளைப் பயன்படுத்துவதை அரிதாக்கியுள்ளனர். ஆனால் இவைகள் தான் விடுகதை, புதிர் ஆகியவற்றின் ஆய்வுக்கு வலுசேர்க்கும் என்பது கவனத்தில் இருத்த வேண்டிய கருத்து.

தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சியால் விடிகள் இயற்கைச்சூழலில் போடப்படுவது அரிதாகிவிட்டது. பன்னெடுங்காலமாக மிக எளியமுறையில் அறிவு புகட்டும் கருவியாகப் பயன்பட்ட விடிகள், எதிர்க்காலத்தவருக்கும் கொண்டுப்போக வேண்டியது அவசியமாகிறது. விடிகள் சொல்லும் பழக்கம் கொண்டவர்கள், குறைந்து வருவதால் அவற்றை களஆய்வின் மூலம் சேகரித்து ஆவணப்படுத்தவேண்டியதும் அவசியமாகிறது. இதனடிப்படையில் காஞ் சிபுரம் மாவட்டத்தில் களஆய்வின் மூலம் நாட்டார் கதைகள் சேகரித்த போது, கூடவே கூறப்பட்ட விடிகளும் விடுகதைகளும் கிடைக்கப்பெற்றன. தனித்த தன்மைகளையும் வேறுபாடுகளையும் கொண்டிருக்கும் இவற்றைப் பற்றி விளக்குகிறது இக்கட்டுரை.

## விடிகளும் விடுகதைகளும்

வாய்மொழியின் ஊடாகவே மக்களின் உணர்வுகள், கருத்துக்கள், பண்பாட்டு அசைவுகள், வாழ்வியல் முறைகள் உள்ளிட்ட அனைத்தும் பரவின. இவை நாட்டார் கதை, நாட்டார் பாடல், கதைப்பாடல், பழமொழி, விடுகதை, நாப்புரட்டு என பல்வேறு வடிவங்களையும் வகைகளையும் கொண்டிருந்தன. மேலும் இவை வரிவடிவமில்லாத வாய்மொழி இலக்கிய மரபாக, காலத்தால் முற்பட்டதாக இருக்கின்றன. அறிவியல் வளர்ச்சிக்கு முந்தைய காலக்கட்டத்தில் அறிவு வளர்ச்சிப் பெறவும் தரவும் வாய்மொழி வழக்காறுகள், வலிமைப் பொருந்திய ஊடகமாகவே திகழ்ந்தன.

இவைதாம் ஏட்டிலக்கியங்களுக்கு முன்னோடி என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் விடுகதை இலக்கியம் என்பது பொழுது போக்காக, ஒரு விளையாட்டாக, அறிவுக்கூர்மையைச் சோதிக்கவும் வளர்க்கவும் உதவுகின்றன.

நாட்டார் வழக்காற்றியல் துறையின் வாயிலாக விடுகதைகள் பற்றி பல்வேறு ஆய்வுகள் நடைபெற்று அதன்மூலம் வகைப்பாடுகள் கண்டறியப்பட்டு, அவற்றின்கீழும் பல ஆய்வுகள் நடந்துவருகின்றன.

உலக நாடுகளில் விடுகதைகள் இலக்கியம் மிக தொன்மையான இலக்கியமாக உள்ளது.

- ❖ இங்கிலாந்தில் ரிடில் (Reddle), ஜெர்மனியில் ரார்செல்(Rarsel), கிரேக்கத்தில் எனிக்மா(Enigma), ஆப்ரிக்காவில் அலு(Alu) ஐரோப்பிய நாடுகளில் க்விஸ் (Quis) / பசில் (Buzzle) என்றழைக்கப்படுகிறது.
- ❖ கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் தான் ஜெர்மனியின் பொஹிமியாவில் விடுகதைகள் தொகுக்கப்பட்டு கி.பி.1511ல் வெளிவந்தன.
- ❖ இதனைத் தொடர்ந்து கிரேக்கத்தில் பிளாட்டோ மற்றும் அரிஸ்டாட்டில், ஜெர்மனியில் சில்லரால், பிரான்சில் ரூஸோ, வால்டோ, சோத், செர்வாண்டீஸ், இங்கிலாந்தில் சாம்சன் ஆகியோர் விடுகதைகளைத் தொகுத்தனர். இங்கிலாந்தின் சாம்சன் என்பவரே விடுகதையின் தந்தை என்பர். கிரேக்கத்தில் விடுகதைப் போட்டிகள் அடிக்கடி நடத்தியதாகக் கூறப்படுகிறது. ஹோமர், விடுகதைப் போட்டியில் பதில் கூறமுடியாமல் இறந்ததாவும் கூறப்படுகின்றது. பிரான்சில் விடுகதைகள் தான் அந்நாட்டின் புரட்சிக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. துருக்கியில் பெண்கள் மணமகனை விடுகதைகள் போட்டே தேர்ந்தெடுத்துள்ளனர்.
- ❖ இந்தியாவில் வேதங்களும்,

புராணங்களும் விடுகதைகளைப் "பிரமோத்யா" எனக்கூறுகின்றன. பிராகிருத மொழி மற்றும் வங்காளி மொழியில் பகேலீ, பஞ்சாபி பகேலி, பீஹாரி பாகா, பாலி பான்கா, மராத்தி - உக்கான்னா, குஜராத்தி - உக்கன்னு, அஸ்ஸாமி பக்கனா, வடமொழி உக்கன்னி, திராவிட மொழிகளில் - தமிழ் - விடுகதை/ புதிர் / விடி /பிசி, கன்னடம் - ஓடகதே, மலையாளம் மற்றும் தெலுங்கு விடிகதா என்றும் வழங்கப்படுகின்றது.

## நடை மற்றும் வகைமை

எதுகை, மோனை, இயைபு, அந்தாதி, ஓரடிஈரடிமூவடிநாலடி என நடைகளையும் அடிகளையும் கொண்ட விடிகளை, மேனாட்டவர் உள்ளிட்ட அறிஞர்கள் வகைப்படுத்தியுள்ள வகைமைகளில் சில இங்கு தரப்படுகின்றன.

ரோஜர் டி ஆபிரஹாம் (Rojer D Abraham) என்ற அறிஞர், விளக்க விடுகதைகள், எதிர்மறை விடுகதைகள், தலைதப்பும் விடுகதைகள் (neck riddles), கதையமைப்பு விடுகதைகள், உரையாடல் விடுகதைகள், சொல் விளையாட்டு, நகை வினாக்கள், அறிவு வினாக்கள், புதிர்கள் என வகைப்படுத்துகிறார்.

மரியா லீச் (Maria leach) எனும் அறிஞர், உண்மை விடுகதைகள் மற்றும் வினா விடுகதைகள் என்றும் பிரிட்டானியா கலைக்களஞ்சியம் (Encyclopeadia Britanica) விளக்க விடுகதைகள் (Descriptive Riddles) மற்றும் நகை வினாக்கள் (Witty Questions) என்றும் ச.வே.சுப்ரமணியன் அவர்கள் நாட்டுப்புற விடுகதைகள் (Folk Riddles) மற்றும் இலக்கிய விடுகதைகள் (Literary Riddles) என்றும் அறிஞர்கள் பலர் வகைப்படுத்துகின்றனர்.

மேலும் துணை வகைப்பாடுகளாக விளக்க விடுகதைகள், நகைப்பு விடுகதைகள், கொண்டாட்ட விடுகதைகள், பொழுதுபோக்கு விடுகதைகள் எனப் பிரிக்கின்றனர். விடி, விடுகதைக்கான கருப்பொருட்களாக, இயற்கைப் பொருட்கள், விலங்குகள் பறவைகள், தாவரங்கள், உடல் உறுப்புகள் (Human body parts), உணவுப் பொருட்கள், புழங்குப்பொருட்கள், அணிகலன்கள், வாகனங்கள், தத்துவம், அறிவியல், புராணங்கள் இதிகாசங்கள் போன்றவற்றுடன் உயிரில் பொருட்கள், உயிர்ப்பொருட்கள் என அனைத்தும் கருப்பொருட்களாக வருகின்றன (சக்திவேல், 1995, p.223).

## தமிழ் இலக்கணத்தில் விடி விடுகதை

தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில்,

"ஒப்பொடு புணர்ந்த உவமத் தானும்

தோன்றுவது கிளந்த துணிவினானும்

என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே" (செய்:173)

என்ற நூற்பாவில் 'பிசி' என்கிறார் தொல்காப்பியர். பிசி என்பது உவமையாகவும் வெளிப்படையாகவும் இருவகையில் அமைவது என்கிறார். தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இருந்த விடுகதைக்கு, அதன் தன்மைக்கேற்ப இருவகையாக வரையறுக்கிறார். இந்நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர், பேராசிரியர் போன்ற உரையாசிரியர்கள் தரும் உரைகளில், எடுத்துக்காட்டுகளாகத் தந்துள்ளவனவற்றை இங்கு கவனிக்கத்தக்கது. அதாவது,

அ) "பிறை கவ்வி மலை நடக்கும்" அது என்ன? விடை: யானை

ஆ) "முத்துப்போல் பூத்து முகிழ்ற் கிளிவண்ண நெய்த்தோர் குருதி நிறங்கொண்டு வித்துதிர்த்து" அது என்ன? விடை: கமுகுமரம்

இ) " நீராடான் பார்ப்பான் நிறம் செய்யான்,

நீராடின் ஊராடு நீரிற்காக்கை" அது என்ன? விடை: நெருப்பு

என்பனவற்றை எடுத்துக்காட்டியுள்ளனர்.

இவ்வுரையின்வழி நோக்கினால் பிசி என்பது விடியைக் குறிக்கின்றது. மேலும் விடுகதை என்பது தனித்த வடிவாக இருக்குமென்பதும் புலனாகிறது. இதனைப் பற்றி பின்வருவனவற்றில் காண்போம்.

*"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே*

*அங்கதம் முதுசொல்லோ டவ்வேழ் நிலத்தும்*

*வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்*

*நூற்பெயரெல்லை அகத்தவ வழங்கும்*

*யாப்பின்வழியது என்மனார் புலவர் (செய்.79)*

என மற்றொரு நூற்பாவில் குறிப்பிடுகின்கிறார். ஏழுவகை யாப்புமுறைகளைக் கூறவரும் தொல்காப்பியர், இவை தனக்கு முன்னிருந்த புலவர்கள் வகுத்தவை என்கிறார். இவற்றில் வாய்மொழி, பிசி, முதுசொல் (பழமொழி) எனும் மூன்றும் நாட்டார் வழக்காறுகளாக வகைப்படுத்துகின்றார் தொல்காப்பியர். இங்கு பிசி என்பது விடுகதை எனப் பொருள்படுத்துகின்றார். மேலும் இதன் குணங்களை,

*அவைதாம்,*

*நூலினான வுரையினான*

*நொடியொடு புணர்ந்த பிசியினான*

*ஏது நுதலிய முதுமொழியினான*

*மறைமொழி கிளந்த மந்திரத்தான*

*கூற்றிடை வைத்த குறிப்பினான (செய்.165)*

என வரிசைப்படுத்துகின்றார்.

இந்நூற்பாவில் நொடி என்றும் பிசி என்றும் வருவதைக் கவனிக்க வேண்டும். 'நொடியொடு புணர்ந்த பிசியினான' என்கிறார். நொடி என்பது பிசியின் வகையாகக் கொள்ளப்படுகிறது. நொடி என்ற சொல் நகைமொழி, விடுகதை, பள்ளம், தன்நிலைதாழ்தல், நடித்துக்காட்டல், நலிதல் போன்ற பொருண்மைகளில் கையாளப்படுவதைக் காணலாம்.

நொடி என்பது நொடிப்பொழுதில், இமைப்பொழுதில் பதிலுரைப்பது. இதனை நோக்கும்போது நொடி எவ்வாறு விடுகதையாகும் என்பது கேள்விக்குரியது. நொடி என்ற சொல் பற்றி எழுதவந்த நாட்டார் ஆய்வியல் அறிஞர் ஆறு.இராமநாதன்,

*"நாட்டார் (மக்கள்) இன்று புதிர்களை நொடி என்று கூறும் வழக்கில்லை" (1978 p.17)* என்கிறார்.

"ஈழத்தில் விடுகதையை நொடி என்கின்றனர்" என்று 'நொடிஅமர்வின் படிமுறை அமைப்பு: ஓர் வரன்முறை ஆய்வு' எனும் அச்சிடப்பெறாத ஆய்வேட்டில் வின்சன்ட் பவுல் *(1993,* p.*125)* கூறுவதாக நாட்டார் ஆய்வறிஞர் தே.லூர்து குறிப்பிடுகின்றார். மேலும், தொல்காப்பிய வழக்கைத் தற்போது ஈழநாட்டார் பாதுகாத்து வைத்துள்ளனர் என்பதும் இதினின்றும் தெளிவாகிறது. நம்மிடையே 'நொடி' என்பதற்கு, நொடித்தல், ஒடித்தல் ஆகிய பொருள்கள் கொள்ளப்படுகின்றன.

நொடி என்பது வழக்கில் இல்லாதது போலவே விடுகதை என்ற சொல்லாட்சி பண்டையத் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் காணப்படவில்லை. இது அண்மையில் தோன்றிய சொல்லாட்சியாகவும் இருக்கலாம் என்கிறார் தே.லூர்து *(2000,* p.*223)*. நாட்டார் வழக்காறுகள் தொடர்பான ஆய்வுகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்ட தே.லூர்துவின் கூற்றிலிருந்து ஒரு கருத்தாக்கம் வெளிப்படுவது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. நாட்டடர் வழக்காற்றியல்: சில அடிப்படைகள் எனும் தம் நூலில்,

> "விடுகதை என்ற சொல் தமிழகமெங்கும் வழக்கிலுள்ளது. விடுவிக்கப்பட வேண்டியது என்பதே பொருள். இச்சொல் எல்லா வகையான விடுகதைகளையும் சுட்ட ஒட்டு மொத்தமாக நாட்டாரால் (மக்களால்) பயன்படுத்தப்படுகிறதே தவிர எந்தவொரு துணை வகைமையும்

*(கதைகளாக அமைவனவற்றை மட்டும்) சுட்டுவதாகத் தெரியவில்லை. அவ்வாறு தமிழ்நாட்டு மக்கள் எங்கேனும் சுட்டுகின்றனரா என்பதைக் களஆய்வின் மூலம் கேட்டறிவது முதன்மையான பணியாகும்"*
*(லூர்து 2000,* p.*223)*

என்கிறார். அதாவது விடுகதை என்ற சொல்லாட்சி பற்றிய முழுமையான புரிதலும் ஆய்வுகளும் தேவைப்படுவதாக உணர்த்துகின்றார்.

மேலும், 'விடுகதை என்ற சொல், வினைத் தொகையில் அமைந்து, (விட்ட கதை/ விடுகின்ற கதை/ விடும் கதை) முக்காலப் பொருளையும் தரும். இச்சொல்லாட்சியின்படி விளக்கம் காண்போமானால் விடுவிக்கப்பட வேண்டிய கதை என்பது மேற்கூறப்பட்ட பொருண்மை அடிப்படையில் அமையாது, வேறு ஏதோ ஒன்றைச் சுட்டுவதாகத் தோன்றுகிறது. தமிழில் பயின்றுவரும் விடுகதைகள் கதையின் அடிப்படையில் பெரும்பாலும் அமைந்திருப்பதில்லை. ஆகவே இங்குக் கதை என்பது விடுகதையின் இயல்புக்குப் பொருத்தமான ஒன்றினையே குறித்தல் வேண்டும்' என்கிறார் *(லூர்து, 2000,* p*6465).*

## நிறுவுதல்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நாட்டார் கதைகள் சேகரிக்க சென்றபோது கதைகளுடன் விடிகளும் விடுகதைகளும் கிடைக்கப்பெற்றன. இம்மாவட்ட மக்கள் தெளிவாக விடி அல்லது வெடி என்றும் விடுகதை என்றும் தனித்தனியே பிரித்துக் கூறுவதைக் கேட்கமுடிந்தது. அறிஞர் தே.லூர்து கூறுவது போல், காஞ்சிபுரம் மாவட்டத்தில் விடுகதை என்ற பொதுமைச் சொல்லை ஒட்டுமொத்தமாக அனைத்திற்கும் பயன்படித்தவில்லை. பெரியோர் முதல் சிறியோர் வரை இயல்பாகவே 'ஒரு வெடி போடவா?' என்றும் 'நா(ன்) ஒரு விடுகத சொல்லவா?' என்றும் கூறுகின்றனர்.

விடி அல்லது வெடி போடுவது என்பதை, எடுத்துக்காட்டாகக் கூற வேண்டுமானால்,

*அண்ணனுக்கெட்டாது தம்பிக்கெட்டும் அது என்ன?*(விடை: உதடு) என்றும்

விடுகதை சொல்லுவது என்பதை,

*"புல்லாங்குழலாம் புலித்தோலாம் பூரண புஸ்தகமாம்*

*போறதோர் பண்டாரமே நாளை இதே வழி வருவீயா?"* அது என்ன?

என்றும் கூறலாம். அதாவது இந்தக் கேள்விக்கு விடை, ஒரு கதையாக இருக்கும். (பின்னிணைப்பு சான்றின்கீழ், விடுகதை2ல் இதற்கான விடை அமைந்துள்ளது.) ஏனெனில் விடு+கதை = விடுகதை. விடுக்கப்பட்ட கேள்விக்கு விடுவிக்கப்பட வேண்டிய கதை. ஆனால் விடுகதை, விளக்கமுறை விடுகதையாக அறிஞர்களால் வகைப்படுத்தப்பட்டுவிட்டது.

பரவலாக, 'விடுகதை' என்பதற்கு Puzzle என்ற ஆங்கில பதமும் Riddle ஆங்கில பதமும் பயன்படுத்தப்படுகின்றன. (பசில் Puzzle என்பது 'பிசி' என்ற தமிழ்ச்சொல்லின் வேர்ச்சொல்லிலிருந்து வந்தது போல் இருப்பதை மொழியியல் அடிப்படையில் ஆராய்தல் அவசியம்) தற்போது விடுகதை என்பதே பொதுவான சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது. மிகக் குறைவாகவே பேச்சுவழக்கில் விடி, வெடி, புதிர் என்பன குறிப்பிடப்படுகின்றன. இவை வட்டார வழக்கு என்பதால் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மாறுபடுகிறது.

திருநெல்வேலியில் அழிப்பாங்கதை என்றும் சேலம், திருவண்ணாமலை, தருமபுரி, விழுப்புரம், வேலூர் போன்ற மாவட்டங்களில் வெடி, விடி என்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் விடுகதை, வெடி, விடி என்றும் கூறப்படுகின்றது.

ச.வே.சுப்பிரமணியன், 'பிசி' என்ற சொல்லே பிதிர், புதிர் என மாறிவந்துள்ளதாகக் கூறுகிறார் *(1977,* p.*63).*

அதே போல் புதிர் என்ற சொல்லாட்சியும் விடியைக் குறிக்கின்றது. புதிர் என்பது ஒரு வினா. சில சொற்களில் அதற்கான பதில். உடனடியாகத் தெரிவிப்பது. ஒரு பொருளின்

பெயரை மனதில் வைத்துக் கொண்டு, அதன் குணங்களை வரிசையாகச் சொல்லி, அப்பொருளின் பெயர் எது? என்பதே புதிர். நேரடிக் கூற்றின்றி மறைமுகமாகக் கூறுவது. கற்றோர், கல்லாதோர், வயது வேறுபாடு, பால்பகுப்பு வேற்றுமை என எதுவுமில்லை. அனைவராலும் போடப்படுவது.

(எகா.) விஜயநகர அரசர்கள் காலத்தில் அப்பாஜி கதைகளும் முகலாயர் காலத்தில் அக்பர் வீரவலன் கதைகளும் விக்கிரமாதித்தன் காலத்தில் வேதாளக் கதைகளும் போஜன் மகாராஜா காலத்தில் பதுமைக் கதைகளும் பாளையக்காரர்கள் காலத்தில் தனிப்பாடல்களிலும் புதிர்கள் இடம்பெற்றன. (சண்முகசுந்தரம், 1988:230).

காஞ்சிபுரம் மாவட்டத்தில் களஆய்வின் மூலம் பெறப்பட்ட விடி மற்றும் விடுகதைகள் சிலவற்றை தெளிவுக்காக இக்கட்டுரையில் அளிக்கப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்ட வேறுபாடுகளும் தனித்தன்மைகளும் கொண்டிக்கும் இவற்றை நீண்ட களஆய்வு மேற்கொண்டு அதனடிப்படையில் ஆய்வும் செய்யப்படவேண்டிய தேவையையும் இக்கட்டுரை சுட்டிநிற்கிறது.

## விடிகள்

***சான்று - 1***

*விடிஞர்: பிரபா,சு/12*

*1. விடி: தெரிந்து பூப் பூக்கும் தெரியாமல் காய் காய்க்கும் அது என்ன?*
*விடை: வேர்க்கடலை*

*2. விடி: பல் இல்லாமல் கடிப்பது எது?*
*விடை: செருப்பு*

*3. விடி: விடிய, விடிய பூந்தோட்டம், விடிந்துப் பார்த்தால் வெறுந்தோட்டம் அது என்ன?*

*விடை: வானம், நட்சத்திரம்*

*விடிஞர்: ராஜஸ்ரா,சு./14*

*4. விடி: ஓட்றா(ன்), ஓடியார்றா(ன்) ஒத்தக்காலில் நிக்குறா(ன்)அவன் யார்?*

*விடை: கதவு*

*5. விடி: சிவந்திருப்பான்*

*வாசல்ல இருப்பான்*

*வாயத்தொறந்திருப்பா(ன்)அவன் யார்?*
*விடை: தபால் பெட்டி*

***சான்று - 2** விடுகதை - 1*

*விடுகதைஞர்: பொன்னப்பன்,அ.*

*வெட்டியாதால் சாகவில்லை,*

*வெட்டாமலிருந்தால் செத்திருப்பேன்.*

*செத்ததினால் சாகவில்லை,*

*சாகாமலிருந்தால் செத்திருப்பேன்.*

*வந்ததினால் வரவில்லை,*

*வராமலிருந்தால் வந்திருப்பேன். அது என்ன?*

*அதாவது ஒரு மாணவியும் மாணவனும் அப்டி பேசிங்கிறாங்க. தொடர்பு உண்டு. அப்டி இருக்கும் போது, இந்த டைமுக்கு, நைட்ல நீ வர்ணொன்னு மாணவெ(ன்) சொல்ட்டா(ன்), மாணவிக்கிட்ட. அப்பொ அந்தப் பொண்ணு கௌம்பி போவுது. போவும்போது அன்னிக்கி வானொ(ம்) மின்னல் மின்னுது. மின்னும்போது ஒரு பாம்ப, யாரோ அட்ச்சிப்போட்டுக்கிறாங்க. போட்ட ஒன்னொ, இந்த மின்னல் மின்றதுக்கொ(ம்) அந்தப் பாம்பக் கிட்ட போயி பாக்குறதுக்கொ(ம்), அய்யோ! பாம்புன்னு அலறி எட்டொ ஓடியாந்துட்து. அப்றமா, அந்த மாணவங்கேக்குறா(ன்), நீ ஏ(ன்) நா(ன்) சொன்ன எடத்துக்கு, சொன்ன டைமுக்கு வரலன்னு, பொழுதுவெடிஞ்சி விளக்கொ(ம்) கேக்குறா(ன்). அதுக்கு அந்தப் பொண்ணு சொல்லுது.*

*வெட்டியாதால் சாகவில்லை,*

*வெட்டாமலிருந்தால் செத்திருப்பேன்.*

*செத்ததினால் சாகவில்லை,*

*சாகாமலிருந்தால் செத்திருப்பேன்.*

*வந்ததினால் வரவில்லை,*

*வராமலிருந்தால் வந்திருப்பேன்,*

*அப்டின்னு. அப்பொ, வந்ததினால் வரவில்லை அதுக்கு இன்னா அர்த்தம்னு கேக்குறா(ன்).*

*மின்னல் வெட்டுச்சி, செத்துப்போன பாம்பு தெரிஞ்சிது.மின்னல் வெட்லன்னா, தெர்ஞ்சிருக்காது. அது சாவலன்னா, என்ன அது குத்தி, நா(ன்) செத்திருப்பெ(ன்). அது செத்துப்போச்சி, நா(ன்) சாவல. அய்யோன்னு பாத்து அலறும் போது எனுக்கு மாதவிடாய் வந்துட்ச்சி. அதனால நா(ன்) உ(ன்) கிட்ட வரல. மாதவிடாய் வரலன்னா, நா(ன்) உன்னாண்ட வந்திருப்பேன்னு வெளக்கொ(ம்) குடுக்குது.*

**விடுகதை** *- 2*

*விடுகதைஞர்: அய்யனாரப்பன்,க.*

*"புல்லாங்குழலாம் புலித்தோலாம் பூரண புஸ்தகமாம்*

*போறதோர் பண்டாரமே நாளை இதே வழி வருவீயா?"*

*அப்டின்னு ஒரு பண்டாரத்தப் பாத்து இன்னொருத்தெ(ன்) கேக்றா(ன்). அதுக்கு அந்தப் பண்டாரம்,*

*"வெள்ளி வேர் கடந்து, வேங்கணம் பொய்மாரி / கள்ளிப் பால் வத்தி, கடலும் தெசமாரி*

*பம்பையாடு குட்டியிட்டு, வறட்டாடு பால்கறந்து*

*செத்தாடு குட்டியிட்டு, செனையாடு பால்கறந்து ஒலக்கைத்*

*துளுத்து, ஒரலேறிப் பூப்பூத்து / அம்மி பழஞ்சாறாம், நார்த்தங்கா(ய்) ஊறுகாயாம்*

*எருது பசுவாகி, பசுவும் ஈனும் காலத்தில் வருவேன்"னு சொன்னாராம்.*

*ஒரு வயதான பெரியவரு, பண்டாரமா(க) போறாரு. வழியில மாட்டுக்கரப் பசங்கள்ல ஒருத்தெ(ன்), அய்யா! அய்யா! இந்த வழியா(க) போறீங்களெ, நாளைக்கி இதேவழில வருவீங்களான்னு கேக்குது.*

*அதுக்கு அவுரு, நா(ன்) வரப் போறது உண்ம தா(ன்). ஆனா(ல்) வெள்ளியாகிய நிலா போயி இருட்டுப் பொய்யாக மாறி வெளிச்சத்துல வருவெ(ன்). கடலு தெசமாரின்னா, ஒரு மனுஷெ(ன்) ஒக்காந்து ஏந்துக்கும் போது, அப்டி ஒரு தடுமாற்றொ(ம்) வரும்பாரு, அதா(ன்). கள்ளிப்பால் வத்தின்னா, மலமேல இருக்குற கள்ளிச்செடிய வெட்டும்போது அதுலர்ந்து பால் வரும், அத சொல்றாரு. பம்பையாடுன்னா, அது பொலிஞ்சி குட்டிப்போட்டு பால் குடுக்குபோதுன்னு அர்த்தொ(ம்). ஒலக்கைத் துளுத்துன்னா, தென்னங்கன்னு இப்போ தா(ன்) வெக்கிறெ, அது வளந்து ஒலக்க மாரி ஆனதொ(ம்)ன்னு அர்த்தொ(ம்). எருது பசுவாகின்னா, எருது, பசுமாட்டுமேல ஏறி பொலியிது. அதுசெனையாகி கன்னுப் போடும் போது நா(ன்) வருவேன்னு சொல்லிட்டுப் போறாரு.*

## References


Lurth, T. (2000). *Naddar Vazhakatriyal: Sila Adipadaigal*. Palaiyangkoddai: Naddar Vazhakatriyal Aivu Maiyam.

Manikkam, Mu. (1998). *Thirukural Thelivurai*. Chennai: Manivasagar Pathipakam.

Shaktivel, Su. (1995). *Naddupura Iyal Aivu*. Chennai: Manivasagar Pathipakam.

Shanmugasundram, Su. (1988). *Naddupura Ilakiya Varalaru*. Chennai: Manivasagar Pathipakam.

Singaravelar, A. (1981). *Abithana Sinthamani*. New Delhi: Asian Education Services.

Subramanian, S., V. (1977). *Tamilil Vidukathaikal*. Chennai: Institute of Tamil Studies.

Subramanian, S., V. (1978). *Tamilil Puthirgal-Oor Aivu*. Majnakollai: Samuthaya Sirpigal Veliyiddagam.

Subramanian, S., V. (1998). *Tholkappiyam Thelivutrai*. Chennai: Manivasagar Pathipakam.

Vincent Paul, S. (1993). *Nodiamarvin Padimurai Amaipu: Oor Varanmurai Aaivu*. Unpublished Masters Desertation, St.Sauverior College.

*Thirumanthiram*: www.tamilvu.org/slet/14100/pg2.jsp?bookid=118&pno=777

## References

## விழைஞர் - விடுகதைஞர் விவரப்பட்டியல்

| பெயர் | வயது | ஊர் | கல்வி | தொழில் | வட்டம் | கள ஆய்வு செய்த நாள் |
|---|---|---|---|---|---|---|
| பிரபா,சு. | 12 | அஸ்தினாபுரம் | 7 | மாணவி | செங்கல்பட்டு | 25.03.2006 |
| ராஜஸ்ரா,சு. | 14 | அஸ்தினாபுரம் | 9 | மாணவி | செங்கல்பட்டு | 25.03.2006 |
| பொன்னப்பன்,அ. | 48 | திணையாம்பூண்டி | 8 | விவசாயம் | உத்திரமேரூர் | 14.05.2006 |
| அய்யனாரப்பன்,க. | 80 | முள்ளி | - | விவசாயம் | மதுராந்தகம் | 17.06.2006 |

# நன்னெறிக் கல்வி கற்றல் கற்பித்தலில் மகாகவி பாரதியாரின் அறிவார்ந்த சிந்தனைகள்

# Mahakavi Bharathiar's Intellectual Thought in Teaching and Learning Moral Education

பார்வதி வெள்ளச்சாமி / Parvathi Vellachami [1]

பேராசிரியர் முனைவர். மு. இராசேந்திரன் / Professor Dr.M.Rajantheran [2]

Date of submission: 2018-09-05
Date of acceptance: 2018-11-05
Date of Publication: 2018-12-30
Corresponding author's
Name: Dr.M.Rajantheran
Email: rajanmun@ um.edu.my

***Abstract***

This article explains how Mahakavi Barathiyar's thinking criteria's as depicted in his poems, are incorporated in the teaching and learning of the Malaysian Moral Syllabus. Based on this aspect, the thinking criteria's as stated above, are clearly explained in initial part of the Malaysian Moral Syllabus. This article further explains how these thinking skills can be put to use in teaching and learning of Moral education. This enables students to learn moral education by using literary text and at the same time develop self-learning interest in attaining intellectual thinking. This is in line with the current education system which is based on 21st century student centered learning approach. This exposes that the Barathiyar's songs clearly play an essential role in developing advanced thinking.

**Key Words:** Bharathiar, Thought, Spiritual, Intellectual, Creativity, Scientific, Wisdom Thinking, Learning and Teaching, Moral Education, 21st Century Learning

## முன்னுரை

மலேசியப் பள்ளிகளில் வழங்கப்படும் நன்னெறிக் கல்வி கலைத்திட்டத்தில் ஏழு நன்னெறிக் கூறுகள் அடிப்படையாக வகுக்கப்பட்டுள்ளன. அதன் உட்பிரிவுகளான நன்னெறிக் கூறுகள் நேரடியான நன்னெறிப் பண்புகளின் விளக்கங்களுடன் வரையறுத்து வழங்கப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் நேரடியாக அவ்விளக்கங்களைத் தங்களின்

[1]The author is a Ph.D research scholar at the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. vathi721@gmail.com

[2]The author is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajanmun@ um.edu.my / rajantheran@gmail.com

கற்றல் கற்பித்தலில் நடத்தும் முறை இக்காலக்கட்டத்திற்குப் பொறுத்தமாக அமையாது. ஏனெனில், அவ்வகைக் கற்றல் கற்பித்தல் பெரும்பாலும் ஆசிரியர் மையக் கற்றலாக விளங்குகிறது.

மேலும், 21 ஆம் நூற்றாண்டு மாணவர் மையக் கற்றல் கற்பித்தல் அடிப்படையில் மேற்கொள்வதிலும் தகுந்த ஆவணங்கள் கிடைப்பதும் மிகக் குறைவாகவே உள்ளன. ஆசிரியர்கள் தாங்களாகவே முயற்சி செய்து நன்னெறிப் பண்புகளை இலக்கியங்கள் ஊடாகக் கற்றல் கற்பித்தலில் கையாண்டு மாணவர்களிடம் கொண்டு சேர்ப்பது எனும் நிலை பெரும் போராட்டமாகவே உள்ளது. ஏனெனில், இதற்கான ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. ஆசிரியர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்காக எவ்வித மூலங்களும் இருப்பதாகத் தெரியவில்லை.

பெரும்பாலான வேளைகளில் ஆசிரியர்கள் தங்கள் அறிவுக்கு எட்டிய இலக்கியங்களையோ அல்லது பாட நூல்களையோ பயன்படுத்திப் போதிக்கின்றனர். இவ்வாறு மலரும் கற்றல் கற்பித்தல் மாணவர்களிடையே ஈடுபாடு இல்லாமலும் சலிப்புத்தன்மை தட்டக்கூடிய பாடமாகவும் அமைவதாகப் பொதுவாக ஆசிரியர்கள் மத்தியில் கருத்துகள் உள்ளன. இப்பிரச்சனைகளைக் களையும் வகையிலே சில ஆய்வுகள் மலாயாப் பல்கலைக் கழகத்தில் இந்திய ஆய்வியல் துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் சில நன்னெறிப் பண்புகளையும் இலக்கியக் கூறுகளையும் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று, பாரதியாரின் கவிதைகள்வழி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கட்டுரை முழுமையாக முனைவர் பட்ட ஆய்வுக்காக மேற்கொள்ளப்பட்டது. ஆகவே, சுருக்கம் கருதி, அதில் ஒரு பிரிவு மட்டுமே இக்கட்டுரையாக மலர்கிறது.

## ஆய்வு முன்னோடிகள்

நன்னெறிக் கல்வி பற்றி பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து அறிவாற்றல் சிந்தனைக் கோட்பாட்டினைப் பகுத்தறியும் வண்ணம் முந்தைய ஆய்வுகள் மலாயாப் பல்கலைக்கழக ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாந்தனின் வளர்ச்சி முழுமைப்பெற வேண்டுமெனில் அறிவு, உளம், ஆன்மிகம் அறிவாற்றல் கொண்ட சமன்நிலை பெற்று ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். உயர்நெறி மாந்தர் தன்மையை முழுமையாக ஒருவர் கைவரப் பெறவேண்டுமெனில், சிறந்த நன்னெறிச் சிந்தனை, உணர்வு மற்றும் நடத்தை போன்ற முக்கூறுகளிலும் சிறந்து விளங்க வேண்டும். அதுவே மலேசியக் கல்வி திட்டத்தின் சாரமாகவும் அமைகின்றது (ஙிறிரி, 2013, ஜீ. 25). இம்மூன்று கூறுகளையும் வெளிக்கொணரும் வகையிலே பல ஆய்வுகள் நடத்தப்பட்டன. அவை இக்கட்டுரைக்குப் பேருதவி புரிந்தன. அவ்வகையில், கட்டுரையாளர் 2013 ஆம் ஆண்டு முதுகலை பட்டத்திற்காக ஆய்வு மேற்கொண்டார். 'சிலப்பத்திகாரத்தில் வெளிப்படும் நன்னெறிக் கல்வியின் உட்கூறுகளான சுய வளர்ச்சி, குடும்பம் மற்றும் ஜனநாயகம் அடிப்படையில் இந்த ஆய்வு நட்த்தப்பட்டது (Parvathi, 2013).

தொடர்ந்து, 2015ஆம் ஆண்டு ஆய்வாளரின் கட்டுரையான 'பாரதியார் படைப்புகளில் ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனைக் கோட்பாடுகள் ஒரு பார்வை' எனும் கட்டுரை வெளியிடப்பட்டது. இக்கட்டுரையின்வழி, மலேசியாவில் வரையறுக்கப்பட்ட நான்கு சிந்தனைத் திறன்கள்வழி பாரதியாரின் கவிதைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. மேலும், இருபக்க முளையின் செயல்பாடும் அதன் தொடர்புடைய அறிவார்ந்த சிந்தனையும் பாரதியார் கவிதைகள் மூலம் வெளிக்கொணரப்பட்டன (Parvathi, 2015, p. 1424).

செல்வ சுப்பிரமணியம் முதுகலை மற்றும் முனைவர் பட்டத்திற்காக மேற்கொண்ட ஆய்வுகளும் கட்டுரைகளும் இவ்வாய்வை வளப்படுத்த மேலும் துணைப் புரிந்தன. இடைநிலை நன்னெறிக் கல்வி பாடத்திட்டத்தை மையப்படுத்தி கம்பராமாயணத்தில் வெளிப்படும் நன்னெறிக் கூறுகள் அடிப்படையில் அவருடைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆய்வுகள் பல்வேறு கதாமாந்தர்களை உட்படுத்தி அவர்களின் பண்புநலன்களையும், மன உணர்வுகளையும், நெறிகளையும் பறைசாற்றியுள்ளது (Seiva Subramaniam, 2007).

தொடர்ந்து, 2015 ஆம் ஆண்டு அவருடைய முனைவர் பட்டத்திற்காக 'தமிழ் இலக்கியங்களில் பண்டைய தமிழர்களின் சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அஃது ஒருங்கிணைக்கப்பட்ட நான்கு வகை சிந்தனைக் கோட்பாடுகளான ஆன்மிகம், அறிவாற்றல், அறிவியல் மற்றும் ஆக்கச் சிந்தனைகளை உட்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுகள் இக்கட்டுரை படைப்பதற்குப் பேருதவியாக அமைந்தன (Seiva Subramaniam, 2015).

மேலும் ஓர் ஆய்வு 'நாலடியாரில் சுவளர்ச்சி நன்னெறிக் கூறுகள்' எனும் தலைப்பில் 2006 ஆம் ஆண்டு தம் முதுகலை பட்டத்திற்காகப் பத்மாவதியால் மேற்கொள்ளப்பட்டது. உப பண்பினையான சுயவளர்ச்சியில் ஏழு நன்னெறிக் கூறுகளான இறைவன் மீது நம்பிக்கை வைத்தல், நம்பிக்கை, சுயமதிப்பு, பொறுப்பு, உயர்வெண்ணம், நீதியுடைமை மற்றும் மிதமனப்பான்மை போன்ற நன்னெறிக் கூறுகள் நாலடியாரில் வெளிப்படுவதை இந்த ஆய்வு காட்டுகிறது.

இறுதியாக, இராசேந்திரன் - ஆறுமுகம், 2016 ஆம் ஆண்டில், 'மலேசிய நன்னெறிக் கல்வி போதனையில் வால்மீகி இராமாயணம்' எனும் தலைப்பில் தமிழ்ப் பேரவை ஆய்விதழுக்காக ஆய்வுக் கட்டுரை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர். இவ்வாய்வு நன்னெறிக் கல்வி கற்றல் கற்பித்தலில் இலக்கியக் கூறுகளை இணைத்துக் கற்பிப்பதன் அவசியத்தை விளக்குகிறது. மேலும், வால்மீகியின் இராமாயணத்தில் வெளிப்படும் பாரம்பரியத்தினையும் அதன் உப பண்பினையான இயற்கையை நேசித்தல் எனும் கூற்றை நன்னெறி பாட போதனையில் கையாளும் முறையும் விளக்கப்பட்டுள்ளன.

## (அ) அறிவார்ந்த சிந்தனை என்றால் என்ன?

மலேசியாவில் சிந்தனைத் திறனில் வரையறுக்கப்பட்ட நான்கு வகை சிந்தனைகளுள் ஒன்று அறிவார்ந்த சிந்தனையாகும். இவ்வகை சிந்தனை மனித மூளையோடு தொடர்புடையது. இச்சிந்தனையானது மூளையின் பாகங்கள், அதன் வளர்ச்சி, பாதுகாக்கும் வழிமுறைகள் போன்ற தகவல்களை நமக்கு அளிக்கின்றது (Kamarudin Hj. Husin, 2003, p. 15).

அறிவார்ந்த சிந்தனையின்வழி வளர்க்கப்படும் குழந்தை எதிர்காலத்தில் தன்னைச் சார்ந்த சமுதாயம், நாடு, உலகம் அனைத்திற்கும் பயனடையும் வகையில் ஆக்கப்பூர்வமான செயல்களைப் புரியும். தாயின் கருவில் ஆறு நாட்கள் தொடங்கி ஆறு வயது வரை ஒரு குழந்தையின் அறிவு வளர்ச்சி தொடங்குகிறது. அதன்பின், அக்குழந்தையின் வளர்ச்சிக்கு பெற்றோர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் பொறுப்பேற்கின்றனர். அத்துடன், குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கு உணவு, வளர்க்கும் முறை, கல்வி முறை குடும்ப உறவு முறை போன்ற பிற கூறுகளும் சிறந்த அறிவாற்றல் கொண்ட குழந்தை உருவாகுவதற்குக் காரணமாகின்றன (Mohd. Yusof Hasan, 2007, p. 71)

அறிவாற்றல் கொண்ட குழந்தை தான் தேர்வு செய்யும் துறையில் திறமையை வெளிப்படுத்தும் வண்ணம் அறிஞராகவும் வல்லுநராகவும் சிறந்து விளங்கும். இவ்வகை சிந்தனை, சிந்தனையைப் பற்றி சிந்திக்கத் தூண்டுவதுடன், சிந்தனையின் உள வளர்ச்சியையும் உட்படுத்துகிறது (Mohd. Yusof Hasan, 2000, p. 89). அறிவார்ந்த சிந்தனை தொடர்பான ஆய்வுகள் (Roger Sperry, Stephen Covey, Howard Gardner & Edward de Bono) போன்ற மேனாட்டு அறிஞர்களால் அறிவு வளர்ச்சி கோட்பாடுகளாக உருவாக்கப்பட்டன. இந்த அறிவார்ந்த சிந்தனையைப் புரிந்து கொள்ளவும் ஆய்வு கட்டுரையைப் படைக்கவும் அவை பேருதவி புரிகின்றன.

## (ஆ) புதிய கலைத்திட்டத்தில் அறிவார்ந்த சிந்தனை

ஆரம்பக் காலத்தில் மலேசியக்

கல்வி அமைச்சு கே.பி.எஸ்.ஆர் எனும் கலைத்திட்டத்தில் படித்தல், எழுதுதல் கணக்கிடுதல் எனும் மூன்று அடிப்படை கூறுகளை வலியுறுத்தின. புதியக் கல்வி திட்டமான கே.எஸ். எஸ்.ஆர் கலைத்திட்டத்தில் பகுத்தறிதல் எனும் புதிய கூறு இணைக்கப்பட்டது. மாணவர்கள் கல்வியைப் புரிந்து கொண்டு உய்த்துணர்ந்து செயலாற்றும் வகையில் இத்திட்டம் வரையறுக்கப்பட்டுள்ளது. இஃது மாணவர்களின் அறிவாற்றல் சிந்தனைக்கு முக்கியத்துவம் வழங்கும் வண்ணம் அமைந்துள்ளது.

அந்நிலையில் தற்போது 21 ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தலுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. இதுவரையில் பெரும்பான்மையான ஆசிரியர்கள் கையாண்ட ஆசிரியர் மையக் கற்றலைத் தவிர்த்து மாணவர் மையக் கற்றலை அதிகரிப்பதே அமைச்சின் நோக்கமாகும். மாணவர்கள் சுயமாகவே இயங்குவதால் அறிவாற்றல் மிக்க மாணவர்களை உருவாக்குவதுடன் சிக்கல் களையும் திறனையும் முடிவெடுக்கும் திறனையும் கற்றுக் கொள்கின்றனர். இவ்வகை கற்றல் கற்பித்தல் உயர்நிலை சிந்தனைகளை மையமாகக் கொண்டு குழந்தைகளை உருவாக்குவதற்கு ஊக்குவிக்கப்படுகிறது. அதே வேளையில் கீழ்நிலை சிந்தனைகளுக்குக் குறைவான கவனம் செலுத்தப்படுகிறது (Rajendran, 2008, p.15).

### (இ) மகாகவி பாரதியாரின் கவிதைகளில் அறிவார்ந்த சிந்தனை

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் அறிவார்ந்த சிந்தனையானது இரு பிரிவுகளாக குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்குமான நன்னெறி பண்புகளும் அறிவூட்டலுமாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும், இக்கட்டுரை குழந்தகளின் நன்னெறிப் பண்புகளுக்கான அறிவூட்டலுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

பாரதியார் கவிதைகளில் அன்புடைமை, துணிவு, ஊக்கமுடைமை போன்ற பல நன்னெறிப் பண்புகள் பாப்பாப் பாட்டு வழியாகவும் புதிய ஆத்திச்சூடி வழியாகவும் புகுத்தப்பட்டுள்ளது. அன்புடைமை பண்பின்வழி 'தெய்வம் நீ என்றுணர்' எனும் வேதாந்த கருத்தைக் குழந்தைகள் மனத்தில் பாரதியார் பதிக்கின்றார். தன்னைச் சுற்றியுள்ள அனைத்து ஜீவராசிகளிடமும் அன்பை செலுத்துவதால் தெய்வமாகப் போற்றப்படுவர் எனும் உயர்ந்த சிந்தனையைத் தன் கவிதைகள்வழி பாரதியார் வலியுறுத்துகின்றார் (ஜான் சாமுவேல், 2000, ஜீ. 7778). அக்கவிதை கீழ்க்கண்டவாறு அமையும்.

## அன்புடைமை

*"உயிர்க ளிடத்தில்அன்பு வேணும், தெய்வம்*

*உண்மையென்று தானறிதல் வேணும்"*
*(பாப்பாப் பாட்டு: 16: 1)*

பாரதியார் வாழ்ந்த காலக்கட்டம் இந்தியா அந்நியர்களிடம் அடிமைப்படிருந்ததால் அவர்களை எதிர்ப்பதற்கு மக்கள் பயத்துடன் வாழ்ந்தனர். இந்த அவல நிலையைக் கண்ட பாரதியார் குழந்தைப் பருவத்திலிருந்தே துணிவையும் நாட்டுப் பற்றையும் தம் கவிதைகளின்வழி பிஞ்சு மனத்தில் விதைத்தார். சவால்களை எதிர்க்கொள்தல், மனந்தளராமை, கொடுங்கோன்மையை எதிர்க்கும் தைரியத்தைப் பெறுதல் போன்ற விழிப்புணர்வையும் அவசியத்தையும் ஏற்படுத்தினார் (கல்யாணராமன், 1994, p. 2021). குழந்தைப் பருவம் முதலே இவ்வாறான சிக்கல் களையும் திறனையும் முடிவெடுக்கும் திறனையும் வலியுறுத்தும் பாரதியாரின் அறிவார்ந்த சிந்தனை இந்த 21 ஆம் நூற்றாண்டு மக்களுக்கு ஏற்புடைய அறிவுரையாக விளங்குகிறது. துணிவு மனப்பான்மையைப் பாரதியார் தமது புதிய ஆத்திச்சூடியின்வழி உணர்த்துகின்றார்.

## துணிவு

*அச்சம் தவிர் - (புதிய ஆத்திச்சூடி, 1)*

*இளைத்தல் இகழ்ச்சி - (புதிய ஆத்திச்சூடி, 3)*

*தாழ்ந்து நடவேல் - (புதிய ஆத்திச்சூடி, 43)*

*நேர்படப் பேசு - (புதிய ஆத்திச்சூடி, 61)*

அடுத்ததாக, பாரதியார் கவிதைகளில் வெளிப்படும் ஊக்கமுடைமை பண்பின் மூலம் மூன்று முக்கியமான ஆய்வின் முடிவுகளைகள் வெளிப்படுத்துகிறார். முதலாவதாக, குழந்தைகளுக்கு விளையாட்டின் அவசியத்தை உணர்த்துகின்றார். விளையாட்டுவழி கற்றல் நடைப்பெறின் குழந்தைகள் ஆர்வத்துடன் கற்றலில் ஈடுபடுவர். தொடர்ந்து, நல்ல பாடல்களை உய்த்துணர்வதால் குழந்தைகள் நற்பண்புகளையும் மனமகிழ்வையும் அடைகின்றனர். மேலும், பாடல்கள்வழி கற்கும் கல்வி மனத்தில் ஆழப்பதியும்; மன அழுத்தத்தையும் குறைக்கும் (Vygotsky, 1997, p. 88).

காலையில் படிக்கும் பழக்கத்தையும் குழந்தைகள் சுயமாகவே ஏற்படுத்திக் கொள்வர். அதிகாலையில் எழுந்து கல்வி கற்பதால் மூளை சுறுசுறுப்பாக இயங்குவதுடன் ஞாபக சக்தி மேம்பட்டு ஆக்கச் சிந்தனை, ஆய்வு சிந்தனை, உய்யச் சிந்தனைகள் கொண்ட அறிவார்ந்த சிந்தனையுடைய குழந்தையை உருவாக்கும் (தூரன் 1953, p. 28). அதுமட்டுமின்றி, கற்றல் களங்களான மனோவியல், அறிவாற்றல் மற்றும் செயல்திறன்கள் கொண்ட முழுமனிதனை உருவாக்கும் (Dauer - Pangrazi, 1989, p. 1), ஊக்கமுடைமை பண்புகளைக் கீழ்காணும் பாப்பாப் பாட்டு கவிதைகள்வழி அறியலாம்.

## ஊக்கமுடைமை

*ஓடிவிளையாடு பாப்பா நீ*

*ஓய்ந்திருக்க லாகாது பாப்பா*
*(பாப்பாப் பாட்டு: 1: 1)*

*காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு*

*கனிவு கொடுக்கும்நல்ல பாட்டு*


*மாலை முழுதும்விளை யாட்டு என்று*

*வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா*

*(பாப்பாப் பாட்டு: 6: 12)*

பாரதியாரின் அறிவார்ந்த சிந்தனை அடிப்படையாகக் கொண்டு நன்னெறி பாடங்களைக் கற்பிப்பதால் மாணவர்கள் பல நன்மைகளை அடைகின்றனர். இலக்கியத்தின் மூலம் நன்னெறி பாடங்களைக் கற்பிக்கும் முறையொட்டி சில மாதிரி கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. இக்கற்றல் கற்பித்தலுக்காக அன்புடைமை, துணிவு, ஊக்கமுடைமை போன்ற மூன்று நன்னெறிப்பண்புகள் எடுத்தாளப்பட்டுள்ளன. அவை கீழ்க்கண்டவாறு அமையும்.

**பயிற்சி–1 : இலக்கியத்தின்வழி அன்புடைமை பண்பைக் கற்பித்தல்**



பாகமேற்று நடித்தல்

## கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள்:

1. காணொலிவழி ஆசிரியர் காட்டும் படக்காட்சிகள் உணர்த்தும் கருத்தை மாணவர்கள் ஊகித்துக் கூறுதல்.
2. ஆசிரியர் மனுநீதிச் சோழனின் கதையைக் கூறுதல். நீதியுடமையையும் பரிவு மனப்பான்மையையும் பற்றி விளக்கமளித்தல்.
3. ஆசிரியர் சில மாணவர்களைத் தேர்ந்தெடுத்தல். மனுநீதிச் சோழனின் கதையில் வரும் சூழலை வழங்குதல்.

4. அதற்கேற்ற உடைகளை அணிந்து மாணவர்கள் பாகமேற்று நடித்தல்.

5. ஆசிரியர் மாணவர்களை இரண்டு குழுவாகப் பிரித்தல். சிக்கல் அமைந்த சூழலை வழங்குதல். மாணவர்கள் வழங்கப்படும் சூழலுக்கேற்ப பாகமேற்று நடித்தல்.

6. வளர்ப்புப் பிராணிகளினால் ஏற்படும் நன்மைகளைப் பட்டியலிடுதல். தங்களின் படைப்புகளை வகுப்பில் ஒட்டுதல். ஒவ்வொரு குழு மாணவர்களும் மற்ற குழுவிற்குச் சென்று தங்களின் கருத்துகளைக் கூறி சரி பார்த்தல் (களரி நடை Gallery walk).

7. விலங்குகளிடம் பரிவு காட்டுவதால் எற்படும் மன உணர்வுகளைக் கூறப் பணித்தல்.

விரவி வரும் கூறுகள்: நன்னெறிப் பண்புகள், கதை கூறுதல், பாகமேற்று நடித்தல்.

பயிற்றுத் துணைப்பொருள்கள்: காணொலி, கதாபாத்திரங்களுக்கு ஏற்ற ஆடைகள்


மதிப்பீடு: தினசரி கடமைகளைச் செய்யும் வளர்ப்புப் பிராணிகளின் படங்களை வரைந்து வண்ணம் தீட்டுதல்.

வண்ணம் தீட்டும் பயிற்சி மாணவர்களின் வலப்பக்க மூளையின் பயன்பாடினை அதிகரிக்க உதவுவதுடன் அறிவாற்றலையும் வளர்க்கும். மேலும், மாணவர்கள் சுயமாகவே பிரச்சனைகளைக் களையும் திறனை வளர்த்துக் கொள்வதுடன் தினசரி வாழ்க்கையிலும் பயன்படுத்துவர்.

**பயிற்சி – 2 : இலக்கியம்வழி துணிவு பண்பைக் கற்பித்தல்**



மாணவர் படைப்பு



'ஹாட்' இருக்கை (HOT SEAT)

## கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள்:

1. ஆசிரியர் வகுப்பு முன் ஒரு மாணவரை அழைத்தல். 'பாராலிம்பிக்' போட்டிகளில் வெற்றி பெற்ற மாற்றுத் திறனாலிகளின் துணிச்சலான சாதனையொட்டிய துணுக்கை வாசிக்கச் செய்தல். கேள்விகள் கேட்டுப் பாடத்தைத் தொடங்குதல்.

2. ஆசிரியர் மாணவர்களை மூன்று குழுவாகப் பிரித்தல். ஆசிரியர் பல்வேறு பண்புகள் உணர்த்தும் படங்களை வெட்டி கலந்து மாணவர்களுக்கு அளித்தல். முதல் குழு மாணவர்கள் பாரதியாரின் ஆத்திச்சூடிகளில் வெளிப்படும் துணிச்சல் சம்பந்தமான கவிதைகளைத் தேர்ந்தெடுத்துப் பட்டியலிட வேண்டும்.

3. இரண்டாவது குழு தேர்ந்தெடுத்த கவிதைகள் தொடர்பான துணிச்சல் உணர்த்தும் படங்களைத் தெரிவு செய்து சொற்றொடர்களை உருவாக்க வேண்டும்.

4. மூன்றாவது குழு பாரதியாரின் ஆத்திச்சூடிகளில் வெளிப்படும் துணிச்சல் சம்பந்தமான செயல்களைச் செய்து காட்ட வேண்டும். மாணவர்கள் தங்கள் படைப்புகளை வகுப்பு முன் படைக்க வேண்டும்.

5. தொடர் நடவடிக்கையாக, ஆசிரியர் திறமை மிக்க ஒரு மாணவனைத் தேர்ந்தெடுத்தல். நிபுணராக அல்லது பாத்திரமாக 'ஹாட்' இருக்கையில் அம்மாணவர் அமர்ந்து மற்ற மாணவர்கள் கேட்கும் துணிவு சார்ந்த கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும்.

விரவி வரும் கூறுகள்: நன்னெறிப் பண்புகள், சிந்தனைத் திறன் (முடிவெடுக்கும் திறன்)

பயிற்றுத் துணைப்பொருள்கள்: பட அட்டைகள், பாரதியார் கவிதைகள்

மதிப்பீடு: நாட்டின் நற்பெயரை நிலைநாட்ட துணிவுடன் செயல்படுவதால் ஏற்படும் நன்மைகளை எழுதுதல்.

இக்கற்றல் கற்பித்தலின்வழி மாணவர்கள் உய்யச் சிந்தனை, சிக்கல் களைதல் மற்றும் முடிவெடுக்கும் திறன் போன்ற சிந்தனை திறன்களை வெளிக்கொணர்வதுடன் அறிவாற்றல் மிக்க மாணவனையும் உருவாக்கலாம்.

**பயிற்சி 3 : இலக்கியத்தின்வழி ஊக்கமுடைமை பண்பைக் கற்பித்தல்**



விளையாட்டு முறை



பாடல் பாடுதல் / கவிதை புனைதல்

## கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள்:

*1.* ஆசிரியர் சொற்குவியல் பட்டியல் வழங்குதல். சில மாணவரை அழைத்து ஊக்கமுடைமை சார்ந்த சொற்களைச் சொற்குவியலிலிருந்து கண்டுபிடித்து வட்டமிட பணித்தல். மாணவர்கள் கண்டுபிடித்த சொற்களை வாசிக்கச் செய்வதன்வழி பாடத்தை அறிமுகம் செய்தல்.

*2.* மாணவர் குழுவில் இயங்குவர். விளையாட்டு முறையில் ஊக்கமுடைமை பண்பை ஆசிரியர் வலியுறுத்துதல்.

*3.* குழு நிகராளி நடுவில் இருந்து பந்தை வீசுதல். கிடைக்கப்பெறும் மாணவர் ஆசிரியர் வழங்கும் சூழலுக்கு ஊக்கமுடைமை பண்பைக் காட்டினால் 'பலே, பலே, பலே' என்றும் சோம்பல் தனம் அல்லது ஊக்கமுடைமையற்ற செயலைக் காட்டினால் அழுவது போல் ஒலி எழுப்ப வேண்டும்.

*4.* தொடர்ந்து, மாணவர்கள் குழுவிலே நின்று ஊக்கமுடைமை பண்பை விளக்கும் ஒரு கண்ணி அடங்கிய கவிதையை ஆசிரியர் துணையுடன் உருவாக்க வேண்டும்.

*5.* மாணவர்கள் குழுவாரியாக இசைக் கருவிகளின் துணையுடன் கவிதையை இசைநயத்தோடு பாட வேண்டும்.

விரவி வரும் கூறுகள்: கவிதை புனைதல்

பயிற்றுத் துணைப்பொருள்கள்: சொற்குவியல், பந்து, சூழல் அட்டை, இசைக் கருவிகள்

மதிப்பீடு: ஊக்கத்துடன் செயல்பட்டு வெற்றி பெற்ற தமிழ் அறிஞர் ஒருவருடைய தகவலைக் கொண்டு நிறைவு செய்தல்.

### மாதிரி:

i. அவர் பெயர் தகவல்

ii. ஊக்கமுடன் செயல்பட்ட துறை தகவல்

iii. எடுத்துக்கொண்ட அயராத முயற்சி தகவல்

iv. கிடைத்த வெற்றி தகவல்

v. நாடு அடைந்த நன்மை தகவல்

விளையாட்டும் பாடலும் இணந்து கற்பிக்கப்படுவதால் மாணவர்கள் சுறுசுறுப்பாகவும் ஆர்வத்துடனும் கல்வியில் ஈடுபடுவர். அத்துடன், ஊக்கமுடைமை பண்பின் வரையறையை அறிவது மட்டுமின்றி விளையாட்டு மற்றும் பாடல் வழி தங்களாகவே செயல்படுவதால், கற்றுத்தரும் பண்புகள் மாணவர்கள் மனத்தில் ஆழப்பதியும். இலக்கியம்வழி நன்னெறி பண்புகளைக் கற்றல் கற்பித்தலில் பயன்படுத்துவதால் மாணவர்கள் கீழ்க்கண்ட நன்மைகளை அடைகின்றனர்.

i. கற்கும் ஆர்வம் மேலிடும்.

ii. இலக்கிய அறிவு பெருகும்.

iii. மாணவரின் ஆற்றல் வெளிப்படும்.

iv. கற்றவை மனத்தில் நன்றாகப் பதியும்.

v. இருவழித் தொடர்பு திறன் மேலோங்கும்.

vi. மகிழ்ச்சியான கற்றல் கற்பித்தல் நடைபெறும்.

## முடிவுரை

இத்தகைய பல்வேறு கற்றல் நடவடிக்கைகள் நன்னெறிக் கல்வி பாட போதனையில்

கற்பிப்பதால், மாணவர்களின் அறிவாற்றல் வளர்வதுடன் கற்றலில் ஆர்வம் அதிகரிக்கும். நன்னெறிக் கல்வி பாடத்தை மாணவர்கள் விருப்பமுடன் கற்பர். 21 ஆம் நூற்றண்டு கற்றல் கற்பித்தலுக்கு முக்கியத்துவம் வழங்குவதால் மாணவர்களின் தமிழறிவு, படைப்பாற்றல் திறன் மற்றும் உயர்நிலை சிந்தனைகள் வளர்கின்றன. பாரதியாரின் கவிதைகள் மூலம் வெளிப்படும் அறிவார்ந்த சிந்தனை இன்றைய கல்வித்துறைக்கு ஏற்புடையதாகவும் பொருந்தக்கூடியதாகவும் அமைவதுடன் நன்னெறிச் சிந்தனை, உணர்வு, நடத்தைக் கொண்ட உயர்நெறி மாந்தரையும் உருவாக்குகிறது. இதுவே ஒரு நாட்டின் சிறந்த கல்வி முறையாகவும் திகழ்கிறது.

## References


Dauer, V. P., & Pangrazi, R. P. (1989). *Dynamic Physical Education for Elementary School Children.* Massachusetts: Allyn and Bacon, Inc.

John Samuel, J. (2000). *Shellyum Bharathiyum - Oru Putiya Pārvai.* Chennai: Institute of Asian Studies.

Kaliyanaraman, C. (1994). *Bharathiar Kāṭṭiya Pakuttaṟivup Pātai*. Chennai: Sivapakkiyam Pathippakam.

Kamarudin Hj. Husin. (2003). *Kemahiran Berfikir dan Berkomunikasi*. Kuala Lumpur: Kumpulan Budiman Sdn. Bhd.

Kurikulum Standard Sekolah Rendah : Dokumen Standard Kurikulum dan Pentaksiran Kementerian Pendidikan Malaysia (2013). *Pendidikan Moral KSSR SJKT Tahun 5.* Putrajaya: Bahagian Pembangunan Kurikulum.

Mohd. Yusof Hasan. (2000). *Pemikiran Saintifik SPB4L*. Selangor: Person Malaysia Sdn. Bhd.

Mohd. Yusof Hasan. (2007). *Teori Pendidikan: Pemikiran Global.* Tanjong Malim, Perak: Penerbit Universiti Pendidikan Sultan Idris.

Parvathi, V. (2013). *Silappathikaram: Kajian Tentang Nilai Perkembangan Diri, Kekeluargaan dan Demokrasi.* Kuala Lumpur: Universiti Malaya.

Pathmavathy, M. (2006). *Nilai-Nilai Perkembangan Diri dalam Teks Nalatiyar.* Kuala Lumpur: Universiti Malaya.

Rajantheran, M. and Arumugam, C. (2016). "Malaysia Nanneri Kalvi Potanaiyil Vaalmiki Ramayanam". , *Journal of Tamil Peraivu*. (Vol. 4 & pp. 29-39). ISSN 2289-8379.

Rajendran, N. S. (2008). *Teaching and Acquiring Higher-Order Thinking Skills: Theory and Practice.* Tanjong Malim, Perak: Universiti Pendidikan Sultan Idris.

Seiva Subramaniam, R. (2007). *Nilai-Nilai Moral dalam Kambaramayanam: Kajian Dari Perspektif Pendidikan Moral Sekolah Menengah.* Kuala Lumpur: Universiti Malaya.

Seiva Subramaniam, R. (2015). *Pemaparan Budaya Pemikiran Masyarakat Tamil Awal Dalam Kesusasteraan Tamil Klasik*. (PhD), Kuala Lumpur: Universiti Malaya.

Turan, P. (1953). *Kuḻantai Maṉamum Ataṉ Malarcciyum (Maṉat Tattuva Nūl.* Chennai: Amutha Nilaiyam Ltd.

Vygotsky. L.S. (1997) *Educational Psychology*. Florida: St. Lucie Press. Introduction by V.V. Davydov. Translated by Robert Silverman.

# தமிழர் மரபில் ஊழ்வினை

# Fate in Tamil Tradition

முனைவர் பெ. மோகன் / Dr.P.Mohan [1]

***Abstract***

In Tamil tradition, fate is an important aspect of the thinking process. Fate is said to be the main reason for birth and also, the happiness and sorrow people experience. Among the three objectives stated in the Sillapathigaram, fate is mentioned as the main one. Based on the context of fate, it is said that everything that happens is destined by the fate of the individual.The idea of fate defines that every incident has already been decided and it is not possible for any new incidents to take it's implementation. From the Sangam period, fate has been mentioned in many songs, poetic works and also, in some creative literature. This article is an outcome of a research based on this.

Date of submission: 2018-10-29
Date of acceptance: 2018-11-30
Date of Publication: 2018-12-30
Corresponding author's
Name: Dr.P.Mohan
Email: tamilmohanp@gmail.com

**Key Words:** Fate, early Tamils, Tamil literature, Tamilian thought, Sanggam literature.

## முன்னுரை

தமிழரின் சிந்தனை மரபில் ஊழ்வினை என்பது காலம் காலமாகத் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. எல்லா நிகழ்வுகளும் விதிப்படியே நடக்கும் என்பது ஊழ்வினையின் அடிப்படை. அவரவர் தலைவிதிப்படியேதான் அனைத்தும் நிகழும். தற்போது நடக்கக்கூடிய அனைத்தும் ஏற்கனவே எழுதி வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவருடைய வாழக்கையில் நிகழக்கூடியவை அனைத்தும் ஏற்கனவே ஓலைச்சுவடிகளில் எழுதி வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவருடைய வாழ்க்கை நிகழ்வுகளும் எமலோகத்தில் உள்ள சித்திராபுத்திரனுடைய ஏட்டில் எழுதப்பட்டுள்ளன. அதில் உள்ளபடியேதான் அனைத்தும் நடக்கின்றன. என்றெல்லாம் சாதாரண மக்களின் பேச்சு வழக்கில் இடம்பெறுவதைக் காண்கிறோம். இதனைத் தமிழ் இலக்கியங்கள் செவ்வனே சுட்டுகின்றன.

## தமிழ் இலக்கியங்கள் காட்டும் ஊழ்வினை

அனைத்து நிகழ்வுகளும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவை (pre-determind) என்பதனால், அதற்கு அப்பாற்பட்ட, புதிய நிகழ்வு நடைபெறச் சாத்தியமில்லை என்பதும் அதன் உட்பொருள். எனவே, வாழ்க்கையை விதி போகிறபோக்கில் வாழ்ந்துசெல்ல வேண்டுமே ஒழிய, அதன் போக்கை மாற்றியமைக்க முயற்சி செய்யக்கூடாது. இதனை,

*"நீர்வழிப் படூஉம் புணைபோல, ஆருயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது திறவோர்*
*காட்சியின் தெளிந்தனம்"* (புறம், 192, 911)

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகள்கூட வலியுறுத்துகிறது.

ஊழ் என்பதைப் போலவே, இச்சை (Free

[1]The author is a Associate Professor in the Department of Tamil, Vels Institute of Science, Technology & Advanced Studies, Pallavaram, Chennai, Tamil nadu India.
tamilmohanp@gmail.com

will) அல்லது தன்னிச்சை என்பதும் தொடர்ந்து தமிழரின் சிந்தனை மரபில் இருந்துள்ளது. என்றாலும், இச்சை சார்ந்த அல்லது தன்னிச்சை சார்ந்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளும் இருந்துள்ளன. தனிமனிதனின் விருப்பங்கள் அல்லது இச்சையை விடவும் சமூகத்தின் இச்சை முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. மிகுதியான செல்வத்தை உடையவன், தானே அனைத்தையும் துய்க்கக் கூடாது. தன்னிடம் உள்ளவற்றை மற்றவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று புறநானூறு வலியுறுத்துகிறது. அனைத்தையும் தானே துய்க்க நினைத்தால் பலவற்றை இழக்க வேண்டியதிருக்கும் என்றும் எச்சரிக்கிறது. இதனை,

*"உண்பது நாழி ; உடுப்பவை இரண்டே;*

*பிறவும் எல்லாம் ஒரொக் குமே;*

*அதனால், செல்வத்துப் பயனே ஈதல்;*

*துய்ப்பேம் எனினே, தப்புந பலவே".* (புறம், 189, 58)

சற்றேறக் குறைய இதே பொருளையே,

*பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்*

*நயனுடை யான்கண் படின்"* (குறள், 216)

என்னும் குறளில் வள்ளுவரும் வலியுறுத்துகிறார். அகம் சார்ந்த விரும்பங்களின் விழைவான இச்சை என்பதும், புறம் சார்ந்த நடவடிக்கையான ஊழ் என்பதும் தொடர்ந்து இடம்பெற்றுவந்துள்ளன.

ஊழ் என்னும் தலைப்பில் ஓர் அதிகாரத்தையே வள்ளுவர் எழுதியிருக்கிறார். அதில் ஊழ் மிகவும் வலியது என்னும் பொருளில் பின்வரும் குறள் இடம்பெறுகிறது.

*"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று*

*சூழினுந் தான்முந் துறும்"* (குறள் 380)

ஊழை விட வலிமையானது வேறோன்றும் இல்லை. ஊழை விலக்கும் பொருட்டு வேறொரு வழியை ஆராய்ந்தாலும் அங்கும் ஊழே முன்வந்து நிற்கும் என்பது இந்த குறளின் பொருள். மனிதனால் ஊழை வெல்ல இயலுமா? என்னும் கேள்விக்கு, முடியும் என்பதே வள்ளுவரின் பதில்.

*"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்*

*தாழாது உஞற்று பவர்"* (குறள், 620)

ஓய்வின்றி வினையாற்றுபவர்களால் ஊழையும் வெல்ல இயலும் என்னும் பொருள் தரும்படி இக்குறள் அமைந்துள்ளது. இது ஊழ் என்பதற்கு எதிராக இச்சை அல்லது தன்னிச்சை (முயற்சி) என்பதை வலியுறுத்துகிறது எனலாம்.

## சிலப்பதிகாரத்தில் ஊழ்

இளங்கோவின் காலத்தில் நிலைமைகள் மாறுகின்றன. அதனால், எது நடந்தாலும் அது விதிப்படியேதான் நடக்க வேண்டும். விதிக்கு அப்பாற்பட்டு எதுவும் நடக்கலாகாது. விதியை அனுசரித்து நடக்காவிடில், விதி முன்வந்து கொல்லும் என்கிறது சிலப்பதிகாரம். இதனை,

*"ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்"* (சிலம்பு. பதிகம். 57)

என்னும் வரி எடுத்துரைக்கின்றது.

ஊழ்வினை என்று கணியன்பூங்குன்றனாராலும், வள்ளுவராலும், இளங்கோவாலும் வலியுறுத்தப்படுவது வெற்று நம்பிக்கை அல்ல. நம் தமிழ்ச் சமூகச் சிந்தனை மரபில் ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு கருத்தியலாகும். அதாவது, சமூகத்தை வழி நடத்தக்கூடிய தலைவனோ அல்லது அரசனோ தான்தோன்றித்தனமாக, தன்னிச்சைப்படி இருக்கக் கூடாது என்பதை வலியுறுத்துகிறது.

தமிழ்ச் சமூகத்தில் ஒவ்வொரு காலகட்டத்திலும் தன்னிச்சை என்பதும், ஊழ்வினை என்பதும் வெவ்வேறு சொல்லுடன் வெவ்வேறு வடிவத்துடன் தொடர்ந்து வந்துகொண்டுள்ளன. இளங்கோவின் சிலப்பதிகாரத்தில் ஊழ்வினை என்பது பெரும் சிக்கலாய் உருவம் கொள்கிறது. தன்னிச்சைக்கும் ஊழ்வினைக்கும் இடையில் நடக்கும் பெருஞ் சண்டையே சிலப்பதிகாரக் கதையாய்

தோற்றம் கொள்கிறது எனலாம்.

இச்சை, தன்னிச்சை என்பவற்றையும் தாண்டி, எதேச்சை என்பதே கோவலனிடம் நிறைந்துள்ளது. எதேச்சை என்பதன் குறியீடாய்க் கோவலன் காட்சியளிக்கிறான். தன் மனம்போன போக்கில், தன் விருப்பப்படியெல்லாம் வாழ்க்கையை வாழ்கிறான். கண்ணகியைத் திருமணம் செய்துகொள்கிறான். கண்ணகியை விடுத்து, மணிமேகலையுடன் சேர்ந்து வாழ்கிறான். மணிமேகலையுடன் பிணக்கு கொண்டு, மீண்டும் கண்ணகியிடமே திரும்பி வருகிறான். இவையெல்லாம் கோவலனின் எதேச்சையான விருப்பத்திலிருந்து நிகழ்கிறதே ஒழிய, கண்ணகி அல்லது மணிமேகலை செய்யும் தவறுகளால் நிகழவில்லை. மனம்போன போக்கில் செயல்படக்கூடிய, தன்னுடைய விருபங்களை மட்டுமே பெரிதாக எண்ணுகிற, தன்னுடன் உள்ளவர்களின் நலனைச் சிறிதளவும் கணக்கில் கொள்ளாத, நிலையற்ற (Unstable Character) மனநிலைக் கொண்டவனாய்க் கோவலன் காட்சியளிக்கிறான்.

கோவலன் மட்டுமல்ல, சிலப்பதிகாரத்தின் அனைத்துக் கதைமாந்தர்களும் தங்கள் பொறுப்பிலிருந்து விலகியவர்களாகவும், நிலையற்ற தன்மையுடனும் காணப்படுகின்றனர். கோவலன், கண்ணகியிடமிருந்து விலகிச் சென்று மாதவியுடன் இருக்கிறான். அவனிடம் யாதொரு வினாவும் கண்ணகி வினவவில்லை. மாதவியிடமிருந்து மீண்டும் வந்தபோதும், காரணம் கேட்காமலே ஏற்றுக்கொள்கிறாள். வெளிப்படுத்த இயலாத இச்சையின் வடிவமாய், வலியாய் மாறிய இச்சையின் வடிவமாய் கண்ணகி வெளிப்படுகிறாள். மாதவி கல்வி, கலை, கேள்விகளில் சிறந்து விளங்குகிறாள். அவள் மதிநுட்பம் நிறைந்தவள் என்பது பல நிலைகளில் இளங்கோ வெளிப்படுத்துகிறார். மாதவியின் இரு முடங்கல்கள் அவளின் மதிநுட்பத்திற்கு சிறந்த சான்றெனத் திறனாய்வளர் உரைப்பர். இருப்பினும், சிலப்பதிகாரத்தின் முக்கியக் கதைமாந்தர் என்னும் நிலை மாதவிக்கு அளிக்கப்படவில்லை.

பாண்டிய அரசின் நிலை இன்னும் சீர்கெட்டுள்ளது. பாண்டிய நாட்டில் பொற்கொல்லன் திருடுகிறான். அரண்மனையில், அரசியின் சிலம்பையே திருடுகிறான். அரண்மனையில் திருடு நடப்பதென்பது தற்செயல் நிகழ்வன்று. இது பாண்டிய அரசின் பொருளாதாரச் சீர்குலைவினைக் குறிக்கும் குறியீடு எனலாம். பாண்டிய நாட்டில் உற்பத்தி இன்மையால் ஏற்பட்ட வறுமையின் கொடுமையை உணர்த்துகிறது எனலாம். பொற்கொல்லன் திருடுகிறான் என்றால், சராசரி மக்களின் வறுமைநிலை என்பது மிகக் கொடுமையானது என்பதை உய்த்துணர வேண்டும். கோவலன் சிலம்பைத் திருடினான் என்று பொற்கொல்லன் கூறக்கேட்ட பாண்டிய மன்னன், அதனை ஆய்ந்தறியாமல் கோவலனைக் கொல்வதற்கு ஆணைப் பிறப்பிக்கிறான். பொற்கொல்லன் கூறியது சரியா? தவறா? என்பதை ஆய்ந்தறிவதில் அவனுக்கு நாட்டம் இல்லை. அரசனுக்குரிய பொறுப்புகளின் அடிப்படையில் ஆணைப் பிறப்பிக்கவில்லை.

சச்சந்த மன்னன் இல்லற இன்பத்தில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக்கொள்வதினால், அரசனுக்குரிய கடமைகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்கிறான். அதன் காரணமாக கட்டியங்காரனிடம் தன் ஆட்சியை இழக்கிறான் என்று சீவகசிந்தாமணியில் காண்கிறோம் (சீவகசிந்தாமணி). அதையொத்த மற்றொரு நிலையைத்தான் பாண்டிய மன்னனிடமும் காண்கிறோம். மதியிழந்த நிலையில்தான் கோவலனைக் கொல்ல ஆனைப் பிறப்பிக்கிறான். பாண்டிய அரசு செயலற்றுக் கிடப்பததைத்தான் இக்காட்சி நமக்குப் புலப்படுத்துகிறது. ஒரு அரசு செயலற்றுக் கிடப்பது என்பது, அச் சமூகம் உற்பத்தியை இழந்து தவிப்பதைக் காட்டுகிறது. சமூகம் உற்பத்தியிழந்து காணப்படுவதால், அரசன் உற்சாகம் இழந்து காணப்படுகிறான். மேலும், செயலற்ற நிலைக்குத் தள்ளப்படுகிறான். இந்நிலையைத்தான் பாண்டிய மன்னன் என்னும் கதைமாந்தரின் மூலம் இளங்கோ வெளிப்படுத்துகிறார்.

பண்டையத் தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய அரசர்களுக்கிடையே தொடர்ந்து போர் நிகழ்ந்துகொண்டேயிருந்தன. மூவேந்தர்களுக்கிடையே ஒற்றுமை இல்லை என்று இலக்கிய ஆய்வாளர்களும் வரலாற்றாசிரியர்களும் தொடர்ந்து குறிப்பிட்டு வந்துள்ளனர். அதற்கான காரணங்கள் பலவற்றையும் குறிப்பிடுகின்றனர். ஆனால், அந்த போர்களுக்கான அடிப்படைக் காரணம், அன்றைய பொருளாதார உற்பத்தி முறையில் ஏற்பட்ட தேக்கம் அல்லது உற்பத்தியின்மை எனலாம்.

பொருள் உற்பத்தியின்மையால் சமூகத்தில் பல்வேறு வகையான இன்னல்கள் ஏற்படுகின்றன. சமூகத்தில் பஞ்சம், பசி, பட்டினி, கொலை, கொள்ளை போன்ற நிகழ்வுகள் தோன்றுகிறது. சேர நாட்டில் ஏற்பட்ட பஞ்சம், பசி, பட்டினி போன்ற பொருளாதாரச் சீர்குலைவுகளைப் போக்குவதற்கு சீத்தலைச்சாத்தனார் அட்சயப்பாத்திரத்தை முன் நிறுத்துகிறார். மணிமேகலை தன் கைகளில் அட்சயப்பாத்திரத்தை ஏந்திக்கொண்டு, பசியால் வாடும் மக்களுக்கெல்லாம் உணவளிக்கிறாள். அள்ள அள்ளக் குறையாத உணவு அதில் வந்துகொண்டே உள்ளது என்கிறார். இது இலக்கிய வகைப்பட்ட அல்லது கற்பனையான அல்லது அகவயமான அனுகுமுறை எனலாம். சமூகத்தில் உள்ள பஞ்சம் என்னும் புறவயமான சிக்களுக்கு, அட்சயப்பாத்திரம் என்னும் அகவயமான தீர்வு அளிக்கிறார்.

மணிமேகலையின் அட்சயப்பாத்திரம் சேரநாட்டில் இருந்த பஞ்சத்தைப் போக்க எவ்விதத்திலும் உதவவில்லை. ஆகயையால், சமூகத்தில் உள்ள புறவயமான சிக்கல்களுக்கானத் தீர்வு என்பதும் புறவயமானதாக இருக்க வேண்டும் என்பதை இளங்கோ உணர்ந்துகொள்கிறார். அதனால், எத்தேச்சையுடன் செயல்படும் அரசை எச்சரிக்கை செய்வதற்காக ஊழ்வினை என்பதை முன்னிறுத்துகிறார். சங்ககாலத்தில் புலவர்கள் அரசர்களை எச்சரிக்கைச் செய்வதற்காக காஞ்சித் திணையைப் (நிலையாமை) பாடியுள்ளதை இளங்கோவின் ஊழ்வினை ஒத்துள்ளது எனலாம். புறவயமான சமூகச் சிக்கல்களுக்கு புறவயமான சமூகத் தீர்வு என்னும் நிலையில் ஊழ்வினை அமைந்திருப்பதைக் காணலாம். அதனால், இளங்கோவடிகள் தமிழகத்தின் மனசாட்சியாகத் திகழ்கிறார் எனலாம்.

ஊழ் கோட்பாடு, சோழ நாட்டில் (புகார்க்காண்டம்) முன்வைக்கப்பட்டு, பாண்டிய நாட்டில் (மதுரைக்காண்டம்) அழிவை ஏற்படுத்தி, சேர நாட்டில் (வஞ்சிக்காண்டம்) வளம் சேர்க்கும் விதமாக அமைகின்றது. இந்நிகழ்வானது, இத்தாலியில் தோன்றிய மறுமலர்ச்சி, இங்கிலாந்தில் தொழிற்புரட்சியை ஏற்படுத்தி, பிரான்ஸ் நாட்டில் சமூகப் புரட்சியை ஏற்படுத்தியதை ஒத்துள்ளது. பழையன கழிதலும் புதியன புகுதலும் என்னும் பழமொழிக்கேற்ப, மதுரையை அழித்துவிட்டு, அதன் ஆக்கபூர்வமான வளர்ச்சியை சேர நாட்டில் குவிக்க முயற்சி செய்ததோ என்று எண்ணத் தோன்றுகிறது. இளங்கோ ஊழ்வினையை முன்னிறுத்திபோதும் சமூகத்தில் சிக்கல் தீரவில்லை. உற்பத்தி பெருகவில்லை. பஞ்சம், பசி, பட்டினி என்பவை ஒழிக்கப்படவில்லை.

இந்நிலையில், அடுத்த கட்டத்தை நோக்கி சேரன் செங்குட்டுவன் முன்னேறுகிறான். ஒரு சமூகம் பொருள் உற்பத்தியைச் செய்ய இயலா நிலையை அடையும்போது, மற்றொரு சமூகத்துடன் போர் புரிந்துத் தன் பொருளாதாரத்தை புணர் உற்பத்தி செய்துகொள்ள முனைவதை தற்கால அரசியல் நிகழ்வில் காண்கிறோம். அதே நிலைப்பாட்டை சேரன் செங்குட்டுவன் மேற்கொள்கிறான். வடநாட்டு அரசன் கனகவிஜயன் மேல் போர் தொடுக்கிறான். இதை, கண்ணகிக்கு சிலை செய்வதற்கு கல்லைக் கொண்டுவர, சேரன் செங்குட்டுவன் இமயமலை வரைச் செல்கிறான். கனகவிஜயன் என்னும் வடநாட்டு மன்னனுடன் போரிட்டு வென்று, அவன் தலையில் கல்லைச் சுமக்கவைத்து கொண்டுவந்து சிலை வைக்கிறான் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. ஆகையால், வடநாட்டு அரசன் கனகவிஜயனின் மேல்

சேரன் செங்குட்டுவன் போர் தொடுத்தான் என்பது வெறும் இனக்காழ்ப்புக்கான போர் அல்ல. சேரநாட்டுப் பொருளாதாரத்தை, உற்பத்தியை மேம்படுத்துவதற்குச் செய்யப்பட்ட புறவயமான ஒரு முயற்சி என்று எண்ணத் தோன்றுகிறது. மேலும், இது ஊழ்வினையை வலியுறுத்தியதன் தொடர்ச்சியாகவும் அமைந்துள்ளது.

சமூகச் சிக்கல்களுக்கானத் தீர்வு அகவயமானதல்ல, புறவயமானது என்பது தமிழர் சிந்தனை மரபில் ஏற்பட்ட மாபெரும் பாய்ச்சலான முன்னேற்றம் எனலாம்.

*"உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்"* (சிலம்பு. பதிகம். 56)

என்று இளங்கோவடிகள் குறிப்பிடும், பெண்ணைப் போற்ற வேண்டும் என்னும் கூற்றும் அதிலிருந்தே தோன்றுகிறது. பெண்ணை மதிக்காத அகவயமான, எதேச்சதிகார மனநிலையை மாற்றி, பெண்ணை மதிக்கும் உயர்வான சிந்தனையை ஊழ்வினை என்னும் கோட்பாடு உருவாக்கியது.

## நிறைவு

அகவயமாக இருத்தல் சமூகத்தின் பிழையல்ல, அச்சமூகத்தின் கோட்பாடு. அகவமாக இருக்கும் சமூகத்தில் அறிவியல் வளராது, மாறாக அடிமைத்தனமே வளரும். அகவயமான சிந்தனையோடு ஒரு சமூக நீண்ட காலங்கள் நிலைத்திருக்க முடியாது. அது அறிவுக்கும் அறிவியலுக்கும் பொருந்தாத நிலை என்பதால், அச்சமூகம் சிதைந்துச் சீரழியும். அகமும் புறமும் விழிப்பான நிலையில், இயக்கவியல் தன்மையுடன் இணைந்து உருவாகும் சிந்தனையே சமூக வளர்ச்சியை ஏற்படுத்தும். அது சமூகத்தில் அறிவியல் வளர்ச்சியையும், மனவளத்தையும் ஏற்படுத்தும்.

தமிழக வரலாற்றில், அகமும் புறமும் இயக்கவியல் தன்மையுடன் இணைந்திருந்த நிலை என்பது மிக அரிதாகவே உள்ளது. அதுவும் தற்செயல் நிகழ்வாகவே தென்படுகிறது. சங்கப் பனுவல்கள் இதற்குச் சான்றெனலாம். இளங்கோவிடத்தில் தற்செயலானக் கருத்தியலாக இது வெளிப்படுகிறது. அதனால் பெண்மையைப் போற்றும் சிந்தனைத் தோற்றம் கொள்கிறது, சேரன் செங்குட்டுவனைப் போரிடத் தூண்டுகிறது, சமூக இருப்பை அடுத்த நிலையை நோக்கி உந்தித் தள்ள முயற்சி செய்கிறது, மீண்டும் தேக்க நிலையை அடைகிறது. ஏன் இவ்வாறு நிகழ்ந்தது என்பது மேலாய்வுக்கு உரியது. பல்லவர் காலத்துச் சிந்தனை முறைக்கும் உற்பத்தி முறைக்கும், பக்தி இலக்கியங்களின் தோற்றத்திற்கும் ஊழ்வினைக் கோட்பாடே அடிப்படை என்பதை மனம் கொள்ளவேண்டும். தற்போது வலியுறத்தப்படும் விதி என்பது இதிலிருந்து வேறுபட்டது என்பதையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

## References


Manikkanaar, A. (1999). *Purananuru: Mulamum Uraiyum.* Chennai: Vartamanan Pathipakam.

Auvai Su, Thuraisamipillai. (2002). *Purananuru.* Thirunelveli: Thirunelveli Theninthiya Saiva-sithantha Nurpathipu Kazhakam.

Thiruvalluvar. (20000. *Thirukural*: Thelivuraiyudan. Chennai: puram Pablications.

Sujatha. (2005). *Silapathikaram Oor Eliya Arimugam.* Chennai: Uyirmei Pathipakam.

Thirukakkatha Theevar. (1966). *Sivakasinthamani.* Chennai: Aruna pathipakam.

# புத்ததத்தரால் கிடைக்கப்பெறும் தமிழ்நாட்டு வரலாற்றுக் குறிப்புகள்

# Buddhadatta and his contributions to the History of Tamil Nadu

முனைவர் ஜோதி எஸ். தேமொழி / Dr. Jothi S. Themozhi [1]

***Abstract***

From the third through the sixth century A.D, which is after the Sangam period, Tamil Nadu was under the rule of the Kalabhra dynasty. Since there was a lack of historical evidence to know about their reign, South Indian historical scholars term this period in history as 'Kalabhra interregnum.' From the early 20th century onwards, some supporting archeological inscriptions and literary scriptures began to shed light on the Kalabhras. However, the information about them is still scarce. The Velvikudi plates (c. 770) of the Pandyan king Parantaka Nedunjadaiyan mention the Kalabhras were the first archeological inscriptions; these were found around the 1920s. In the literature front, Buddhist monk Buddhadatta, a reputable Pali language writer of the fifth century who belonged to Uraiyur, also mentions a Kalabhra ruler during his time. He mentions his contemporary, King Achyutavikranta (who could be a Buddhist too, but not for sure) of the Kalabharakula, who ruled over the Chola country from Kaveripumpattinam. Thus, Buddhadatta's literary work is as important as Velvikudi inscription in the historical perspective. The period of Kalabhras was marked by the ascendancy of both Buddhism and Jainism by historical scholars. This article identifies some passages from Buddhadatta's literary work that mentions the Kalabhra ruler of Buddhadatta's time, King Achyutavikranta. Based on earlier scholars' research, this article also attempts to identify the location of Buthamangalam, where the monk Buddhadatta resided while penning his work during the fifth century Chola country.

Date of submission: 2018-10-25
Date of acceptance: 2018-11-18
Date of Publication: 2018-12-30
Corresponding author's
Name: Dr. Jothi S. Themozhi
Email: jsthemozhi@gmail.com

**Key Words:** Kalabhra interregnum, Kalabhra dynasty, Velvikudi plates, Buddhadatta, Achyutavikran, Buthamangalam, Vinaya Vinicchaya, Abhidhamma

## முன்னுரை

தமிழக வரலாற்றில் ஆட்சியாளர்கள் யாவர், அவர்களின் பங்களிப்பு என்ன என்று அறியமுடியாத ஒரு வெற்றிடமாகக் கருதப்படும் காலம் சங்ககாலம் என அறியப்படும் காலத்திற்குப் பிற்பட்ட காலம். சங்ககாலம் என்பது அறிஞர்கள் பெரும்பாலோர் ஏற்கும் கிமு 250கிபி 250 க்கும் இடைப்பட்ட காலம். சங்க காலத்திற்குப்

[1] The author is a Freelance Researcher and writer (USA) as well as Editor for "Min Tamil Medai," the Quarterly e-zine for the Tamil Heritage Foundation. She holds a PhD in Public Administration. jsthemozhi@gmail.com

பின்னர், காஞ்சியில் சிம்மவிஷ்ணு வழிவந்த பல்லவ மன்னவர்கள் குறித்த வரலாற்றுச் செய்திகள் கிடைக்கத் துவங்கிய கிபி ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை ஒரு மூன்று நூற்றாண்டுகளுக்குத் தமிழகத்தின் நிலை என்னவாக இருந்தது என்று அறிய இயலாமல் இருந்த காலத்தை வரலாற்று அறிஞர்கள் 'தமிழகத்தின் இருண்டகாலம்' என்றே கருதினர். அக்காலத்தில் களப்பிர மன்னர்கள் ஆண்டதாக உறுதியான முதல் குறிப்பு கிடைத்தது சென்ற நூற்றாண்டில் கிடைத்த கி.பி. 768 காலற்றைய 'வேள்விக்குடிச் செப்பேடு' கொடுக்கும் செய்தியினால்தான் என்பதே தமிழக வரலாற்றைப் பொறுத்தவரை இச்செப்பேட்டின் வரலாற்று முக்கியத்துவத்தின் காரணம்.

'அபிதம்மவத்ரா' (அபிதம்மாவதாரம் 'அபிதம்மம்: ஓர் அறிமுகம்' என்பது பொருள்) என்பது பாலி மொழியின் முதன்மையான பௌத்த சமயநூல். அபிதம்மவத்ரா நூலானது அபிதம்மம் குறித்து 24 அத்தியாயங்களில் உரைநடையிலும் செய்யுளிலும் விளக்கும் ஓர் இலக்கியம். மனம், தியானம், முக்திநிலை குறித்த விளக்கங்கள் நிரம்பியது. இதனை எழுதியவர் ஐந்தாம் நூற்றாண்டில் உறையூரில் (உரகபுரம்) பிறந்து வாழ்ந்து பௌத்த சமயப்பணியாற்றிய பௌத்த துறவியான 'ஆச்சாரிய புத்ததத்த மகாதேரர்' என்ற தமிழர். இவர் சோழநாட்டுப் பூதமங்கலம் என்னும் ஊரில், வேணுதாசர் என்பவர் அமைத்த பௌத்த விகாரையில் தங்கியிருந்த பொழுது 'விநய விநிச்சயம்' என்ற நூலை எழுதியதாக அந்த நூலின் முடிவுரையில் குறிப்பிடுகிறார். அப்பொழுது அச்சுத விக்கிராந்தா என்ற களப்பிர மன்னன் அரசாண்டதாகவும் குறிப்பிடுகிறார் (மயிலை சீனி. வேங்கடசாமி 1959).

அச்சுத விக்கிராந்தா (அச்சுத விக்கந்தன் / அச்சுத நாராயணா / அச்சுதன் என்றும் அழைக்கப்பட்ட) என்ற அந்தக் களப்பிர மன்னனின் ஆசிரியராக புத்ததத்தர் விளங்கினார். இந்த நூல் தரும் இக்குறிப்பு தமிழக வரலாற்றை அறிவதில் இன்றியமையாத ஒரு குறிப்பாக விளங்குகிறது. தமிழக வரலாற்றில் களப்பிரர் குறித்த செய்தி தந்த முதல் செப்பேடு வேள்விக்குடிச் செப்பேடு. அதுபோன்றே, களப்பிரர் ஆட்சி பற்றிய பிறிதொரு முக்கியமான வரலாற்றுக் குறிப்பு கிடைத்தது புதத்தத்தர் எழுதிய நூலில் இருந்து என்பதால் வரலாற்றில் இவர் பங்களிப்பும் முக்கியத்துவம் பெறுகிறது.

## ஆய்வுப் பின்புலம்

***(i) புத்ததத்தரின் வரலாற்று முக்கியத்துவம்:***

ஆசாரிய புத்ததத்த மகாதேரர் வாழ்ந்த காலம் என்பது மற்றொரு புகழ் பெற்ற பாலி மொழியறிஞரும், முதலாவது குமார குப்தா (கிபி 414455) என்ற குப்த மன்னனின் ஆசிரியரான 'புத்தகோஷர்' என்ற புத்தபிக்குவின் காலம். புத்தகோஷர் மேற்கொண்ட இலங்கைப் பயணக்காலத்தில் இவ்விரு துறவியரும் சந்தித்துள்ளதாகவும் காட்டப்படுகிறது. இலங்கை அனுராதபுரத்து மகாவிகாரையில் சமயப் பயிற்சி பெற்றவர் புத்ததத்தர். தமிழரான புத்ததத்தர் ஒரு பாலி மொழி அறிஞர் என்பதும், பாலி மொழி நூல்களுக்கு பாலிமொழியிலேயே விளக்கவுரைகள் எழுதியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறு எழுதிய பாலி நூல்களில், அக்கால தமிழ்ப் பௌத்த நூல் கருத்துகள் இடம்பெற்றிருக்கலாம் என ரைஸ் டேவிட் என்பார் கருதுவதாக மயிலை சீனி. வேங்கடசாமி குறிப்பிடுகிறார் (மயிலை சீனி. வேங்கடசாமி 1940). ஆனால் தமிழ்பௌத்த கோட்பாடுகளை அறியும் வண்ணம் இன்று நமக்குப் பண்டைய தமிழ் பௌத்த இலக்கியங்கள் கிடைக்காமல் மறைந்துவிட்டன. பாலி மொழியில் எழுதப்பட்ட புத்ததத்தர் நூல் போன்றவை இலங்கை, பர்மா போன்ற அயல்நாட்டுப் பௌத்தர்களால் பயன்கொள்ளப்பட்டதால் தப்பிப் பிழைத்துள்ளன என்பது மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களது கருத்து.

சமண பௌத்த சமயங்கள் தம் சமயக் கொள்கைகளை அந்தந்த நாட்டு மக்களின் மொழிகளிலேயே சமயப்பரப்புரை செய்தன என்பது வரலாறு. இருப்பினும் நமக்குத் தமிழில் முழுமையாக இன்று கிடைக்கும் பௌத்தம் சார்ந்த நூல்கள் என்றால், அவை

இலக்கண நூல் ஒன்றும் இலக்கிய நூல் ஒன்றும் மட்டுமே. உத்தர விநிச்சயம் (கி.பி. 409430 இல் புத்ததத்தர் இலங்கையில் வாழ்ந்த காலத்தில் எழுதியது), அபிதம்மாவதாரம், விநயவிநிச்சயம், ஜினாலங்காரம், மதுராந்த விலாசினீ/புதவம்சாட்டகதா, ரூபாரூப விபாகம் ஆகிய நூல்கள் புத்ததத்தர் எழுதியதாக பர்மிய ஏடான கந்த வம்சா (Gandha Vamsa) (Bode 189496, p.69) மூலம் அறியப்படுகிறது (ஹெர்மன் குல்கே கேசவபாணி, விசை சக்குஜா 2011, நாகப்பட்டினம் முதல் சுவர்ணதீபம் வரை, பக்கம் 122). புத்ததத்தர் தம் நூல்களில் இலங்கையின் அனுராதபுரம், காஞ்சிபுரம், சோழநாட்டின் உறையூர், காவிரிப்பூம்பட்டினம் (கவீரபட்டினம்), பூதமங்கலம் ஆகிய இடங்களில் வாழ்ந்தது பற்றியும் குறிப்பிடுகிறார். இது போன்ற வரலாற்றுக் குறிப்புகளால் புத்ததத்தர் ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பதை வரலாற்று ஆய்வாளர்கள் ஒருமித்த கருத்தாக ஏற்றுக் கொள்கிறார்கள் (இரவீந்திரன் 2016).

இருப்பினும் அவர் வாழ்ந்த காலத்தின் தமிழக வரலாறுதான் முழுமையாகக் கிடைத்தில. கருநாடக நந்திமலைப்பகுதியில் வாழ்ந்த ஓர் இனக்குழுவான களப்பிரர்கள் சங்ககாலத்திற்குப் பின்னர் பாண்டியநாட்டைக் கைப்பற்றியுள்ளனர். இவர்கள் ஆட்சிக் காலத்தில் மூன்று நூற்றாண்டுகள் முடியாட்சியின்றி முடங்கியிருந்தனர் பாண்டியர்கள். பின்னர் கடுங்கோன் என்ற பாண்டியன் பாண்டிய ஆட்சியை ஆறாம் நூற்றாண்டில் மீட்கிறான். சங்ககால பாண்டிய மன்னன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற மன்னன் வேள்விகள் செய்வதற்குத் தனக்கு உதவிய பார்ப்பனர்களுக்கு வேள்விக்குடி என்னும் ஊரை இறையிலி கொடையாக வழங்கியிருந்தான். பின்னர் வைதீக சமயங்கள் ஆதிக்கம் இழந்த காலத்தில், களப்பிர மன்னர் ஆட்சியில் ‘கொற்கைக் கிழான் நற்கொற்றன்’ என்ற பார்ப்பனருக்குக் கொடுத்த கொடை அவர்களிடம் இருந்து பறிக்கப்படுகிறது. இதற்குக் காரணம் வேள்வியில் உயிர்ப்பலி செய்வதை எதிர்த்த பௌத்த சமய ஆதரவாளர்களாகக் களப்பிர இருந்ததும் கூட ஒரு காரணமாகவும் இருந்திருக்கலாம். பௌத்த தமிழிலக்கியமான ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் வரும் ஆபுத்திரன் கதையில் அவன் வேள்விக்குப் பலியாக இருந்த ஒரு பசுவை மீட்பதை இங்கு ஒப்பிட்டு நோக்கலாம். பின்னாளில் களப்பிரரிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றிய பாண்டியர்களில் கோச்சடையன் என்பான் வேதியர் முறையீட்டைக் கேட்டு அந்த நிலத்தை மீட்டு, கொடைக்கு உரியவரான கொற்கைக் கிழான் நற்கொற்றனின் வழிவந்த ‘நற்சிங்கன் என்ற பெயரனிடம்‘ ஒப்படைக்கிறான் என்பதுவே வேள்விக்குடிச் செப்பேடு தரும் செய்தி (H. Krishna Sastri 1923-1924). இச்செப்பேட்டுச் செய்தியின் வரிகள் அச்சுதக் களப்பாலன் என்ற களப்பிர மன்னன் ஆட்சியின் கீழ் பாண்டிய நாடு இருந்ததைக் குறிப்பிடுகிறது. அப்பொழுது வைதீக சமயங்கள் ஆதரிக்கப்படாத நிலையில் இருந்தன என்பதையும் அச்செய்தியால் அறிய முடிகிறது.

இதே களப்பிரர் அரசாண்ட காலகட்டத்தில், காவிரிப்பூம்படினத்தில் வாழ்ந்து அச்சுத விக்கந்தன் பற்றிக் குறிப்பிடும் புத்ததத்தர் அம்மன்னனைப் பற்றியும் அவர் வாழ்ந்த சோழ மண்டலப்பகுதியையும் குறித்து என்ன வகையான தகவல்களைத் தருகிறார் என அறியும் நோக்கத்துடனும், அவர் வாழ்ந்த சூழலையும் இடத்தையும் அறிவதும் இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கம். இதன் பொருட்டு களப்பிரர் காலம் குறித்து ஆய்வு செய்த தமிழ் வரலாற்று மற்றும் இலக்கிய ஆய்வாளர்களின் நூல்கள் தரும் செய்திகள் ஆராயப்பட்டது.

### (ii) களப்பிரர் ஆட்சி குறித்து புத்ததத்தர் தரும் செய்தி:

விநய விநிச்சயம் என்ற நூலின் முடிவுரையில், புத்த தத்தர் அந்த நூலை அவர் பூதமங்கலத்தில் தங்கியிருந்தபொழுது எழுதியதாகக் குறிப்பிடுகிறார். சுருக்கமாக, சோழப் பேரரசின் கடற்றுறை நகரானதும், காவிரி பாய்வதால் மண் வளம் பெற்றதும், அமைதி நிலவும் பூதமங்கலம் என்ற பெருநகரில் வெனுதாசன் என்பானுக்கு உரிய மாளிகையில் நான் வாழ்ந்திருந்த பொழுது

விநய விநிச்சயம் என்ற இந்த நூல் தொகுக்கப் பெற்றது. இது, களப்பிரர் குலத்தைச் சேர்ந்த அச்சுத விகண்டன் காலத்தில் தொடங்கப் பெற்று முடிக்கப் பெற்றது என்று நூலின் பின்னுரையில் இவ்வாறாகப் புத்ததத்தர் குறிப்பிடுகிறார். அச்சுத விக்கந்தன் என அழைக்கப்படும் களப்பிர அரசன் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்திலும் பூதமங்கலத்திலும் சிறந்த தவப்பள்ளிகள் இருந்தமை குறிப்பிடப்படுகிறது. புத்ததத்தரின் நூல் குறிப்பிடும் இச்செய்தியை ஈழத்தைச் சேர்ந்த ஏ. பி. புத்த தத்தர் என்பவர் தலைமையில் ஆசிரியர் குழு பதிப்பித்த புத்ததத்தரின் நூலிலிருந்து [முதல் பதிப்பு: 1915 இரண்டாம் பதிப்பு : 1928] பி.டி.சீனிவாச அய்யங்கார் அறியத் தருகிறார் (சீனிவாச அய்யங்கார் 1989, pp.311312). அப்பாடல்:

*"செட்டஹஸ்ஸ சொளரத் ஹஸ்ஸ நாப்ஹிழ்தெ நிராகுலெ*

*சப்பஸ்ஸ பன லொகஸ்ஸ காமெ சம்பிண்டிதெ விய*

*கடலீசா தாலுச்சுனா லிசெரவனாகுலெ*

*கமலுப்பல சஞ்சன்ன சலிலாசய சொய்ஹிதெ*

*காவெரி ஜலசம்பாத பரிபூதம ஹீதலெ*

*இத்ஹெ சப்பங்க சம்பான்னெ மங்கலெ பூதமங்கலெ*

*பவராகார பாகாரபரி க்ஹா பரிவாரிதெ*

*விகாரெ வெண்ஹூ தாசஸ்ஸ தஸ்ஸனீயெ மனொர மெ*

*தீரன் தரு ஹவானீர தருராஜி விராஜிதெ*

*நானாதிஜ கணாராமெ நா நாராம மனொரமெ*

*சாருபங்கஜ சங்கிண்ணதளாக சமலங்கதெ*

*சுரசொதக சம்புண்ண வர கூ பொபசொப் ஹி தெ*

*உக்கதென ச தூ பென ப்ஹெத்வா வ தரனீ தலம்*

*ஜித்வா வ் அவஹசன் தென க்ஹெலாசசிக் ஹரம்கரம்*

*கர தம்புதசங்காஸெ தஸ்ஸநீயெ சம்முஸ் ஸிதெ*

*பஸாத ஜனனெ ரம்மெ பாசாதெ வசதா மயா*

*வுத்தஸ்ஸ புத்த சீஹென வினயஸ்ஸ வனிச்ஹயொ*

*புத்தசீஹம் சமூத்திஸ்ஸ மம சத்ஹிவிஹாரிகம்*

*கதொ யம்பன பிக்கூனம் ஹிதத்ஹாய சமாசதொ*

*வினயஸ்ஸாவ பொத்ஹத்ஹம் சுக்ஹென் எவாசீரென ச*

*அச்சுத் அச்சுத விக்கண்தெ கலப்ஹகுலனன் தனெ*

*மஹிம் சமனுசாசன்தெ ஆரத்ஹொ ச கமாபிதொ"*[ விநயவிநிச்சயம்: *3165 3179*]

*[களப்பன் என்ற தமிழ்ச் சொல், பாலிமொழியில் கலப்பஹ/கலப்பஹா என ஆகும்]*

இதன் பொருள்: அனைத்துவகை மக்களைக் கொண்டதும், சோழப் பேரரசின் கடற்றுறை நகரானதும், வாழைத் தோட்டங்களாலும், பனை தென்னைத் தோப்புக்களாலும் நிறைந்ததும், தாமரை, அல்லி மலர்களால் முழுதும் மறைவுண்ட நீர் நிலைகளால் ஒளி பெற்றதும், காவிரி பாய்வதால் மண் வளம்பெற்றுத் தூய்மை பெற்றதும், வளம் கொழித்து, ஒரு நகரின் தேவை அனைத்தையும் கொண்டதுமாகிய, குழப்பம் இன்றி, அமைதி நிலவும் பூதமங்கலம் என்ற பெருநகரில், நன்கு கட்டப்பெற்ற, வெளிப் புறச்சுவர் அகழ்களால் வெனுதாசன் என்பானுக்கு உரியதும், ஆற்றங்கரையில் வரிசையாக வளர்க்கப் பட்ட வாநீர மரங்களால் சிறப்புற்றதும், பல்வேறு இனப்பறவைகளைக் கொண்டு, மக்கள் உள்ளங்களுக்குக் களிப்பூட்டுவதும், இனிய தாமரை மலர்களால் முழுமையாக மூடப் பெற்ற குளங்களால் அழகு பெற்றதும், இனிய நீரால் நிறைந்த சிறந்த கிணறுகளால் சிறப்புற்றதும், பரந்து அகன்ற வான் சுதை தீட்டப்பெற்று ஒளி பெற்ற எண்ணிலா

வீடுகளைக் கொண்டதும், கைலைமலை முகடுகளை வெற்றி கொண்டு எள்ளி நகையாடும் உயர்வுடையதும், கூதிர்ப் பருவத்து வான் முகில் போலும் ஒளியுடையதுமான கோபுரங்களால் பிளவுண்ட மண் உடையதும் ஆகிய தவப்பள்ளியில் மக்கள் உள்ளத்தை ஐயத்தின் நீங்கித் தெளிவு பெறச் செய்யும் ஒரு மாளிகையில் வாழ்ந்திருந்த என்னால் என் மாணவர்களின் நலம் கருதியும், வினயம் என்ற நூலைக் குறுகிய காலத்தில் எளிதில் கற்றுக்கொள்ள விருப்பும் பிக்குகளின் ஒற்றுமைக்காகவும், புத்த சிம்மர் போதித்த கொள்கைகளையொட்டி, இத்தொகுப்பு நூல், புத்த சிம்மரைப் பெருமை செய்வான் வேண்டி, தொகுக்கப் பெற்றது. இது, களப்பிரர் குலத்தைச் சேர்ந்த, குற்றத்தின் நீங்கிய, அச்சுத விகண்டன் காலத்தில் தொடங்கப் பெற்று முடிக்கப் பெற்றது. (விநய விநிச்சயம் நூலில் இடம் பெறும் பாடலும், அதற்கான விளக்கவுரையும்: தமிழர் வரலாறு, பி.டி.சீனிவாச அய்யங்கார் நூலில் இருந்து, பக்கம்: 311இல் காணப்படுமாறே மேலே கொடுக்கப்பட்டுள்ளது).

மேலும், பிற்கால நூல்கள் சிலவும் இந்த அச்சுத விக்கந்தன் சோழநாட்டை ஆண்டதை உறுதி செய்கின்றன. கி.பி. 10ஆம் நூற்றாண்டினரான அமிதசாகரர் என்னும் பௌத்தர் இந்த அச்சுதனைப் பற்றிய சில பாக்களைக் குறித்துள்ளார். போரில் தோற்று தளையிடப்பட்ட சேர சோழ பாண்டிய மன்னர்கள் அச்சுதக்களப்பாளனைப் புகழ்ந்து பாடுவதாகக் குறிப்பிடும் நான்கு வெண்பாக்கள் ‘தமிழ் நாவலர் சரிதை’ நூலில் இடம் பெறுகிறது. முதலில் சேர சோழ பாண்டியர் ஆளுக்கொரு பாடல் புகழ்ந்து பாட, பாண்டியனின் பாடலின் கருத்து அச்சுதக்களப்பாளனைச் சினம் கொள்ளச் செய்கிறது. அப்பாடலில் பாண்டியன் தன்னை இராமனாகவும் அச்சுதனை வாலி என்ற குரங்கினமாகவும் ஒப்பிடுகிறான். இதனால் அவனுக்கு மேலும் ஒரு விலங்கு பூட்டப்படுகிறது. ஆகவே, அச்சுதனை அமைதிப்படுத்தும் நோக்கில் இன்னமும் ஒரு பாடலை பாண்டிய மன்னன் பாடவேண்டி நேர்கிறது. அவ்வாறே, அச்சுதக்களப்பாளன் படைகளின் போர் ஆற்றல் பற்றிய குறிப்புக்கள் கொண்ட பாடல்கள் சில கி.பி.11ஆம் நூற்றாண்டினதான யாப்பருங்கலக் காரிகை உரையிலும், யாப்பருங்கல விருத்தி உரையிலும் இடம்பெறுகின்றன. (இராசமாணிக்கனார் 1947, p.141).

வேள்விக்குடிச் செப்பேடும் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிக்குப் பிறகு “அளவரிய அதிராசரை அகல நீக்கி அகலிடத்தைக் களப்ரனெனும் கலியரசன் கைக்கொண்டான்” என்று காட்டுகிறது. மேலும், “களப்பிரர் இடையீடு. அப்பொழுது பேரரசரும் சார்வபௌமரும் ஆண்டு மறைந்தனர். பின்னர்க் கடுங்கோன் களப்பிரரை விரட்டிப் பாண்டிய நாட்டைக் கைப்பற்றினான்” என்றும் காட்டுகிறது. களப்பிரர் அழித்த, வழிவழியாக வந்த வேள்விக்குடி பிரம்மதேயத்தை கி.பி.எட்டாம் நூற்றாண்டில் கோச்சடையன் புதுப்பித்தான். ஆகவே மூவேந்தரையும் வென்று தமிழகமாண்ட களப்பிர மன்னன் பௌத்தத்தை ஆதரித்தவன், வேதமதங்களை எதிர்த்தவன் என்று ஆய்வாளர்கள் முடிவு செய்கிறார்கள் என்கிறார் மா. இராசமாணிக்கனார். (இராசமாணிக்கனார் 1947).

ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த புத்ததத்தர் அவர் காலத்தில் தமிழகம் முழுவதும் ஆண்டதாகக் களப்பிர மன்னன் என அச்சுத விக்கந்தனைக் குறிப்பிடுகிறார். தொடர்ந்து வந்த காலத்தில் வடக்கில் பல்லவர் கி. பி. ஆறாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் காஞ்சியைக் கைப்பற்ற, தெற்கில் கடுங்கோனால் பாண்டியர் அதே கி. பி. ஆறாம் நூற்றாண்டில் இறுதியில் (கி.பி. 590இல்) ஆட்சியை மீட்டுக்கொள்கிறார்கள். ஆகவே, கிடைத்துள்ள தொல்லியல் செப்பேட்டுச் செய்திகள், இலக்கியச் சான்றுகளின் மூலம் தமிழ்நாடு முழுமைக்கும் பேரரசனான விளங்கிய களப்பாளன் (கி. பி. 467506) இடைப்பட்ட காலத்தில் இருந்த அச்சுதகளப்பாளன் என்பவனே என்பது ஆய்வாளர்களின் ஒருமித்த கருத்தாக ஏற்றுக் கொள்கிறார்கள். (சீனிவாச அய்யங்கார், 1989 / இராசமாணிக்கனார், 1947 / பிமலா சுரண் லா, 1933 / மயிலை சீனி.

வேங்கடசாமி, 1940). கி. பி. 450 க்கும் 550க்கும் இடைப்பட்ட களப்பிரர் காலத்தில் பௌத்த இடமாகக் குறிப்பிடப்படும் பூதமங்கலம், மணிமேகலை காலத்தில் சோழ நாட்டில் உள்ள பௌத்தர்க்குரிய ஓர் இடமாகக் குறிக்கப்படவில்லை.

### (iii) காவிரிப்பூம்பட்டினம் குறித்து புத்ததத்தர் தரும் செய்தி:

'ஆசாரிய புத்ததத்த மகாதேரர் உறையூரில் வாழ்ந்தவர் என்பதை அவர் எழுதிய அபிதம்மாவதாரம் நூலின் பின்னுரை குறிப்பிடுகிறது. (Nilakanta Sastri 1935, pp.120-121 / Venkatasubramanian, 1982 / மயிலை சீனி. வேங்கடசாமி, 1940 / இராசமாணிக்கனார், 1947, p.141 / இராசமாணிக்கனார், 2002, p.64 / இராசமாணிக்கனார், 2003 / கே.கே. பிள்ளை, 2004). இந்தப் பின்னுரையில் "உரகபுர நிவாசிகென ஆசிரியென ப்ஹதந்த புத்ததத்தென கதொ அவிதம்மாவதொரொ, நாமாயம்" (அபிதம்மாவதாரம் என்ற இந்நூல், உரக புரத்தில் (உறையூரில்) வாழ்ந்திருந்த பஹ்தந்த புத்த தத்த ஆச்சாரியாரால் இயற்றப்பட்டது) என்று பிற்கால எழுத்தாளர் குறிப்பெழுதி வைத்திருப்பதாக பி.டி.சீனிவாச அய்யங்கார் தமது தமிழர் வரலாறு நூலில் குறிப்பிடுகிறார். (சீனிவாச அய்யங்கார் 1989, தமிழர் வரலாறு).

காவிரிப்பூம்பட்டினம் குறித்து அபிதம்மாவதாரம் என்ற நூலில் கீழ்க்காணுமாறு புத்ததத்தர் குறிப்பிடுவதில் இருந்து அந்நகரம் இவர் வாழ்ந்த காலத்தில் சிறந்து விளங்கியமை தெரிகிறது;

*"நர நாரீகணாகிண்ணெ அசங்கிண்ண குலாகுலெ*

*பீதெ சப்பன்க சம்பன்னெ பசன்ன சரிதூத கெ*

*நா நாரதன சம்புண்ணெ விவிதாபண சங்கதெ*

*காவெரீ பட்டனெ ரம்மெ நாநாராமொ பசொப்ஹிதெ*

*கெலாச சிகராகார பாசாத பதி மண்டிதெ*

*காரிதெ கண்ஹதாசென தஸ்ஸநீயெ மனொரமெ*

*விகார விவிதாகாரசாரு பாகார கொபுரெ*

*தத பாசீன பாசாதெ மயா நிவசதா சதா*

*ரம்ம சல்லெக சாகல்ய சீலதி குண சொப்ஹினா*

*அயம் சுமதினா சாது யாசிதென கதொத தொ".*

*[அபிதம்மாவதாரம்: சுலோகம் 1409 - 1413]*

காவிரிப்பூம்பட்டினத்தில்; இழிந்த சாதியினராகாமல் உயர்ந்த சாதியினராகிய ஆடவர் மகளிரைப் பெருந்திரளாகக் கொண்டதும், ஒரு பெரு நகருக்குத் தேவைப்படும் அனைத்தையும் பெற்றிருப்பதும், ஆற்றிலிருந்து வந்து பாயும் பளிங்குபோல் தெளிந்த நீரைக் கொண்டதும், பல்வகை நவரத்தினங்களால் நிறைந்ததும், பல்வேறு வகை அங்காடிகளைக் கொண்டதும், பற்பல மலர்ச் சோலைகளால் அழகு பெற்றதும், சுற்றுச்சுவர்களில், பல்வேறு வகைப்பட்ட அழகிய கோபுரவாயில்களைக் கொண்டதாய்க் கண் ஹதாசர் என்பவரால் கட்டப்பெற்றதும், கைலாய மலைமுகடுக்கு நிகரான உயர்வுடைய மாளிகையால் அழகு பெற்றதுமாகிய அழகிய, இனிய தவப்பள்ளியினைக் கொண்டதுமாகிய அழகிய காவிரிப்பூம்பட்டினத்தில், ஆங்குள்ள ஒரு பழைய வீட்டில் வாழ்ந்திருந்த போது, நல்ல தலைப்புக்களில் அழகாக எழுதுவது போலும் சிறந்த பண்புகளால் புகழ் பெற்றிருந்தவனும், சிறந்த அறிவுடையவனும், நல்லவனும் இரந்து உண்டோனும் ஆகிய என்னால் இது எழுதப்பட்டு, விரிவாக விளக்க உரையும் செய்யப் பட்டது. (அபிதம்மாவதாரம் பாடலும் விளக்கவுரையும்: தமிழர் வரலாறு, பி.டி.சீனிவாச அய்யங்கார் நூலில் இருந்து, பக்கம்: 310 - https://ta.wikisource.org/s/u75; மேலே குறிப்பிட்ட பாலி மொழிப் பாடலின் ஒலிபெயர்ப்பு, மயிலை திரு.சீனி. வேங்கடசாமி அவர்களின் பௌத்தமும் தமிழும் நூலின் ஒலிபெயர்ப்பில் சிறிது வேறுபாட்டுடன் காணப்படுகிறது).

ஆகவே, புத்ததத்தர் வாழ்ந்த ஐந்தாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி வரை

காவிரிப்பூம்பட்டினம் ஆழிப்பேரலையால் அழிந்துபடவில்லை, வளமான நகரமாகவே காவிரிப்பூம்பட்டினம் இருந்து வந்துளது என்று கொள்ளலாம். அவ்வாறு நிகழ்ந்தது என்று மணிமேகலை குறிப்பிடுவது (மணிமேகலை இருபத்தைந்தாவது அதிகாரம், 199 204 வரிகளில் கூறப்பட்டிருக்கும் புகார் நகரத்துக் கடல் கோள் பற்றிய குறிப்பு) புத்ததத்தர் காலத்திற்குப் பிறகு ஆறாம் நூற்றாண்டிலோ அல்லது அது காவியத்திற்காக எழுதப்பட்ட வெறும் கற்பனையாகவோ இருக்கலாம் என்பது பி.டி.சீனிவாச அய்யங்கார் கருத்து. *(சீனிவாச அய்யங்கார் 1989).*

மணிமேகலை நூல் தரும் பஞ்சம் நிகழ்ந்த காலம் என்ற குறிப்பினையும், கடல்கோளால் புகாரின் அழிவு என்றக் குறிப்புகளையும் ஆய்வின் அடிப்படையாகக் கொண்டு, அவற்றை அக்காலகட்டத்தில் உலகில் பல பகுதிகளிலும் நிகழ்ந்ததாகப் பதிவான இயற்கை மாற்றங்களுடன் இணைத்து ஒப்பிட்டு, அதற்கான புவியியல் காரணங்களைத் தனது “மணிமேகலை : காலம் காட்டும் பூகோளம்“ என்ற கட்டுரையில் விளக்குவார் நில அமைப்பியல் வல்லுநர் (Geologist) திரு. சிங்கநெஞ்சன் *(சிங்கநெஞ்சன், 2018,).* ஆறாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் *(கி.பி. 535 536)* நிகழ்ந்த ஓர் எரிமலை வெடிப்பு காரணமாக, குறுகிய ஒரு காலத்திற்கு உலகில் பருவநிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது, பல பகுதிகளில் பயிர்த்தொழில் நசிந்தது, பஞ்சம் ஏற்பட்டது, பசிபிணி இவை மலிந்தன என்று அறிய முடிகிறது. அவ்வாறாக பருவநிலைக் கோளாற்றால் தமிழகத்தில் பஞ்சம் ஏற்பட்டிருக்கலாம் எனவும், இயற்கைச் சீற்றத்தால் விளைந்த புகாரின் அழிவையும் இக்காலகட்டத்தில் எழுதப்பட்ட மணிமேகலை ஆவணப்படுத்தியுள்ளதாகக் கருதுகிறார் சிங்கநெஞ்சன். சிங்கநெஞ்சன் குறிப்பிடும் இக்கருத்து, புத்ததத்தர் காட்டும் காவிரிப்பூம்பட்டினம் ஐந்தாம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கியதைப் பதிவு செய்வதால் அந்நகரின் அழிவு இதன்பின்னர் நிகழ்ந்தது என்ற பி.டி.சீனிவாச அய்யங்கார் அவர்களின் கருத்துடன் இசைந்து செல்வதைக் காணலாம்.

## ஆய்வுமுறை / Methods:

### *(i) ஆசாரிய புத்ததத்தர் கூறுகிற பூதமங்கலம் என்பது எந்த ஊர்?*

அனைத்துவகை மக்களைக் கொண்டதும், சோழப் பேரரசின் கடற்றுறை நகரானதும், வாழைத் தோட்டங்களாலும், பனை தென்னைத் தோப்புக்களாலும் நிறைந்ததும், தாமரை, அல்லி மலர்களால் முழுதும் மறைவுண்ட நீர் நிலைகளால் ஒளி பெற்றதும், காவிரி பாய்வதால் மண் வளம்பெற்றுத் தூய்மை பெற்றதும், வளம் கொழித்து, ஒரு நகரின் தேவை அனைத்தையும் கொண்டதுமாகிய, குழப்பம் இன்றி, அமைதி நிலவும் பூதமங்கலம் என்ற பெருநகரில் . . . என்பது புத்ததத்தரின் பூதமங்கலம் பற்றிய குறிப்பு கொண்ட பாடலுக்கு பி.டி.சீனிவாச அய்யங்கார் எழுதும் விளக்கவுரை.

அதாவது, சுருக்கமாக, சோழப் பேரரசின் கடற்றுறை நகராகவும், தோப்பு துரவுகள் நிறைந்ததாகவும், நீர்வளமும், காவிரி பாய்வதால் மண் வளமும்பெற்று செழுமையான, அமைதி நிலவும் பெருநகர் என்ற சிறப்புடையது புத்ததத்தர் கூறுகின்ற பூதமங்கலம்.

#### *(1) பூதலூர்:*

புத்ததத்தரின் பாடலுக்கு தனது நூலில் இவ்வாறு விளக்கவுரை எழுதிய அளித்த பி.டி.சீனிவாச அய்யங்கார், புத்ததத்தர் குறிப்பிடும் பூதமங்கலம் எது என்று அடையாளம் காணுகையில், திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள இன்றைய பூதலூரே அந்தப் பூத மங்கலம் ஆதல் வேண்டும் என்கிறார். கடற்கரை நகர் என்றக் குறிப்பை பி.டி.சீனிவாச அய்யங்கார் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. மேலும் திருச்சி அருகிருக்கும் பூதலூர் *(புவியிடக்குறிப்பு 10.796200, 78.977040)* இருப்பது வெண்ணாறு என்ற ஆற்றின் அருகில். *(சீனிவாச அய்யங்கார் 1989).*

#### *(2) பூதமங்கலம்:*

பி.டி.சீனிவாச அய்யங்கார் இன்றைய பூதலூர் என்பதே ஐந்தாம் நூற்றாண்டின் பூதமங்கலம் எனக்கூறுவது தவறான ஒரு

கருத்து என்று மயிலை திரு.சீனி. வேங்கடசாமி குறிப்பிடுகிறார் (மயிலை சீனி. வேங்கடசாமி 1940). தனது மறுப்புக்குச் சான்றாக மயிலை சீனி. வேங்கடசாமி, தஞ்சைக் கோயில் கல்வெட்டுச் சான்று ஒன்றைக் கொடுத்து, "நித்தவினோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து நகரம் வெண்ணி. இந்த வெண்ணி நகரத்துக்கு அடுத்துப் பூதமங்கலம் என்னும் ஊர் ஒன்று சோழநாட்டில் இருந்த செய்தி சாசனங்களால் தெரியவருகிறது ( S.I.I No. 5 Inscriptions of the Tanjore Temple Vol II. Part 1)", என்று காட்டுகிறார். மேலும், மன்னார்குடி வட்ட திருவிராமேச்சரம் என்னும் பாடல்பெற்ற கோயிலில் உள்ள ஒரு சாசனம், தென்மலிநாட்டு மேற் பூதமங்கலம் என்னும் நாட்டையும் அங்கிருந்த ஊர்க்காட்டுப் பகவதேவர் கோயிலையும் (இக்கோயிலைப் புத்தர் கோயில் எனக்கொள்கிறார் மயிலை சீனி. வேங்கடசாமி) குறிப்பிடுகின்றது. இவ்விரு சாசனங்கள் காட்டும் ஊர்தான் புத்ததத்தர் இருந்த பூதமங்கலம் (புவியிடக்குறிப்பு 10.728917, 79.530617) என்பது இவரது உறுதியான கருத்து.

வரலாற்று ஆய்வாளர் மீனாட்சி அம்மையாரும் தமது களஆய்வின் மூலம் இன்றைய கோயில் வெண்ணிக்கு அருகில் இருக்கும் இவ்வூர்தான் புத்ததத்தர் இருந்த பூதமங்கலம் என உறுதிப்படுத்துவதாகத் தனது கருத்துக்கு வலு சேர்க்கிறார். "இப்போது, பூதமங்கலம் சிறு கிராமமாக இருக்கிறது. இதற்கடுத்துள்ள கிராமம் பள்ளிவிருத்தி என்று வழங்கப்படுகிறது. பள்ளிவிருத்தி என்பது பௌத்தப்பள்ளிக்காக விடப்பட்ட மானியம் என்று பொருள்படும். இப்போதுள்ள பூதமங்கலம், பள்ளிவிருத்தி என்னும் கிராமங்கள் பண்டைக்காலத்தில் பெரிய பட்டணமாக இருந்திருக்க வேண்டும்" என்பது மீனாட்சி அம்மையாரின் ஆய்வின் முடிவு.

மயிலை சீனி. வேங்கடசாமியும் மீனாட்சி அம்மையாரும் சுட்டும் மன்னார்குடி அருகிலுள்ள பூதமங்கலம் பள்ளிவிருத்தி பகுதியும் கடற்கரை அருகிலில்லை. அங்குக் காவிரியும் பாயவில்லை. இவர்கள் இருவர் கருத்தும் புத்ததத்தர் கூறும் விளக்கத்துடன் ஒத்துவரவுமில்லை

***(3) போதி மங்கை:***

ஆனால், மா. இராசமாணிக்கனார் அவர் எழுதிய சோழர் வரலாறு என்ற நூலில் தெளிச்சேரி அருகே இருக்கும் போதிமங்கை என்ற ஊரை பூதமங்கலம் என்று அடையாளம் காணுவார் (இராசமாணிக்கனார், 1947). மேலும், மா. இராசமாணிக்கனார் அவரது மற்றொரு நூலான பெரிய புராண ஆராய்ச்சி நூலில், 'போதி மங்கை என்பது பூதமங்கலம்', அது சேக்கிழார் பெரிய புராணத்தில் குறித்தபடி தெளிச்சேரியிலிருந்து திருக்கடவூர் போகும் பாதையில் உள்ளது' என்று செல்லும் வழியையும் குறிக்கிறார் (இராசமாணிக்கனார் 2002). 'இப்பூதமங்கலமே பெரியபுராணம் கூறும் போதி மங்கை; சம்பந்தர் புத்தரோடு வாதிட்டு வென்ற இடம்', என்று அவரது சோழர் வரலாறு நூலிலும் குறிப்பிடுகிறார். தெளிச்சேரி (புவியிடக்குறிப்பு 10.932830, 79.829995) பகுதியில் பாயும் ஆறு அரசலாறு, ஆனால், காவிரி ஆறு அன்று.

போதிமங்கை குறித்து குறிப்பிடும் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர் எழுதிய தமிழக ஊரும் பேரும் நூலில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்:

> "முன்னாளில் புத்தர்கள் சிறந்து வாழ்ந்த ஊர்களில் ஒன்று போதி மங்கை. அது புதுவை நாட்டில் தெளிச்சேரி யென்னும் பாடல்பெற்ற பதியின் அருகே இருந்ததாகத் தெரிகின்றது. போதிமரம் புத்தர் போற்றும் புனிதமுடைய தாதலின் அதன் பெயரால் அமைந்த ஊர் போதிமங்கை எனப் பட்டது போலும். அங்குப் புத்தமத வேதமாகிய பிடக நூலையும், அளவை நூலையும் துறைபோகக் கற்றுப் பிற சமய வாதிகளை அறை கூவி வாது செய்ய அழைக்கும் அறிஞர் பலர் இருந்தனர் என்று சேக்கிழார் கூறுகின்றார். பர சமய கோளரியாக விளங்கிய திருஞான சம்பந்தர்,

"சீர்நிலவு திருத்தெளிச்சே ரியினைச் சேர்ந்து

*சிவபெருமான் தனைப்பரவிச் செல்லும் போது*

*சார்வறியாச் சாக்கியர்தம் போதி மங்கை"*

யின் வழியே போந்தாரென்றும், அங்கும் புகைந்து எழுந்த புத்த நந்தி பொன்றி வீழ்ந்தான் என்றும், சாரிபுத்தன் என்னும் சாக்கிய அறிஞன் அவ்வூர்ச் சத்திர மண்டபத்தில் திருஞான சம்பந்தரோடு வாது செய்து தோற்றான் என்றும் பெரிய புராணத்திலே கூறப்படுகின்றது,"

என்று குறிப்பிடுகிறார்.( சேதுப்பிள்ளை 2005).

ரா. பி. சேதுப்பிள்ளை மற்றும் மா. இராசமாணிக்கனார் ஆகிய இருவரும் தெளிச்சேரி அருகில் உள்ள ஒரே இடத்தையே போதிமங்கை என்று குறிப்பிட்டாலும் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை போதிமங்கையை பூதமங்கலம் எனக் குறிப்பிடவில்லை என்பதைக் காண்க. இவர்கள் இருவரின் கருத்தில் இருந்தும் வேறுபட்டு, போதிமங்கலம் என்ற மற்றொரு ஊர்தான் "சாக்கியர்தம் போதிமங்கை" எனப் பெரியபுராணத்தில் குறிப்பிடப் பட்டிருக்கக் கூடும் என்பது மயிலை திரு.சீனி. வேங்கடசாமி அவர்களின் கருத்து (மயிலை சீனி. வேங்கடசாமி 1940). எனவே சம்பந்தருடன் பௌத்தர் வாதில் ஈடுபட்ட போதிமங்கை என்பது புதுவை அருகே உள்ள தெளிச்சேரியா அல்லது போதிமங்கலமா என்ற கேள்வியும் இப்பொழுது எழுகிறது. இதனால் தெளிச்சேரி பகுதியில் உள்ள இடம் மா. இராசமாணிக்கனார் குறிப்பிடுவது போல பூதமங்கலம் அல்ல என்பதும் தெளிவாகிறது.

## மதிப்பீடு

பெயர் மருவிய வேறு ஊர்கள்: புத்தமங்கலம், போதிமங்கலம், பூதங்குடி?

மயிலை சீனி. வேங்கடசாமியும் மீனாட்சி அம்மையாரும் பூதமங்கலம் என்ற பெயர் மாறவில்லை, மருவவில்லை என்ற கோணத்தில் ஆய்வு செய்துள்ளனர். ஆனால் அவர்கள் அடையாளம் காணும் பூதமங்கலம் என்று அதே பெயரில் உள்ள தஞ்சை மண்டல ஊரானது புத்ததத்தர் விளக்கும் ஊரின் குறிப்புகளுடன் பொருந்தவில்லை. அவ்வூருக்கு அருகே காவிரி ஆறும் பாயவில்லை, அது கடற்கரை ஊருமில்லை. பூதமங்கலம் என்ற பெயரில் ஒன்றுக்கு மேற்பட்ட ஊர்கள் இருந்திருக்கவும் வாய்ப்பிருந்திருக்கிறது. மற்ற ஆய்வாளர்களான பி.டி.சீனிவாச அய்யங்கார் (பூதலூர்), மா. இராசமாணிக்கனார் (போதிமங்கை) ஆகிய ஊர்கள் பெயர் மருவிய பூதமங்கலமாக இருக்கக்கூடும் என்று என்ற கோணத்தில் ஆராய்ந்துள்ளனர். ஆனால் அதைப் பிறர் ஏற்றுக்கொள்ளவில்லை.

இவர்கள் இவ்வாறாக பூதமங்கலம் வேறுபெயராக மருவியிருக்கலாம் என்ற எண்ணத்தில் பூதலூரையும் போதிமங்கையையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்பொழுது, அதே கோணத்தில் ஆராய்ந்தால் பூதமங்கலம் என்பது இந்நாளில் புத்தமங்கலம் அல்லது போதிமங்கலம் அல்லது பூதங்குடி என்றெலாம் கூட பெயர் மருவியிருக்கக் கூடும் என்றும் நாம் கருத வாய்ப்புள்ளது. மாறாக, அன்றைய பூதமங்கலதிற்கு பிற்காலத்தில் வேறு ஏதேனும் பெயரும் சூட்டப்பட்டிருக்கலாம். கொள்ளிடத்தின் தென் கரையில் இருந்து துவங்கி தெற்கில் கோடியக்கரை (Point Calimere) வரையிலும், இடையில் காவிரிப்பூம்பட்டினம் நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் கடற்கரை அருகு, காவிரி அல்லது காவிரி கிளையாறுகள் அருகே புத்த சமய பெயர் கொண்ட ஊர்கள் மேலும் சிலவும் உள்ளன.

இதுவரை மீள்பார்வை செய்யப்பட தமிழ் இலக்கியம் வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடும் பூதமங்கலம் பற்றிய குறிப்புகள் யாவும் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகள். அதன் பிறகு இன்றுவரை பௌத்தம் குறித்த தொல்லியல் தடயங்களும் சிலைகளும் தஞ்சை திருச்சி பகுதிகளில் (புத்தம் செழித்திருந்த அக்காலச் சோழமண்டலம்)

கிடைத்த வண்ணமே உள்ளன. குறிப்பாக, சோழமண்டலத்தின் பௌத்தச் சுவடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டுள்ள பௌத்த ஆய்வாளர் முனைவர் பா.ஜம்புலிங்கம் அவர்கள் சென்றநூற்றாண்டின் இறுதிவரை தமிழகத்தில் கிடைத்திருந்த 20 புத்தர்சிலைகள் தவிர்த்து மேலும் 70 சிலைகள் வரை தனது களஆய்வுகள் மூலம் சோழமண்டலப் பகுதியில் வெளிப்படுத்தியுள்ளார்.

குறிப்பாக அவர் சொல்லும் தகவலில்; புத்தமங்கலம் என்ற பெயரிலேயே 3 ஊர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருப்பதாகக் குறிப்பிடுகிறார். சோழமண்டலப்பகுதியில் புத்தமங்கலம் என்ற பெயரில் மூன்று ஊர்களைக் காணமுடிகிறது (1. கும்பகோணம் காரைக்கால் சாலையில் கிள்ளியூர் அருகிலும், 2. கும்பகோணம் சீர்காழி சாலையில் மணல்மேடு (11.190586, 79.593873) அருகிலும், 3. கீழ்வேளூர் அருகேயும்) என்றும் சுட்டுகிறார். இவற்றில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள கீழ்வேளூர் அருகேயுள்ள புத்தமங்கலத்தில் மட்டுமே புத்தர் சிலையைக் காணமுடிந்தது என்கிறார். நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் வட்டம், அகரகடம்பனூர் ஊராட்சிக்குட்பட்ட, புத்தர்மங்கலம் என்ற கிராமத்தில் புத்தர் சிலை ஒன்று தலை துண்டிக்கப்பட்டு கிடைத்திட (தினமலர்; 1.1.1999 செய்தி), பின்னர் ஊரார் அத்தலையைச் சிலையின் உடலுடன் பொருத்தி, அப்புத்தருக்குக் கோயில் எழுப்பி வழிபடவும் செய்கின்றனர் என்கிறார் (ஜம்புலிங்கம் 2013).

அதுமட்டுமின்றி, இந்திய வரைபடத்தில் இப்பகுதியை ஆராயும் பொழுது, பூதங்குடி (Boothangudi, 10.813862, 79.812355) என்றொரு சிற்றூர் காவேரிவெட்டாறு கரையிலும், கடற்கரையில் இருந்து 4.25 கி.மீ . தொலைவிலேயேயும் இருக்கிறது.

மேலே குறிப்பிடப்பட்ட ஊர்கள் குறிக்கப்பட்ட தமிழக வரைபடத்தை 'கூகுள்மேப்' தளத்தில், இச்சுட்டி வழி சென்று காணலாம்:

https://drive.google.com/open?id=1mHllhi99Aw4nU2aEciOAdlvInHx_eNil&usp=sharing




பூதமங்கலத்தின் இருப்பிடம் குறித்து ஆய்வாளர்களின் மாறுபட்ட கோணங்களையும், தொடர்ந்து கிடைக்கும் தொல்லியல் மற்றும் வரலாற்றுத் தடயங்களைக் கணக்கில் கொண்டால், வருங்காலத்தில் மேலும் பல தொல்லியல் தகவல்கள் கிடைக்கும் பொழுது, விநய விநிச்சயம் எழுதியபொழுது புத்ததத்தர் தாம் தங்கியிருந்ததாகக் கூறும் பூதமங்கலம் உண்மையில் எங்கிருக்கிறது என்பது தெளிவாகலாம்.

## முடிவுரை

ஒரு மாற்றுக் கோணத்தில், காவிரிக்கரையில் இருந்த காவிரிப்பூம்பட்டினம் இயற்கைச் சீற்றத்தால் அழிவுற்றது என்பதை இலக்கியம் காட்டும் வரலாற்றுப் பதிவாக நாம் ஏற்றுக் கொள்கிறோம். அவ்வாறே பூதமங்கலமும் இயற்கைச் சீற்றத்தில் அழிக்கப்பட்டிருக்கலாம், வரலாற்றுச் சுவடே இல்லாதும் போயிருக்கலாம். பண்டைக் காலத்தில் இந்திய ரோமானிய வணிகத்தில் சிறப்பிடம் பெற்றது மேற்கே கேரளப்பகுதியின் சேரர்களின் துறைமுகமான முசிறி. இது (Muziris என) தாலமி, பெரிப்ளஸ் போன்ற அயல்நாட்டவர் ஆவணங்களிலும் பதிவாகியுள்ளதையும், ஆனால் இன்று அதன் இருப்பிடம் பட்டிணம் என்ற இன்றைய ஊராக இருக்கலாம் என்பது குறித்து இன்றும் ஆய்வு நடப்பதையும் நாம் கவனத்திற்கொள்ளலாம்.

நாகை அருகே புயல் கரையைக் கடக்கிறது என்ற வானிலை அறிக்கை செய்தியை தவறாது தமிழகம் பல ஆண்டுகளாக எதிர்கொண்டு வந்துள்ளது. அந்தப் பருவகாலத்தில்

கிழக்குக் கடற்கரை ஏதோ ஓரிடத்தில் பாதிக்கப்படாது தப்புவதில்லை. கோடிக்கரை முதல் வடக்கே காவிரிப்பூம்பட்டினம் வரையுள்ள சோழமண்டலக் கடற்கரை ஊர்கள் பாதிக்கப்படாது தப்பினாலும், புயல் திசை மாறி இக்கடற்கரைக்குப் பகுதிக்கு வடக்கே ஆந்திரா ஓரிசா கடற்கரை வரை எங்காவது ஓரிடத்தில் கரையைக் கடந்து அழிவை ஏற்படுத்தியே வருவது வழக்கம். இது சமீபத்திய கஜா புயல் (நவம்பர் 16, 2018-Cyclone Gaja) வரை நிகழ்ந்தே வருகிறது. காவிரியாற்றங்கரையில் கடற்கரையை ஒட்டி இருந்த புத்ததத்தர் குறிப்பிடும் பூதமங்கலமும் காவிரிப்பூம்பட்டினம் எதிர் கொண்டது போன்ற ஒரு அழிவை இயற்கைச் சீற்றத்தால் எதிர்கொண்டு சுவடிழந்து போயிருக்கவும் வாய்ப்புண்டு.

தமிழக வரலாறு அறியும் நோக்கில், புத்ததத்தர் தனது நூலில் தரும் குறிப்புகளால் ஐந்தாம் நூற்றாண்டுக்கால தமிழகத்தில் களப்பிரர் ஆட்சி, செழித்தோங்கிய பௌத்த சமயம், காவிரிப்பூம்பட்டினம், உறையூர், காஞ்சிபுரம், பூதமங்கலம் ஆகிய ஊர்களின் இயற்கைவளம் ஆகியவற்றை அறியமுடிகிறது. களப்பிரர் ஆட்சியில் தமிழகம் பற்றி அறிய உதவும் வரலாற்றுச் சான்றுகளில் என்ற முறையில் புத்ததத்தர் நூல்களுக்குத் தமிழக வரலாற்றில் என்றுமே ஒரு தனியிடமுண்டு.

## References


Bimala Churn Law. (1933). *History of Pali Literature*. (Vol.2). University Microfilm.

Bode, M.,H. (1894-96). *Gandha Vamsa*.

Herman Kulke Kesavapani, Visai Sakkuja. (2011). *Nagapatnam Muthal Swarnathipam Varai: Thenkilakasiyavil Solarkalin Kadarpayanangkal*. Institute of Southeast Asian Studies.

Jampulingam, P. (2013). *Pautha Suvadai Theedi*.

Kovinthan, K. (1989). *T.P.Srinivasa Aiyangarin Tamizhar Varalaru-Irandam Pakuthi Tamilakkamum Thiranaivum*. Tamil Inaya Kalvi Kazhakam.

Krishna Sastri, H. (1923–1924). Velvikudi inscription-Velvikudi Grant of Nedunjadaiyan: text and translation, *Epigraphia Indica* (Volume 17).

Nilakanta Sastri, K., A. (1935). *Cholas*. ( Vol. I). Madras: University of Madras.

Pillai, K.,K. (2004). *Tamilaga Varalarum Makkal Panbadum*. Tamil Inaya Kalvikalagam.

Rasamanikanar, M. (1947). *Sozhar Varalaru*. Chennai: Senbaga Publications.

Rasamanikanar, M. (2002). *Periyapurana Araichi*. Tamil Inaya Kalvi Kazhagam.

Rasamanikanar, M. (2003). *Kaala Araichi*. Chennai: Alamu Publications.

Ravidnran, T.,K. (2016). *Tamilaga varalatril Kalapirar Kaalam*. Chennai: Vikadan Prasuram.

Sethupillai, R.,P. (2005). *Tamilaga Urum Perum*. (7th Ed). Chennai: Pzhaniyappa Brothers.

Singanenjan. (2018). "*Manimegalai: Kaalam Kaattum Puukoolam*".

Sini, Vengadasamy Mayilai. (1940). *Pauthamum Tamilum*. Tamil Inaya Kalvik Kalagam.

Sini, Vengadasamy Mayilai. (1959). *Aivuk Kalanjiyam-15*: *Tamilaga Avanangal Marainthu Poona Tamil Nuulgal*. Tamil Inaya Kalvik Kalagam.

Sini, Vengadasamy Mayilai. (1975). *Pandaith Tamilaga Varalaru-Kalapirar*. Tamil Inaya Kalvik Kalagam.

Sini, Vengadasamy Mayilai. (1976). *Kalapirar Atchiyil Tamilagam*. Tamil Inaya Kalvik Kalagam.

Venkatasubramanian, T., K. (1982). "Growth of Urban Centres in early Tamilakam." *Proceedings of the Indian History Congress*. (Vol. 43).

www.jstor.org/stable/44141224.

https://drive.google.com/open?id=1mHllhi99Aw4nU2aEciOAdlvInHx_eNil&usp=sharing

# பண்டைத் தமிழகப் பரதவரிடம் திணை - மாந்தரிடம் தோன்றிய சாதிப்பிரிவினை

# Communal Sector Rising From Parathavar - People Of The Neithal Land In Ancient Tamil Nadu

முனைவர் ச.கண்மணி கணேசன் / Dr.S.Kanmani Ganesan [1]

***Abstract***

This paper deals with the fact that a communal sector derived from the '*thinai maanthar*' parathavar - the specific people who lived in the *neithal* land i.e.area near sea. There are researchers who are reluctant to accept the fact that there were communal sectors prevailing in the ancient Tamilnad; while they accept that there were different groups of people doing different types of work i.e. government jobs, indulging in service sector, collecting natural resources, farming, trading and dealing production in small scale industries and marketing them. The lyric 45 in *Narrinai* bears the strongest evidence that even marriages were conducted on the basis of their work, economic status and communal sector. It's proved with the help of ettuthokai, pathuppaattu and the twin epics.

Date of submission: 2018-09-14
Date of acceptance: 2018-11-12
Date of Publication: 2018-12-30
Corresponding author's
Name: Dr.S.Kanmani Ganesan
Email: kanmanitamilskc@gmail.com

**Key Words:** Parathavar, Velaalar, Uzhavar, Communal sector, Thinai manthar, Neithal

## முன்னுரை

சங்க காலச் சமூகநிலை பற்றி கருத்து வேறுபாடுகள் உள்ளன.சாதி வேறுபாடு இருந்தது என்போரும் உளர். இல்லை; தொழில் சார் பிரிவு மட்டுமே இருந்தது என்போரும் உளர். பாடலாசிரியரின் பெயர் அறியப்படாத நற்றிணை45ம் பாடல் சங்க காலச் சமுதாய நிலையை அறிந்து கொள்ளத் துணை செய்கிறது. விளக்க முறை ஆய்வைப் பயன்படுத்தி இப்பாடல் எவ்வாறு திருமண பந்தத்தை வரையறுக்கிறது என்பதைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், இரட்டைக் காப்பியங்களும் திணை மாந்தர், வருணம், தொழில்சார் பிரிவு, திருமணம் என்ற நிறுவனம் முதலியவற்றை விளக்க சான்றாதாரங்களாக அமைகின்றன.

## திணை மாந்தர்

சங்க காலத் தமிழகத்தில் புவியியல் அடிப்படையிலமைந்த மக்களினப் பாகுபாடு நிலவியது. ஐந்திணை மாந்தர்கட்கிடையே அவர்கள் மேற்கொண்ட தொழிலுக்கேற்ப சில பிரிவுகளும் நிலவின. தலைவியின் பிறப்பும், வாழுமிடமும் (பரதவரும் பிற தொழிலாளரும் ):

*"இவளே, கானல் நண்ணிய காமர் சிறுகுடி*

*நீல்நிறப் பெருங்கடல் கலங்க உள்புக்கு*

[1] The author is a lecturer and retired Principal of an autonomous college, Tamil Nadu, India. kanmanitamilskc@gmail.com

*மீனெறி பரதவர் மகளே " .........(அடி .13)*

என்று தொடங்கும் பாடலின் அடிகள் தலைவியின் பிறப்பும் வாழுமிடமும் பற்றிய விபரங்களைத் தருகின்றன. தலைவி கடலிலே சென்று மீன் பிடித்து வாழும் பரதவர் மகளாகத் தோன்றியவள். கானல் மிகுந்த கடற்கரையில் இருந்த சிறுகுடியில் வசிப்பவள் என்று தோழி அவளை அறிமுகம் செய்கிறாள்.

நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்கள் பரதவர் எனப்பட்டனர். மதுரைக்காஞ்சி பரதவர் மகளிர் ஆடிய குரவை பற்றிக் குறிப்பிடுகிறது (அடி.9697-144). பட்டினப்பாலை அவர்களது நெடுந்தூண்டிலில் காழ் சேர்த்துக் குறுங்கூரை வேய்ந்த குடியிருப்பு பற்றியும் பேசுகிறது (அடி. 8090).

பொருநராற்றுப்படை பரதவர் குறிஞ்சியும் பாடுவர் என்கிறது (அடி 218). பரதவர்களில் கடலில் சென்று மீன் பிடிப்போர் "நிரை திமில் வேட்டுவர்" என்று சுட்டப்படுகின்றனர் (மதுரைக்காஞ்சி அடி - 114). சங்கு குளிப்போரும் பரதவரிடையே உண்டு. சங்கினை அரம் போழ்ந்து அறுத்து வளையல் செய்தோர் 'கோடு போழ்நர்' ஆவர் (அடி511). புகார் நகரத்துப் பட்டினப்பாக்கத்திலும்' அணிவளை போழுநர் இருந்தனர் (சிலப். இந்திரஅடி .4758). உப்பினை உற்பத்தி செய்து விற்றவர் உமணர். "வெள்ளுப்புப் பகர்நர்" பற்றி மதுரைக் காஞ்சி (அடி 117) பேசுகிறது. எருது பூட்டிய வண்டியில் உப்பினை ஏற்றி பிற பகுதிகளுக்குச் சென்று உமணர் விற்றமையை பெரும்பாணாற்றுப்படையும் (அடி 65) பாடியுள்ளது. புகார் நகரத்து மருவூர்ப்பாக்கத்தில் உப்பை உற்பத்தி செய்வோர் குடியிருந்தனர் (சிலப்.இந்திர.அடி. 2527). கடலிலே கப்பலைச் செலுத்தியவரும் பரதவரிடையே இருந்தனர். இவர்களை "விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்" என்று விதந்தோதுகிறது மதுரைக்காஞ்சி (அடி 321). பரதவர் சமூகத்தின் பொதுநலன் கருதி கலங்கரை விளக்கு ஏற்றினர் என்கிறார் தாயங்கண்ணனார் (நற்றிணை - பா.219).

கடற்கரைப் பட்டினங்களில் வாழ்ந்த திணை சாராத தொழிலாளர் பலரையும் செவ்வியல் இலக்கியம் குறிப்பிடுகிறது. புகார் நகரத்து மருவூர்ப்பாக்கத்தில் குடியிருந்தவரை இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் வரிசைப்படுத்துகிறது. அங்கு 'கண்ணொடையாட்டியர்' குடியிருந்தனர் (இந்திர.அடி 24)இவர்கள் கள் விற்பவர் ஆவர். பட்டுநூல், பருத்தி நூல், உரோமம் முதலியவை கொண்டு நுண்ணிய வேலைப்பாட்டுடன் நெசவு செய்வோரின் இருப்பிடம் இருந்தது (மேலது அடி. 1617). மணி அணிகலன் வேலைகளைச் செய்வோர் மருவூர்ப் பாக்கத்தில் இருந்ததாகச் சொல்கிறார் இளங்கோவடிகள் (மேலது அடி. 3139) வெண்கலத்தால் பொருட்கள் செய்து விற்போரும், செப்புப் பண்டங்கள் செய்வோரும், இரும்பு கொண்டு தொழில் செய்வோரும், பொற்பணித் தட்டாரும் இருந்தனர். மரவேலை செய்வோரும், தையல்வேலை செய்வோரும் இருந்துள்ளனர் (மேலது அடி. 2839).

துறைமுகப் பட்டினத்தில் அரசுப் பணியாளராக சுங்கவரி வசூலிப்போர் வாழ்ந்தனர் என பட்டினப்பாலை காட்டுகிறது (மேலது அடி. 121-122).

உடல் உழைப்பில் ஈடுபட்ட மக்களெல்லாம் தத்தமக்குரிய குடியிருப்புகளில் வாழ்ந்தனர். "இலங்கு வளை இருஞ்சேரி கட்கொண்டிக் குடிப்பாக்கம்" கொற்கை நகரில் இருந்தது என சங்கு குளித்து வளையல் செய்வோர் பற்றி மதுரைக்காஞ்சி பேசுகிறது (அடி .138). நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பையின் மாடம் ஓங்கி மணல் மலிந்த மறுகில் பரதர் மிகுதியாக வாழும் பல்வேறு தெருக்கள் இருந்தன என்று பெரும்பாணாற்றுப்படை சுட்டுகிறது (அடி . 321323). புகார்நகரில் உடல்உழைப்பாளர்கள் குடியிருந்த பகுதி புறச்சேரி என்றே பட்டினப் பாலையில படம் பிடித்துக் காட்டுகிறார் கடியலூர் உருத்திரங்கண்ணனார். கருந்தொழிற் கலிமாக்கள் தம் இருங்கிளை இணை ஒக்கலொடு உறைகிணற்றுப் புறச்சேரியில் வசித்தனர் (அடி .5976). இளங்கோவடிகளும் புகார் நகரை வருணிக்கும் போது உடல் உழைப்பாளர் குடியிருந்த பகுதியை மருவூர்ப்பாக்கம் என்று குறிப்பிட்டு பட்டினப்

பாக்கத்திலிருந்து வேறு பிரித்துக் காட்டுகிறார் (சிலப்.இந்திர.அடி.1058). இதனால் பரதவ குலத்தில் தோன்றிய தலைவி உடல் உழைப்பாளருக்குரிய புறச்சேரி அல்லது மருங்கூரின் சிறுகுடியில் வாழ்ந்தவள் என்பது தெளிவு.

## தலைவன் பிறப்பும் வாழுமிடமும்:

*"............................................................ நீயே*

*நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்க்*

*கடுந்தேர்ச் செல்வன் காதல் மகனே "(அடி . 36)*

என்று தோழி தலைவன் பிறப்பும் வாழுமிடமும் பற்றிக் கூறுகிறாள். அவன் திணைமாந்தர் குலத்தில் பிறந்தவன் அல்லன். ஒரு வேளாளன் மகனாகவோ அல்லது வணிகக் குடியில் பிறந்தவனாகவோ இருத்தல் வேண்டும் என்பது பாடற் பகுதியிலிருந்து தெரிகிறது. ஏனென்றால் அவன் கொடி நுடங்கும் நியம மூதூரைச் சேர்ந்தவன். அதாவது வாணிபத்திற்காக அடையாளக் கொடிகள் ஏற்றப்பட்டு இருக்கும் அங்காடித்தெரு உள்ள மூதூர் அல்லது ஆகம விதிகள் பின்பற்றப்படும் வழிபாட்டிடம் உள்ள மூதூர் அவன் வாழும் ஊராகும். பிங்கலந்தை நியமம் என்பதற்கு 'அங்காடி' என்றும் 'தெய்வம் வழிபடல்' என்றும் பொருள் கூறுகிறது (சூத்திரம்421-3727). அத்துடன் அவனது தந்தை வேகமாகச் செல்லக்கூடிய தேர் வைத்திருக்கும் செல்வந்தன். இவனது பிறப்பு பற்றித் தெரிந்து கொள்ளப் பண்டை இலக்கியம் துணை செய்யுமாற்றைப் பார்ப்போம்.

## வேளாளர் நானில மக்களினின்றும் உழவரினும் வேறானவர்

நானிலத்தவருள் மருத நிலத்தில் வாழ்ந்தோர் உழவர் ஆவர் . இவர்கள் அங்கு பாடுபட்டதால் "வன்கை வினைஞர்" என்று மதுரைக்காஞ்சி விதந்தோதுகிறது (அடி.262). மலைபடுகடாம் "வளம் செய் வினைஞர் "என்று சிறப்பிக்கிறது (அடி. 462). ' உழவர் ' என்று சொல்வதுடன் உழைப்பால் உரமேறிய தன்மையைக் காட்டுமுகமாக "கருங்கை வினைஞர்" என்றும் விளக்கிச் சொல்கிறது (அடி.190, 233-355). சிறுபாணாற்றுப்படை எருதுகளின் துணை கொண்டு பயன் விளைக்கும் உழவர்களை "ஏரோர்" என்று புகழ்கிறது (அடி.190-233). பொருநராற்றுப்படை "அகவர்" என்று அழைக்கிறது (அடி221). உழவுக்காக ஏற்றம் இறைப்போரை "நீர்த்தெவ்வு நிரைத் தொழுவர்" என்கிறது மதுரைக் காஞ்சி (அடி 89). இத்தகு உழவர் வாழும் சிறுகுடி வேளாளர்க்குரியதாக இருந்தது.

வேளாளர் உடல் உழைப்பில் ஈடுபட்ட உழவரினின்றும் மாறுபட்ட வாழ்க்கை உடையவர். இவர்கள் அந்தணர்களைப் போற்றினர்; வேத நெறிப்படி வழிபட்டனர்; பசுக்களையும் எருதுகளையும் பாதுகாத்தனர்; விருந்தோம்பினர்; பசிய உணவினை அதாவது சமைக்காத உணவுப் பொருட்களை அந்தணர்க்குக் கொடுத்துப் புண்ணியம் தேடினர். வளைந்த ஏரான் செய்யும் வேளாண் தொழிலை விரும்பினர். ஆனால் சேற்றில் இறங்கிப் பாடுபடவில்லை. இவர்கள் சிறுகுடியின் உரிமையாளர்; சிறுகுடி மக்கள் என்று அழைக்கப்பட்டனர். இவ்வாறு சிறுகுடி மக்களாகிய வேளாளர்க்கும், உழவர்க்கும் இடையிலிருந்த வேறுபாட்டைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலையில் தெளிவாக்குகிறார் (அடி.194 205). மருதனிளநாகனாரும் மதுரைக்காஞ்சியில் தெளிவாகச் சுட்டுகிறார். உழவு, வணிகம் என்னும் இருவகையானும் முறையே புகழ் மிகுந்த சிறுகுடி மக்களும், பெருவாணிகரும் நானிலத்து வாழ்வாரோடும் சேர்ந்து நெடுஞ் செழியனின் ஏவலைக் கேட்டனர் என்கிறார் (அடி. 119 123). எனவே வேளாளர் நானில மக்களினின்றும் வேறுபட்டவர் ஆவர்.

## வருணத்தார் - வணிகர்

வணிகர் நால் வருணத்துள் மூன்றாமவராக எண்ணப்படுபவர் .தொன்று தொட்டு ஈட்டிய பொருளை உடையவர். நுகத்தில் தைத்த பகலாணி போல நடுவுநிலைப்

பண்பு மிக்கவர். தமவும் பிறவும் ஒப்ப நாடி கொள்வதும் மிகை கொளாது, கொடுப்பதும் குறை கொடாது பல பண்டங்களையும் விலை கூறி விற்பவர் ஆவர் (பட்டினப்பாலை அடி. 206 212). இவர்களே மன்னர் பின்னோர் ஆவர் (சிலப் .அடைக்கலக்காதை அடி 109)

சிலப்பதிகாரம் கடற்கரைப் பட்டினமாகிய புகார் நகரில் மன்னன், அரசு ஊழியர், மருத்துவர், வானநூல்வல்லோர், படைப் பிரிவினர், கணிகையர், வணிகர், வேளாளர் முதலியோர் பட்டினப்பாக்கத்தில் குடியிருந்தனர் என்று பட்டியலிடுகிறது.

சங்க காலத்தமிழகத்து நகரங்களில் நால் வருணத்தார்க்கும் தனித்தனித் தெருக்கள் இருந்தன. மதுரையின் மக்கட்பெருக்கத்தையும், ஆரவாரத்தையும் சித்தரிக்கும் மதுரைக்காஞ்சி; ‘அறங்கூறவையமும் ....காவிதி மாக்களும் .... சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நரும் ....நாற் பெருங் குழூவும் ....கோடுபோழ் கடைநரும் ....திருமணி குயினரும், பொன் சுடரிழை புனைநரும, பொன்னுரை காண்மரும், வம்புநிறை முடிநரும், பூவும் புகையும் ஆயுமாக்களும், கண்ணுள் வினைஞரும், பிறரும் சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ நால்வேறு தெருவினும் காலுற நிற்றர’ என்கிறது (அடி. 489 522). மாங்குடி மருதனார் கூறும் நால்வேறு தெருக்கள் முறையே அரசர, அந்தணர், வணிகர், வேளாளர் தெருக்கள் எனலாம்.

கோவலன் மதுரை நகரைச் சுற்றிப் பார்க்குங்கால் நால்வேறு தெருக்களை அகநகரில்; கோட்டைக்குள்ளே கண்டான் (சிலப். ஊர்காண் காதை அடி. 68 218). பொ.வே.சோமசுந்தரனார் நால்வேறு தெருக்கள் நான்கு வருணத்தார்க்குரியன என்றே பொருள் தருகிறார். ஆனால் மதுரைக்காஞ்சிக்கு உரையெழுதும் போது நால்வேறு தெருக்கள் முறையே புரோகிதர், ஒற்றர், சேனாபதியர், தூதர் முதலியோர்க்குரிய தெருக்கள் என்று கூறியிருப்பது வலிந்து கூறும் பொருளாகிறது. சிலப்பதிகார அடிக்கு அவர் கூறியிருக்கும் பொருளையே மதுரைக்காஞ்சிக்கும் உரியதாகக் கூறுவதில் முரண்பாடு எழ வழியில்லை வேளாளர், வணிகர் முதலியோருக்குரிய மேற்சொன்ன விளக்கம் மூலம்; தலைவன் வேளாளர் அல்லது வணிகர் குடியில் தேர் கொண்ட செல்வந்தனின் மகனாக நியமம் உள்ள மூதூரில் தோன்றி வாழ்ந்தவன் என்பதில் ஐயமில்லை.

## திருமணப் பொருத்தம்

திருமணம் என்ற நிறுவனத்தை சங்ககாலச் சமூகம் போற்றியது. ஒருவனும் ஒருத்தியும் இரவிலோ, பகலிலோ களவு மேற்கொள்வதை சமூகம் விரும்பவில்லை. அதனாலேயே களவுக்கால வாழ்க்கை அலர் தூற்றுவதற்கும் அம்பலாக விரிவதற்கும் வாய்ப்பளித்தது. உலோச்சனார் மறுகில் பெண்டிரின் செயலைச் சொல்லோவியமாக்குகிறார் (நற்றிணை பா. 149). உடன்போன தலைவியையும் தலைவனையும் பின்னால் தேடிச் செல்லும் செவிலியை ஆற்றும் கண்டோரும் திருமணம் என்ற பந்தத்தைப் போற்றுகின்ற பாங்கைக் கலித்தொகையில் காண்கிறோம் (பாலைக்கலி பா.9). இத்தகு திருமணத்திற்குரிய பொருத்தம் தலைவனுக்கும், தலைவிக்கும் இல்லை என்பதைத் தோழி வெளிப்படையாகக் கூறுகிறாள்.

*“நிணச் சுறா அறுத்த உணக்கல் வேண்டி*

*இனப்புள் ஓப்பும் எமக்குநலன் எவனோ*

*புலவு நாறுதும் செலநின்றீமோ*

*பெருநீர் விளையுள் எம்சிறுநல் வாழ்க்கை*

*நும்மொடு புரைவதோ அன்றே”(அடி .711)*

‘நிணம் மிகுந்த சுறாவின் தசையை உணக்குவதற்காக நாங்கள் பறவைகளை விரட்டுகிறோம். உன்னுடைய உறவு எப்படி நலம் விளைக்கும் ? எங்கள் அருகில் வந்தாலே புலால் நாறும். இங்கிருந்து சென்று விடு. கடல் செல்வத்தை நம்பி உயிர் வாழும் எளிமை நிறைந்த வாழ்க்கை எங்களுடையது. எம் வாழ்க்கை உம்மோடு ஒத்ததன்று. உனக்கும் தலைவிக்கும் எப்படிப் பொருந்தும்?’ என்று தோழி பேசுவது ‘குலமுறை கூறி மறுத்துச் சேட்படுத்துவதற்காக’ என்கிறது கொளு. சேட்படுத்தல் என்பது களவுப்புணர்ச்சி நீட்டாமல் விரைய வரைந்து கொள்ள

மறுத்துக்கூறுவதாகும். தோழி இவ்வாறு பேசுவதன் காரணம் எதுவாக இருந்தாலும்; அவள் முத்தாய்ப்பாகச் சொல்லும் மூன்று சொற்கள்

*"எம்மனோரில் செம்மலும் உளரே "*

*(அடி 12)*

சாதி தோன்றி விட்டமையை உறுதி செய்கின்றன. தலைமைத்தன்மை உடைய ஆடவர் பரதவ இனத்திலும் உள்ளனர் என்பதை ' எம்மனோரில் ' அதாவது எங்கள் இனத்தில் என்ற சொல் மூலம் அவள் கூறுவது நோக்கத்தக்கது. திணை சார்ந்த மக்களினப் பாகுபாடும், வருணப் பாகுபாடும், தொழில் அடிப்படையில் அமைந்த அழுத்தமான பிரிவுகளும், பொருளாதாரமும், ஒரு திருமண பந்தத்தை உறுதி செய்வதிலும் பங்கேற்றன என்பது இதுகாறும் கண்டவற்றான் தெளிவாகிறது.

## முடிவுரை

பரதவ மகளை விரும்பிய நகர்ப்புறத்துச் செல்வந்தனின் செல்ல மகனிடம் பேசும் தோழி, 'உன் உறவு தேவையில்லை; எம் இனத்தில் நல்ல தலைவர் உளர்' என்று மறுத்துரைப்பதாக நற்றிணை (பா. 45) பொருள் தருகிறது. எப்போது எம் இனத்தில் நல்ல வரன் கிடைக்கும் என்று அவள் கூறுகிறாளோ அப்போது அங்கே சாதி தோன்றி விட்டமை தெளிவு.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

இந்திர. = இந்திரவிழவு ஊரெடுத்த காதை

சிலப். = சிலப்பதிகாரம்

அடி. = அடிகள்

## References


Somasuntharanar, Po., Ve. (1975). *Silapathikaram*. Chennai: Kalaga Veliyidu.

Balasubramanian, Ku.Ve. (2004). *Natrinai. Madura*i: New Century Book House.

Somasuntharanar, Po., Ve. (1973). *Pathupaddu*. (Vol.1). Chennai: Kalaga Veliyidu.

Somasuntharanar, Po., Ve. (1966). *Pathupaddu*. (Vol.2). Chennai: Kalaga Veliyidu.

Subramanian, sa., Ve. (2013). T*amil Nigandu.* (Vol.1). Chennai: Meiyappan Pathipakam.

Nachinarkiniyar. (2007). *Kalithokai*. Chennai: Kalaga Veliyidu.

# சிங்கப்பூரில் குழந்தை / சிறுவர் இலக்கியச்சூழல்: நலிவும் நன்னிலை நோக்கிய நகர்வும்

# Landscape of Children's Literature in Singapore: Setback and Surging Towards Progress

முனைவர் எம் எஸ் ஸ்ரீலக்ஷ்மி / Dr M S Shri Lakshmi [1]

***Abstract***

This research paper describes the state of Children's literature during the period prior to the freedom of Singapore from Malaya and proceeds to highlight how it has sprouted ever since independence of the country in 1965.Children's literature started flourishing through children's magazines, radio programmes had its set back in the 1990s . This paper attempts to present the reasons for this set back and suggests the ways to redeem for better.

**Key Words:** Tamil literature, Children's literature, Singapore, children's magazines, radio programmes

Date of submission: 2018-10-17
Date of acceptance: 2018-11-08
Date of Publication: 2018-12-30
Corresponding author's
Name: Dr M S Shri Lakshmi
Email: visaka_2004@yahoo.com

## முன்னுரை

ஆணிவேர் போன்றது குழந்தை இலக்கியம். குழந்தை இலக்கிய வரலாறு எனத் தனிவரலாற்று நூலினைப் பூவண்ணன் (கோபாலகிருஷ்ணன், 1980) எழுதும் அளவுக்குத் தமிழகத்தில் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன் செழித்துவளர்ந்த இத்துறை இன்று மழைமுகம் காணாப் பயிர்போல் வாடியநிலையில் உள்ளது. தமிழ் ஆட்சிமொழியாக உள்ள சிங்கப்பூரில் அரும்பிய நிலையில் இருந்த ( ஸ்ரீலக்ஷ்மி, 2005) குழந்தை இலக்கியத்துறையின் இன்றைய நிலை என்ன? இது நலிவடையக் காரணங்கள் யாவை? நலிவிலிருந்து இத்துறை மீள்வதற்கு என்ன வழி? ஆகியவைபற்றி விளக்குவது இக்கட்டுரையின் நோக்கம். குழந்தை இலக்கியம், சிறுவர் இலக்கியம் என்னும் இருவிதச் சொல்லாட்சிகளும் இக்கட்டுரையில் ஊடாடினாலும் வயதுவரம்பைக் கருத்தில்கொண்டே இக்கட்டுரையாளர் அவற்றைப் பயன்படுத்தியுள்ளார்.

## அடிப்படையும் ஆரம்பமும்

மலாயாவில் சைவப்பெரியார் கா.இராமநாதன் "சோலை" 1946 இல் என்னும் சிறுவர் இலக்கிய இதழை வெளியிட்டார். சிறுவர்களுக்கு இலக்கிய இன்பம் எளிமையான முறையில் ஊட்டப்படவேண்டும்; ஆரம்பப் பாடசாலைகளே அதற்கு ஏற்றவை; அங்குப்பணியாற்றும் ஆசிரியர்கள் தமிழ்மன்னர்களாக இருக்கவேண்டும் எனப்

[1] The author is an Associate Lecturer in Singapore University of Social Sciences, Singapore. visaka_2004@yahoo.com

பரிந்துரைத்தார். அதனைச் செயல்வடிவாக்கத் தமிழ்முரசு மாணவர் மணிமன்ற மலர் 06.07.1953இல் தொடங்கப்பட்டது (லெட்சுமி மீனாட்சிசுந்தரம், 1988, p.70). தொடக்கத்தில் எதிர்பார்த்த வரவேற்புப் பெறவில்லையாயினும் நாளடைவில் எழுத்தாளர் பரம்பரையைத் தோற்றுவித்ததில் மாணவர்மணிமன்ற மலருக்குச் சிறப்பிடம் உண்டு. இம்மலரில் சிறுவர்களும் எழுதினர். பெரியவர்களின் படைப்புகளும் இடம்பெற்றன. மாணவர்மணிமன்றப் பயிற்சிக்களம் எழுத்தாளர்களைப் புடம்போட்டு ஒளிரச்செய்தது.

## சிறுவர் இதழ்களின் சீரிய பணி

தமிழ்முரசின் ஆக்கப்பணியை அடியொற்றித் தமிழ்நேசன், தமிழ்மலர் முதலிய செய்தித்தாள்களும் சிறுவர் பகுதியை வெளியிட்டன. சிங்கப்பூர் சுதந்திரம் பெறுவதற்குமுன் தமிழ்நேசன் "சிறுவர் அரங்கம்" என்னும் இலவச இதழையும் ,தமிழ்மலர்" சிறுவர் பேரவை" என்னும் இலவச இதழையும் வெளியிட்டன. செய்தித்தாள்கள் படைப்புகளை வெளியிட்டு எழுத்தாற்றலை வளர்க்க உதவின.

## வானொலி மூலம் வளமான பணி

வானொலியில் ஒலிபரப்பப்பட்ட சிறுவர் மலர் , மாணவர் மேடை, பிள்ளைக்கனிகள் ,சிறுவர் பூங்கா, சிறுவர் கதைகள், பாடிப்பழகுவோம், சிறுவர் மேடை முதலிய பல நிகழ்ச்சிகள் சிறுவர் இலக்கியம் வளரத் துணைபுரிந்தன. வானொலி படைப்பாளிகளுக்குச் சன்மானம் வழங்கியது. இதனால் நிறையப்பேர் சிறுவர்க்குரிய படைப்புக்களை எழுதுவதில் ஆர்வம் காட்டினர். ஒருவேளை சன்மானம் கொடுக்கப்படாவிட்டால் இத்தனைபேர் எழுதியிருப்பார்களா? என்ற கேள்விக்கும் இடம் உள்ளது.

## சிறுவர் மேடையின் பங்கு

வானொலி செய்த பணிகள்குறித்து ஆவணப்படுத்தப்படாத அவலநிலை காரணமாக அவற்றைப்பற்றி முழுமையாக அறிய இயலவில்லை. வானொலியில் பணிபுரிந்த மூத்த படைப்பாளர்களுள் ஓரிருவர் தவிர எஞ்சியோரும் உதவும் நிலையில் இல்லை.வரலாறு இல்லாமல் அழிவது ஒன்றும் தமிழினத்துக்குப் புதிது அல்லவே? இருப்பினும் 1990இல் சிறுவர்மேடை நிகழ்ச்சியின் தயாரிப்பாளராகப் பொறுப்பேற்றுக்கொண்ட ஆர்.யோகநாதன் அந்நிகழ்ச்சிபற்றிய பல தகவல்களை இக்கட்டுரையாளரிடம் பகிர்ந்துகொண்டார்.

## நான்கு ஆண்டு நற்காலமும் பொற்காலமும்

டி.பி.மூர்த்தி நாடகத் தயாரிப்பாளராகப் பணியாற்றியவேளையில் பகுதிநேர நாடக நடிகராக அறிமுகமானார். முழுநேர ஒலிவழி நான்காக மாறியவுடன் சிசிலியா சுந்தரம் நாடகத்தயாரிப்பாளராகப் பொறுப்பேற்று நடத்தியபோது சிறுவர்மேடைக்கு நாடகங்கள் எழுதியும் தம்மை அத்துறைக்குத் தயார்ப்படுத்திக்கொண்டார். ஆர் யோகநாதனின் பொறுப்பில் சிறுவர்மேடை நிகழ்ச்சி சிறுவர்களைக் கவர்ந்தது. அந்த நான்கு ஆண்டுகளைச் சிறுவர் மேடையின் பொற்காலமாகக் கூறுவதில் தவறில்லை.

தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பினைச் சவாலாக ஏற்றுக்கொண்ட யோகநாதன் நாடகக் கருக்களைக் கொடுத்து எழுத்தாளர்களை எழுதச்சொன்னார். ஆனால் சிறுவர்மேடைக்கு என நாடகங்கள் எழுதுவோரிடம் திருப்திதரும் கற்பனையாற்றலும் எழுத்துத்திறனும் இல்லாததால் பீர்பால் கதைகள், முல்லா கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள்,தெனாலிராமன், மரியாதைராமன் கதைகள் போன்றவற்றை நாடகமாக எழுதவைத்தார்., வீரப்பன் லெட்சுமி, கண்ணம்மா ராம் நாராயணசாமி, முத்துலெட்சுமி கருப்பையா, கல்பனா கலியபெருமாள், ரத்னாவதி முத்துகுமார், பாலமலர், சங்கையா, அன்னலெட்சுமி

முருகையா,மு.சா மொய்தீன் பீரம்மாள் பீர்முகமது முதலிய பலரும் எழுதினர். இவர்களுள் பீரம்மாள் பீர் முகமது தன் நாடகங்களை "வெற்றிநிச்சயம்" என்னும் தொகுப்பாக 2015ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார்.

புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தியும், ஆர்வமூட்டும் தொடக்க இசையைப் பயன்படுத்தியும், Sound Effect என்னும் ஒலிச்சேர்க்கையின் மூலம் சிறுவர்களின் கற்பனை ஆற்றலை விரிவுபடுத்தியும் நாடகங்களைத் தயாரித்தார் ஆர்.யோகநாதன். வடிவழகன், இளையராஜா, வீரராகவன், ரவீந்திரன் போன்றோர் சிறுவர்மேடை வழி கண்டெடுக்கப்பட்ட நாடக முத்துக்கள் என்று வருணிக்கிறார் யோகநாதன் (நேர்காணல், மார்ச் 2018). தம் கடமையை ஆத்மார்த்தமான தொழிலாக ஏற்றுக்கொண்டு செயல்பட்டதால் சிறுவர் மேடை நாடகங்கள் சிறந்த படைப்புக்களாக விளங்கின.

திங்கட்கிழமை வந்தால் சிறுவர்மேடை நாடகத்துக்காகக் காத்திருந்த மாணவமணிகளின் அனுபவங்கள் எண்ணற்றவை; சுவையானவை. இந்நாடகங்கள் மறு ஒலிபரப்பும் கண்டன. செவ்வாய்க்கிழமையன்று சிறுவர் மலர் என்னும் நிகழ்ச்சியும், புதன் கிழமையன்று சிறுவர்புதிர் என்னும் நிகழ்ச்சியும் ஒலியேறிச் சிறுவர்களைத் தமிழின்பாலும் இலக்கியத்தின்பாலும் ஈர்ப்புக் கொள்ளவைத்தன. "மலேசியக் கவிஞரான கா. பெருமாள் சிறுவர் மேடை, பாலர்மேடை ஆகிய நிகழ்ச்சிகளுக்கும் நாடகங்கள் எழுதியுள்ளார். தொடக்கப்பள்ளி மாணவர்கள் அவற்றில் நடித்தனர்" (மீனாட்சி சபாபதி, 2011).

## சிறுவர் கதைகள்

சிறுவர்கள் கதைகேட்கும் ஆர்வம் உள்ளவர்கள் என்பதால் கல்வி ஒலிபரப்பில் கதைகள் இடம்பெற்றன. மேலும் சிறுவர்களைக் கவரும் மாயாஜாலக் கதைகளும், மந்திரக்கதைகளும் ஒலிபரப்பட்டன. சிறுவர்களின் கதைகேட்கும் ஆர்வத்தை இவை பெருக்கின என்று கூறலாமே தவிர இவற்றை எப்படி இலக்கியம் என வகைப்படுத்துவது? ஈசாப் கதைகள் போன்ற கதைகளையும் செ.ப. பன்னீர்செல்வம் காலத்துக்கேற்ற மாற்றங்களைச் செய்து கதை கூறினார்.

## 'பாடிப்பழகுவோம்' நிகழ்ச்சியும் பாவலர் பெருக்கமும்

'பாடிப்பழகுவோம்' நிகழ்ச்சியில் சிறுவர் பாடல்கள் இசையுடன் பாடப்பட்டன. அக்காலத்தில் வாழ்ந்த சிறுவர்கள் தமிழின் மீது ஆர்வம் கொள்ளும் வகையில் இசையுடன் பாடப்பட்டன. கா. பெருமாள் எழுதிய சிங்கப்பூர்ப் பாடல்கள் இவ்வாறு பாடப்பட்டவையே. கவிஞர் க,து.மு.இக்பால்,முருகடியான்,பாத்தேறல் இளமாறன், பரணன் ஆகியோரின் பாடல்கள் இந்நிகழ்ச்சியில் ஒலியேறிப் பின் நூலாகத் தொகுக்கப்பட்டவை.

## குழந்தை/சிறுவர் இலக்கிய முன்னோடி

சிங்கப்பூரில் குழந்தை/சிறுவர் இலக்கிய முன்னோடி கவிஞர் ந.பழநிவேலு ஆவார் . சிறுவர் கவிதைகள் "தாய்,"தந்தை," " குரு", "காக்கை கற்பிக்கும் பாடங்கள்"என்னும் தலைப்புகளில் 1937இல் வெளிவந்தன (ந.பழநிவேலு, 1990, p.1925). பாடுபொருள், கவிதைத்தன்மை, உத்தி ஆகியவற்றால் இக்கவிதை சிறுவர் இலக்கியம் எவ்வாறு அமையவேண்டும் என்னும் சிந்தனையை மலாயா மண்ணில் விதைத்தது. இவர் கவிதைகளைச் சிறுவர்க்கெனவும், இளைஞர்க்கெனவும் பிரித்து அச்சிட்டிருப்பதன் மூலம் குழந்தை, சிறுவர், இளைஞர் என வயது அடிப்படையில் இலக்கியம் படைக்கப்பட வேண்டும் என்னும் தெளிவான சிந்தனையைக் கொண்டிருந்தார் என்பது புலனாகிறது.

கவிதைமலர்கள் என்னும் இந்த நூல் முதல் பதிப்பாக 1947இல் வெளிவந்தபோது பாரதிதாசன் வாழ்த்துரையாக அளித்த மூன்று வெண்பாக்களில் ஒன்று இவருடைய கவிதைத்தன்மைகளைப் பாராட்டும் வகையில் அமைகிறது.

எளிய நடை நல்ல கருத்துக்கள் ஏற்றே

ஒளியால் வெளிவந்த ஒண்மைத் தெளிதமிழ்நூல்

நாட்டார்எல் லார்க்கும் நலம்புரிந்து விட்டதென்று

நாட்டுவேன் உண்மையிலே நான்" (பாரதிதாசன், 1947, p14).

இவருடைய நூல் "பாப்பாப் பாடல்கள்" (சிங்கப்பூர் வெள்ளிவிழாக் கொண்டாட்ட நினைவாக வெளியிடப்பட்ட நூல், 1990) என்னும் பெயரில் வெளிவந்தது. கருத்துக்களின் கோர்வையாகத் திகழும் இந்நூல் நீதி கொளுத்துகிறது; அறிவுரைகளை அள்ளி வழங்குகிறது. ஆயின் சிறுவர்கள் உணர்வுப்பூர்வமாகப் பாடி மகிழ ஏற்றவையா? எனவும் சிந்திக்கவைக்கின்றது.

## சிறுவர் கவிதை நூல்கள்

பாவலர் முல்லைவாணன் "ஊஞ்சல்"; "வீணை"; "கரும்பு" ஆகிய நூல்களை எழுதியுள்ளார். சிறுவர்கவிதைகளின் இதயம் என வருணிக்கத்தக்க ஓசைநயம் இவர் கவிதைகளில் காணப்பட்டாலும் தனித்தமிழ்ச்சொற்கள், இலக்கியவழக்கில் உள்ள அருஞ்சொற்கள், வட்டாரச்சொற்கள் ஆகியவற்றின் பயன்பாடு இன்றைய சிறுவர்கள் இவருடைய கவிதைகளைப் படித்து மகிழ்வதற்குத் தடையாகின்றன. சிங்கையின் மொழிச்சூழலுக்குப் பொருந்தாத பாடுபொருள்களும் இந்நூல்களில் உள்ளன. சான்றாகத் தனித்தமிழ் இயக்கத்தலைவர்கள், ஈ.வெ.ரா.பெரியார் போன்றவற்றைக் கூறலாம். சிறுவர் இலக்கியக் கோட்பாடுகளைக் கவனத்தில் கொள்ளாது பாடப்பட்ட இவருடைய நூல்கள் சென்ற தலைமுறைச் சிறுவர்களுக்குப் பொருந்துபவையே தவிர இன்றைய தலைமுறைச் சிறுவர்களுக்குப் பொருந்தா.

பாத்தேறல் இளமாறனும் தனித்தமிழ்ப் பற்றுடையார்."பனிக்கூழ்";"திங்கள்" ஆகிய இரு நூல்களை எழுதியுள்ளார். தமிழ்க்கவிஞர்கள் கருத்துப்படி நீதி கூறும் நோக்கமே சிறுவர் கவிதைகளுக்கு அடையாளம் என்பது போன்ற மயக்கத்தில் இவரும் கவிதைகள் பாடியுள்ளார். சிங்கைச்சூழலுக்குப் பொருந்தாத பாடுபொருள்கள் இவருடைய நூல்களிலும் உண்டு. சான்றுக்கு "அண்ணா"; "மறைமலையடிகள்"; "பல்வகை மரங்கள்" ஆகியன சான்றாகும்.

முருகதாசன் பாடிப்பழகுவோம் என்னும் நிகழ்ச்சிக்கு எழுதிய பாடல்களைத் தொகுத்து "மழலை மருந்து";"தேன்மலர்கள்" என்னும் இரு நூல்களாக வெளியிட்டுள்ளார். மழலையர், சிறுவர் எனப் பருவ வேறுபாட்டைக் கருத்தில்கொண்டு பாடல்களை இவர் வகைப்படுத்தியதைப் பாராட்த வேண்டும். ஓசைச்சிறப்புடைய பொருளிலிப்பாடல்கள் மழலையர்க்குப் பொருந்துகின்றன. ஓரளவு சந்தநயம் கொண்ட பாடல்கள் இருப்பினும் கடினமான சொல்லாட்சிகள், பொருந்தாத பாடுபொருள்கள் ஆகியவை காரணமாக மழலையர்க்கு இந்நூல் மருந்தாகக் கசக்கும் என்றும் கூறுவது தவறாகாது.சான்றாக "முருகா'";"சிவம்" என்பன போன்ற பாடல்களைப் பிற சமயக் குழந்தைகள் எப்படிப் பாடுவர்? சமய நல்லிணக்கத்துக்குப் பாதகம் செய்யும் , பொருள்புரியாத பாடுபொருள்களை "மழலை மருந்து" என்னும் பெயரில் தந்தால் அவை மருந்து போல வெறுப்பைத்தான் வளர்க்கும்.

தேன்மலர்கள் என்னும் நூலிலும் செயல்வீரர் சாமிவேலர், கர்ணன் போன்ற பாடுபொருள்கள் சிங்கை வாழ் சிறுவர்க்கு இன்றைய தலைமுறைச் சிறுவர்க்கு எவ்வகையில் பொருந்தும்? எளிய இனிய செய்திகளைக் கோர்வையாக்குவதற்குப்

பதிலாக "அன்னமே" என்னும் கவிதையில் சிறுமியை அன்னமே என விளித்துத் தொடர்பற்ற செய்திகளைக் கோர்வையாக்கித் தந்துள்ளார். இப்போக்கு தவிர்க்கப்படவேண்டியது.

குறைந்தபட்சக்கல்வி கற்ற கவிஞர் முத்துமாணிக்கம் "பொன்வண்டு" என்னும் பெயரில் தம் கவிதைகளை நூலாகத் தொகுத்துள்ளார். தமிழைப்பற்றிய பாடல்கள் கவிஞரின் தமிழ்ப்பற்றை வெளிப்படுத்தினாலும் அவற்றின் பொருளாழமும், சொல்லாட்சிகளும் சிறுவர்க்கு ஏற்புடையன அல்ல. பாடுபொருள் அடிப்படையிலும் பொன்வண்டு புரியாத வண்டாகச் சிறுவர்கள் மத்தியில் வட்டமிட நேர்ந்துள்ளது. சான்றாக "மதுவுக்கு அடிமையாய் வாழ்தலும் தீது"; "செய்யும் தொழிலே தெய்வம்" என்பனவற்றைக் கூறலாம்.

மற்றக் கவிஞர்கள் பாடாத கதைப்பாடல்களை இவர் பாடியுள்ளது சிறப்பு. கதைப்பாடல்கள் சிறுவர்களை மகிழ்விக்கும் என்பதைக் கருத்தில்கொண்டு எழுதியுள்ளது பாராட்டுக்குரிய அம்சமாகும். சில கதைப்பாடல்கள் நேரடியாக நன்னெறிகளைப் புகட்டுகின்றன. ஒரு சில கதைப்பாடல்கள் சிறுவர்க்குப் பொருத்தமற்ற விஷயங்களை மறைமுகமாகச் சொல்கின்றன. சமயச்சான்றோர் வரிசையில் ஏசு, நபிகள் நாயகம் ஆகியோரைப் பாடியதன் மூலம் சமய நல்லிணக்கத்துக்கு அடிகோலியுள்ளார்.

மேலும் சிங்கப்பூர் பற்றிய செய்திகள் சிறுவர்களுக்கு நாட்டுப்பற்றை வளர்க்கும் நோக்குடன் இந்நூலில் இடம்பெற்றிருப்பது பாராட்டுக்குரியதாகும். மொத்தத்தில் சிறுவர்க்குரிய பாடுபொருள்,கதைப்பாடல்கள் , ஓசைநயம், பொருளிலிப் பாடல்கள் ஆகிய மூன்று கூறுகள் பொன்வண்டு நூலில் இடம்பெற்றிருப்பதைநோக்கக் கவிஞர் முத்துமாணிக்கம் சிறுவர் இலக்கியக் கோட்பாடுகளைப் புரிந்துகொள்ள முயன்றுள்ளார் என்பது தேற்றம். "தேன்சிட்டு" என்னும் நூலில் பாடிப்பழகுவோம் நிகழ்ச்சிக்காகப் பாடப்பட்ட பாடல்கள் இடம்பெற்றுள்ளன. முன்னர்க்கூறப்பட்ட குறைகள் இந்நூலில் காணப்படுவதோடு தமிழ்நாட்டுச் சூழலின் பிரதிபலிப்பும் ஓரிரு கவிதைகளில் தென்படுகிறது.

தென்கிழக்காசிய எழுத்து விருது பெற்ற கவிஞர் பரணன். "மழை " என்னும் நூலில் சிறுவர்க்கேற்ற கருப்பொருள்கள், ஓசைநயம், கற்பனை போன்ற அம்சங்கள் அமைந்துள்ளமை சிறப்பு. ஆயின் ஓரிரு அருஞ் சொற்களைச் சிறுவர்க்கு அறிமுகப்படுத்தவேண்டும் என்னும் நோக்குடன் கவிஞர் வலிந்து புகுத்தியுள்ளதையும் காணமுடிகிறது. சிறுவர்க்குரிய கருப்பொருள்களை விளக்கும் வகையில் படங்களுடன் நூலினை அச்சிட்டுத் தனித்து நிற்கிறார் பரணன். இந்நூல் சிங்கையில் வெளிவந்துள்ள நூல்களுள்ளும் சிறுவர்களைத் திருப்திப்படுத்தும் என்பதில் ஐயமே இல்லை. மலையாளத்தினைத் தாய்மொழியாகக் கொண்ட யாவர் சுயமுயற்சியால் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுக் கவிதை படைத்த திறம் சிறுவர்களுக்கு மொழி ஆர்வத்தை ஊட்டக்கூடிய உந்துசக்தி என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

பெரி.நீல.பழனிவேலன் 1960களிலிருந்து தான் எழுதிய சிறுவர் பாடல்களைத் தொகுத்து "செவ்வானம்" என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார், இந்நூலில் உள்ள பாடல்கள் எழுதப்பட்ட காலத்தில் சிறுவர்க்குப் பொருத்தமானவையாகத் தோன்றினாலும் இன்றைய சிறுவர்களைச் சென்றடையுமா? என்பது ஐயமே. இத்தொகுப்பில் நூலாசிரியரின் இனவுணர்வு, மொழியுணர்வு போன்றவை வெளிப்படுகின்றனவே தவிரச் சிறுவர்களுக்குப் பொருத்தமான கற்பனையோ ஓசைநயமோ அமையவில்லை. "பாடுபாப்பா " என்னும் பாடலில் பெண்ணடிமைத்தனம் பற்றிப் பாடுகிறார். "கிட்டிப்புள்" என்னும் விளையாட்டினைச்

சிங்கை வாழ் சிறுவர்கள் அறிவார்களா? என்ற சந்தேகம் மேலோங்குகிறது. ஆயினும் தமிழக விளையாட்டுகளை அறிமுகப்படுத்துகிறார் என்று அமைதி கூறலாம். இத்தொகுப்பில் மிகச்சில பாடல்களைச் சிறுவர்க்கு ஏற்றவை என்று கொள்ள இடமுண்டு. எனவே பெரி நீல பழனிவேலன் போன்றோரின் சிறுவர் இலக்கியம் குறித்த பார்வை விசாலம் அடையவில்லை என்று கூறுவதில் தவறு ஏதும் இருக்கமுடியாது.

க.து.மு.இக்பால் எழுதிய சிறுவர் பாடல்கள் "அன்னை"; "வைரக்கற்கள்" என்பனவாகும். அன்னை என்னும் நூலில் இடம்பெற்ற பாடல்கள் பாடிப்பழகுவோம் என்னும் நிகழ்ச்சிக்காக எழுதப்பட்டவை. இந்நூலில் 175 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சிறுவர் கவிதையில் இடம்பெறும் சொற்கள் எளிமையாக இருத்தல் அவசியம். ஆனால் "வைரக்கற்கள்" என்னும் நூலில் இடம்பெற்றுள்ள சொற்களை நோக்கும்போது இவருடைய புலமை குறுக்கிடுவதால் சிறுவர்களுக்குப் பொருள்புரியாத, பழக்கமில்லாத சொற்களைக் கையாள்கிறார். சொல்விளையாட்டு இவர் கவிதையில் உண்டு. "தாலாட்டு" போன்றவை சிறுவர்க்குப் பொருந்துமா? சிறுவர்களைக் கவரும் பொருளிலிப் பாடல்கள் குறித்து ஏன் அவர் கவனத்தில் கொள்ளவில்லை? என்று நினைக்கத் தோன்றுகிறது.

கவிஞர் க.து.மு. இக்பால் சிங்கப்பூர் அரசு அளிக்கும் மிக உயரிய விருதான கலாசாரப் பதக்கத்தை 2014இல் பெற்றவர். இவருடைய சிறுவர் கவிதை நூல்களை மீண்டும் சிறு சிறு நூல்களாகப் படங்களுடன் சிங்கப்பூரின் கிரிம்சன் எர்த் பதிப்பகம் 'நிலாச்சோலை', 'கற்பனைவேண்டும்', 'ஓடம்', 'வானவில்', 'விஞ்ஞானி', 'முத்தாரம்' என்னும் பெயர்களில் வெளியிட்டுள்ளது. புதிய கவிதைகள் எதுவும் இடம்பெறவில்லை. 'பழைய மொந்தையில் புதிய கள்' என்பது பழமொழி. இந்த நூல்களைப் பார்க்கும்போது 'புதிய மொந்தையில் பழைய கள்' என்றே கூறத்தோன்றுகிறது.

மு.அ.மசூது "பிறைத்தோணி", "புதிய மின்னல்கள்" ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவர் தமிழாசிரியர். பிறைத்தோணி என்னும் நூல் ஒரோவழி சிறுவர்க்குப் பொருந்தும் எனக்கூறலாம். இளையர்க்குப் பொருந்தும் கவிதைகளே நிறைய உள்ளன.

## சிறுவர் இலக்கியத்தில் இருவகை

சிறுவர் இலக்கியத்தினைப் பெரியவர்கள் படைப்பது ஒருவகை; சிறுவர்களே படைப்பது மற்றொரு வகை. மேற்காட்டப்பட்டவை அனைத்தும் சிறுவர்களுக்காகப் பெரியவர்கள் படைத்தவை.ஆனால் இனிவரும் பகுதி சிறுவர்களுக்காகச் சிறுவர்களே படைத்தவை குறித்து அமையும்.

## சிறுவர்க்கெனச் சிறுவர் படைத்தவை:

நலிந்துவரும் சிறுவர் இலக்கியத்திற்கு நம்பிக்கை ஒளியைக் கீற்றாகத் தருவது "பூவானம்" என்னும் கவிதைத்தொகுப்பு.. இது புதுவானமாய்க் காட்சி அளிக்கிறது. இந்நூல் நியூடவுன் தொடக்கப்பள்ளியில் பயின்ற மாணவர்களின் கைவண்ணங்களையும் சிந்தனை வண்ணங்களையும் தாங்கி வெளிவந்துள்ளது. பதிப்பாசிரியர் குறிப்பிடுவது போலத் தொடக்கப்பள்ளி மாணவர்களிடையே தேடல் உணர்வை உருவாக்கவும், ஊக்குவிக்கவும் மற்ற நாட்டுப்பள்ளிகளுடன் தொடர்புகளைபெருக்கிக் கொள்வதில் கவனம் செலுத்துகின்றன சிங்கப்பூர்ப் பள்ளிகள். சென்னையின் அழகப்பா மெட்ரிகுலேஷன் பள்ளியும் நியூடவுன் தொடக்கப்பள்ளியும் மின்னஞ்சல்வழி கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டன. இவ்விரு பள்ளி மாணவர்களும் எழுதிய கதைகளைக் கொண்ட "இரு நகரத்து நாட்டுப்புறக் கதைகள்" என்னும் நூலை வெளியிட்டனர்.

நியூடவுன் தொடக்கப்பள்ளி

மாணவர்களைப் பா அல்லது கவிதை எழுதவைக்கும் பயிற்சியின் விளைவே “பூவானம் “என்னும் கவிதை வானம் / பா வானம்! ஆசியான் கவிஞர் க.து.மு.இக்பால்” நம் அரும்புகள் கட்டிய மாலை; நம் வண்ணத்துப்பூச்சிகள் வரைந்த வானம்” (பூ வானம், முன்னுரை, p.15) என மனந்திறந்து பாராட்டுகிறார். மு.அ.மசூது பட்டறை நடத்திப் பயிற்சி அளித்துக் கவிதை எழுதத் தூண்டியுள்ளார். ஆசிரியர் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டால் மாணவர்கள் படைப்பாற்றல் திறன் பெறுவர் என்பதற்குக் கட்டியம் கூறும் தொகுப்பாக இந்நூல் அமைகிறது. சான்றுக்குச் சில கவிதைகளைக் காண்போம். சிறுவர்கள் இப்படியும் யோசிக்கிறார்கள் என்று எண்ணவைக்கும் கவிதைகள் ஒரு சில உள்ளன.எளிமையும் இனிமையும் கொண்ட சிறுவர் கவிதைகளும் உள்ளன. சிறுவர்களின் படைப்பிலக்கிய முயற்சி வரவேற்கப்படவேண்டியதாகும்.

வறுமையில் பலவகை உண்டு. எண்ணங்களின் வறுமைபற்றி துர்க்கா என்னும் மாணவி கீழ்க்காணுமாறு எழுதுகிறாள்:

*“இல்லாமல் இருப்பது*

*அல்ல வறுமை!*

*இல்லையே என்கிற*

*வருத்தம்தான் வறுமை” ( பூவானம், p.33)*

சிறுவர்களைக் குறைத்து மதிப்பிடும் தமிழர்கள் இனி எச்சரிக்கையுடன் செயல்படவேண்டும்.சிறுவர்களின் சிந்தனைவீச்சு மிக அற்புதமாக உள்ளது என்னும் உண்மை மேற்காட்டப்பட்ட கவிதையில் தெளிவாகிறது. எண்ணங்களில் வறுமை வந்தால் வாழ்வே சூன்யமாகும் என்னும் உண்மையைப் பிஞ்சு உள்ளங்களுக்குப் புரியவைக்கிறார் துர்க்கா.

பவித்ரா என்னும் மாணவியின் பார்வையில் உலகம் என்பது என்ன? கீழ்க் காணும் கவிதையில் உலகத்தினை விளக்குகிறார் அவர்.

*“மனிதர்களும்*

*மனிதர்கள் போன்று*

*சிலரும்*

*வாழ்கின்ற இடத்துக்குப்*

*பெயர்*

*உலகம்” ( பூவானம்,ப 29)*

அன்னையின் அன்பில் கட்டுண்ட மாணவி ஒருத்தியின் பார்வையில் அம்மாவைப்பற்றிய கவிதை அழகாக மலர்கிறது.

*“அம்மா மிகவும் நல்லவர்*

*அவரே மிகவும் சிறந்தவர்*

*உண்ண உணவு தருபவர்*

*உறங்கும் போதும் காப்பவர்*

*பண்பு காத்து நிற்பவர்*

*படிப்புச் சொல்லிக் கொடுப்பவர்*

*எல்லா நலமும் தருபவர்*

*எங்கள் தெய்வம் தாயவள்!*

*உலகம் உள்ள வரையிலும்*

*உறவுக்கு அவர்தாம் உதாரணம்! (பூவானம் ,p.47)*

## சிறுவர் புதினங்கள்

ஜே.எம் சாலி அறுபதுகளின் தொடக்கத்தில் முதுகலை மாணவராக இருந்த காலத்தில் கண்ணன் என்னும் சிறுவர் இதழில் எழுதிய புதினத்தை ஏறத்தாழ ஐம்பத்தாறு ஆண்டுகளுக்குப் பின் நூலாக வெளியிட்டிருக்கிறார். சிங்கப்பூர் அரசின் கலாசாரப்பதக்கம் பெற்றதால் தேசியக் கலைகள் மன்றத்தின் நிதியுதவியுடன் தனது படைப்புக்களை மீண்டும் நூலாக வெளியிடும் வாய்ப்பு அவருக்குச் சாத்தியம்

ஆகியிருக்கிறது. 'இரு கண்கள்' என்னும் புதினம் ஜே,எம் சாலியின் ஆற்றொழுக்கான மொழிநடையில் அமைந்துள்ளது. ஆர்.வி அவர்கள் கண்ணன் பத்திரிகை ஆசிரியராக இருந்தபோது சிறுவர்கள் மட்டுமின்றிப் பெரியவர்களும் இக்கதையைப் படிக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளது உண்மைதான்.

கதையோட்டம் சரளமாகச் சென்றாலும் தொடராக எழுதும்போதோ அல்லது நூலாக்கும்போதோ சில தவறுகள் ஏற்பட்டிருக்கவேண்டும் என்பதை இந்நூலை நுட்பமாகப் படிக்கும் ஒருவர் அறிந்துகொள்ளமுடியும். எழுதிய காலத்தில் இத்தவறு ஏற்பட்டிருந்தாலும் கண்ணன் பத்திரிகை ஆசிரியர் தொடராக வெளியிட்டதால் கவனிக்காது விட்டாரா? அல்லது சென்ற ஆண்டு இதனை நூலாக்கியபோது ஆசிரியர் சாலி கவனிக்காது விட்டாரா என்ற ஐயம் எழுகிறது. ஆறாவது அத்தியாயமான 'பட்டணத்துப் பரவசம் ' என்ற அத்தியாயத்தில் "ஒரு வாரத்திற்கு மேலாகிவிட்டது. மசஹரின் மனத்தில் காதரை விட்டுப் பிரிந்து வந்த சோகம் மறைந்து வந்தது" என்று எழுதுகிறார். இதில் சுந்தர் என்னும் பெயர் காதரானது வேடிக்கை!. அதனினும் மேலாக சுந்தரைப் பிரிந்துவந்த சோகம் மறைந்து வந்தது என்று எழுதி இரண்டு மூன்று வரிகளுக்குப்பிறகு சுந்தர் இருந்திருந்தால் இதனைச் செய்யலாம்; அதனைச் செய்யலாம் என்று எழுதுவது சற்று முரணாக உள்ளது.

இதைப்போல மற்றொரு பெருந்தவறு பதினோராம் அத்தியாயத்திலும் நிகழ்கிறது. கோவிந்தன் சுந்தரைக் கொண்டுவந்து கடற்கரையில் காற்று வாங்கும்படி சொல்லிக் கைகழுவிவிடுகிறான். தாகூரின் தேசியகீதத்தைப்பற்றி எண்ணிய பரவசத்தில் இரவுப்பொழுது ஆகிவிடுகிறது. இப்பகுதியில் சாலி இப்படி எழுதுகிறார் "தூரத்தில் இருந்தது மீனவர் குப்பம்; குப்பத்தில் விளக்கேற்றிவிட்டார்கள்....... என்று வருணனையைத் தொடர்கிறார். "இருள் பரவத் தொடங்கிவிட்டதை சுந்தர் உணர்ந்தான்", என்று முடிக்கிறார். வருணனைத் தொடக்கத்தை ஆசிரியர் செய்வதாக எடுத்துக்கொண்டு படிக்கத் தொடங்கினாலும் இருகண்களிலும் பார்வை இழந்தவனுக்கு இரவுப்பொழுது எப்படித் தெரியும்? என யோசிக்கவேண்டி உள்ளது. ஐம்பத்தாறு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட ஒரு கதையை நூலாக்கும்போது எழுத்தாளர் சாலி பொறுப்புடன் மெய்ப்புப் பார்க்கவில்லையா? தம் முதுமை காரணமாக இந்த ஓட்டைகளைக் கவனிக்காதுவிட்டரா? இன்றைய சிறுவர்கள் (வாசகர்கள் ) குறித்த மெத்தனமா? என் அடுக்கடுக்காகக் கேள்விகள் எழுகின்றன.

சிங்கப்பூரில் சிறுவர் புதினமே இல்லை எனக் கவலும் சூழலில் சித்துராஜ் பொன்ராஜ் எழுதியுள்ள 'கெளண்டில்யன் சதுரம்' என்னும் சிறுவர் புதினம் பாராட்டப்படவேண்டிய முயற்சி. தொடக்கநிலை நான்காம் வகுப்பில் படிக்கும் ஒன்பதுபத்து வயதுச் சிறுவர்கள் படித்து மகிழத்தக்க புதினம். புத்திசாலி மாணவர்களான ஆனந்த், ஹமீது, எடிசன் லீ ஆகிய மூவர் பற்றிய கதை இது. பல்லினச்சூழலைப் பளிச்செனக் காட்டுகிறது. ஆனந்த் அறிவியலில் புலி. இவர்களின் கணிதப்பாட ஆசிரியர் திடீரென்று தம் பதவியிலிருந்து விலகுவதற்குரிய காரணத்தை அறிய இவர்கள் முற்படுகிறார்கள். உண்மையான காரணம் இவர்களை வியப்புக்கு உள்ளாக்குகிறது. இந்தோனேசியாவிலுள்ள காலிமந்தான் பகுதியில் ஒரு மந்திரவாதியின் பிடியில் சிக்கிய அவருடைய தாத்தாவையும் பூர்வீக வீட்டையும் காப்பாற்றப் போவதாகச் சொல்கிறார். ஆசிரியருக்கு உதவும்பொருட்டு அவருக்கே தெரியாமல் மூன்று பேரும் கலிமந்தான் காட்டுப்பகுதிக்குச் செல்கிறார்கள். சில அறிவியல் அடிப்படைகளைக் கொண்டு மந்திரவாதி தந்திரமாக அங்குள்ள மக்களை ஏமாற்றி வைத்திருக்கிறான் என்பதைக் கண்டுபிடிகிறார்கள். அதனை மக்கள் முன்னிலையில் வெளிச்சமிட்டுக்

காட்டுகிறார்கள் எனக் கதையை முடிக்கிறார்.

ஒன்பதுபத்து வயதுச் சிறுவர்கள் குறிப்பாக ஆசியச்சூழலில் வளரும் சிறுவர்கள் மூவரும் கலிமந்தான் காட்டுப்பகுதிக்குச் செல்வது நடைமுறை வாழ்வில் சாத்தியமில்லை. தமிழ்ச்சூழலில் நம்புவதற்குச் சற்று கடினம்தான்; இருப்பினும் கற்பனையான படைப்புலகில் அவர்கள் எங்கும் செல்ல முடியும். புதின ஆசிரியர் கூறுவதுபோல் “இப்போது ஆங்கிலத்தில் பெர்சி ஜாக்சன் போன்றோர் எழுதும் சிறுவர் நாவல்களிலும் உள்நாட்டிலேயே எழுதப்படும் ஷெர்லாக்சாம் போன்ற சிறுவர் கதைகளிலும் சிறுவர்கள் செய்யும் சாகசங்களைக் கருத்தில்கொண்டு இவ்வாறு அமைத்தேன். ஆயினும் இது புதிதல்ல. எனிட் பிளைட்டன் போன்றோர் ஐம்பதுகளில் எழுதிய புத்தகங்களில்கூட இத்தகைய பயணங்கள் உண்டு என்பதை நினைவில் கொண்டால் சிறுவர்கள் கலிமந்தான் பகுதிக்குச் செல்லும் சாகசப் பயணம் நம்பவேண்டிய பயணந்தான். சித்துராஜ் பொன்ராஜ் சிறுவர் புதினத்தின் முன்னோடியாகத் திகழ்கிறார். இவருடைய முயற்சி பலருக்கும் உந்துசக்தியாக அமைந்து எதிர்காலத்தில் சிறுவர் புதினங்கள் பெருக வழிவகுக்கும் என நம்பலாம்.

## சிறுவர்க்கெனப் பட்டறைகள்/ கதை கூறும் வகுப்புகள்

கதை சொல்வது எப்படி? என்று பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பட்டறை நடத்தப்பட்டது. தேசிய நூல்நிலையம் இப்பட்டறை நடத்துவதற்கு இடவசதி அளித்திருந்தது. இதன் பயனாக மாணவர்களும் கதை எழுதும் திறன் பெற்று வருகின்றனர். இதுபோன்று சிறுவர்களுக்குக் கதை கூறும் வகுப்பினை அழகுநிலா கடந்த இரண்டு ஆண்டுகளாக நூலகத்தில் நடத்திவருகிறார். இருபது முதல் இருபத்தைந்து மாணவர்கள் வருகின்றனர். இவர்கள் அனைவரும் தமிழகத்திலிருந்து/ இந்தியாவிலிருந்து வந்தவர்கள். உள்ளூர்க் குடிமக்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்பதில்லை.சுமார் அரை மணி நேரம் இவ்வகுப்பு நடக்கின்றது.

## சிறுவர்கள் எழுதிய கதைநூல்கள்

ஆர்த்தி ஆனந்த் என்னும் மாணவியின் கதை நூலாக “வீணாவும் தொலைந்த பதக்கமும்” என்னும் தலைப்பில் வெளிவந்துள்ளது. நியூ டவுன் தொடக்கப்பள்ளித் தமிழாசிரியர் மசூது தம் மாணவர்களுக்குப் பட்டறைகள் நடத்திக் கதைகளையும் எழுத ஊக்குவிக்கிறார். ‘மூக்குக் கண்ணாடி’ என்னும் கதைத்தொகுப்பு மாணவர்களின் படைப்பாகும். சிறுவர்கள் தம்மையொத்த சிறுவர்களின் மனநிலை, விருப்பு வெறுப்புகள் ஆகியவற்றை நன்கு அறிவர் .ஆகையால் அவர்களால் சிறுவர்க்கேற்ற படைப்புகளை உருவாக்கமுடியும்.

## சிறுவர் வாசிப்பு நூல்களின் பெருக்கம்

சிறுவர்கள் வாசிப்பினால் வளம்பெற முடியும்; படைப்பாற்றலை வளர்க்கமுடியும் என்பது உண்மைதான். ஆகவே வாசிப்புத் திறனை மேம்படுத்தும் நோக்குடன் நிறைய நூல்கள் வெளிவருகின்றன. அவை கற்பித்தல் நோக்குடன் எழுதப்படுகின்றன. துணைப்பாட நூல்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவை இலக்கியமா? பாடநூல்கள் இலக்கியத்தகுதி உடையனவா? என்ற கேள்விகள் எழுவது இயல்பே.அவற்றை இலக்கியம் என்று கருதுவது இலக்கியச்செவ்விபற்றி அறியாமையால் ஏற்படும் மயக்கமே ஆகும்.

சிங்கப்பூரில் சிறுவர் நூல்கள் வெளியிடுவோர் மிகச்சிலரே. அவர்களும் தமிழ்மொழியைப் பிழைஇன்றி எழுதும் ஆற்றல் இல்லாதவர்கள்.இவர்களுக்கு வாசிப்பு நூல்களின் தரம்குறித்த கவலையும் இல்லை. நூல்களை வணிகப்பண்டங்களாகக் கருதும் மனநிலையே காணப்படுகிறது. சுயமாகச்சிந்தித்துக் கதைகளை உருவாக்குவது இல்லை. சிறுவர் மன நிலை , அவர்தம்

உளவியல்பற்றிய அறிவும் இல்லை.

ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிடுகின்றனர். படங்களும் பொருத்தமாக இல்லை. நூலகத்தின் சிறுவர் பகுதியில் இப்படிப்பட்ட நூல்களின் எண்ணிக்கை பெருகியுள்ளது. வாணிப நோக்குடனும் மர்மக்கதைகளும், துப்பறியும் கதைகளும் நூல்வடிவம் பெறுகின்றன. ஆங்கிலமொழியில் 'டிராகுலா' (Dracula), டாக்டர் ஜெகில் மிஸ்டர் ஹைட் (Dr Jekyll &Mr Hyde) (Frankenstein) போன்றவை போலத் தமிழில் கதைகள் வெளிவருமா? என்றே சிறுவர்கள் ஏங்குகின்றனர்.

## சிறுவர் இலக்கிய நலிவுக்குக் காரணங்கள்

- தமிழ்மொழி கற்பதுகுறித்த அலட்சிய மனப்போக்கு.
- சிறுவர் இலக்கியக் கோட்பாடுகள்குறித்த மெத்தனம்.
- வானொலியின் கோரப்பசிக்குத் தீனி போடும் போக்கு.
- குழந்தை உளவியல்குறித்த புரிதல் இல்லாமை.
- குழந்தை இலக்கியத்துக்கு உள்ள சந்தை அரசு நூலகம், பள்ளி நூலகம் என்னும் சந்தையைக் கருத்தில்கொண்டு அவசரம் அவசரமாக உருவாக்கப்படும் வணிகப்பண்டமாக நூல்கள் பெருகிவருகின்றன. இதனால் நலிவு ஏற்படுகிறது.
- போட்டி மிக்க உலகில் தமிழ் நூல் வாசிப்புக்கு மக்கள் மத்தியில் அளிக்கப்பட்டுள்ள இடம்.
- மதிப்பெண்களைக் குறிவைத்த கல்வி.
- தாய்மொழியின் இடம் பின்னுக்குத் தள்ளப்பட்டு ஆங்கிலக் கல்வியின் செல்வாக்கு அதிகரித்திருப்பது.
- நவீன ஊடகங்கள் உருவாக்கியுள்ள வறட்சி கற்பனை, புத்தாக்கச்சிந்தனை முதலியவற்றில் ஏற்பட்ட வறட்சி.
- ஒய்வு நேரத்தை விழுங்கும் தகவல் தொழில் நுட்பச்சாதனங்கள் .

## நலிவிலிருந்து மீளும் வழிகள்

- தமிழ்மொழிக்கல்விகுறித்த மக்களின் அலட்சியமனப்பான்மை மாறவேண்டும்.
- ஆங்கில நூல்களை வாசிப்பதில் காட்டும் தீவிரத்தில் சிறு பகுதியையாவது தமிழ் நூல்களை வாசிப்பதில் காட்டவேண்டும்.
- தமிழ் வகுப்புகள் கற்றலைத் தூண்டும் களமாகவும், மொழிமீது பற்றுக்கொள்ளவைக்கும் களமாகவும், தமிழ்மொழிவளத்தைப் பெருக்கிக்கொள்ளும் பயிற்சிக் களமாகவும் அமையவேண்டும்.
- மாறாகத் தேர்வில் மதிப்பெண்களைப் பெறப் பயிற்சி அளிப்பதே முழுமையான நோக்கமாகக் கொண்டு செயல்படும் நிலை மாறவேண்டும்.
- பள்ளிகளின் நோக்கம் மதிப்பெண் களைப் பெறவைப்பது என்னும் நிலை மாறவேண்டும். இந்நோக்கம் மாறினால் ஆசிரியர்கள் மாணவர்கள் நூல்களை வாசிக்கவைக்கும் நடவடிக்கைகளுக்கும், படைப்பாற்றல் திறனை வளர்க்கும் நடவடிக்கைகளுக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்க வாய்ப்பு ஏற்படும்..
- ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன் பெரும்பாலான ஆசிரியர்கள் தங்கள் பணியில் தம்மை முழுவதுமாக அர்ப்பணித்துக்கொண்ட நிலை போல இன்றில்லை. இன்று ஒரு சிலர் தவிரக் கூலிக்கு மாரடிக்கும் மனநிலை கொண்டுள்ள ஆசிரியர்களே அதிகம்

உள்ளனர்.

- இன்று அர்ப்பணிப்பு உணர்வுகொண்ட ஆசிரியர்கள் மிகமிகக் அருகிவருவது தமிழ்மொழிக் கல்வியில் தேக்கநிலையை ஏற்படுத்திச் சிறுவர் இலக்கிய நலிவுக்கு வழிவகுத்து விட்டது.

## முடிவுரை

அரசாங்கம் வாசிப்பு மாதம், தமிழ்மொழி மாதம் என ஒவ்வொன்றையும் மாதக்கணக்கில் நடத்துகிறது. இவற்றின் பலன் தமிழ் மக்களைச் சென்றடைய வேண்டுமானால் தமிழ்மொழியின் அவசியத்தையும் , இலக்கியங்களின் பால் நாட்டத்தையும் வளர்த்துக்கொள்வது அவசியம். மேனாட்டு நாகரிக மோகத்தில் வீழ்ந்திருக்கும் தமிழர்கள் வாசிப்பது போன்ற நல்ல விஷயங்களில் அக்கறை காட்டவேண்டும்.

## References


Kumaran, S. (2015). *Tamil Kuzhanthai Ilakiyam Vivathangalum Vimarsanangalum*. Chennai: Tamarai publications.

Letchumy Minatchisundram. (1988). "Malaysia Siruvar Kavithaigal", *Malaysia Tamil kavithai Karutaranga Malar.* Kuala Lumpur: Uma Publication.

Menatchi Sabapathi. (2011). *Singapore Tamil Ilakiya Varalaru*. Singapore: Singapore Ezhutalar Kazhakam.

Palanivelu, Na. (1975). *Kavithai Malargal*. (Second edition). Thanjavur: Thai Nuulaha Veliyidu.

Palanivelu, Na. (1990). *Paapa Padalgal*. Singapore: Singapore Velli Vizha Kondata Kuzhu.

Puvannan. (1980). *Siruvar Ilakiya Varalaru*. Chennai: Vanathi Publications.

Srilaxmi, M., S. (2005). *Singapore Tamil Ilakiya Azhamum Agalamum*. Chennai: Marutha Pathipagam.

# உயிர்மெய் : வரலாற்றுநிலை - சமகாலநிலை

# Uyirmei Ezhuthu: History and the contemporary state

முனைவர் த.சத்தியராஜ் / Dr.Satyaraj [1]


### *Abstract*

In Tamil grammar, the alphabets are categorised as Uyir ezhuthu, Mei ezhuthu, Uyirmei ezhuthu and Ayutha ezhuthu. Among these, when Uyir ezhuthu and Mei ezhuthu combine they form Uyirmei ezhuthu. Even though these were referred to as *saarpezhuthu*, during the Tholkaapiyar days, they were identified as a part of language tradition and punariyal. Starting from the period of Tholkaapiyar, the Uyirmei ezhuthu were described in many ways. These descriptions were mainly focused on the grammatical nature of Uyirmei ezhuthu, the scale of sound (mathirai), the characteristics and also the application of the alphabets in the language context. Based on these, the current article is an outcome of a research regarding the history of Uyirmei ezhuthu and the contemporary level of it at present.



Date of submission: 2018-10-17
Date of acceptance: 2018-11-25
Date of Publication: 2018-12-30



Corresponding author's
Name: Dr.Satyaraj
Email: neyakkoo27@gmail.com


**Key Words:** Tamil grammar, Tholkapiyam, Uyirmei ezhuthu, Tamil language, Ilampuranar.

## முன்னுரை

உயிர்மெய் எனும் கலைச்சொல் உயிர் + மெய் சேர்க்கையினைக் காட்டும். இதனை இளம்பூரணர் உயிர்மெய்க் கூட்டம் (கோபாலையர் - அரணமுறுவல், 2003 ஜீ.79) என்பார். இது புதிய வடிவத்தை அடையாளப்படுத்திக் காட்டும் சொல்லாக விளங்குகிறது. இச்சொற் பயன்பாடு பிற்காலத்தில் சார்பெழுத்தாக எண்ண வழிவகுத்தது. தொல்காப்பியர் காலத்தில் அது சார்பெழுத்தாகக் கருதப்படவில்லை.

*"உயிர்மெய்யிலும் மாத்திரை குழப்பம் இருக்கிறது [குறில் உயிர்மெய் (குறில் 1 + மெய் 1லு) மாத்திரைக்குப் பதில் ஒரு மாத்திரையும் நெடில் உயிர் 2லு மாத்திரைக்குப் பதில் இரண்டு மாத்திரை பெற்றது] என்று கருதிச் சார்பெழுத்தாகக் கொண்டுவிட்டார் நன்னூலார். இது பொருந்தாது"* (சண்முகம் 2001, p.72). எனவே, தொல்காப்பியர் உயிர்மெய் கலைச்சொல்லைக் கவனமாகக் கையாளுகிறார் எனலாம். அச்சொல்லைப் புதைநிலையிலும் (ஆழ்மனம்) புதைநிலை (புறமனம்) தொல்காப்பியர் அமைத்துள்ளார். இதனை வரலாற்றுநிலை சமகாலநிலை மீக்கருத்தியல் வாய்பாடு கொண்டு இங்கு

[1]The author is a Assistant Professor in Hindustan Arts and Science College, Coimbatore, India. neyakkoo27@gmail.com

விளங்கிக்கொள்வோம்.

## உயிர்மெய் : உருத்தரித்தல் சார்பாதல்

சார்பெழுத்தாகக் கருதப்பெறாத உயிர்மெய் வடிவத்தைத் தொல்காப்பியர் முதலில் புதைநிலையில் அமைக்கிறார். அதனை,

*மெய்யோ டியையினும் உயிரியல் திரியா (தொல்.எழுத்து.இளம்.10)*

*புள்ளி யில்லா எல்லா மெய்யும்*

*உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்*

*ஏனை உயிரோடு உருவுதிரிந் துயிர்த்தலும்*

*ஆயீ ரியல உயிர்த்த லாறே*
*(தொல்.எழுத்து.இளம்.17)*

*மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலையே (தொல்.எழுத்து.இளம்.18)*

*அம்மூ வாறும் வழங்கியன் மருங்கின்*

*மெய்ம்மயங் குடனிலை தெரியுங் காலை*

*(தொல்.எழுத்து.நச்சர்.22)*

எனவரும் நூற்பாக்களின்வழி அறிந்துகொள்ளலாம். இவை புதைநிலையில் உயிர்மெய் வடிவத்தை வெளிப்படுத்துகின்றன என்பதை இளம்பூரணர் உரைவழிப் புரிந்துகொள்ளலாம்.

உயிரும் மெய்யும் கூடுகின்ற உயிர்மெய்க் கூட்டத்தினை மெய்யோடி யையினும் என உயிர்மேல் வைத்துக் கூறியது, அவ்வுயிரின் மாத்திரையே இதற்கு மாத்திரையாகக் கூறுகின்றமை நோக்கிப் போலும். இயல் என்றது பெரும்பான்மை மாத்திரையினை சிறுபான்மை குறியும் எண்ணும் கொள்க.

*எடு : க எனவும், கா எனவும் அவ்வாறு நின்றமை அறிக*
*(கோபாலையர் - அரணமுறுவல், 2003, p77).*

*'தன்னினம் முடித்தல்' என்பதனான், அளபெடை உயிரோடும், சார்பிற்றோற்றத்து உயிரோடும் கூறும் உயிர்மெய்யும் கொள்க.*

*எடு: உருவு உருவாகி உயிர்த்தல் கங எனக் கண்டுகொள்க. உருவு திரிந்து உயிர்த்தல் கா ஙா எனக் கண்டுகொள்க.*

*ஈண்டு உயிரும் மெய்யும் கூடுகின்ற உயிர்மெய்க் கூட்டத்தினை 'எல்லாம் மெய்யு'மென்று மெய்மேல் வைத்துக் கூறியது, அது முன் கூறிக் கூறப்படுதல் நோக்கிப் போலும். உயிர்மெய் யென்பதனை ஒற்றுமை கொள்வழி உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையெனவும் வேற்றுமை கொள்வழி உம்மைத்தொகையெனவும் கொள்க. 'இல்லாத' என்பது 'இல்லா' என நின்றது. உருவு திரிந்து உயிர்த்தல் மேலும் கீழும் விலங்கு பெறுவன விலங்கு பெற்று உயிர்த்தலும், கோடு பெறுவன கோடுபெற்று உயிர்த்தலும், புள்ளி பெறுவன புள்ளிபெற்று உயிர்த்தலும், புள்ளியும் கோடும் உடன்பெற்று உயிர்த்தலும் எனக் கொள்க (கோபாலையர் - அரணமுறுவல், 2003, p.79).*

*தோன்று நிலை என்றதனால் உயிர்மெய்களைப் பிரிக்கும் இடத்தும், கூட்டு மிடத்தும், அவ்வாறே முன்னும் பின்னும் பெற நிற்குமென்றமையான், அக்கூட்டம் பாலும் நீரும் போல உடன் கலந்ததன்றி, விரல் நுனிகள் தலைப்பெய்தாற் போல வேறு நின்று கலந்தன வல்ல என்பது பெறுதும் (கோபாலையர் - அரணமுறுவல், 2003, p.80)*

இளம்பூரணர் உயிர்மெய் வடிவத்தை உயிர்மெய்க் கூட்டம் என்று உரைகூறித் தொல்காப்பியரின் ஆழ்மனப் பதிவைச் சுட்டிக்காட்டுகிறார். அதனை, நச்சர் மேலும் வலுப்படுத்துகிறார். அதாவது, உயிர்மெய்யில் வரக்கூடிய விலங்கு, கோடு, புள்ளி பெறக்கூடிய முறை / மாறுகின்ற முறைகளை விளக்கிச் செல்கின்றார். அது இங்கு எண்ணிப் பார்க்கத்தக்கது.

*புள்ளியில்லா மெய்யெனவே, முன் பெற்றுநின்ற புள்ளியை உயிரேற்றுதற்குப் போக்கினமை பெறுதும். உருவுருவாகி*

*யெனவே புள்ளி பெறுதற்காக இயல்பாகிய அகரம் நீங்கிய வடிவே பின்னர் அகரம் பெறுதற்கு வடிவாமென்பது கூறினார்.*

*எடு: கஙய என வரும்.*

*உருவு திரிந்து உயிர்த்தலாவது மேலுங் கீழும் விலங்கு பெற்றும், கோடு பெற்றும், புள்ளி பெற்றும், புள்ளியுங் கோடும் உடன் பெற்றும் உயிர்த்தலாம். கி கீ முதலியன மேல்விலங்கு பெற்றன. கு கூ முதலியன கீழ்விலங்கு பெற்றன. கெ கே முதலியன கோடு பெற்றன. கா ஙா முதலியன புள்ளி பெற்றன. அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினார். மகரம் உட்பெறு புள்ளியை வளைத்தெழுதினார். கொ கொ ஙொ ஙொ முதலியன புள்ளியுங்கோடும் உடன்பெற்றன. இங்ஙனந் திரிந்து ஒலிப்பவே உயிர்மெய் இருநூற்றொருபத்தாறாயிற்று. ஆகவே உயிர்மெய்க்கு வடிவும் ஒருவாற்றாற் கூறினாராயிற்று.*

*இதனானே மெய் தனக்கு இயல்பாகிய அகரத்தை நீங்கி நிற்பதொரு தன்மையும் பிறிதோருயிரை ஏற்குந் தன்மையும் உடைய தென்பதூஉம், உயிர் மெய்க்கட் புலப்படாது இயல்பாகிய அகரமாய் நிற்குந் தன்மையும் மெய் புள்ளிபெற்றழிந்த வழி அவற்றிற்குத் தக்க உயிராய்ப் புலப்பட்டு வருந்தன்மையும் உடைய தென்பதூஉம் பெற்றாம். உயிர்மெய் என்பது உம்மைத் தொகை (கோபாலையர் - அரணமுறுவல், 2003, pp.8586)*

ஆக, தொல்காப்பியர் தாம் கூற வந்த ‘உயிர்மெய்’ கருத்தியலைப் புதைநிலைச் சிந்தனையாகவே பார்க்கிறார் என்பதை உணரமுடிகிறது. நூன்மரபு இயலில் கூறவேண்டிய தேவை இருந்தும் தவிர்த்திருக்கிறார் அல்லது அதுபற்றிய எண்ணம் கற்றல்/கற்பித்தல் நிலையில் பின்னர் எழுந்தது எனலாம். மேலும், இவ்வுரைகள் உயிர்மெய் வடிவம் புதைநிலையாகக் கொள்ளப்பட்டாலும், அதனைத் தனியொரு வடிவமாக எண்ணுதல் வேண்டும் என எடுத்துரைக்கின்றன.

தொல்காப்பியர் மொழியின் எழுத்துக்களை அறிமுகம் செய்யும் இடத்தில் அறிமுகப்படுத்தாமல் உயிர்மெய் என்கிற வடிவத்தை மொழிமரபு, புணரியல் ஆகிய இயல்களில் பதிவுசெய்கிறார். அதனை,

*உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா (தொல்.எழுத்து.இளம்.60)*

*உயிர்மெய் யீறும் உயிரீற் றியற்றே (தொல்.எழுத்து.இளம்.107)*

எனவரும் நூற்பாக்கள் சுட்டிக்காட்டும். இவ்விடங்களில் தொல்காப்பியர் உயிர்மெய் எனும் கலைச்சொல்லை நேரடியாகப் பயன்படுத்துவதன் நோக்கத்தை இளம்பூரணர் தெளிவுபடுத்துகிறார். அதனைப் பின்வரும் உரைகள் சுட்டிக்காட்டும்.

*உயிர்மெய் அல்லன மொழி முதல் ஆகா - உயிரொடு கூடிய மெய்யல்லாதனவாகிய தனிமெய்கள் மொழிக்கு முதலாகா; உயிரொடு கூடிய மெய்கள் மொழிக்கு முதலாம் எ று.*

*ஈண்டு உயிர்மெய்யென்பது வேற்றுமைநயம் கருதியெனவுணர்க. ஈண்டு ஒற்றுமை கருதில்,*

*“கதந பமஎனும் ஆவைந் தெழுத்தும்*

*“எல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே” (மொழிமரபு:23)*

*எனச் சூத்திரம் சுருங்க வருவதன்றி, இதனாற் சொல்லப்பட்ட அறுபது உயிர்மெய்யினை எடுத்தோத வேண்டிச் சூத்திரம் பரக்க வருமென்பது*


*(கோபாலையர் - அரணமுறுவல் 2003, p.96)*

*உயிர்மெய் ஈறும் உயிர் ஈற்று இயற்று - உயிர்மெய் மொழியீற்றில் நின்றதுவும் உயிரீற்றின் இயல்பை யுடைத்து, இடையில் நின்றதுவும் உயிரின் இயல்பை யுடைத்து எறு.*

*ஈறும் இடையும் உயிருள் அடங்குமெனவே, முதல் மெய்யுள் அடங்கும் என்பதாயிற்று. இதனான், விள முதலிய உயிர்மெய்*

*ஈறெல்லாம் அகரவீறு முதலிய உயிரீற்றுள் அடங்கிப் புணர்ச்சிபெறுவன வாயின. வரகு என்புழி இடை நின்ற ரகர உயிர்மெய் அகரமாய் உயிர்த்தொடர்மொழி யெனப்பட்டது. ஈண்டு உயிர்மெய் ஒற்றுமை நயத்தான் உயிர்மெய்யென வேறு ஓர் எழுத்தாவதன்றி, ஈறும் இடையும் உயிரென ஓரெழுத்தாயும், முதல் மெய்யென ஓரெழுத்தாயும் நின்றதாயிற்று* (கோபாலையர் - அரணமுறுவல், 2003, pp.112113).

இது தனித்த முதன்மையான எழுத்துக்களாக இல்லாததால் தொடக்கத்தில் 'எனப்படுப' (தொல்.எழுத்து.இளம்.1) எனக் குறிப்பிட்டு வேறுபடுத்துகிறார் தொல்காப்பியர் என இளம்பூரணர் (கோபாலையர் - அரணமுறுவல், 2003, ஜீ.73) உரை எழுதி இருப்பது கவனிக்கத்தக்கது. இங்கு, செ.வை.சண்முகம் கூறிய கருத்தும் வலுப்படுகின்றது. அவர் மாத்திரையை வைத்துக்கொண்டு சார்பெழுத்தாகத் தொல்காப்பியர் கருதவில்லை என்றாலும், தொல்காப்பியர் உயிர்மெய் வடிவத்தைச் சார்பெழுத்தாகக் கருதாமைக்குப் பிறிதொரு காரணமும் இருக்கலாம். அது சார்பெழுத்தாக வருவது மொழியில் பிறிதொன்றைச் சார்ந்து வரும் தன்மையுடையதாக இருத்தல் வேண்டும். இதனை குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் (தொல்.எழுத்து. இளம்.2) ஆகியன சான்று பகருகின்றன. இவை பிறிதொன்றைச் சார்ந்தே அமைகின்றன. ஆனால், உயிர்மெய் அவ்வாறில்லை. இது ஏற்கனவே உட்பிணைப்பு நிலையில் (க் + அ = க) உருவானது. ஆதலின் தொல்காப்பியர் சார்பெழுத்தாகக் கருதவில்லை எனலாம். ஆதலால் தொல்காப்பியம் மொழிமரபு, புணரியல் ஆகிய இயல்களில் அதற்குரிய கலைச்சொல்லை நூற்பாக்களில் பயன்படுத்துகிறார் எனலாம். இதனை மொழியியல் கண்ணோட்டத்தில் நோக்கினால் புதைநிலை புறநிலை வடிவங்களாகக் கொள்ளமுடியும். அதனைப் பின்வரும் வரைபடம் உணர்த்தும் கருத்தியலாகப் புரிந்துகொள்ளலாம்.




## உயிர்மெய்: வரலாற்றுநிலை சமகாலநிலை

*வரலாற்றுநிலை - சமகாலநிலை எனும் மீக்கருத்தியல் வாய்பாடு ஒவ்வொரு இலக்கணப் பனுவல்களிலும் அமைந்திருக்கும் பொதுப்பண்பு* (இராசாராம், 2010). இப்பண்பு ஒரு வாய்பாடாக அமைந்துவிடுகிறது. அது எல்லா இலக்கணங்களுக்கும் பொதுவான பண்பாகையால் மீச்சிந்தனையாக நிலைபெறுகிறது. இந்நிலைபேறாக்கத்தினை உயிர்மெய் கருத்தியல் மூலம் உணரலாம்.

அதற்கு முன்பு இலக்கணவியல் நூலுள் கூறப்பட்ட வரலாற்றுநிலை சமகாலநிலை எனும் மீக்கருத்தியல் வாய்பாட்டிற்கான ஒருவகை விளக்கத்தை முதலில் அறிவோம்.

*இலக்கணத்தை எழுதத் தயாராகும் இலக்கணக் கலைஞன் செய்யுளையும் வழக்கையும் தரவுகளாக மொழிமெய்மைகளாகக் கருதும் நிலையில் வரலாற்றுக் காலம் சமகாலம் வரலாற்றுக் காலம் என்னும் ஊடாட்டத்திற்குத் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்கிறான். முன்னையிலக்கணங்களை மதிப்பீடு செய்தல், செய்யுள் இலக்கணத்தோடு பொருத்திப் பார்த்தல், சமகால வழக்கிலுள்ள மொழி மாற்றங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து இலக்கண அமைதிக்குத் தகுதிப்படுத்தல் என நடைபெறும் இவ்வூடாட்டம் கால பரிமாணத்தோடு தொடர்புடைய செயல்பாடுகள்.*

*முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி - தொல். பா.*

*முன்னோர் நூலின் வழியே - நன்.சி. பா.*

*முன்னோர் நூலின் முடிபுநோக்கி - இ. வி. சி. பா.*

*அகத்திய நூல்வழி - மு.வீ.சி.பா.*

*என்னும் வரிகள் இக்கருத்தை உணர்த்துகின்றன. என்ப, என்மனார் புலவர் உள்ளிட்ட சொற்றொடர்கள் இவ்வரலாற்றுத் தொடர்பை மேற்கோளாகக் காட்டுவன. இவற்றை மரபிலக்கணங்களின் வரலாற்றுப்போக்கைப் பதிவு செய்யும் அகச்சான்றுகள் என்று கூறலாம்.*

*(இராசாராம் 2010, p.310)*

இவ்விளக்கம் முன்னோர் மரபை வரலாற்றுநிலை என்றும் சமகால மரபைச் சமகாலநிலை என்றும் வரையறுத்துக்காட்டுகின்றது. இதனை இங்கு உரசிப் பார்க்கலாம்.

மேற்காட்டிய வரைபடத்தின் மூலம் உயிர்மெய்க் கருத்தியலைத் தொல்காப்பியர் புதைநிலை புறநிலை எனும் நிலையில் அறிமுகப்படுத்துகிறார் என்பதை முன்பு கண்டோம் அல்லவா? அங்கு, தொல்காப்பியர் கூறிய கருத்தை வரலாற்றுநிலையாகவும், இதன் இணையெதிர் வாய்பாட்டுக் கருத்தியலாகிய சமகாலநிலை என்பதைப் புறநிலையில் கூறும் தன்மையாகவும் கொள்ளலாம். இதனை இரண்டு வகையில் புரிந்துகொள்ளலாம்.

1. புதைநிலை புறநிலை = முன்னோர்மரபு சமகாலமரபு

2. புதைநிலை புறநிலை = ஆழ்மனம் புறமனம்

## 1. புதைநிலை புறநிலை = முன்னோர்மரபு சமகாலமரபு

தொல்காப்பியர் கூறிய புதைநிலை புறநிலை அமைப்பிலான விளக்கத்தில் உள்ள புதைநிலைச் சிந்தனையை முன்னோர் வழங்கியமுறை என்பதாகக் கொள்ளலாம். அதாவது, தமிழ் மொழியின் வரலாற்றை இன்றைய தொல்லியல், வரலாற்றாய்வாளர்கள் போன்றோர் கி.மு.6000 வரை நீட்டித்துப் பார்க்கின்றனர். கி.மு.6000ஆம் நூற்றாண்டுவாக்கில் வழங்கிய எழுத்துமுறை சிந்துவெளி எழுத்துமுறை என்பதாகக் கூறுகின்றனர். அதன்பிறகு தமிழ்மொழி செப்பம் செய்யப்படுகின்றது. இதனைச் செய்தவர் ஐந்திரனார் என்பர். எனவே இதனைத் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள என்ப, மொழிப, என்மனார் புலவர் போன்ற சொல்லாடல்கள் தெளிவுபடுத்தும். ஆகவே, ஐந்திரனார் சிந்தனைப்பள்ளியின் தொடர்ச்சி தொல்காப்பியம் எனக் கருதப்படுகின்றது. இதன் தொடர்ச்சியால் தொல்காப்பியர் முதலில் புதைநிலையாகவும், பின்பு புறநிலையாகவும் அமைக்கிறார் எனலாம். ஆக புதைநிலை வரலாற்றுநிலையையும், புறநிலை சமகாலநிலையையும் சுட்டிக்காட்டுகின்றன எனக் கூறமுடிகிறது.

## 2. புதைநிலை புறநிலை = ஆழ்மனம் புறமனம்

மேற்கூறிய விளக்கத்தோடு இப்பண்பின் வழியும் தொல்காப்பியரிடத்து அமைந்திருக்கும் வரலாற்றுநிலை சமகாலநிலை கருத்தியல் வாய்ப்பாட்டை வேறொரு வகையில் புரிந்துகொள்வோம்.

தொல்காப்பியர் தாம் கூறவருகின்ற கருத்தை உடனே வெளிப்படைத் தன்மையுடன் வெளிப்படுத்திக் காட்டுவதாகத் தெரியவில்லை. அவர் வெளிப்படையாக, அதாவது புறமனக் கருத்தியலாகக் காட்டுவதற்கு இருவழியைப் பின்பற்றுவதை ஊகிக்க முடிகின்றது. அதனை முதல் நூற்பாவிலிருந்து சுட்டிக்காட்டலாம்.

*எழுத்தெனப் படுவ*

*அகரமுதல னகர விறுவாய்*


*முப்பஃதென்ப*

*சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே (தொல்.எழுத்து.இளம்.1)*

இந்நூற்பாத் தொடங்கி 33 நூற்பாக்களில் தொல்காப்பியர் தமிழ் மொழிக்குரிய எழுத்துக்களின் எண்ணிக்கை, பெயர், மாத்திரை, வடிவம், மயக்கம் ஆகியவற்றைப் புறநிலையில் காட்டுகின்றார். இவற்றுள், எழுத்து, சார்ந்துவரல், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம், முப்பாற்புள்ளி, குற்றெழுத்து, நெட்டெழுத்து, மூவளபிசைத்தல், மாத்திரை, உயிர், மெய், உயிரியல், அரையளபு, வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து, சுட்டு, வினா, ஒற்றிசை நீடல், அளபிறந்து உயிர்த்தல், தோன்றுநிலை ஆகிய கலைச்சொற்கள் அடங்குகின்றன. ஆனால், எங்கும் உயிர்மெய் எனும் கலைச்சொல்லைப் பயன்படுத்தப்படவில்லை. இது அகமனக் கருத்தியலைச் சார்ந்தது. இக்கருத்தியல் அவர் மனதினுள் உயிர்மெய் சிந்தனையைப் புறமனமாகக் காட்டாமல் பார்த்துக்கொண்டுள்ளது. அந்தப் புறமனம் நனவிலி மனதிலிருந்து வெளிப்பட்டு அகமனக் கருத்தியலாகப் பின்பு உருத்தரிக்கிறது எனலாம். அதை மொழிமரபு, புணரியல் ஆகிய இயல்களில் அமைந்த 60, 107 ஆகிய நூற்பாக்களில் வெளிப்படையாக உயிர்மெய் சொல்லைப் பயன்படுத்துவதன் மூலம் அறியலாம். இது புறநிலைக் கருத்தியல் சார்ந்தது என்பதை வெளிப்படுத்துகிறது. இங்கு ஓர் ஐயம் எழுகிறது. மேற்காட்டிய இருவகை நிலைகளில் எவ்வகை வரலாற்றுநிலை சமகாலநிலை மீக்கருத்தியல் வாய்பாட்டுடன் மிக நெருங்கி வருகின்றது என்பதேயாம்.

## வரலாற்றுநிலை சமகாலநிலை (≠ முன்னோர்மரபு சமகாலமரபு) = ஆழ்மனம் புறமனம்

மேற்கண்ட விளக்கங்கள் மூலம் ஓர் உண்மை புலப்படுகிறது. வரலாற்றுநிலை சமகாலநிலை எனும் மீக்கருத்தியல் முன்னோர்மரபையும் தம் சமகாலமரபையும் வலியுறுத்தும் கருத்தியல் என்பதை இதுவரை மேற்கொண்ட ஆய்வுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (சத்தியராஜ், 2013, 2017 - 2018). அதுவொருவகையான புரிதலாக இருந்தது. இது, முன்பு இரா.கோதண்டராமன் எழுப்பிய வினாவிலிருந்து வேறொரு தளத்திற்கு நகர்த்திப் பார்த்தது. என்ப, மொழிப, என்மனார் புலவர் போன்ற சொல்லாடல்கள் எப்படி முன்னோர்மரபுகளைக் குறிக்கும் சொல்லாகும்? (இரண்டாம் வேற்றுமை கருத்தியலை இலக்கணவியல் நோக்கில் சிந்தித்து எழுதிய கட்டுரைக்கு அளித்த மதிப்பீட்டுரையில் கிடைக்கப்பெற்ற கருத்து) என அவரெழுப்பிய அவ்வினாவிற்கு விடை தேடவேண்டியதாகிறது. அதற்கான தீர்வு கிடைத்தாலும், அது மேலும் ஆராய்தற்குரியது.




இருப்பினும் அந்தத் தீர்வைக் காணலாம். ஏனெனில், இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட உயிர்மெய்க் கருத்தியலைப் புதைநிலையிலும் புறநிலையிலும் பேசக்கூடிய இடங்களில் முன்னோர் சமகாலத்தை வேறுபடுத்தும் தன்மைகள் நிலவவில்லை என்பதேயாம். அதாவது முன்னோர் மரபைக் குறிப்பிடும் என்ப, மொழிப போன்ற சொல்லாட்சிகள் ஓரிடத்தில்கூட வரவில்லை. எனவே, அக்கருத்தியல் முன்னோர்மரபு சமகாலமரபு தன்மையைப் பிரதிபலிக்கவில்லையென்பதையும், மாறாக ஆழ்மனம் (புதைநிலை) புறமனம் (புறநிலை) தன்மையைப் பிரதிபலிக்கிறது என்பதையும்

வெளிப்படுத்துகிறது. இதனைப் பின்வரும் வரைபடம் தெளிவுபடுத்தும்.

## நிறைவு

இறுதியாக, வரலாற்றுநிலை சமகாலநிலை எனும் மீக்கருத்தியல் வாய்பாடு ஆழ்மனம் (புதைநிலை) புறமனம் (புறநிலை) தன்மையுடன் மிகநெருக்கமாக வருகிறது எனலாம். இதில் வரலாற்றுநிலை சமகாலநிலை எனும் மீக்கருத்தியல் வாய்பாட்டைப் புதைநிலை - புறநிலை எப்படி வெளிப்படுத்தும்? தொல்காப்பியரின் புதைநிலை வடிவமானது முன்னோர் சிந்தனையின் ஆழ்மனப் (நூன்மரபு) பதிவாகும். அது புறநிலையாக மொழிமரபு, புணரியல் ஆகிய இயல்களில் வெளிப்படுகின்றது.

இது பின்பு ஆயிரம் நூற்றாண்டுகளுக்குப் பிறகு எழுந்த இலக்கண நூல்களில் எழுத்துக்களின் தனிவகையாக (சார்பெழுத்து நன்னூல்) அமைந்துவிடுகிறது. இப்பின்புலத்தைப் புரிந்துகொண்டால் அதனை (புதைநிலை புறநிலை) உணரலாம்.

## References


Irasaram, Su. (2010), *Ilakanaviyal Milkodpadum Kodpadikalum*. Nagerkoil: Kalasuvadu Pathipakam.

Ilangkumaranar, R. (2015). *Tholkapiyak Kalaisol Vilakam*. Chennai: Tamil Perayam.

Kopalaiyar, T., V., & Aranamuruval, N. (2003). *Tholkapiyam Ezhutathikaram Ilampuranam*. Chennai: Tamilman Pathipakam.

Kopalaiyar, T., V., & Aranamuruval, N. (2003). *Tholkapiyam Ezhutathikaram Nachinarkiniyar*. Chennai: Tamilman Pathipakam.

Shanmugam, Se., Vai. (2011). *Ezhuthilakana Kodpadu*. Chennai: Institute of International Tamil Studies.

Satyaraj, T. (2013). *Tholkapiyam-Palaviyakaranam Kuurum Solliyal Koodpadukal*. Thanjavur: Thanjavur Tamil University.

Satyaraj, T. (2017). *Milkodpadu Nookkil Aan-Pen Iyalbugal*. Thiruchengodu: KSR Womens Arts and Science College.

Satyaraj, T. (2018). *Milkodpadu (Thokapiyam Mulamum Uraigalum)*. Coimbatore: Inam Publications.

Suyambu, P. (2004). *Ilakana Nulgalil Karuthu Valarchi*. Chennai: Institute of International Tamil Studies.

Vengkadesan & Prakash. (2010). *Tholkapiya Nannuul*. Chennai: New Century Book House.

# ஜெர்மனி ஃப்ராங்கன் கல்வி நிறுவனத்தின் தமிழ் ஓலைச்சுவடி மற்றும் காகித ஆவணங்கள் கூறும் செய்திகள்

# The records of Halle Franckeischestifftung (Germany) Tamil palm leaves and paper anuscript collections

முனைவர்.க.சுபாஷிணி / Dr.K.Subashini [1]

***Abstract***

The Francke Foundations in Halle Germany, founded in 1695 by Dr.August Hermann Francke, supported the Danish crown by providing missionaries to spread the Gospels and Lutheran protestant religion in Tranquebar, TamilNadu. In 1620 AD, an agreement was signed between the Raghunatha Nayak of the Tanjore Nayak Kingdom and Danish Admiral Ove Gjedde, on behalf of the King of Denmark. With this agreement, the village of Tranquebar was acquired by the Danes for an annual fees. B.Ziegenbalg, the first missionary to Tranquebar, established the Tranquebar Mission in 1706, setup the first press in India at Tranquebar, Tamil Nadu. The beginning of Lutheran missionary activities at Tranquebar lead to active Tamil connections between Tamil Nadu and Europe, particularly Germany, Denmark and England. The Palmleaf Manuscript Archive at the Francke Foundations in Halle, is one of the largest collection of its kind in Europe and holds around 270 manuscripts with more than 35,000 single palm leaves sheets and hundreds of Tamil paper manuscripts. This article examines selected number fo Tamil palm leaves and paper maniscripts from the archives of Francke Foundations in Halle, Germany and set path to further research in this area to study and understand the social system, culture, history and life style of Tamils and Tamil Nadu that has significat potentials in filling the gaps in the Tamil Nadu history.

Date of submission: 2018-10-04
Date of acceptance: 2018-11-05
Date of Publication: 2018-12-30
Corresponding author's
Name: Dr.K.Subashini
Email: ksubashini@gmail.com

**Key Words:** Francke Foundations, Paper manuscripts, Palm Leaves, Germany, Lutheran protestant Missionaries, Tranquebar, Schultze, Dr.August Hermann Francke, B.Ziegenbalg

[1]The author is an IT Architect, DXC Technology & President of Tamil Heritage Foundation (International Organization for Preserving Tamil Heritage). ksubashini@gmail.com

## முன்னுரை

தமிழ் ஓலைச்சுவடிகளும் காகித ஆவணங்களும், கையெழுத்து ஆவணங்களும் தமிழகம், மலேசியா, சிங்கை இலங்கை தவிர்த்து உலகின் பல நாடுகளில் உள்ள ஆவணப்பாதுகாப்பகங்களிலும், நூலகங்களிலும் அருங்காட்சியகங்களிலும் பாதுகாக்கப்படுகின்றன. தமிழ் மொழியில் அமைந்த ஆவணங்கள் எனும் போது குறிப்பிடத்தக்க உயர் எண்ணிக்கையில் இத்தகைய ஆவணங்கள் இருப்பது ஐரோப்பிய கண்டத்தில், அதிலும் குறிப்பாக இங்கிலாந்து, டென்மார்க், பிரான்சு, ஜெர்மனி, நெதர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளின் ஆவணக்காப்பகங்களில். சமீக காலங்களில் கணினி மற்றும் இணைய தொழில்நுட்பத்தின் விரிவாக்கம் மற்றும் இத்தொழில்நுட்பம் ஆவண மின்பதிப்பாக்கத்தில் உருவாக்கியிருக்கும் உத்திகள் ஆகியவை, பல வகையில் சேகரிக்கப்பட்ட இத்தகைய அரிய ஆவணங்கள் ஆவணப்பாதுகாப்பகங்களில் இருந்தாலும் அவற்றை கணிணி வழி இணையத்தொடர்பைக் கொண்டு காணக்கூடிய, வாசிக்கக்கூடிய சாத்தியக்கூற்றினை வழங்கியிருக்கின்றது. இந்தத் தொழில்நுட்ப புரட்சியின் விளைவாக ஐரோப்பிய அரிய ஆவணப்பாதுகாப்பு மையங்கள், தமது சேகரத்தில் உள்ள பல்வேறு மொழிகளில் அமைந்த ஆவணங்களை மின்பதிப்பாக்கம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இவ்வகை முயற்சிகளின் பலனாக ஏராளமான ஆவணங்கள் இன்று மின்னாக்கம் செய்யப்பட்டு ஆவணப்பட்டியல்கள் இன்று நமக்குக் கிடைக்கக்கூடிய சாத்தியம் உருவாகியிருக்கின்றது என்பதோடு சில ஆவணங்கள் இணையம் வழி நமக்கு வாசிக்கவும் கிடைக்கும் சூழல் உருவாகியுள்ளது. இவற்றுள் தமிழ் மொழியில் அமைந்த ஆவணங்களும் அடங்குகின்றன.

ஐரோப்பாவில் தமிழ் ஓலைச்சுவடிகளையும் தமிழ் மொழியில் எழுதப்பட்ட காகித ஆவணங்களையும் பாதுகாக்கும் ஆவணப்பாதுகப்பகங்களில் ஜெர்மனியின் கிழக்குப் பகுதி நகரமான ஹாலே நகரில் உள்ள ஃப்ராங்கன் கல்வி நிறுவனம் (Francke Foundations / Franckesche Stiftungen - Halle, Germany) குறிப்பிடத்தக்க ஒரு நிறுவனமாகும். ஐரோப்பாவில் உள்ள ஆவணப்பாதுகாப்பகங்களில் மிக அதிகமான எண்ணிக்கையிலான ஆவணங்களைப் பாதுகாக்கும் மையமாகத் திகழும் இதில், ஏறக்குறைய 270 தமிழ் ஓலைச்சுவடி நூல்கள் அதாவது ஏறக்குறைய 35,000 ஓலைகள் பாதுகாக்கப்படுகின்றன. இங்குள்ள ஆவணப்பாதுகாப்பகத்தில் உள்ள தமிழ் ஓலைச்சுவடி மற்றும் தமிழ் காகித ஆவணங்களை இக்கட்டுரை ஆசிரியர் நேரில் கண்டு கள ஆய்வு செய்ததில் கிடைத்த தகவல்களை இக்கட்டுரை விவரிக்கின்றது.

## ஆய்வுமுறை

ஜெர்மனியில் 1517ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ம் நாள், கத்தோலிக்க சமயபோதகரும் தத்துவவியலாளருமான டாக்டர்.மார்ட்டின் லூதர் தனது சீர்திருத்தக் கருத்துக்களை ”95 கட்டளைகள்” என்ற வடிவத்தில் கத்தோலிக்கச் சபைக்கு எதிர்குரலாக முன் வைத்தார். இது ரோமன் கத்தோலிக்க சமய நிறுவனத்தின் அடித்தளத்தை அசைத்ததோடு லூதரேனிய சீர்திருத்த கிருத்துவப் பிரிவு உருவாகக் காரணமாகியது. இப்புதிய சமயக் கொள்கை மிக விரைவாக அதே காலகட்டத்தில் ஐரோப்பிய நாடுகளிலும் ஸ்கேண்டிநேவிய நாடுகளிலும் (டென்மார்க், சுவீடன், நோர்வே) பரவியது. கி.பி.1600ம் ஆண்டு இங்கிலாந்தின் முதலாம் எலிசபெத் மகாராணியார், இங்கிலாந்தின் நீண்ட கால பொருளாதார மேம்பாட்டை பலம்பொருந்தியதாக உருவாக்க எண்ணம் கொண்டு, ஆசிய நாடுகளில் வர்த்தக உடன்பாட்டினை உருவாக்கும் எண்ணத்துடன் பிரிட்டிஷ் ஈஸ்ட் இந்தியா கம்பெனி (British East India Company) என்ற வர்த்தக நிறுவனத்தை ஆரம்பித்தார்.

ஹாலந்து நாட்டு டச்சுக்காரர்களும் 'டச் யுனைட்டட் ஈஸ்ட் இந்தியா கம்பெனி' (Dutch United East India Company) என்ற வர்த்தக நிறுவனத்தை உருவாக்கி ஐரோப்பாவில் பலம் பெற்று வந்தனர். இந்த இரு நாடுகளைப் போன்று ஆசிய நாடுகளில் வர்த்தக முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் டென்மார்க் நாட்டு மன்னர் 4ம் கிறிஸ்டியன் அவர்களுக்கு ஏற்பட்டது. இந்த ஆர்வத்தின் அடிப்படையில் "டேனீஷ் கிழக்கிந்திய நிறுவனம் (Danish East India Company)" 1616ஆம் ஆண்டு உருவாக்கம் பெற்றது.

கி.பி. 1616ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் தேதி மன்னர் 4ம் கிறிஸ்டியன், டேனிஷ் ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்கு, தன் நாட்டை பிரதிநிதித்து ஆசியாவில் பனிரெண்டு ஆண்டுகள் வர்த்தகம் செய்யும் உரிமையை இக்கம்பெனிக்கு வழங்கினார் (http://scholiast.org/history/tra-narr.html). 1620ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தஞ்சை நாயக்க மன்னரின் அரசவைக்கு வந்து மன்னரைச் சந்தித்து, டென்மார்க் மன்னரின் வர்த்தகம் தொடர்பான விருப்பத்தைத் தெரிவித்து, வர்த்தக புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டு தமிழகத்தின் தரங்கம்பாடியில் டேனீஷ் அரச பிரதிநிதிகள் வந்து தங்கவும், வர்த்தகத்தைத் தொடங்கவும், அங்கு கோட்டை கட்டிக் கொள்ளவும் அனுமதி அளிக்கும் வகையில் பட்டயம் ஒன்று நாயக்க மன்னரால் கையெழுத்திடப்பட்டது (Kay Larsen: Trankebar, op.cit., 1918, p.20. Sanjay Subrahmanyam: Coromandel Trade, op.cit., p.45. The text of the firman (decree) issued by the nayak is quoted in extenso (in Danish), in an appendix to Larsen's book, pp.167-169.). இதன் தொடர்ச்சியாக டென்மார்க் மன்னரின் விருப்பத்தின் பேரில் ஆசிய நாடுகளில் லூத்தரேனிய சீர்திருத்தக் கிருத்துவத்தைப் பரப்பும் பணி தமிழகத்தில் தரங்கம்பாடியில் தொடங்கியது. நீண்ட கால தேடுதலுக்குப் பின் 1706ஆம் ஆண்டில் ஜெர்மனியின் ஹாலே ஃப்ராங்கெ கல்விக்கூடத்தில் பயின்ற சீகன்பால்க், ப்ளெட்சோ என்ற இரு பாதிரிமார்களின் தமிழகத்திற்கான வருகை இச்சமயம் ஆசிய நாடுகளில் தொடங்கப்பட அடிப்படையை வகுத்தது. டானிஷ், ஜெர்மானிய, இந்திய, ஆங்கிலேய கூட்டு அமைப்பாக ப்ராட்டஸ்டண்ட் சமய மதம் பரப்பும் நடவடிக்கைகள் இதன் வழியாகத் தொடங்கின (Joseph Muthuraj, 2010).

கி.பி 1706ஆம் ஆண்டு முதல் ஜெர்மனியிலிருந்து தரங்கம்பாடிக்கும் பின்னர் படிப்படியாக தமிழகத்தின் கடலூர், மெட்ராஸ், திருநெல்வேலி ஆகிய பகுதிகளுக்கும் வந்து சேர்ந்த லூத்தரன் பாதிரிமார்கள் பனை ஓலைச்சுவடிகளில் எழுத்தாணி கொண்டு தமிழ் மொழியை எழுதவும் வாசிக்கவும் கற்றனர்; ஐரோப்பிய மொழிகளில் தமிழ் இலக்கண நூல்களை எழுதினர்; தமிழில் சமய நூல்களை எழுதினர்; தமது அன்றாட அனுபவங்களை நாட்குறிப்புக்களாகக் காகித ஆவணங்களில் எழுதினர்; தமிழ் நூல்களை ஐரோப்பிய மொழிக்கு மொழி பெயர்த்தனர்; ஐரோப்பாவிலிருந்து அச்சு இயந்திரங்களைக் கடல்வழியாக கப்பலில் கொண்டு வந்து தமிழகத்தில் சேர்த்து அச்சகத்தை ஏற்படுத்தி தமிழ் நூல்களை அச்சுப்பதிப்பாக்கினர்; புதிய அச்சு நூல்களை அச்சுப்பதிப்பாக்கி வெளியிட்டனர். இந்த நூல்களும் ஆவணங்களும், ஓலைச்சுவடிகளும் இன்று ஜெர்மனியின் ஃப்ராங்கே கல்வி நிறுவனத்திலும், கோப்பன்ஹாகன் அரச நூலகத்திலும் இங்கிலாந்தின் பிரித்தானிய நூலகத்திலும் தமிழகத்தில் சில ஆவணப்பாதுகாப்பகங்களிலும் உள்ளன.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணப் பாதுகாப்பகங்களுக்கான இக்கட்டுரை ஆசிரியரின் நேரடி களப்பயணத்தின் போது சேகரிக்கப்பட்ட தரவுகளும், வாசிக்கப்பட்ட ஓலைச்சுவடிகளும் காகித ஆவணங்களும் இக்கட்டுரையின் முதன்மைத் தரவுகளாக அமைகின்றன. இக்கட்டுரை ஜெர்மனியின்

ஹாலே ஃப்ராங்கெ கல்வி நிறுவனத்தின் ஆவணங்களை மட்டும் விவரிக்கின்றது.

ஜெர்மனியிலிருந்து சமய நடவடிக்கைக்காக கி.பி.18ஆம் நூற்றாண்டில் தமிழகம் வந்தோரில் இக்கட்டுரையில் பாதிரியார் சீகன்பால்க், ரைனுஸ், சூல்ஷெ, க்ருண்ட்லர், கிர்ஷோஃப், வீடர்ப்ரோக் ஆகியோரது ஆவணங்களிலிருந்து ஆய்வுத் தகவல்கள் வழங்கப்படுகின்றன.

## ஆவணங்கள் கூறும் செய்திகள்

கி.பி.1706ஆம் ஆண்டு தமிழகம் வந்து அங்கு லூத்தரன் திருச்சபையை நிறுவியது, புதிய ஜெருசலம் தேவாலயத்தை நிருவியது, தங்கும் வசதியுடன் கூடிய ஜெருசலம் இலவச பள்ளிக்கூடத்தை அமைத்தது, ஜெருசலம் அச்சுக்கூடத்தை நிருவியது என பல பெருமைகளுக்குறியவர் பாதிரியார் சீகன்பால்க்.

## சீகன்பால்கின் தமிழ் ஆவணங்கள்

சீகன்பால்க் தமிழகத்தின் தரங்கம்பாடி வந்திறங்கிய சில நாட்களிலேயே தமிழ் மக்களைப் பற்றியும், தமிழ் மொழி பற்றியும் அறிந்து கொள்ள தீவிர முயற்சியகளை மேற்கொண்டார். அக்கால தமிழகச் சூழலை அனுபவரீதியாகக் கண்டு ஹாலேவில் இருக்கும் கல்விக்கூடத்தின் தலைவர் டாக்டர்.ஃப்ராங்கேவிற்கு எழுதிய ஒரு கடிதத்தில் தனது பார்வையைப் பதிகின்றார். அக்கடிதத்தில், 'இந்த மக்கள் பேசும் மொழி பல்லாண்டுகளுக்கு முன்னரே எழுத்து வடிவம் பெற்றுள்ளது. இவர்கள் பனை ஓலை மேல் இரும்பால் செய்யப்பட்ட எழுத்தாணி கொண்டு எழுத்துக்களைக் கீறி எழுதுகின்றார்கள். இவர்கள் எல்லா வகை அறிவியல் துறைகளிலும் நிபுணர்களைக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கு வர்த்தகம், கணிதம், கைவினைப்பொருட்கள் செய்தல் ஆகிய கலைகளும் சிறப்பாகத் தெரிகின்றது. ஐரோப்பாவில் இருக்கின்ற பெரும்பாலான ஐரோப்பியர்கள் இந்த மலபார் (சில ஆவணங்களில் தமிழ் என்பது மலபார் என்றும், தமிழர்கள் மலபார் நாட்டு மக்கள் என்றும் அழைக்கும் பொது வழக்கம் அன்று ஐரோப்பாவில் இருந்தது) மக்கள் காட்டுவாசிகள் எனக் கருதிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்கள் இந்த மலபார் மக்களின் அறிவுத் திறனைப் பற்றி அறியாதிருக்கின்றார்கள்.

இதற்குக் காரணம் இந்த மலபார் மக்கள் (தமிழர்கள்) எழுதிய நூற்களை அவர்கள் இதுவரை வாசிக்காததேயாகும். ஆயினும் தமக்குக்கிடைத்திருக்கும் சொற்ப செய்திகளின் அடிப்படையில் இந்த மலபார் மக்கள் (தமிழர்கள்) நாகரீகமற்ற காட்டுவாசிகள் என அவர்கள் புறத்தோற்றத்தைக் கொண்டு எடைபோடுகின்றனர். இங்கு நான் வந்த ஆரம்பத்தில் இவர்களது மொழி இவ்வளவு ஆழமானது, சிறப்பானது என அறிந்திருக்கவில்லை. ஆனால் நாள்பட நாள்பட இவர்களது மொழி இலக்கணம் உடையதாகவும், பண்பட்டதாகவும் உள்ளது என்பதை தெரிந்து கொண்டேன். இவர்கள் வாழ்க்கையில் சட்டங்கள் உள்ளன. மக்கள் அனுசரிக்கும் சட்ட ஒழுங்குகள் மக்களால் மதிக்கப்படுகின்றன. ஆரம்பத்தில் அவர்கள் வாழ்க்கை முறை புரியாமல் இருந்தது. ஆனால் அவர்கள் மொழியை பேசக்கற்றுக் கொண்டு அவர்களுடன் உரையாட ஆரம்பித்ததும் அவர்களது மொழி, அவர்கள் வாழ்வியல் முறை, பண்பாடு, ஆகியவற்றில் உள்ள நீதிமுறைகளை அறிய முடிகின்றது. அவர்களது மொழியும் அதனை எழுதும் விதமும் என்னை அதிசயிக்க வைத்தது." எனக் குறிப்பிடுகின்றார் (Ferd, 1863, p.26).

தமிழகம் வந்திறங்கிய ஜெர்மானிய பாதிரிமார்களுக்கு ஆரம்பத்தில் தமிழ் மொழியைக் கற்பது சிரமமானதொரு கரியமாக இருந்தது. தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ளவும் பயிற்சி செய்யவும் எந்த அச்சு நூல்களும் அவர்களுக்கு அன்று கிடைக்கவில்லை. டேனீஷ் அல்லது ஜெர்மானிய மொழி பேசக்கூடிய தமிழ் ஆசிரியர் ஒருவரையும் இவர்களால்

அத்தருணத்தில் கண்டுபிடிக்க முடியவில்லை. பாதிரியார்கள் சீகன்பால்கும் ப்ளெட்சோவும் தங்கியிருந்த வீட்டுக்காரர் (Hans Paulsen) முதலில் இவர்களுக்கு மொழி பெயர்ப்பாளராகத் துணைப் புரிந்தார். பின்னர் போர்த்துக்கீசிய மொழி பேசும் முதலியப்பன் என்ற பெயர் கொண்ட ஒரு தமிழர் இவர்களைக் காண வந்து, பின்னர் இவர்களுக்குச் சில நாட்கள் தமிழ் மொழியில் உரையாட உதவினார். இந்தக் காலகட்டத்தில், போர்த்துக்கீசிய மொழி அறிவு உள்ளூர் மக்கள் பேசுவதைப் புரிந்து கொள்ள மிக அவசியம் என்பதை இருவரும் புரிந்து கொண்டனர் (Daniel Jeyaraj, 2006, p.63).

சீகன்பால் ரெவரண்ட் லூவிஸ் (Rev. Mr.Geo. Lewis) அவர்களுக்கு லத்தின் மொழியில் எழுதி அனுப்பிய முதல் கடிதத்தின் தொடர்ச்சியாக போர்த்துக்கீசிய மொழியில் மேலும் ஒரு கடிதத்தை 7.4.1713 ஆம் ஆண்டு அனுப்புகின்றார். இந்தக் கடிதம் தரங்கபாடியில் சீகன்பால்க் ஆரம்பித்த அச்சகத்தில் அச்சுப்பதிப்பதிப்பு நூலாக 1713 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்த நூலின் ஆங்கில மொழியாக்கம் 1917 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இங்கிலாந்தின் லண்டன் நகரில் ஜே.டவ்னிங் (J.Downing) என்பவரால் பார்த்தலோமியோ க்ளோஸ் (Bartholomew-Close) என்ற அச்சகத்தில் இது அச்சடிக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டது. இந்த மொழிபெயர்ப்பு நூலில் உள்ள செய்திகள் லூதரன் சமய போதகர்கள் தரங்கம்பாடியில் ஆரம்பித்த ”ஜெருஸலம்” என்ற பெயரிலான இலவச பள்ளிக்கூடத்தின் தேவை, அதன் நோக்கம், அதில் கட்டமைக்கப்பட்ட பாடத்திட்டம், அங்கு பள்ளியில் கற்க வந்த மாணவர்கள், மாணவர்கள் எண்ணிக்கை என்ற வகையில் பல செய்திகளை வழங்குகின்றது (A Letter to the Reverend Mr.Geo. Lewis, Chaplain to the Honourable the East India-Company, at Fort St.George: Giving an Account of the method of Instruction used in the Charity-Schools of the Church, call'd Jerusalem, in Tranquebar; By the Protestant Missionaries there. Translated from the Portugueze-Copy printed at Tranquebar.).

இதே நூலில் இவர் அனுப்பிய கடிதத்தில் தாமும் தமது ப்ரோட்டஸ்டன் மதகுருமார்கள் குழுவும் 32 நூல்களை எழுதியும் மொழிபெயர்த்தும் முடித்தனர் என்றும் சீகன்பால்க் குறிப்பிடுகின்றார். இந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நூல்கள் மட்டுமன்றி, ரோமன் கத்தோலிக்க மதகுருமார்களால் எழுதி தரங்கம்பாடி அச்சுப்பதிப்பகத்தில் மேலும் 14 நூல்கள் வெளியிடப்பட்டதாகவும் சீகன்பால்க் குறிப்பிடுகின்றார். அத்துடன் தாமும் தமது குழுவினரும் தமிழில் (Malabarick) இறையியல், தத்துவம் போன்ற துறைகளில் 156 நூல்களைத் தொகுத்துள்ளதாகவும் அது மட்டுமன்றி 12 இஸ்லாமிய (Mahometan) நூல்களை தொகுத்துள்ளதாகவும் குறிப்பிடுகின்றார். இவற்றோடு மேலும் 22 போர்த்துக்கீசிய மொழியில் அமைந்த நூல்களும் தம்மிடம் இருப்பதாகத் தகவல் தெரிவிக்கின்றார். ஆக, மொத்தம் 237 நூல்கள் தம் வசம் தரங்கம்பாடியில் தாம் அமைத்துள்ள இந்தத் தமிழ்போர்த்துக்கீசிய நூலகத்தில் இருப்பதாகவும், இவை தாம் தொடங்கிய ஜெருசலம் இலவச பள்ளிக்கூடத்தின் பாடத்திட்ட கல்வி போதனைகளுக்கு உதவும் நூல்கள் என்றும் குறிப்பிடுகின்றார். இந்தக் கடிதத்தைத் தரங்கம்பாடியின் கிழக்கிந்திய அலுவலகத்திலிருந்து (Tranquebar, in the East-Indies, on the Coast of Coromandel) எழுதி அனுப்புவதாக ஏப்ரல் 7, 1713 ஆம் தேதி கையெழுத்திட்ட கடிதத்தில் சீகன்பால்க் குறிப்பிடுகின்றார்.

சீகன்பால்க் அவர்கள் தாம் ஒரு தமிழ் மருத்துவரைச் சந்திக்க நேரிட்டபோது அவரிடம், 'மருத்துவக் குறிப்புக்களை அவர் எழுதி வைத்திருந்த ஒரு ஓலைச்சுவடியை தான் பார்க்க முடியுமா' எனக் கேட்டதை, தனது 1708ஆம் ஆண்டு மே மாதம் 1ம் தேதி எழுதிய நாட்குறிப்பில் குறிப்பிடுகின்றார்

*(Thomas Phillipps, 1719, p.133.). சீகன்பால்க் தான் பார்த்த ஒரு தமிழ் மருத்துவச் சுவடி நூலைப் பற்றிக் குறிப்பிடும் போது அதில் 80 பகுதிகள் 120 அத்தியாயங்களில் 6 தொகுப்புக்களாக அமைந்திருந்தன என்றும் குறிப்பிடுகின்றார். "வகுடசாஸ்திரம்" என்ற பெயர் கொண்ட அந்த நூலின் முதல் தொகுப்பு 30 அத்தியாயங்களைக் கொண்டதும் சூஸ்த்ரதானம்" பற்றியது என்றும், 2ம் தொகுப்பு 6 அத்தியாயங்களைக் கொண்டதும் "சரீரஸ்தானம்" பற்றியது என்றும், மூன்றாம் தொகுப்பு உடற்கூறியல் பற்றிய 16 அத்தியாயங்களைக் கொண்டது என்றும், 4ம் தொகுப்பு 16 அத்தியாயங்களைக் கொண்டதும், நிவாரணம் மற்றும் அறுவை சிகிச்சை பற்றியது என்றும், 5ம் தொகுப்பு "கல்பஸ்தானம்' அதாவது விஷங்களைப் பற்றியது என்றும், 6ம் தொகுப்பு 41 அத்தியாயங்களைக் கொண்டதும் "சாங்கியானிதானம்" பற்றியது என்றும் தாம் அறிந்து கொண்டதைக் குறிப்பிடுகின்றார் (W.Caland, 1926, p.217). "வகுடசாஸ்திரம்" போல "இன்னொரு மருத்துவ நூலான "வாகடச் சுவடி" பற்றியும் தமது நாட்குறிப்பில் சீகன்பால்க் குறிப்பிடுகின்றார் (Germann, 1880, p.91).*

*உடற்கூறு ஆய்வு தொடர்பான நூல் ஒன்றினைத் தான் வாசிக்க நேரிட்டதாகவும், 'இந்த நூல் தமிழ் மருத்துவத்துறையில் ஒரு கிடைத்தற்கரிய நூல் என்றும், மனித உடலினைப் பற்றிய விரிவான தகவல்களை வழங்கும் நூல் என்றும், இந்த நூலை உள்ளூர் பிராமணர்களால் வாசிக்க இயலவில்லை என்றும், ஆனால் சில உள்ளூர் தமிழ் மருத்துவர்களால் மட்டுமே அதனை வாசிக்க முடிந்தது' என்றும் குறிப்பிடுகின்றார். (W.Germann, 1880, p.84). இந்தக் கடினமான தமிழ் மருத்துவ நூலை வாசித்து புரிந்து கொள்ளும் வகையில் சீகன்பால்க் அவர்களின் தமிழ் அறிவு உயர்வாக இருந்தமையை அறிகின்ற அதே வேளை, அக்காலச் சூழலில் தரங்கம்பாடி பகுதியில் மருத்துவத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களாக பிராமணர்கள் அல்லாத தமிழர்களே இருந்தார்கள் என்பதனையும் இதன் வழி அறியக்கூடியதாக இருக்கின்றது.*

*சீகன்பால்க் அவர்களின் நாட்குறிப்புகள் சொல்லும் செய்திகள் மக்களிடையே இருந்த குறிப்பிடத்தக்க சமூக ரீதியிலான பிரிவினையை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. பிராமணர்கள் தமிழ் மக்களுடன் சேராமல் தனிக்குடியிருப்புப் பகுதியில் வாழ்கின்றார்கள் (Thomas Philipps, 1719, p.iii). தமிழர்கள், பிராமணர்கள் ஆகியோருடன் அரேபிய மூர்கள், யூதர்கள் ஆகியோர் தமிழகத்தில் வாழ்ந்தனர் என்பதையும் இக்கடிதங்கள் கூறும் செய்திகள் வெளிப்படுத்துகின்றன.*

## பெஞ்சமின் சூல்ஷேயின் தமிழ்ச்சுவடி ஆவணங்கள்

*பெஞ்சமின் சூல்ஷே ஜெர்மானிய மொழியிலிருந்தும் லத்தின் மொழியிலிருந்தும் மிக அதிக எண்ணிக்கையிலான லூத்தரேனிய சீர்திருத்த சமய நூல்களையும் பைபிளின் செய்திகளையும் தமிழ் மொழிக்கு மொழி பெயர்ப்புக்களைச் செய்த பாதிரியார் என அறியப்படுபவர். பைப்பிளில் உள்ள வசனங்கள், மறை பாடல்கள், பைபிள் விளக்கங்கள் எனப் பல சிறு நூல்களை ஓலைச்சுவடியிலேயே எழுதினார். அவை இன்று ஜெர்மனியின் ஹாலே நகரில் இருக்கும் கல்வி நிருவனத்தில் உள்ள அரிய ஆவணங்கள் பகுதியில் உள்ளன. உதாரணமாகச் சில:*


*உதாரணம் 1:*

*அட்டவணை ஜிகிவி 84: நூல் தலைப்பு பாடுபடுதலின் சரித்திரம்*

*நூல் தொடக்கம்: மெயயான சறுவெசுரனும மெய்யானமனுஷனும ஒண்ணாயிருககிற*

*எசுககிறீஷதது...*

*இது 49 செ.மீ நீளமும், 4 செ.மீ அகலமும் கொண்ட ஓலை. 1726ம் ஆண்டு பாதிரியார்*



பெஞ்மீன் சூல்ஷே இந்த ஓலைச்சுவடியைத் தாமே தமிழில் எழுதியிருக்கின்றார். 75 ஓலைகளில், ஒவ்வொரு ஓலையின் இரண்டு பக்கங்களிலும் இந்த நூல் எழுத்தாணியால் எழுதப்பட்டுள்ளது. முதல் ஓலையின் பின்புரத்தில் இவரது பெயர் ஜெர்மானிய மொழியில் எழுதப்பட்டு ஓவியமும் தீட்டப்பட்டு இந்த ஓலை எழுதப்பட்டுள்ளது. சூல்ஷே அவர்கள் இந்த நூலை மிகுந்த கலை நயத்துடன் உருவாக்கியிருக்கின்றார். சீரான வரிகளில் தமிழ் எழுத்துக்கள் உள்ளன. அக்கால தமிழ்ச்சுவடி நடையில் புள்ளிகள் வைக்கப்படாத எழுத்துக்கள் இடைவெளியில்லா சொற்கள் என இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. இந்த ஓலைச்சுவடிக் கட்டுக்கள் தெளிவாக வாசிக்கக்கூடிய வகையில் அமைந்த எழுத்தில் உள்ளன.

*உதாரணம் 2:*

அட்டவணை : TAM 33 சாலமோனெனகிறவர் யுழுதி வைதத ஞானத்தினுடைய பொஷததகம

(திருத்தப்பட்ட தமிழில்: சாலமன் என்பவர் எழுதி வைத்த ஞான புத்தகம்)

இது 45.5 செ.மீ நீளமும், 4செ.மீ அகலமும் கொண்ட ஓலை. 1728ம் ஆண்டு பாதிரியார் பெஞ்சமீன் சூல்ஷே எழுதியது. இந்த ஓலைச்சுவடி நூலும் பாதிரியார் சூல்ஷே அவர்களால் எழுதப்பட்ட பனை ஓலை நூல். இந்த நூல் மட்டுமன்றி ஜெர்மானிய பாதிரியாரிமார்களின் எழுத்துக்களில் 'புத்தகம்' என்ற சொல் ' பொஷ்ததகம' என்றும் சில சுவடிகளில் 'பொஉத்தகம்' என்றும் எழுதப்படுவதை எல்லா சுவடி ஆவணங்களும் காட்டுகின்றன. பொத்தகம் என்பது இன்றும் வழக்கில் உள்ள சொல். ஆயினும் 'பொ' என்ற எழுத்துக்கு அடுத்து 'ஷ்' அல்லது 'உ' என்ற எழுத்து வழக்கில் இருந்ததைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வழக்கம் தமிழ் கற்ற ஜெர்மானிய பாதிரிமார்களின் எழுத்து முறையில் மட்டும்தானா அல்லது பொதுவாக தமிழ் நாட்டிலும் அக்காலவழக்கத்தில் இருந்ததா என்பது ஆராயப்படவேண்டியது.

79 ஓலைகளில் இரண்டு பக்கங்களிலும் தொடர்ச்சியாக செய்திகளை உள்ளடக்கிய வகையில் இந்த ஓலைச்சுவடி அமைந்துள்ளது. மிகத் தெளிவான, வாசிக்கக்கூடிய வகையில் எழுத்துக்கள் உள்ளன. அக்கால தமிழ்ச்சுவடி நடையில் புள்ளிகள் வைக்கப்படாத எழுத்துக்கள் இடைவெளியில்லா சொற்கள் என இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

*உதாரணம் 3:*

அட்டவணை : TAM 67 - தரங்கம்பாடியிலே யிருக்கிற பாதிரிமாரகள பண்ணின சிறுது பறசஙகஙகள

(திருத்தப்பட்ட தமிழில்: தரங்கம்பாடியில் இருக்கின்ற பாதிரிமார்கள் பண்ணிய சில பிரசங்கங்கள்)

இது 47 செ.மீ நீளமும், 4.7 செ.மீ அகலமும் கொண்ட ஓலை. இந்த ஓலைக்கட்டு 84 பனை ஓலைக்களைக் கொண்ட இருபக்கமும் எழுதப்பட்ட ஒரு நூல். ஏறக்குறைய கி.பி.1719லிருந்து 1729 காலகட்டத்தில் சூல்ஷே அவர்கள் எழுதி தயாரித்து தனது சமய பிரசங்கங்களில் பயன்படுத்திய நூல். எளிமையான தமிழில் புள்ளியில்லா

எழுத்துக்களுடன் இடைவெளியில்லா தொடர்ச்சியான சொற்களைக் கொண்ட வாக்கிய அமைப்பில் அமைக்கப்பட்ட நூல்; பாதிரிமார்கள் ஓலைச்சுவடியில் தமது சொற்பொழிவை எழுதி வைத்துக் கொண்டு பிரசங்கத்தைச் செய்ய பயன்படுத்திய குறிப்பு நூல் இது. ஆக பாதிரிமார்கள் சரளமாக ஓலைச்சுவடியை வாசிக்கப் பழகியிருந்தனர் என்பதற்கு உதாரணமாக இந்த ஓலைச்சுவடி நூல் அமைகின்றது.

*உதாரணம் 4:*

அட்டவணை : TAM 30 யெரெமீயவெண்கிறவர யெழுதிய நிருபம்

(திருத்தப்பட்ட தமிழில்:யெரேமியா என்கிறவர் எழுதிய நிரூபம்)

இது *45* செ.மீ நீளமும், *0.7* செ.மீ அகலமும் கொண்ட ஓலை நூல் இது. *1728*ம் ஆண்டு பாதிரியார் பெஞ்மீன் சூல்ஷே எழுதியது . *16* ஓலைகள் அடங்கிய ஒரு நூல். எளிமையான தமிழில் புள்ளியில்லா எழுத்துக்களுடன் இடைவெளியில்லா தொடர்ச்சியான சொற்களைக் கொண்ட வாக்கிய அமைப்பில் அமைக்கப்பட்ட நூல். இந்த ஓலைச்சுவடி நூலில் ஒரு பக்கத்தில் கீழ்க்காணும் சொற்றொடர் ஒன்று வருகின்றது.

*...*


*ளும் கருவாட்டுவாலிகளும் டப்படிசிகளும் அந்த...*

*அதுகள்மகாப்பெரியவிலைக்குக்கொள் ளப்பபட்ட்டிருந்தாலும் அதுகளுக்குள்ளே ஆவியில்லை..*

*பெண்சாதிகளுக்கு ...*

குறிப்பு: மக்கள் கருவாட்டு வாளிகளை வைத்து உயர்ந்த விலைக்கு அவற்றை விலை நிர்ணயம் செய்திருக்கின்றார்கள். ஆனாலும் உயிரில்லாத மீன்கள் அவை என்ற வகையில் இதன் வரிகள் செல்கின்றன. பெண்களைக் குறிக்கும் போது பெண்சாதிகள் என்ற சொல்லை இவர் பயன்படுத்துவதையும் இந்த ஓலையில் காண்கிறோம்.

மேற்குறிப்பிட்ட இரு நூல்கள் மட்டுமன்றி ஏராளமான நூல்களை பெஞ்மீன் சூல்ஷே எழுதியிருக்கின்றார். மெட்ராசில் பணியாற்றிய இவர் தனது நாட்குறிப்பில் 'பதினைந்து அயல் நாடுகளைச் சேர்ந்த சமூகத்தினர்' தமிழகத்தில் வாழ்கின்றனர் என்றும் இந்தியாவின் 'பன்னிரெண்டு வெவ்வேறு பகுதியைச் சார்ந்த மக்கள்' மெட்ராசில் இருப்பதையும் தனது நாட்குறிப்பில் பதிகின்றார். இவர் தனது நாட்குறிப்பு ஆவணங்களில் வழங்கியிருக்கும் தகவல்கள் மிக விரிவான குறிப்பாக அமைகின்றன என்பதோடு அக்கால சூழலில் மெட்ராசில் வாழ்ந்த அயலகத்தாரைப் பற்றிய துல்லியமான விவரங்களைத் தருவதாக அமைகின்றன. அவர் குறிப்பிடுகையில் '*8700* வீடுகள் கருப்பு நகரத்திலும் (Black Town), *85* வீடுகள் வெள்ளை நகரத்திலும் (White Town) இருந்தன. அதில் *363* தெருக்கள் கருப்பு நகரத்தில் மட்டும் இருந்தன.



அங்கே இங்கிலாந்தினர், போர்த்துக்கீசியர், பிரஞ்சுக்காரர்கள், ஸ்பெயின் நாட்டினர், இத்தாலியர், டச்சுக்காரர்கள், ஜெர்மானியர்கள், டென்மார் நாட்டினர், சுவீடன் நாட்டினர், ரஷியாவின் மோஸ்கோவைச் சேர்ந்தவர்கள், கிரேக்கத்தினர், அரேபியர், பெர்சியர்கள், துருக்கியர்கள், அர்மேனியர்கள், பிராமணர்கள், மராட்டியர்கள், குஜராத்தியர், சீனர்கள், மலாய்க்காரர்கள், யூதர்கள், சிரியர்கள், ஜப்பானியர்கள், கனேரிய தீவுகளைச் சேர்ந்தோர், மூர், பட்டாணியர் ஆகியோர் மெட்ராசில் இருந்தனர் என்று அவரது நாட்குறிப்பு காட்டுகின்றது (Benjamin Schultze, op. cit., 1st dialogue.). கி.பி 18ம் நூற்றாண்டின் ஆரம்பகால மெட்ராசில் பல நாட்டினர் வந்து வணிகம் செய்து வாழ்ந்து வந்த சூழலை இக்குறிப்புக்கள் நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன.

## பாதிரியார் ரைனுசின் தமிழ் நூல்கள்

பாதிரியார் ரைனுஸ் அவர்கள் தனக்கு முன் தமிழகம் வந்த ஏனைய பாதிரிமார்களின் அடிச்சுவட்டில் பயணித்தவர் என்பதோடு அவர்களை விட பன்மடங்கு தமிழ் மொழியில் ஆர்வம் கொண்டிருந்தவர் என்றும் கூறலாம். திருநெல்வேலி வந்தடைந்த பின்னர் அங்கு பாதிரியார் ரைனுஸ் 18 ஆண்டுகள் லூதரன் திருச்சபை பணியில் இருந்தார். அச்சமயத்தில் திருநெல்வேலி முத்துக்குமாரசுவாமி ஓதுவார் என்பாரிடம் இவர் முறையாகத் தமிழ் பயின்றார். முத்துக்குமாரசுவாமி ஓதுவார் திருவாவடுதுறை மடத்தைச் சார்ந்த சாமிநாத தம்பிரானிடம் தமிழ் பயின்றவர். இவர் 1809ம் ஆண்டில் காலமானார். அவரது தலைமை மாணவரான அம்பலவாணக் கவிராயர் திருநெல்வேலியில் தமிழாசிரியராகப் பணியைத் தொடர்ந்தார். இவர் 1813ம் ஆண்டு திருக்குறளைத் தமிழில் அச்சு நூலாகப் பதிப்பித்தவர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவரிடம் கற்றவர்களில் திருப்பார்க்கடல்நாத கவிராயர் என்ற மாணாக்கர் ஒருவர் இருந்தார். ரைனுஸ் அவர்களுக்குத் தமிழ் மொழியில் ஏற்பட்ட ஐயங்களைத் தீர்ப்பதில் மிக உறுதுணையாக இவர் இருந்தார் என்றும் அறிகிறோம் (Rheinus, 1896, p.563).

பல ஆண்டுகள் தொடர்ச்சியாக தமிழ் மொழியைக் கற்று பல இலக்கண நூல்களை ஆராய்ந்தும் பல அகராதி நூல்களை ஆராய்ந்தும் ஒரு தமிழ் இலக்கண நூலினை உருவாக்கினார் ரைனுஸ். ஜெர்மானிய பாதிரிமார்கள் எழுதிய இலக்கண நூல்கள் மட்டுமன்றி தமிழ் ஓலைச்சுவடி நூல்கள் பலவற்றினை இவர் கற்றார். அதில் உள்ள, புழக்கத்தில் இல்லாத பல சொற்களையும் ஆராய்ந்தார்; பொருளைத் தேடினார்; பல நூல்களைக் கற்றதனால் தனக்கு முன் வந்த ஜெர்மானிய லூதரன் பாதிரிமார்களின் நூலில் உள்ள தவறுகளை அவரால் அடையாளம் காண முடிந்தது. எழுதப்பட்ட இவ்வகையான இலக்கண நூல்களில் தமிழ் சொற்களுக்குப் பதிலாக அதிகமான சமஸ்கிருதச் சொற்கள் தமிழ் மொழியாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதை ரைனுஸ் கண்டறிந்தார்.

இதனைப் பற்றி ரைனுஸ் அவர்கள் குறிப்பிடும் போது, 'தமிழ் மொழியை நன்கு கற்ற பெஸ்கி அவர்கள் கூட இதே தவற்றை தமது நூல்களில் கையாண்டிருக்கின்றார்' என்றும் குறிப்பிடுகின்றார் (Rheinus, 1896, p.iii). 300 பக்கள் கொண்ட நூல் A grammar of the Tamil Language with and Appendix என்ற தனது நூலின் முன்னுரையில் பல தமிழ்ச்சான்று நூல்களைக் குறிப்பிட்டு இவர் தமிழ் மொழி இலக்கணம் பற்றி கொடுத்திருக்கும் தகவல்கள் இவரது உயர்ந்த தமிழ்ப்புலமைக்குச் சான்றுகளாக அமைகின்றன. 1836ம் ஆண்டு, அதாவது ரைனுஸ் அவர்கள் காலமாவதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்னர் இந்த ஆங்கில மொழியில் அமைந்த தமிழ் இலக்கண நூல் மெட்ராஸ் திருச்சபையின் அச்சகத்தில் அச்சுப்பதிப்பாக வெளிவந்தது. இந்த நூலைக் காணும் போது தமிழ் இலக்கணத்தை

ஆங்கில மொழி வழியாகக் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் ஏற்ற ஒரு சிறந்த இலக்கண நூல் இது எனக் கூறமுடியும். தமிழ் இலக்கணம் மிகச் சீராக தொகுக்கப்பட்டு சிறந்த விளக்கங்களுடன் இந்த நூலில் இணைக்கப்பட்டுள்ளது.

## பாதிரிமார்களின் காகித ஆவணங்கள்

ஹாலே ஃப்ராங்கே கல்விக்கூடத்தின் அரிய ஆவணங்கள் பகுதியில் உள்ள சில காகித ஆவணங்கள் கூறும் செய்திகளை அடுத்து காண்போம்.

அட்டவணை: IH 3:27

இது கிர்ஷோஃப் என்பவருக்குத் தரங்கம்பாடியில் பணியில் இருந்த நிக்கோலாவ்ஸ் டால் என்பவரால் எழுதப்பட்ட கடிதம் ஜெர்மானிய டோய்ச் மொழி, போர்த்துக்கீசிய மொழி, தமிழ் ஆகிய மூன்று மொழிகளில் எழுதப்பட்ட கடிதம் இது. 5.10.1720 என தேதியிடப்பட்ட கடிதம்.

அட்டவணை: IB 7:14

இது கத்தோலிக்க பாதிரியார் கொன்ஸ்டான்சோ பெஸ்கி (வீரமாமுனிவர்) எழுதிய வேதவிளக்கம் என்ற நூலின் சில பக்கங்கள். வீரமாமுனிவரின் கையெழுத்தில் அமைந்த ஆவணம் இது. இதில் மூன்று பக்கங்கள் உள்ளன. முதல் இரு பக்கங்கள் தமிழிலும் இறுதிப்பக்கம் லத்தீன் மொழியிலும் இந்த ஆவணம் உள்ளது. இந்தத் தாட்களோடு இணைத்த வகையில் ஒரு தனி காகிதம் உள்ளது. இது தமிழ் நூல்களின் பட்டியலைக் கொண்டிருக்கின்றது. இது 1727ம் ஆண்டு காகித ஆவணம்.

அட்டவணை: IB 24:20

இது பாதிரியார் யோஹான் க்றிஸ்டியான் வீடர்ப்ரோக் 3.1.1738 என்ற தேதியிட்டு ஃப்ராங்கெ கல்வி நிறுவனத்தின் தலைவர் டாக்டர்.ஆகஸ்ட் ஃப்ராங்கே அவர்களுக்கு எழுதிய கடிதம் எழுதிய கடிதம். இதில் புத்தாண்டு வெண்பா ஒன்று தமிழில் எழுதப்பட்டுள்ளது. பாதிரியார் தமிழில் ‘வருஷப்பிறப்பு வெண்பா’ ஒன்றினை வாழ்த்துச் செய்தியாக எழுதி அனுப்பியதை இந்தக் கடிதம் வெளிப்படுத்துகிரது.

அட்டவணை: IB 59:22

இது சீகன்பால்க் எழுதிய மூன்று பக்கங்களிலான ஒரு நீண்ட பிரசங்கச் செய்தி. ‘தமிழ்ச்சாதியினருக்கெழுதின நிருபம்’ எனத் தலைப்பிடப்பட்டு பாதிரியார் சீகன்பால்க அவர்களது கையெழுத்தில் அமைந்த ஒரு காகித ஆவணம்.

மேற்குறிப்பிடப்பட்ட உதாரணங்களைப் போன்று அறிக்கைகள், ஃப்ராங்கே கல்வி நிறுவனத்தின் தலைவருக்கான கடிதங்கள், செய்திகள், துண்டுப்பிரசுரங்கள், தரங்கம்பாடி ஜெருசலம் அச்சகத்தில் அச்சிடப்பட்ட டோய்ச் மொழியும் தமிழும் உள்ள வகையில் அச்சடிக்கப்பட்ட பிரசுரங்கள் இந்த ஆவணத் தொகுப்பில் இடம்பெறுகின்றன.

## மதிப்பீடு

ஜெர்மனியின் ஹாலே நகரத்தில் அமைந்திருக்கும் ஃப்ராங்கே கல்வி நிறுவனத்தில் உள்ள தமிழ் ஓலைச்சுவடிகளும் காகித ஆவணங்களும் தெரியப்படுத்தும் செய்திகள் தமிழகத்தின் கி.பி.1700 களிலிருந்து ஏறக்குறைய இரு நூற்றாண்டு காலகட்டங்களில் நடைபெற்ற பல தகவல்களை வெளிப்படுத்தும் முதன்மைச் சான்றுகளாகும். இவை அக்காலத்து நடைமுறைச்சூழலை விளக்கும் வகையில் புதிய செய்திகளை பதிந்திருப்பதால் இவை சமய நூல்கள் அல்லது ஒரு குறிப்பிட்ட மதம் சார்ந்த செய்திகல்ள் என்ற குறுகிய கண்கொண்டு பார்ப்பதை விட்டு வரலாறு, சமூக, மானுடவியல் கோணத்தில் இவை ஆராயப் பட வேண்டியது அவசியமாகின்றது.

## முடிவுரை

இக்கட்டுரைக் கூறும் செய்தியை

முன்னிலைப்படுத்தி இக்கல்விக்கூடத்தின் அரிய ஆவணங்கள் பகுதியில் பாதுகாக்கப்படுகின்ற ஆவணங்கள் வாசிக்கப்பட வேண்டும். இன்றைக்கு முன்னூறு ஆண்டுகளுக்கு முந்தைய தமிழகச் சூழலை, தமிழ் மக்களின் வாழ்வு நிலையை, சமூகக் கட்டமைப்பை அறிந்து கொள்ள இவ்வகை ஆவணங்கள் கூறும்செய்திகளை முழுமையாக ஆராய வேண்டிய தேவை உள்ளது. ஐரோப்பாவிலிருந்து முற்றிலும் மாறுபட்ட பண்பாட்டுச் சூழலிலிருந்து தமிழகம் வந்தவர்கள் தங்கள் பார்வையில் பதிந்து வைத்த செய்திகளும் ஆரம்பகால அச்சுப்பதிப்பாக்க முயற்சிகளும், சாதிகளால் கட்டமைக்கப்பட்ட தமிழ்ச்சமூக கட்டமைப்பில் அவர்கள் சமயப்பணியைச் செய்ததோடு சமூகப் பணிகளையும் தமிழ்ப்பணியையும் முன்னெடுத்த நிகழ்வுகளை ஆய்வுக் கண்ணோட்டத்தில் கண்டு ஆராய்வது தமிழக வரலாற்றின் விடுபட்ட பக்கங்களில் சிலவற்றைக் கண்டறிய உதவும்.

## References


Arno Lehmann. (1956). *Es began in Tranquebar, Die Geschichte der ersten evangelischen Kirche in Indien*, Berlin: Evangelische Verlagsanstalt.

Balasubramaniam, J. (2017). *Suryothayam Muthal Uthayasuriyan Varai Talith Ithalgal 1869-1943*. Nakarkoil: Kalasuvadu Pathipagam.

Bartholomaeus Ziegenbalg. (1710). *Ausfuehrlicher Bericht.* London Archive.

Bartholomaeus Ziegenbalg. (1867). *Genealogie der Malabarischen* Gåâ*tter*, Christian Knowledge Press, Madrass.

Bartholomaus Ziegenbalg. (2018). *Grammatica Damulica.* Chizine Pubn.

Caland, W. (Hersg.). (1926). *Ziegenbalgs Malabarisches Heidenthum*. Amsterdam.

Daniel Jeyaraj. (2006). *Bartholomäus Ziegenbalg, the Father of Modern Protestant Mission: An Indian Assessment*, Chennai: ISPCK.

Ferd, Fenger. J. (1863). *History of the Tranqubar Mission*. Tranquebar: Evangelical Lutheran Press.

Germann, W. (1880). *Ziegenbalgs bibliotheca Malabarica, in: Missions nachrichten der Ostindischen Missionansanstalt zu Halle*, Jg.XXXII, H.1 & 2, Halle, Germany.

Guthama Sanna. (2007). *Ka.Ayothidasa Pandithar*. Chennai: Sahitya Academic.

*Halle Reports*. Vol.I pp. 286/287.

Jeyaseela S., Stephen. (2008). Caste *catholic Christianity and the Language of Conversion-Social Change and Cultural Translation in Tamil Country*, *1519-1774.* Delhi: Gyan Publishing House.

Joseph G., Muthuraj. (2010). *We Began at Tranquebar - Vol. I: SPCK, the Danish-Halle Mission and Anglican Episcopacy in India (1706-1843).*

Kay Larsen. (1918). *Kroniker Fra Trankebar*, Copenhagen. Danmarks: Lindhardt og Ringhof.

Mayilai Sini, Vengkadasamy. (1936). *Kristuvamum Tamilum*. Chennai: Santhi Nulagam.

Paramasivan, Tho. (2015). *Ariyapadatha Tamilagam*. Nakarkoil: Kalasuvadu Pathipagam.

Rheinus, C., T., E. (1896). *A grammar of the Tamil Language with and Appendix*, Madras. Sivasubramanian. A. (1984). *Adimai Muraiyum Tamilagamum*. Chennai: New Century Book House.

Sivasubramanian. A. (2015). *Varalarum Valakarum*. Nagarkoil: Kalasuvadu Pathipakam.

Sivasubramanian. A. (2016). *Adithala Makkal Varalaru*. Chennai: New Century Book House.

Subashini, K. (2018). *U.Ve.Savudan Oor Ula*. Chennai: Azhi Publications.

Thomas Phillipps, J. (1719). *Thirtyfour Conferences between the Danish Missionarries and the Malabarian Brahmans*, London: Clements.

Ziegenbalg, B. (1713). *A Letter to the Reverend Mr.Geo. Lewis, Chaplain to the Honourable the East India-Company, at Fort St.George: Giving an Account of the method of Instruction used in the Charity-Schools of the Church, call'd Jerusalem, in Tranquebar; By the Protestant Missionaries there. Translated from the Portugueze-Copy printed at Tranquebar*, Evangelical Lutheran Press, Tranquebar.

http://scholiast.org/history/tra-narr.html (The complete text of the charter may be found (in Danish) in FELDBÆK, OLE: Danske Handelskompagnier 1616-1843. Oktrojer og interne ledelsesregler. Copenhagen 1986).

# பாடத்திட்டப் பகுப்பாய்வு (தொடக்கப்பள்ளி தமிழ்மொழிப் பாடத்திட்டம் 1957)

# Tamil Language Syllabus at the primary level 1957 – An Analysis

திருமதி க.சு. சங்கீதா / Smt. K.S. Sangeetha [1]

Date of submission: 2018-10-28
Date of acceptance: 2018-11-29
Date of Publication: 2018-12-30
Corresponding author's
Name: Smt. K.S. Sangeetha
Email:
KSSangeethaSCERT@gmail.com

***Abstract***

Syllabus is the foundation of a society. Despite the invasion of many languages including English, Tamil, the classical language, has survived and prospered over the millennium. The objective of this analysis is to investigate the content used for teaching Tamil 60 years ago. This syllabus has been prepared keeping in mind the age, the innate skill of the learners, learning content prescribed, textbooks, objectives of teaching, transactional strategies and duration recommended for teaching the prescribed lessons with in the allotted working days. This syllabus throws light on the purpose of Syllabus writing (i.e) transforming students as future resources of the society. There is an obvious gradation in the use of vocabulary from 500 words at Std I and moving on to 1000 words at Std VI. From Std I to III focus is on oral reading, oral responses and copy writing and at IV and V this is taken forward to life-oriented writing tasks such as writing business letters, filling up forms, writing essays on field trips and personal experiences. Stories and prose pieces gradually move from simple to rich examples drawn from the cultural life of Tamils. Poems are culled out from religious literature. Didactic literature, one act plays, Biographical sketches, inventions and innovations spiced up in the lessons also make language learning very interesting.

**Key Words:** Tamil Language Syllabus – gradation of content – skill based and age-appropriate syllabus– focus on developing listening, speaking, reading and writing.

## முன்னுரை

அளவற்ற மனித ஆற்றலைப் பண்படுத்தியும் பக்குவப்படுத்தியும் சமூக வளர்நிலைக்கு ஏற்ப வடிவமைக்கும் திறன் கல்விக்குண்டு. கல்வி பட்டறிவினால் பெறுவது பாதியும் எனின் பகுத்தறிவைப் பயிற்றுவதன் மூலம் பெறுவது மீதி ஆகும். கல்விக்கூடம் என்ற வரையறைக்குள் தரப்படும் கல்வி, கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டங்களை மையமாகக் கொண்டது. அவ்வகையில், பாடத்திட்டம் சமூக

[1]The author is an Assistant Professor in the State Council of Education Research and Training, Chennai, Tamil Nadu, India. KSSangeethaSCERT@gmail.com

உருவாக்கத்திற்கான அடித்தளம் எனலாம். தொன்மையும் செம்மையும் இனிமையும் எளிமையும் அமைந்த தமிழ்மொழி, தோன்றிய காலந்தொட்டுப் பல்வேறு காலங்களிலும் வந்தேறிய பல்வேறு மொழிகளுக்கு ஊடாக நாணலாய் வளைந்து ஆலாய் நின்று நிலைபெற்றுத் தழைத்தோங்கிக் கொண்டிருக்கிறது.

இத்தகு வளமையும் வனப்பும் பெற்ற மொழியை அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கற்பித்தல் என்பது கவனமுடன் நோக்கப்பட வேண்டிய ஒன்று. இந்நோக்குதலில் ஆங்கிலேயர் அகன்று பத்து ஆண்டுகளுக்குப்பின் பள்ளிக்கல்வியில் தமிழ்மொழியைக் கற்பிக்கப் பயன்படுத்தப்பட்ட பாடப்பகுதிகள் எவை என்பதை அறியவும் இன்றைய மொழிப்பாடத்திட்டத்தில் நம் முன்னெடுத்தல் எந்நிலையில் உள்ளது என்பதை அறிந்துகொள்ள வகைசெய்யும் நோக்கிலும் இப்பாடத்திட்டப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்றைய பாடத்திட்டத்தினை அன்றைய பாடத்திட்டத்துடன் ஒப்பிடுவது நோக்கமில்லை எனினும் தொன்மையான ஒரு மொழி, 60ஆண்டுகளுக்கு முன்பு எவ்வெப் பாடப்பகுதிகளைக் கொண்டு எந்த இலக்கை முன்னிறுத்தி மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது என்பதை அறிய இயலும் என்பதாலும் மொழி கற்பித்தலில் நமது தற்போதைய நிலையைச் சற்று முறைப்படுத்திக் கொள்வதற்கும் இப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கலைத்திட்டம், பாடத்திட்டம் என்பன

பிறந்த குழந்தை முதலாக அனைவரும் சமூகத்தின் வாயிலாகவும் சுற்றிச் சூழ்ந்த மனிதர்கள் வாயிலாகவும் பல்வேறு அனுபவங்களைக் கற்றலாகப் நாள்தோறும் பெற்று வருகின்றனர். இருப்பினும் கட்டமைக்கப்பட்ட கற்றல் என்பது கல்விக்கூடத்தின்வழி வழங்கப்படுவதாகும். கல்விக்கூடக் கற்றலுக்கான வரையறையே கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் ஆகும். கலைத்திட்டத்தின் அடுத்த படிநிலை பாடத்திட்டம்.

கலைத்திட்டம் என்பது குறித்துப் பல்வேறு வரைவிலக்கணங்கள் கூறப்படுகின்றன. அவற்றைத் தொகுத்துப் பின்வருமாறு கருத்துரைக்கலாம்:

- ✓ "கல்விக் குறிகோள்களை அடைவதற்காகப் பள்ளிக்கூடங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான பட்டறிவுகளுமே (அனுபவம்) கலைத்திட்டம் ஆகும்."
- ✓ "ஒரு நாட்டின் தேசிய இலக்குகளை அடையவும் அங்குள்ள சமூகத்தில் வாழும் ஒருவர் எதிர்கொள்ள வேண்டிய சிக்கல்களைச் சமாளிக்கவும் அறிவு, திறன், நேர் மனப்பாங்கு ஆகியவற்றைக் கொண்ட ஆளுமையுடைய சிறந்த குடிமக்களை உருவாக்க வேண்டியும் திட்டமிடப்படுகின்ற கல்வியும் பட்டறிவின் சேர்க்கையுமே கலைத்திட்டம் ஆகும்."

பாடத்திட்டம் என்பது கற்பவரின் திறன் வயது ஆர்வம் புரிந்துகொள்ளும் திறன், கற்கும் பாடப்பகுதி, பாடப்பகுதியை உள்ளடக்கிய பாடப்புத்தகம், கற்பித்தல் நோக்கம், கற்பித்தல் நெறிமுறை, கற்பிக்கும் காலஅளவு ஆகியனவற்றை உள்ளடக்கி அவ்வக் காலத்தின் சமூகத் தேவைகளுக்கு ஏற்பக் கட்டமைக்கப்படுவது.

பாடத்திட்டம், மாணவர்களுக்கு எதை, எங்கு, எப்படி, எத்தனை நாள், எதன் வாயிலாகக் கற்பிக்க வேண்டும் என்பன போன்ற வழிகாட்டுதல்களை உள்ளடக்கியது. மேலும், கற்பிப்பதற்கு உதவும் பாடநூலை எவ்வாறு கட்டமைக்க வேண்டும் என்றவாறான குறிப்புகளையும் பாடத்திட்டம் கொண்டிருக்கும்.

பாடத்திட்டத்தினை அடுத்து உருவாக்கப்படும் பாடநூல், மாணவர் கற்பதற்கும் ஆசிரியர் கற்பிப்பதற்கும் மாணவர் அடைவுகளை அளந்தறிவதற்கும் உதவும் வழிகாட்டியாக அமையும். அதில்

மாணவர் பயில வேண்டிய அனைத்துப் பாடப்பகுதிகளும் தொகுத்துத் திரட்டி நிரல்பட முறைப்படி அளிக்கப்பட்டிருக்கும். பாடத்திட்டம் ஆசிரியர்க்கானது எனில் பாடநூல் மாணவர்க்கானது. இவ் வரிசையில் ஆசிரியர் கையேடு மற்றும் மாணவர் பயிற்சி ஏடு, மாதாந்திரப் பாடத்திட்டம் போன்றவையும் பாடம் பயிற்றுவித்தலின் கூறுகளாக அமையும்.

பள்ளிக்கல்வியில் குறிப்பாகத் தொடக்க வகுப்பு நிலையில் பாடத்திட்டம் என்பது மாணவர்களை எதிர்காலச் சமூகத்திற்கான வளங்களாக உருவாக்குவதற்கான அடித்தளம். இவ்வடித்தளத்தில் 1957ஆம் ஆண்டின் தொடக்க வகுப்பு (15) தமிழ்மொழிப் பாடத்திட்டம் உருவாக்கப்பட்ட முறையை பகுத்தாயலாம்.

## கற்பிக்கும் பாடப் பகுதிகளாவன

மொழியின் அடிப்படைத் திறன்களை மையமாகக் கொண்டுள்ள இப்பாடத்திட்டம், செறிவு, செப்பம், எளிமை, நேர்த்தி ஆகியவற்றுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் மொழிகற்றல் மீதான அக்கறை ஒவ்வொரு சொல்லிலும் படிந்துள்ளது.

முதல் வகுப்பின் தமிழ்மொழிப் பாடத்திட்டம் நான்கு கூறுகளை உள்ளடக்கியுள்ளது. அவை வாய்மொழி, வாசித்தல், எழுதுதல் மற்றும் செய்யுள் என்பனவாகும்.

வீட்டை விட்டுக் கல்வியின் பொருட்டுப் பள்ளிக்கு வரும் குழந்தை எந்தச் சூழலிலும் தனித்து விடப்பட்டமையை உணராது மகிழ்ந்து கற்கும்படி சொற்கள், பொருள்கள் ஆகியவற்றின் பெயர்கள், உரையாடல்கள், கதைகள் ஆகியன பரிந்துரைக்கப்பட்டுள்ளன. தெளிவான, திருத்தமான பேசுதலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

எழுத்துகளை உச்சரித்து எழுத்துக்கூட்டிப் படித்துப் பொருள் புரிந்து கொள்ளுவதற்கென 64 பக்கங்களில் 300 புதிய சொற்களையும் 40பாடங்களையும் உள்ளடக்கிய பாடநூல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எழுதும் பயிற்சியில் தனி எழுத்துகள் சொற்கள் எளிய தொடர்கள் இரு கோடுகளுக்கு இடையே எழுதப்பட வேண்டும் எனவும் தெளிவான உச்சரிப்பும் ஒப்பித்தலும் போதுமானது என்ற அடிப்படையில் 100 செய்யுள் வரிகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் வகுப்பின் தமிழ்மொழிப் பாடத்திட்டம் வாய்மொழி, செய்யுள், உரைநடை, சொல்வதெழுதுதல் என்னும் நான்கு கூறுகளைக் கொண்டுள்ளது.

முதல் வகுப்பைத் தொடர்ந்து கூடுதலாக 500 புதிய சொற்களை முறையான ஒலிப்புடன் திருத்தமாகவும் தெளிவாகவும் படித்தல் என்பதை முன்னிறுத்திய இரண்டாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூல் 72 பக்கங்களில் 30 பாடங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று வரையறையறுக்கப்பட்டுள்ளது.

செய்யுள் 140 வரிகள் கற்றல், கதை அல்லது நிகழ்வை முழுமையாகக் கூறுதல், சிறிய கதையை நடித்தல், உரையாடலில் பயிற்சி பெறுதல் போன்றவை வாய்மொழியாகப் பயிற்சியாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இரண்டு கோடுகளுக்கு இடையே எழுதும் பயிற்சியும் (நான்காம் வகுப்பு வரை) ஒவ்வொரு பாடத்திலும் சொல்வது எழுதுதல் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் வகுப்பிற்கு வாய்மொழி, செய்யுள், உரைநடை, படித்தல், இலக்கணம், எழுதுதல் ஆகிய ஆறு கூறுகளைக் கொண்டுள்ளது. 30 செய்யுள் பாடல்கள், 30 பாடங்கள், 700 புதிய சொற்கள் அடங்கிய 80 பக்கப் பாடநூல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நிகழ்வை முழுமையாகக் கூறுதல், கதையை நடித்துக்காட்டல், உரையாடுதல், படித்தல், சிறுபகுதி செய்யுள்களை ஒப்புவித்தல், கதை அல்லது நிகழ்வை எழுதப் பழகுதல் ஆகியன செயல்களாகக் கூறப்பட்டுள்ளன.

வாய்க்குள் படித்தலுக்கும் வாய்விட்டுப் படித்தலுக்கும் 40:60 என்ற விகிதம் படித்தல் அளவாக வகுக்கப்பட்டுள்ளது. வாய்க்குள்

படித்தலின் வேகம் அதிகரிக்க வேண்டும் வாய்விட்டுப் படித்தல் குறைய வேண்டும், படித்த பகுதியின் முதன்மையையும் கதையின் சுருக்கத்தையும் கருத்துணரப் பழக வேண்டும் என்பது படித்தலின் மையமாக்கப்பட்டுள்ளனது.

பெயர், வினைச் சொற்களைத் தனித்தறிதல், ஒருமை பன்மை அறிதல், முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, மேற்கோள் குறி ஆகியவற்றின் பயனறிதல், எழுவாய்க்கு ஏற்ற பயனிலை அமைத்தல், முக்காலங்களையும் முறையாகப் பயன்படுத்துதல் ஆகிய இலக்கணங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

எழுத்தின் வடிவம் மாறுபடாது வேகமாக எழுதுதல், பாடநூல் வினாக்களுக்கு இரண்டு மூன்று தொடர்களில் நீண்ட விடைகளை எழுதப் பழகுதல், கடிதம் எழுதுதல், மாணவர் தம்மைப் பற்றிய சிறு நிகழ்வுகளைச் சுருக்கமாக எழுதுதல் ஆகியவை எழுதுதல் திறன்களாகக் கூறப்பட்டுள்ளன.

நான்காம் வகுப்பு செய்யுள், வாய்க்குள் படித்தல், இலக்கணம், கட்டுரை ஆகிய கூறுகளைக் கொண்டுள்ளது. 100 செய்யுள் வரிகள், 23 பாடல்கள், 32 பாடங்கள் கொண்ட 96 பக்கமுள்ள பாடநூல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பல சிறு கதைப்புத்தகங்களில் உள்ள பயண வரலாறுகள், அறிவியல் வளர்ச்சி, உலக அதிசயங்கள், மாத இதழ்கள், நாளிதழ்கள் ஆகியவற்றைப் படித்தல் முதலானவை வாய்க்குள் படித்தலாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

பிழையின்றிப் பேசவும் எழுதவும் தேவையான இலக்கண அடிப்படைகளைக் கற்பித்து வழக்கத்தில் பயன்படுத்தப் பழக்குதல், நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்துதல் போன்றவை இலக்கணப் பகுதிகளாக வரையறுக்கப்பட்டுள்ளன.

வரலாறு சார்ந்த களப்பயணம், பள்ளியின் அன்றாடச் செயல்பாடுகள், பள்ளி ஆண்டுவிழா, பண்டிகைக் கொண்டாட்டம், பள்ளியிலும் வீட்டிலும் குழந்தைகளின் செயல்கள் போன்ற தலைப்புகளில் எளிய கட்டுரைகளை எழுதுதல், நீண்ட வணிகக் கடிதங்களை எழுதுதல் ஆகியவை கட்டுரை எழுதுதல் பயிற்சிக்கென அளிக்கப்பட்டுள்ளன.

ஐந்தாம் வகுப்பு செய்யுள், உரைநடை, வாய்க்குள் படித்தல், கட்டுரைகடிதம் எழுதுதல், இலக்கணம் போன்ற கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

சைவம், வைணவம், கிறித்தவம், இசுலாம் உள்ளிட்ட அனைத்துச் சமய இலக்கியங்களிலிருந்தும் திருக்குறள் கடவுள்வாழ்த்துப் பகுதியிலிருந்தும் செய்யுள்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

நீதி இலக்கியங்கள், இதர இலக்கியங்களில் இருந்து 80வரிகள் மனப்பாடம் செய்யப்பட வேண்டும் எனவும் சிறுகதை, வாழ்க்கை வரலாறு, புதிய கண்டுபிடிப்பு, உரையாடல், ஓரங்க நாடகம், கடிதம், விளக்கக் கட்டுரை முதலியவை உரைநடைப் பாடங்களாகவும் வீரச்செயல்கள், பயண வரலாறுகள் முதலானவை வாய்க்குள் படித்தல் பகுதிகளாகவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இரண்டு கோடுகளுக்கு இடையே பார்த்து எழுதுதலும் கடிதம் எழுதுதல், விண்ணப்பங்களை நிரப்புதல், கதைகளைச் சுருக்கி எழுதுதல், குறிப்புகளைக் கொண்டு விளக்கி எழுதுதல், கூட்டங்கள், விழாக்கள் குறித்துக் கட்டுரைகள் (12) எழுதப் பயிற்சி பெறுதல் ஆகியனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

64 பக்கமுள்ள துணைப் பாடநூலும் எழுத்து, சொல், தொடர் அமைந்த இலக்கணப் பகுதியும் ஐந்தாம் வகுப்புத் தமிழ்மொழிப் பாடத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

## 1957இன் தொடக்கப்பள்ளி தமிழ்மொழிப் பாடத்திட்டம் அளிக்கப்பட்டுள்ளவாறே

மிகச் சுருக்கமான தெளிவான பாடப்பகுதிகளும் பழைய சொல் வழக்காறுகளையும் கொண்ட 1957ஆம் ஆண்டின் தொடக்கப்பள்ளித் தமிழ்மொழிப் பாடத்திட்டம் பின்வருமாறு

| முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|
| பாடநூல் | | | | |
| 40 பாடங்கள் கொண்ட 64 பக்க பாடப் புத்தகம் | 30 பாடங்கள் கொண்ட 72 பக்க பாடப் புத்தகம் | 30 பாடங்கள் கொண்ட 80 பக்க பாடப்புத்தகம் | 32 பாடங்கள் கொண்ட 96 பக்க பாடப் புத்தகம் | 64 பக்க உப பாடபுத்தகம் |
| செய்யுள் | | | | |
| **செய்யுள்** ஆத்திசூடியில் 50 வரிகள், இதர பாடல்கள் 50 வரிகள். அவற்றைத் தெளிவான உச்சரிப்புடன் ஒப்புவித்தல் போதுமானது. அவற்றின் பொருள் விளக்கங்கள் தேவையில்லை. | **செய்யுள்** உலகநீதி - 40 வரிகள் கொன்றை வேந்தன் 40 வரிகள் நர்சரி பாடல்கள், அபிநயப் பாடல்கள் 60 வரிகள் | **செய்யுள்** வெற்றிவேற்கை 15 பாடல்கள் மூதுரை - 15 பாடல்கள் | **செய்யுள்** நல்வழி 10 நீதி வெண்பா 10 சதகம் 3 தேசிங்குராசன் கதைப்பாட்டு 50 வரி கட்டபொம்மன் பாட்டு 50 வரி | **செய்யுள்** தேவாரம் 1 திருவாசகம் 1 தேம்பாவணி 1 திவ்விய பிரபந்தம் 1 சீறாப்புராணம் 1 திருக்குறள் - கடள்வாழ்த்து - 10 குறள்கள் நீதி வெண்பா- 5 |
| உரைநரை | | | | |
| **உரைநடை** - பத்து உரைநடைப் பாடங்களை உள்ளிட்ட 40 பாடங்கள், பழைய மரபு முறையில் வரிசை பிறழாமல் அகர வரிசையிலேயே கற்பிக்கப் படலாம். | **உரைநடை** - படங்கள் நீங்கலாக ஒவ்வொன்றும் ஒன்றரைப் பக்கம் உள்ள 30 பாடங்களை முடித்தல். பாட்டு, சிறிய கதை, நூலாசிரியர் களின் சுருக்கமான வாழ்க்கைக் குறிப்பு, வாழ்க்கை நிகழ்ச்சிகள், தேவதைக் கதைகள், விலங்குகள், பறவைகள் பற்றிய கதைகள், எளிய உரையாடல்கள், நாடகக் காட்சிகள், குழந்தைகளின் செயல்களை அடிப்படையாகக் கொண்ட பாடங்கள் | **உரைநடை** - இரண்டு பக்கங்கள் கொண்ட 30 பாடங்கள் மாதம் 3 பாடங்கள் வீதம் முடிக்கவும் (80 பக்கம்) மேலும் 700 புதுச் சொற்கள் கற்பித்தல் | **உரைநடை** - இரண்டு பக்க அளவுள்ள 32 பாடங்கள், (இவற்றுள் 10 செய்யுள் பகுதிகள், 12 கதைகள், நாடகங்கள், கடிதம், பிரயாணச் செய்திகள், தன்மை இடத்தில் அமைந்த கூற்றுக்கள், வருணனைகள் உள்ளிட்ட 10 பாடங்கள், சொற்களஞ் சியம் 1000 ஆக உயர்த்துதல் | **உரைநடை** - சிறுகதைகள் வாழ்க்கை வரலாறுகள் புதிய கண்டுபிடிப்புகள் உரையாடல் ஓரங்க நாடகங்கள் கடிதம் எழுதுதல் விவரமான கட்டுரைகள் முதலிய பாடங்கள் |

| வாசித்தல் பயிற்சி | | | | |
|---|---|---|---|---|
| **வாசித்தல்**<br>64 பக்கங்களுள்ள புத்தகத்தில் 40 பாடங்கள் அமைந்திருக்கும். அவற்றுள் 300 சொற்கள் அடங்கி யிருக்கும். வருஷ முடிவில் அந்த 300 சொற்களையும் குழந்தைகள் படிக்கவும் எழுதவும் வேண்டும் | **வாசித்தல்**<br>முதல் வகுப்பைப் போலவே ஆனால் மேலும் பல புதிய சொற்களைக் கற்பிக்கவும் 500 புதிய தூய தமிழ்ச் சொற்களை இவ்வகுப்பில் அறிய வேண்டும். | **வாசித்தல்**<br>மௌன வாசிப்பும் வாசித்தலும் 40:60 விகிதத்தில் அமைத்தல். மௌன வாசிப்பின் வேகம் அதிகரிக்க வேண்டும். சப்தம் போட்டு வாய்விட்டுப் படித்தல் குறைய வேண்டும். படித்த பகுதியின் முக்கியத்து வத்தையும் கதையின் சுருக்கத்தையும் கிரகித்துக் கொள்ளப் பழக வேண்டும். | **மௌன வாசிப்பு**<br>பல சிறு கதைப் புத்தகங்களில் பிரயாண வரலாறுகள், விஞ் ஞான வளர்ச்சி, உலக விநோதங்கள், மாதப் பத்திரிகைகள், தினசரி பத்திரிகைகள் படித்தல் | **மௌன வாசிப்பு**<br>வீரச்செயல்கள் பிரயாண வரலாறுகள் |
| எழுதுதல்பயிற்சி | | | | |
| எழுதுதல்<br>இரு கோடுகளுக் கிடையே தான் எழுத வேண்டும். தனி எழுத்துகள், வார்த்தைகள், எளிய வாக்கியங்கள் எழுத்துப் பயிற்சியில் அடங்கும். | சொல்வதெழுதல்<br>இவ்வகுப்பிலும் மேலும் நான்காம் வகுப்பு முடியக் குழந்தைகள் இரண்டு கோடுகளுக்கிடையே எழுத வேண்டும். ஒவ்வொரு பாடத்திலும் சொல்வதெழுதல் தொடர்ந்து கொடுக்க வேண்டும். | எழுதுதல்<br>அழகு குறையாமல் வேகமாக எழுதுதல் பாடப்புத்தக கேள்விகளுக்கு இரண்டு மூன்று வாக்கியங்களில் நீண்ட விடைகளை எழுதப் பழகுதல். கடிதம் எழுதுதல் மூலமாக கட்டுரைப் பயிற்சி தன்னைப் பற்றிய சிறு சம்பவங்களைச் சுருக்கமாக எழுதப் பழகுதல். | கட்டுரை<br>நீண்ட சமூக வியாபாரக் கடிதங்கள வருஷப் பின்பகுதியில் எழுதுதல். பள்ளியில் அடிப்படைத் தொழில் சரித்திரச் சம்பந்தமான இன்பச் செலவு பள்ளிக்கூட வருஷாந்திர விழா பண்டிக்கைக் கொண்டாட்டம் பள்ளியிலும் வீட்டிலும் சிறுவரின் செயல்கள் போன்ற தலைப்புகளைக் கொண்டு எளிய கட்டுரை எழுதுதல். | வியாசம் 12<br>கட்டுரைப் பயிற்சிகள் இரண்டு கோடுகளுக் கிடையே இவ்வகுப்பிலும் பார்த்து எழுதும் பயிற்சி அவசியமாகும் கடிதம் எழுதுதல், விண்ணப்பங் களைப் பூர்த்தி செய்தல், கதைகளைச் சுருக்கி எழுதல், குறிப்பு களைக் கொண்டு முழு வியாசம் எழுதல், கூட்டங்கள், கொண்டாட் டங்களைப் பற்றிய கட்டுரைகள் 12. பத்திகள் பிரித்து எழுதும் பயிற்சி நன்கு வற்புறுத்திப் போதிக்க வேண்டும். |

| இலக்கணம் | | | | |
|---|---|---|---|---|
| | | **இலக்கணம்** பெயர், வினைச் சொற்களை எடுத்தல். ஒருமை பன்மை அறிதல் முற்றுப்புள்ளியின் உபயோகம் எழுவாய்க்கு ஏற்ற பயனிலை அமைத்தல். காலம் முக்காலங்களையும் சரிவர உபயோகித்தல். இதர இலக்கணப் பிரிவுகள் கமாவை உபயோகித்தல் முற்றுப்புள்ளி மேற்கோள் குறிகள். | **இலக்கணம்** பிழையின்றி எழுதவும் பேசவும் நிறுத்துக் குறிகளை உபயோகிக்கவும் இலக்கண அடிப்படைகளை எல்லாம் திரும்பவும் கற்பித்து வழக்கத்தில் பழக்குதல் | **இலக்கணம்** இலக்கணம் என்பது என்ன வகைகள் 5 எழுத்து ஒலி எழுத்து வரி எழுத்து எழுத்து வகைகள் உயிர், மெய், ஆயுதம் குறில், நெடில், சுட்டு, வினா வலி, மெலி, இடை ரற, லளழ, நனண இவற்றின் ஒலி, பொருள் வேறுபாடு சொல்லாவது யாது? வகைகள் 4 அறுவகைப் பெயர் மூவிடம் மீவிடப்பெயர் வினைகள் சொற்றொடர் என்பது யாது? எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் நிறுத்துக் குறிகள் |

## பாடத்திட்டத்தின்வழி வளர்க்கப்படும் திறன்களாவன

மொழியைக் கற்பதன் வாயிலாகக் குழந்தைகள் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் போன்ற அடிப்படைத் திறன்களோடு கருத்துணர்தல், படைப்பாற்றல், நடைமுறை இலக்கணம், தானே கற்றல், சொல்லாட்சித் திறன் போன்ற மொழித்திறன்களையும் பெறவேண்டும். இதனை அடிப்படையாகக் கொண்டே இப்பாடத்திட்டம் படிநிலை வளர்ச்சியில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கேட்டல் திறன் செய்யுள் பகுதிகளின் வாயிலாகவும் பேசுதல் திறன் வாய்மொழி மற்றும் உரைநடைப் பகுதிகள் மூலமாகவும் படித்தல் திறன் வாசித்தல் மற்றும் மௌன வாசிப்பு பகுதிகளின் அடிப்படையிலும் எழுதுதல், எழுத்துகளை எழுதுதல், சொல்வதை எழுதுதல், வேகமாக எழுதுதல், கட்டுரை எழுதுதல், கடிதம் எழுதுதல், விண்ணப்பங்களை நிரப்புதல், குறிப்புகளைக் கொண்டு எழுதுதல் ஆகிய செயல்பாடுகளின்வழியும் தொடக்க வகுப்பு மாணவர்களைச் சென்றடைகின்றன.

## பாடநூல் உருவாக்கத்திற்கான குறிப்புகளாவன

பாடப்புத்தகங்களின் பக்க எண்ணிக்கை மற்றும் பாடங்களின் எண்ணிக்கையைத் துல்லியமாகப் பாடத்திட்டம் குறிப்பிட்டுள்ளது. எனவே பாடநூலும் பாடத்திட்டமும் அடுத்தடுத்து அல்லது ஒரே நேரத்தில் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்பதை அறியமுடிகிறது. பாடநூலை வடிவமைப்பதற்கான துல்லியமான சில கருத்துகளையும் பாடத்திட்டம் கொண்டுள்ளது.

பாடத்திட்டம் என்பது பாடப்புத்தகத்தைத் உருவாக்குபவர்களுக்கான முழுமையான தரவுகளைத் தெளிவாகக் கொண்டிருக்க வேண்டும். மேலும் மொழி வாயிலாக எந்தெந்தக் கருத்துகள்/திறன்கள் மாணவர்களைச் சென்றடையும் என்பதையும் முறையாக விளக்க வேண்டும். இவற்றை இப்பாடத்திட்டம் தெளிவாகக் கடைபிடித்துள்ளமையைக் காணமுடிகிறது.

## சிறப்புக் கூறுகளாவன

கற்றல்வழி மாணவர்களின் சொற்களஞ் சியம் பெருகவேண்டும்; சொல்லாட்சித் திறன் வலுவடையவேண்டும் என்ற நோக்கில் முதல் வகுப்பில் 300 சொற்களும் இரண்டாம் வகுப்பில் 500 சொற்களும் மூன்றாம் வகுப்பில் 700 சொற்களும் நான்காம் வகுப்பில் 1000 சொற்களும் கற்பித்தலுக்கெனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக முதல்வகுப்புப் பாடத்திட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள கீழ்க்காண் தொடர்கள், குழந்தை மையக் கற்றல் நிகழ்ந்தமையைப் புலப்படுத்துகிறது.

“வீட்டை விட்டுக் கல்வியின் பொருட்டு, பள்ளிக்கு வரும் குழந்தை எந்தச் சூழலிலும் தனித்து விடப்பட்டமையைக் கருதாது மகிழ்ந்து கற்கும்படி சொற்கள், பொருள்களின் பெயர்கள், உரையாடல்கள், கதைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. தெளிவான திருத்தமான பேசுதலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.”

எளிய தொடர்களில் தொடங்கிப் படிப்படியாக நீண்ட தொடர்கள் கொண்ட செய்யுள் பகுதிகள் மாணவர்கள் படித்து மனனம் செய்வதற்கு ஏற்பவும் அவர்களின் வயது, புரிதலுக்கு ஏற்பவும் தேர்ந்தெடுத்து அளிக்கப்பட்டுள்ளன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பான்மை வாய்விட்டுப் படித்தலுக்கும் மனனத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. முதல் வகுப்பில் மனனப் பகுதியில் பொருள் புரிதல் மையப்படுத்தப்படவில்லை.

பெயர்கள், உரையாடல்கள், கதைகள், நிகழ்வுகள் போன்றனவற்றை முழுமையாகச் சொல்லுதலில் தொடங்கும் வாய்மொழிப் பயிற்சி முதல் மூன்று வகுப்புகளில் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன.

இலக்கணப் பகுதி மூன்றாம் வகுப்பிலிருந்தே தொடங்குகிறது. எழுத்து, சொல், தொடர் இலக்கணப் பகுதிகள், நிறுத்தக்குறிகள் போன்றன பாடப்பகுதியாக்கப்பட்டுள்ளன.

படித்தல் (வாசித்தல்) என்பது முதல் மூன்று வகுப்புகளிலும் நான்கு, ஐந்தாம் வகுப்புகளில் வாய்க்குள் படித்தலாகவும் (மௌன வாசிப்பு) அளிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் வகுப்பில் படித்தல் 40 விழுக்காடாகவும் வாய்க்குள் படித்தல் 60 விழுக்காடாகவும் வகுக்கப்பட்டுள்ளது. உரைநடையைப் படித்துக் கருத்துணரும் திறன் மூன்றாம் வகுப்பிலேயே அடிப்படையாக்கப்பட்டுள்ளது.

இரண்டு கோடுகளுக்குள் எழுதுதல் நான்காம் வகுப்பு வரை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. முதல் இரண்டு வகுப்புகளில் எழுத்துகளை, சொற்களை, தொடர்களைப் பார்த்தும் சொல்லக் கேட்டும் எழுதும் மாணவர், மூன்றாம் வகுப்பில் அழகு குறையாமல் வேகமாக எழுத வேண்டும் என்பது எழுதுதல் பயிற்சியின் படிநிலை வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது.

## பிற கூறுகளாவன

புதிய பாடத்திட்டம் (1 முதல் 5வகுப்புகளுக்கு) என்ற தலைப்பிடப்பட்ட 64பக்கங்களைக் கொண்ட 18வூ12செ.மீ அளவு கொண்ட இக்குறுநூலில் ஏறக்குறைய 6பக்க அளவில் மட்டுமே 15வகுப்புகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம் அமைந்துள்ளது.

மீதமுள்ளவை கீழ்க்காண் அட்டவணையில் உள்ளபடி 15வகுப்புகளுக்கான பொதுப்பாடங்கள் மற்றும் பிற பாடங்கள் ஆகும். மொழி தவிர பிற பாடங்களும் தனித்தனி பக்கத் தலைப்புகளின்கீழ் திறன் அடிப்படையில் தெளிவாக அளிக்கப்பட்டுள்ளன. (சார்ந்த பாட ஆசிரியர்கள் தத்தமது பாடத்திட்டம் குறித்த ஒப்புநோக்கு ஆராய்ச்சிகளுக்கு இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்)

| முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|
| தமிழ் | தமிழ் | தமிழ் | தமிழ் | தமிழ் |
| கணிதம் | கணிதம் | கணிதம் | கணிதம் | கணிதம் |
| இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும் | இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும் | இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும் | இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும் | விஞ்ஞானப் பாடம், அனுபவ வேலை |
| சமூக அறிவு | சமூக அறிவு | சமூக பாடம் | சமூக பாடம் , பூகோளம் | சமூக அறிவு சரித்திரம் ஆட்சிமுறை பூகோளம் (இந்தியாவும் பாகிஸ்தானும்) |
| கைவேலை சித்திரம் வரைதல் சங்கீதம் | கைவேலை காகித அட்டை வேலை, களிமண் வேலை, சித்திரம் வரைதல், சங்கீதம் | கைவேலை - நெய்தல் - நூற்றல் காகித வேலை --- களிமண் வேலை - சங்கீதம் | கைவேலை - நூற்றல் - அட்டை மாதிரிகள் செய்தல் - களிமண் வேலை - சித்திரம் வரைதல் - சங்கீதம் | கைவேலை - நெய்தல் - நூற்றல் அட்டை வேலை - களிமண் வேலை - கைவேலையும் கலையும் - சங்கீதம் |
| --- | --- | --- | --- | ஆங்கிலம் (10 பக்கங்கள்) |
| குடிமைப் பயிற்சி | குடிமைப் பயிற்சி | குடிமைப் பயிற்சி | குடிமைப் பயிற்சி | குடிமைப் பயிற்சி |
| தேகாப்பியாசம் | தேகாப்பியாசம் | தேகாப்பியாசம் | தேகாப்பியாசம் | தேகாப்பியாசம் |
| கால அட்டவணைப்படி 220 வேலை நாள்களும் வாரத்திற்கு வகுப்பிற்கு 35 பாடவேளைகளும் பாடத்திற்கெனத் தனித்தனிப் பாடவேளைகளும் பட்டியலிடப்பட்டுள்ளன. | | | | |

## கூடுதலாக முக்கியக் குறிப்புகள் (9 பக்கங்கள்) என்னும் தலைப்பில்,

- கணித சூத்திரங்கள்
- கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் வாய்ப்பாடுகள்
- 01.11.56முதலான புதிய இந்திய யூனியனின் கவர்னர் ஆட்சிக்கு உட்பட்ட 14 மொழிவாரி இராச்சியங்களின் பட்டியல்
- லெப்டினென்ட் கவர்னர் ஆட்சிக்கு உட்பட்ட 6 மாநிலங்களின் பட்டியல்
- இந்தியாவில் உள்ள கிராமங்கள்(5,58,089), பட்டிணங்கள் (3,018), பெரிய நகரங்கள் (73) எண்ணிக்கை
- சென்னை இராச்சியத்தில் அமைந்துள்ள 13 மாவட்டங்களின் பட்டியல் (பரப்பு மற்றும் தலைநகரங்களுடன்)
- ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான முக்கிய தேதிகளின் பட்டியல்
- உலகில் உள்ள நீளமான, ஆழமான, உயரமான, தாழ்ந்த, பெரிய, அதிகமான, சிறிய, பெரிய, வேகமானவைகளின் பட்டியல் (ஒரு பக்கத்தில்)
- நம் நாட்டு நாணயச் செலாவணி குறித்த விவரம்
- இந்தியாவில் முதன்மையானவை குறித்த பட்டியல் (ஏரி, சிகரம், குகைக்கோவில், அணைக்கட்டு . . . . .)
- சமுத்திரங்கள் (சதுர மைல்களுடன்)
- இந்திய பாரத ரத்தினங்கள் என்னும் தலைப்பில் விருது பெற்றவர்கள் பட்டியல்
- நோபல் பரிசு பெற்ற இந்தியர்கள் பட்டியல் (இருவர் மட்டுமே இடம்பெற்றுள்ளனர்)

- கண்டங்களின் ஜனத்தொகை, சமயங்களைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை
- கண்டங்களின் பரப்பளவு (சதுர மைல்களில்)
- பின்னங்கள், தசமபின்னம், சதவீதம் பட்டியல் (1 பக்கம்)

போன்றவையும் 64பக்கங்களுக்குள் அளிக்கப்பட்டுள்ளன.

## தொகுத்து நோக்கின்

பகுப்பாய்வு செய்யப்பட்ட இப்பள்ளிப் பாடத்திட்டம் என்பது ஆசிரியர், மாணவர், கற்பித்தல், பாடங்கள், கல்வித்துறை சார்ந்தது என்பதைத் தாண்டி அக்காலக்கட்டத்தில் வழங்கப்பட்ட சொற்கள், பாடப்பகுதியின் இன்றியமையாமை, சமூகத் தேவைகள், நிருவாக முறை, கல்வி இலக்கு, மொழி மீதான அக்கறை, கல்வி குறித்த புரிதல், எதிர்காலத்தின் மீதான நம்பிக்கை போன்றனவற்றையும் உள்ளடக்கியதை அறிய முடிகிறது.

காலந்தோறும் சமூக மாற்றங்களுக்கு ஏற்ப மாணவர்களைச் சீர்படுத்தி வளப்படுத்தி வலுப்படுத்தி வருவதே கல்வித்துறையின் இலக்காக அமைய வேண்டும் என்ற கருத்தை முன்னிறுத்தினால் அப்பணியை இப்பாடத்திட்டம் அக்கறையுடன் அணுகி இருப்பதைக் காண முடிகிறது; சொல்லுவதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளாகவோ, நடைமுறைக்கு ஒவ்வாத ஏட்டுச் சுரைக்காய்களை மட்டும் அளிப்பதாகவோ இப்பாடத்திட்டம் அமையவில்லை. 60ஆண்டுகளுக்கு முன்பு வடிவமைக்கப்பட்ட இப்பாடத்திட்டம் மொழியைப் பயன்படுத்தும் முறையையும் அறிவையும், கணித நுட்பத்தையும் சமூகஅறிவுடன் தொழிற்கல்வியையும் இயற்கைப் பாடத்துடன் தோட்ட வேலையையும் அளித்து மாணவர்களைச் சமுதாயத்திற்கு ஏற்றவர்களாக உருவாக்கத் திட்டமிட்டுக் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

## References

*Puthiya Padathiddam*, 1-muthal 5-Vagupukalukku. Chennai Arasinar Kalvithurai.

*Asiriyarkalukana Vazhinul, Vaguppu Ondru Muthal Ezhu Varai.* (1957). Tamilnadu Pothukalviturai.

*Tamilaga Pothukkalvip Padathiddam.* (2009). India.

*Puthiya Padathiddam, 1-5 Vagupukal.* (1979). Government of Tamil Nadu.

# மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் கோயிலின் மகிமை

# The Glory of Maran Sri Marathandavar Temple

சர்மிளா சதாசிவம் / Sharmila Sathasivam [1]

முனைவர் சில்லாழி கந்தசாமி / Dr.Silllalee S. Kandasamy [2]

***Abstract***

During the 19th and 20th century Indians mainly South Indians were brought by British to Malaya to work at the plantations. Majority of them were Hindus of Tamil origin. These group of people brought along their cultural and religious believes that are practiced widely even till today. From the early days these people established many temples that always played an important role in their life. The Hindu temples are not only regarded as a place of worship or religious practices but also seen as an important symbol of the Hindu religion. Among many popular Hindu temples in Malaysia, Maran Sri Marathandavar Temple is considered to be famous one. This temple is located in the state of Pahang. This article presents the history and the tradition of the Maran Sri Marathandavar Temple.

Date of submission: 2018-11-15
Date of acceptance: 2018-12-10
Date of Publication: 2018-12-30
Corresponding author's
Name: Dr.Silllalee S. Kandasamy
Email: silllalee@utar.edu.my

**Key Words:** Hindu Temple, Temple worship, Ritual, Marathandavar, Glory.

## முன்னுரை

தமிழரின் வாழ்க்கையானது சமய நெறியுடனும், ஆலய வழிபாட்டுடனும் பின்னிப் பிணைந்தது. சங்க காலத்திற்கு முன்பிருந்தெ தமிழர்கள் கோவில் வழிபாட்டில் இருந்தவர்களாகப் போற்றப்படுகின்றன (இராசேந்திரன் - சில்லாழி, p.54). உலகின் பல்வேறு நாடுகளில் புலம் பெயர்ந்த தமிழர்களும் அங்கும் தமது வாழ்விடங்களில் ஆலயங்களை அமைத்து வழிபட்டு வந்திருக்கின்றனர். 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்தியாவிலிருந்து மலாயாவிற்குக் குடிபெயர்ந்த பெரும்பான்மையிநர் தமிழ் நாட்டின் கிராமப்புரங்களில் வாழ்ந்த சாதாரண மக்களேயாவர். இவர்களைத் தவிர்த்து ஒரு சிறுபான்மையினர் அரசாங்க ஊழியர்களாகவும், வர்த்தக சமூகத்திபனராகவும் பட்டணப்புரங்களில் குடியேறினர்(Sandhu, 2006, p.3-4).

தோட்டப்புரங்களில் குடியேறிய மக்கள் தங்கள் கிராமத்திலிதருந்து கொண்டு வந்த பிடிமண்ணைக் கொண்டு தாங்கள் வாழ்ந்த தோட்டப்புரங்களில் தெய்வங்கலை (பொதுவாக, மாரியம்மன், கருமாரியம்மன், முத்துமாரியம்மன்) பிரதிட்டை செய்து சிறிய கோயில்களை எழுப்பி வழிபட்டு வந்தனர்.

[1]The author is a masters Degree candidate at the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. Motchana68@gmail.com

[2]The author is an Assistant Professor in the Department of Modern Languages, University Tunku Abdul Rahman, Kajang, Malaysia. silllalee@utar.edu.my / silllalee@yahoo.com

பட்டணப்புரங்களில் வாழ்ந்த வர்த்தக மற்றும் அரசாங்க ஊழியச் சமூகத்திபனர், முருகன், சிவபெருமான், பெருமாள் போன்ற மூர்த்தங்களுக்கு ஆலயங்களை எழுப்பி வழிபட்டு வந்தனர். அடிப்படையில் இவ்வாறுதான் மலேசியாவில் இந்து ஆலயங்கள் தோற்றம் கண்டன (Silllalee & Rajantheran, 2014, p.37).

இதனைத் தவிர்த்து, இறைவனின் திருவுளத்தாலும், சில அற்புத நிகழ்வுகளாலும், இரைவனின் கட்டளையின் பேரிலும் கூட மலேசியாவில் சில ஆலயங்கள் அமைவுறப்பெற்றுள்ளன. அவ்வாறு தோன்றிய ஆலயங்களுள் ஒன்றான மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயத்தைப் பற்றிய வரலார்றுக் குறிப்பையும், ஆலயத்தின் சிறப்புகளையும் இக்கட்டுரை விளக்குகிறது.

## ஆலயம்

ஆலயம் என்பது (ஆ=ஆன்மா + லயம்= இன்புற்றிருத்தல்) ஆன்மா லயமாகும் இடம் என்று பொருள்படும். இதனைக் கோயில், திருத்தலம், சேத்திரம் என்றும் கூறுவதுண்டு (இராசேந்திரன், சில்லாழி, விக்னராசா, 2012, ஜீ.67). ஆலயங்கள் இறை சக்தியினை வெளிப்படுத்தும் இடமாகத் திகழ்கின்றன.

மனிதராய் பிறந்த ஒவ்வொருவருக்கும் சமயம் இன்றியமையாத ஒன்று (சிதம்பர சொக்கலிங்கம், 1987, ஜீ.1). உலகத்திலேயே பழைமையும் பெருமையும் சிறப்பும் உயர்வும் உன்னதமும் பெற்றது இந்து சமயம். நமது சமயத்தின் அஸ்திவாரமாக ஆலயங்கள் போற்றப்படுகின்றன. ஆலயங்கள் தமிழக சமுதாயத்தில் தொன்று தொட்டு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. அக்காலம் தொட்டே மன்னர்களும், அதிகாரிகளும், செல்வர்களும், வறியவர்களும் ஆலயங்களைக் கட்டுவதிலும் புதுப்பிப்பதிலும் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தனர் (இராஜகோபாலன், 1989, p.3). ஆகவேதான் 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' (கொன்றை வேந்தன்: 31) எனப் பெரியோர் கூறிச் சென்றனர்.

அதோடு நம்மை ஆன்மீக உணர்ச்சியாகிய பக்தியே முழு மனிதர்களாக்குகிறது. பக்தி உணர்ச்சி இல்லாத மனிதனின் வாழ்க்கை பாலைவனம் என்றே சொல்லலாம் (பூங்காவனம், 2008: p.45). பக்தியின் வெளிப்பாடாகவே ஆலய தரிசனங்கள் குறிப்பிடப்படுகின்றன. ஆகவேதான் இந்துக்கள் மத்தியில் ஆலய வழிபாடுகள் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. காலம் கடந்து நிற்கும் நம் வேத நெறிமுறைகளின் ஆணிவேராகத் திகழ்பவை நமது திருக்கோயில்கள் (ராஜகோபாலன், 2012, p.4). இதுவே 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என நம் முன்னோர்கள் அவற்றின் பெருமையைக் கூறிச் சென்றதன் காரணமாக இருக்கலாம்.

## மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயம்

மாரான் ஸ்ரீ மரத்தண்டவர் ஆலயம் மலேசியாவில் பகாங் மாநிலத்தில் குவாந்தான் ஜெராண்டுட் சாலையில் 100வது கிலோ மீட்டரில் அமைந்துள்ளது. ஒரு நூற்றாண்டுக்கு முன் தோற்றுவிக்கப்பட்ட இவ்வாலயம் தென்கிழக்காசிய நாடுகள் மட்டுமல்லாது உலக வாழ் இந்துக்கள் அனைவருக்கும் நன்கு அறிந்த பிரசித்தி பெற்ற தலமாகும். மலேசியத் திருநாட்டில் தைப்பூசத் திருவிழாவிற்குப் பத்துமலைத் திருத்தலத்தில் கூடும் பக்தர்கள் எண்ணிக்கையில் அடுத்தபடியாக மிக அதிகமான எண்ணிக்கையில் முருக பக்தர்கள் ஒன்று கூடும் தலமாக விளங்குவது மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயம் என்றால் அது மிகையில்லை. சரித்திர அடிப்படையில் அமைந்துள்ள இத்திருக்கோயில் உருத்திராட்ச விருட்சத்தை முதன்மையாகக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## தல வரலாறு

1891ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயம் உருவாகி 127 ஆண்டுகள் ஆகிவிட்டன. அன்றைய காலகட்டத்தில் குவாலாலும்பூரிலிருந்து குவாந்தான் நகருக்குச் சாலை அமைக்கும் நிர்மாணிப்புப் பணியை மேற்கொள்ளும் போது ஸ்ரீ மரத்தாண்டவர் பெருமான்

*குடிகொண்டிருந்த உத்திராட்சப் பழமரம் சேதமடைந்து இயற்கையாக அதிலிருந்து இரத்தம் வடிந்தது என்று கூறுகிறார் 2001 இல் தலைமை அர்ச்சகராக இருந்த கே.எஸ். கணபதி.*

*தொடர்ந்து அவர் கூறியதாவது, அதே வேளையில் மரம் வெட்டிக் கொண்டிருந்த தமிழர் ஒருவருக்கு அருள் வந்து அந்த மரத்தை வெட்டக் கூடாது என்றும் சாலையைச் சிறிது தூரத்திற்கு அப்பால் அமைக்க வேண்டும் என்றும் கூறினார். சாலைப் பராமரிப்பு மேற்பார்வையாளராக இருந்த ஆங்கிலேயர் அதனை ஏற்க மறுத்தார். உடனே சிறிய வடிவு கொண்ட தழும்பு அந்த மரத்தில் தோன்றவே, அதைப் பார்த்து வியந்த மேற்பார்வையாளர் மரத்தை வெட்டாமல் சாலையைச் சிறிது தூரத்திற்கு அப்பால் அமைக்க உத்தரவிட்டார். அன்றிலிருந்து அந்த இடம் ஸ்ரீ மரத்தாண்டவர் பாலதண்டாயுதபாணி என்ற பெயர் அமையப் பெற்ற புனித தலமாக அமைந்தது. இங்கு தூய பக்தியோடு வருபவர்களுக்கு எல்லா நன்மைகளும் வந்து சேர்கின்றன. ஊனமுற்றோர் நடப்பது, ஊமைகள் பேசுவது, நோயுற்றோர் குணமடைவது போன்ற பல அற்புதங்கள் இங்கு நிகழ்ந்துள்ளன.*

*அப்போதைய தலைமை அர்ச்சகர் ஸ்ரீ கே.எஸ்.கணபதி தாம் வந்தபோது மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயம் வெறும் தகரத்தாலும் மரப்பலகையாலும் மட்டுமே அமைந்திருந்ததாகவும் அப்போதெல்லாம் அங்கு அடிக்கடி பல அற்புதங்கள் நிகழுமென்றும் கூறினார். அதில் குறிப்பிடத்தக்க அற்புதம் யாதெனில் அந்தச் சாலையில் செல்லும் போது வாகனம் ஏதும் கோயில் முன் நிற்காமல் சென்றால் சிறிது தூரம் சென்றவுடன் ஓட முடியாமல் நின்றுவிடும். கோவிலிலிருந்து விபூதியை தேய்த்த பின்னர்தான் மீண்டும் ஓடும் (*http://kaumaram.com/aalayam/index_maran.html*). பழைய அமைப்பைப் பெற்றிருந்த போதிலும் இத்தலத்தின் மாண்பும் கீர்த்தியும் குன்றின் மேலிட்ட விளக்காய் பிரகாசித்துக் கொண்டிருந்தது என்றால் அதை மறுப்பதற்கில்லை. அப்போதைய கோயிலின் அமைப்பு அதன் சிறப்பினைக் காட்டுவதில் எந்தவொரு பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.*

*காலப்போக்கில் அமரர் திரு.சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் இத்திருக்கோவிலைப் பராமரித்து வெளி உலகிற்குப் பரைசாற்றினார். அன்றுமுதல் மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் பெருமான் அடியவர்களுக்கு அற்புதமாக அருள்பாலித்து வருகிறார். இவ்வாலயம் முறையே 1973ஆம் ஆண்டு, 1988ஆம் ஆண்டு ஆகிய காலங்களில் திரு எம்.எஸ்.மெய்யப்பன் செட்டியார் ஜே.பி. அவர்களாலும் திரு சுப்பையா* P.J.K. *அவர்களாலும் மிகச் சிறப்பாக இரண்டு முறை மகாகும்பாபிசேகம் கண்டது.*

*அதற்குப் பிறகு திரு வெங்கடாசலம், திரு.எம்.பாவாடை போன்ற முன்னாள் ஆலயத் தலைவர்களின் பெருமுயற்சியால் ஆலயத்தின் வளர்ச்சிப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு பல முன்னேற்றச் செயல் வடிவங்கள் கொண்டுவரப்பட்டது போற்றுதலுக்குறியதாகும். இவர்கள் அனைவரின் தலைமையின் கீழும், அவர்களைச் சார்ந்திருந்த நிர்வாகச் சபையின் ஒட்டுமொத்த ஆசீர்வாதத்தோடும் இறைவன் அருளோடும் இவ்வாலயம் 3.5 மில்லியன் ரிங்கிட் செலவில் திருத்தி அமைத்துப் புதுப்பிக்கப்பட்டு இன்று அழகுடனும் கம்பீரத்துடனும் காட்சியளிக்கிறது.*

## தலச் சிறப்புகள்

*பிரசித்தி பெற்ற மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயம் சரித்திர அடிப்படையில் அமைந்துள்ளது. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்ட இத்திருக்கோவிலில் நமது இந்து சமயத்தோடு கலந்துள்ள உருத்திராட்ச விருட்சத்தை முதன்மையாகக் கொண்டுள்ளது. மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயத்தின் கட்டிட அமைப்பும் அவ்விருட்சத்தை மையமாகக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளது. விருட்சங்கள் பெரும் போர் படைகளுக்குக் கூட நிழலாய் அமையக்கூடிய சக்தி பெற்றவை. இதனையே,*

*"தெள்ளிய ஆலின் சிறுபழத் தொரு விதை*
*தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்*
*நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை*
*அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு*
*மன்னக் கிருக்க நிழலாகும்மே"*

*(வெற்றி வேற்கை: 17)*

அதாவது மீனின் முட்டையைக் காட்டிலும் சிறியதான ஆல மரத்தினது விதை பெரிய விருட்சமாகி ஒரு நாட்டரசர் தம் யானை, குதிரை, சேனைப் படைகளுடன் தங்குமளவுக்கு தன் நிழலினைத் தரும் எனப் பொருள்படும். ஆலம் தனது தெள்ளிய விழுதுகளின் மூலம்தான் பெரியதோர் உருவமாகப் பெற்றுள்ளது எனும் அடிப்படையிலேயேதான் இக்கோவிலின் புதிய அமைப்பும் கலை நுணுக்கங்களும் அமையப்பெற்றுள்ளது. கருவரையில் இடம்பெற்றிருக்கும் இவ்விருட்சத்தைச் சுற்றி மண்டல வடிவத்தில் (தூண்கள்) மூலம் கிளைகள் விட்டுப் பெரியதொரு கவின்தரு கோவிலாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் சிற்பக்கலை அம்சம் பல்லவ அரசர்கள் காலத்துச் சிற்ப நுட்பங்களைக் கொண்டுள்ளது எனலாம். பன்னெடுங்காலமாக மிகச் செழிப்பாக வளர்ந்தோங்கி கம்பீரமாக வீற்றிருந்து திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களுக்குக் காட்சி தரும் அடையாளமாக இருந்து வரும் இவ்விருட்சம் புதிய கோவிலின் அமைப்பில் முக்கிய அம்சமாக இடம் பெற்றுள்ளது. இதுவே இக்கோவிலின் முக்கியச் சிறப்பாகக் கொள்ளப்படுகின்றது.

மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயத் தோற்றத்திற்கு அஸ்திவாரமாக இருந்த மரம் வெள்ளிக் கவசத்தால் அலங்கரிக்கப்பட்டு இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஆலயத்திற்கு நடுவே இம்மரம் இருப்பதும் மரத்தைச் சுற்றியே ஆலயம் எழுப்பப்பட்டிருப்பதும் இதன் சிறப்புகளாகும்.

கோவில் கோபுர தரிசனத்தைப் பெற கொடிமரத்தின் மேலே கண்ணாடி பொருத்தப்பட்டுள்ளது. மூலவரைச் சுற்றி முறையே கணபதி, சிவன், மகாவிஷ்ணு, அம்மனை அடுத்து எழுந்தருளி சன்னதி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இக்கோவிலில் ஐந்து வீதிகள் அல்லது பிரகாரங்கள் அமைந்துள்ளது. ஐந்து வீதியின் மற்ற சன்னதிகள் முறையே நாகர், பைரவர் போன்றோருக்கு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வீதியில்தான் காண்டாமணி கோபுரமும் அமைந்துள்ளது (ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயம் 3ஆவது கும்பாபிஷேக மலர், 2008, p.43).

நமது நாட்டின் திருமுருகன் ஆலயங்களில் தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம், சித்திராப் பௌர்ணமி, வைகாசி விசாகம் போன்ற விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயத்தில் மிக மிகச் சிறப்பாகவும் மகோவுன்னதமாகவும் கொண்டாடப்படும் பெருவிழா பங்குனி உத்திரமாகும். ஒவ்வொரு ஆண்டிலும் பங்குனி உத்திர விழாவிற்கு நூற்றுக்கணக்கான பேருந்துகளிலும் மகிழுந்துகளிலும் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கூட்டம் திரண்டு வந்து கோவிலுக்கு அருகிலுள்ள சிற்றூரில் நீராடி, காவடிகள் எடுத்து மரத்தாண்டவரை இன்றும் வழிபட்டு வருகின்றனர். இவ்விழாவிற்குத் தென்கிழக்காசியாவிலிருந்து ஏறத்தாழ ஏழு லட்சம் பக்தர்கள் திரள்கிறார்கள் என்றால் மிகையாகாது. பக்தர்களின் வேண்டுதல்கள் நிறைவேறும் காரணத்தால் இந்தக் கோயிலின் மிகச் சிறப்பான நாளான பங்குனி உத்திரத்தன்று சுமார் 300,000க்கும் மேல் அர்ச்சனைகள் நடைபெறுகின்றன.

அதுமட்டுமின்றி மலேசியாவில் இதுவரை வேறு எந்த ஆலயத்திலும் இல்லாத அளவில் ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே கோலாலம்பூர் பத்துமலை ஆலயத்திலிருந்து 200 கிலோமீட்டர் தூரம் மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயத்திற்குப் பாத யாத்திரையாக புனித நடைப்பயணம் குழு முறையில் மேற்கொள்ளப்படுகிறது. இதற்குப் பல நிர்வாகங்கள் சன்மானங்களும், தங்கும் இடவசதிகளும், உணவும் கொடுத்து இப்பாத யாத்திரைகளை ஆதரிக்கின்றன (ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயம் 3ஆவது

*கும்பாபிஷேக மலர், 2008, p.138).*

ஆண்டுதோறும் ஏற்படும் வெள்ளக் காலகட்டங்களில் இருந்து ஆலயம் பாதிக்கப்படாத வகையில் தரைமட்டத்திலிருந்து மூலஸ்தானப் பகுதி 10 அடி உயர்த்திக் கட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நமது அரசாங்கம் பல்வேறு சமய நம்பிக்கைகளையும் வழிபாடுகளையும் ஆதரிக்கும் வண்ணம் மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலய நிகழ்வுகளுக்கு ஆதரவும் நம் இந்து சமய வழிபாட்டிற்குச் சுதந்திரமும் வழங்கியுள்ளது. அதோடு மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயம் அமைந்துள்ள வட்டாரத்தைச் சுற்றுலாத் தளமாகவும் அங்கீகரித்துள்ளது. இதுவே நம் மலேசிய நாடு, நம் தேசியக் கோட்பாட்டின் முதற்கோட்பாடான 'இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்' என்பதை வலியுறுத்துவதை உறுதிபடுத்துகிறது.

மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் தங்கும் வசதிகளுடைய விடுதிகளும் இங்கு கட்டப்பட்டுள்ளன. நகரை விட்டு வெகு தொலைவில் அமையப்பெற்றிருப்பதால் தங்கும் வசதிகளுடன் இந்த ஆலயம் புதுப்பிக்கப்பட்டிருப்பதும் இதன் சிறப்புகளுள் ஒன்றெனலாம்.

அதுமட்டுமல்லாமல் 'சேயோன் மைவரை உலகமும்' (தொல், பொருள், அகத்திணை: 5) எனும் தொல்காப்பியத்தின் கூற்றுப்படி குறிஞ்சி நிலக் கடவுளான முருக வழிபாடுகள் குன்றுப் பகுதிகளில் நடைபெற்றன என்பது புலனாகும். 'குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம்' என்று போற்றியும் வழிபட்டும் வரப்படும் முருகன், ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயத்தில் ஆண்டிக் கோலத்தில் மரத்தடியில் நின்று தெய்வக் காட்சி தருகிறார். தம்மை நாடி வரும் பக்தர்களுக்கு அருள்பாலித்து அவர்களின் பக்தியால் நெகிழ்ந்து அவர்களின் வேண்டுகோளை ஏற்று அருள்பாலித்து வருகின்றார்.

குழந்தை பாக்கியம் வேண்டி வரும் பக்தர்களின் மனக்குறையைப் போக்குவது, திருமணம் நடைபெறாதவர்களுக்குத் திருமண பாக்கியம் வழங்குவது, குடும்பத்தில் நிம்மதியின்மை, நோய், பில்லி, சூன்யம், கடன் தொல்லை போன்றவற்றை விரட்டியடித்து தம்மை நாடி வரும் பக்தர்களுக்குச் சகல செல்வங்களையும் சகல வசதிகளையும் அளித்து அவர்களின் மனம் குளிரச் செய்கின்றார். வாய்பேச இயலாதோருக்கு பேசும் ஆற்றல் கிடைத்த இடமாகவும், நடக்க முடியாமல் தவித்தவர்களுக்கு நடக்கும் சக்தி கிடைத்த அதிசய இடமாகவும், குழந்தைச் செல்வங்கள் இன்றி ஏங்கி வந்த குலமகளிர்க்குப் பலனீந்த இடமாகவும், எத்தனையோ தமிழ்ப் பெண்களுக்குப் பிரசவ இடமாகவும் விளங்கி வந்திருப்பது மரத்தாண்டவர் சன்னிதானமே. இன்னும் இதற்கு எத்தனையோ ஆதாரங்களைக் காட்டலாம்.

அமைதியான ஆராவாரம் இல்லாத தவம் செய்வதற்கு ஏற்ற இடமாக மரத்தாண்டவர் ஆலயம் இன்று திக்கெட்டும் புகழ் பரப்பி நிற்கிறது. பகாங் மாநில சுல்தான் அவர்கள் எத்தனையோ ஆண்டுகளாக மரத்தாண்டவர் மீது அன்பும் பாசமும் காட்டி வருகிறார். அதோடு கும்பாபிஷேகத்திற்கு முதல் நாளன்று 7.02.1973 புனித மரம் பாதுகாப்புடன் அப்படியே உள்ளே வைக்கப்பட்டு அழகுற எழுதப்பட்டிருக்கும் புதிய கோவில் இல்லத்தை பகாங் சுல்தானே மனமுவந்து திறந்து வைத்தார். குறுக்கே ஓடும் சாலையைச் சிறிது தொலைவிற்கு அப்பால் மாற்றியமைத்து மரத்தாண்டவர் கோவிலை மேலும் விரிவுபடுத்தும் ஆலய நிர்வாகத் திட்டங்களுக்குச் சுல்தான் ஆதரவு வழங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதோடு மலேசியாவிற்கு வருகை தந்த குன்றக்குடி அடிகளாரும் திருமுருக கிருபானந்தவாரியாரும் மரத்தாண்டவர் சன்னிதானத்தில் மனமுருகி வணங்கியிருக்கிறார்கள். பாலகவி திருவயிநாகரம் திரு.வே.இராமநாதன் செட்டியார் 'ஸ்ரீ மரத்தாண்டவர் பதிகம்' என்னும் தோத்திரப் பாமாலை ஒன்றைப் பாடித் தந்திருக்கிறார் *(ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயம் 3ஆவது கும்பாபிஷேக மலர், 2008, p.76).*

## மென்மேலும் அதிக மக்களை ஈர்ப்பதற்கான பரிந்துரைகள்

இறைவணக்கம் என்பது அனைவராலும் மேற்கொள்ளக்கூடிய ஒரு காரியமன்று. இறைவனை வணங்குவதற்கும் அவனைப் போற்றி அவன் திருநாமங்களை உச்சரிப்பதற்கும் அவனருள் வேண்டும். இதையே, 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' (சிவபுராணம்: 18) என்று சமயக்குரவர்கள் நால்வர்களுள் ஒருவரான மாணிக்கவாசகப் பெருமான் அருளியுள்ளார்.

இந்த ஆலயத்தின் எழுச்சியும் வளர்ச்சியும் இந்த வட்டார மக்களின் ஒற்றுமையையும் ஆலய நிர்வாகத்தினரின் பொறுப்புணர்வையும் விளக்குகின்றது. அதே வேளையில், இந்த ஆலயம் சுற்று வட்டாரத்தில் வாழ்கின்ற இந்து பெருமக்களுக்கு ஒரு சமூக நலச் சேவை மையமாகவும் திகழ வேண்டும். அப்போதுதான் மென்மேலும் அதிக மக்களை ஈர்க்க முடியும் என்பது மறுக்க முடியாத கூற்றாகும்.

இறைநெறிமுறைகளுடன் சமுதாய அக்கறையும் மனதிற்கொண்டு நலிந்த நிலையில் உள்ள மக்களுக்கு தன்னார்வச் சேவை செய்திட ஆலய நிர்வாகத்தினர் முன்வர வேண்டும். அத்துடன், ஆன்மீக விளக்க உரைகள், மாணவச் செல்வங்களுக்குப் பாலர் பருவக் கல்வி, இசை நடனப் பயிற்சி போன்றவற்றையும் நல்கிட முயற்சிகள் மேற்கொண்டால் சமுதாயத்தில் நன்னெறி மேலும் செழிக்க வாய்ப்புண்டு. அதோடு, மரத்தாண்டவர் ஆலயத்திற்கு மென்மேலும் அதிக மக்களை ஈர்ப்பதற்கு இது ஒரு காரணமாக அமையும்.

நகரைத் தாண்டி தொலைவிலிருந்து வரும் பக்தர்கள் தங்கி இறைவனை வழிபட மேலும் அதிநவீன வசதிகளுடைய தங்கும் விடுதிகளை ஏற்பாடு செய்ய வேண்டும். பி.கே சாமி அவர்களின் கூற்றுப்படி, ஆலயங்களில் இறைவனைத் தரிசிக்க அமைதியான சூழ்நிலையும் அதற்கான வசதிகளும் ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும் (2001: p.XXIX). சமுதாய இயக்கங்கள் பல அறப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதாவது தமிழ்ப்பள்ளி மாணவர்களைத் தத்தெடுத்து வளர்ப்பது, அவர்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தித் தருவது போன்ற அறப்பணிகளைச் செய்வதால் மக்களுக்கு ஆலயத்தின் பாலும் ஆலய நிர்வாகத்தின்பாலும் மதிப்பும் பக்தியும் ஏற்பட்டு அவ்வாலயத்திற்கு வருகை புரிவர் என்பது மறுக்க முடியாததாகும்.

அதோடு மட்டுமல்லாது, ஆலய நிர்வாகம் சுற்று வட்டாரத்திலுள்ள இந்து மக்களின் சமய போதனைக்கு வழிவகை செய்ய வேண்டும். தேவார, சங்கீத வகுப்புகள், சமய போதனை வகுப்புகள் போன்றவற்றை இலவசமாகவோ கட்டணங்கள் வசூலித்தோ நடத்துவதால் மக்களின் ஞான வளர்ச்சிக்குத் துணைபுரிவதோடு மக்களை ஈர்க்கவும் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

அதோடு மேற்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் இன்னும் கூடுதலாக வழங்கப்படுவதன் மூலம் மரத்தாண்டவர் ஆலயத்திற்கு மென்மேலும் மக்கள் கூடுதலாக வந்து அவர்களின் நற்பணியைப் போற்றி ஆதரவு தெரிவிப்பர் என்பது மறுக்க முடியாத கூற்றாகும்.

ஆகவே, ஆலயங்கள் பூஜைகள், அர்ச்சனைகள் போன்றவற்றில் மட்டும் கவனம் செலுத்தாமல் இதுபோன்ற அறப்பணிகளையும் தன்னார்வச் செயல்களையும் மேற்கொள்வதன் மூலம் மக்களின் நல்லாதரவையும் நன்மதிப்பையும் பெற்று சிறந்து விளங்க வாய்ப்புண்டு. மென்மேலும் மக்களை ஈர்ப்பதற்குரிய தூண்டுகோலாகவும் அமையும் என்பது வெள்ளிடை மலையாகும்.

## முடிவுரை

இந்து பாரம்பரியத்தைப் பொருத்த மட்டில் ஆலயங்களில் நடைபெறும் வழிபாடானது தனி மனிதனுக்கு மட்டுமின்றி பொதுவில் உலக மக்களுக்கும் நன்மை ஈட்டித் தரும் விதமாக நடத்தப்படுகிறது. அவ்வகையில் மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயம் பகாங் மாநில மக்களையும் தாண்டி உலக

மக்களின் வழிபாட்டிற்கு வித்தாகியுள்ளது. மாரான் சுங்கை ஜெரிக் வட்டாரத்தில் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயம் அமைந்திருந்தாலும், பகாங் மாநில அளவில் மட்டுமின்றி மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற பல நாடுகளிலும் நமது மரத்தாண்டவரின் புகழ் மேலோங்கியுள்ளதைக் கண்டு பகாங் மாநிலத்தில் வாழும் இந்துக்கள் பெருமை கொள்ள வேண்டும். கோவில்களாக உருவாகியிருக்கும் புண்ணியத் தலங்கள் அனைத்தும் இயற்கை எழில் தவழும் சுற்றுச் சூழலோடு இறைவன் மனத்தில் நிலைநிறுத்தி, தியானம் செய்ய உகந்த இடங்களாக இருக்கும் (ஏ.எம்.ராஜகோபாலன், 2012: ஜீ.122). இத்தகைய திருக்கோயில்களில் வழிபடும் ஆன்மாக்கள், ஆலய சிறப்புகளாலும் அங்கு வீற்றிருக்கும் இறைவனின் அருளாலும் பக்தி பரவசத்தின் உன்னத நிலைக்கு இட்டுச் செல்லப்படுகின்றனர். ஆகவே, திருத்தலங்களின் சிறப்புகளை அறிந்து தெளிந்து வழிபடுதல் மேலும் போற்றுதலுக்குரியது.

## References


Auvaiyaar. (1990). *Kondrai Ventha*. Chennai: Vanathi Publications.

Malar Veliyiddu Kuzhu. (2008). *Sri Maratandavar Alayam 3-vathu Kumpabisheka Malar*.

Malaya Palkalaikalaga Hindu Sangam. (1987). *Hindu Samayam Oor Arimugam*.

Manikkavasakar. (1988). *Sivapuranam*. Chennai: manimekalai prasuram.

Narayanasamy Pillai, T., P. (1957). *Athiveraramapandiyan Arulicheytha Vetri Vetkai*. Chennai: Manonmoney Vilasa Puthakasaalai.

Rajakopalan, A., M. (2012). *Anantha Valvalikum Arputha Alayangkal*. (Vol, 1 & 2). Chennai: Kumutham Puthaka veliyidu.

Rajakopalan, M. (1989). *Arul Manam Tigalum Aalayangal*. Chennai: Hindu Publications.

Rajantheran, M., Silllalee, K. (2017). "The Deities of Sangam People through Purananuru" in *Journal of Tamil Peraivu*. (Vol, 5 & pp, 53-64).

Rajantheran, M., Silllalee, K., & Viknarasa, R. (2012). *Hindu Samayam Oor Arimukam*. Petaling Jaya: Malaysia Hindu Sangam.

Raman, P. Iraivalipaddil Hindukal. Johor: Hema Publications.

Sando.K & A.Mani. 2006. *Indians Community's in south East Asia.* Singapore: Institute of South East Asian Studies.

Silllalee, K., & Rajantheran, M. (2014). "Hindu Religious Practices Exposed in Malaysian Tamil Movies", *Journal of Indian Culture and Civilization*. (pp.37-44). Kuala Lumpur: department of Indian studies, University Malaya.

Sithambara Sokkalingam. (1987). *Manathukiniya Saiva Samayam*. Chennai: Thirumalai Theyvam Arts Printers.

Tholkapiyar. *Tholkapiyam*.

http://kaumaram.com/aalayam/index_maran.html

http://www.thevaaram.org

# இமையம் படைப்புகளில் பெண்களின் நிலை ஒரு ஆய்வு

# Portrayal of women in creative writings of Imayam Padaippugal

முனைவர்.ஆர்.விஜயசாமுண்டீஸ்வரி / Dr. R. Vijayasamundeswary [1]

மு.சரளாதேவி / M.Saraladevi [2]

***Abstract***

Generally in any society women were perceived as weaker ones as compared to men. The idea of feminism emerged to shatter this bias perception. Though the feminist idea is well spread all over the world, but the implementation of this idea was not fully optimized. Lately, many literary works have been produced to disseminate and establish the idea of feminism. The creative writings of the *Imayam padaippugal* is one of it. Though the women characters of Imayam Padaippugal are portrayed as totally independent, but they are still victimised by the society in many ways. This article highlights the concept of real feminism based on the creative writing of Imayam Padaippugal, a collection of Tamil creative writings.

Date of submission: 2018-10-30
Date of acceptance: 2018-12-05
Date of Publication: 2018-12-30
Corresponding author's
Name: M.Saraladevi
Email: saralafromkovai@gmail.com

**Key Words:** Feminism, Imaiyam Creative Works, Society, Cast, Victimization of Women.

## முன்னுரை

பெண்ணியங்களில் பலவகை என்பது தவிர்க்க முடியாதது இவற்றில் உண்மையான பெண்ணியத்தை தேடுவதென்பது கேலிக்குரியது என்கிறார். சந்தால் மொபெ நிலவுடைமைச் சமூகத்தின் தொடக்க காலத்தில் தாய் வழிச் சமூகம் நிகழ்ந்திருந்தது. நிலவுடைமைச் சமூகம் நன்கு வளர்ச்சி பெற்றக் காலத்தில் தந்தை வழிச் சமூகம் உருவாக்கிய பிறகு தான் முதன் முதலில் பெண் கவரப்பட்டு அடிமைப்படுத்தப்படுகிறாள். பெண் உடலமைப்பு, பாலினம் அடிப்படையிலும், குடும்பம், சமூக, அரசியல், பொருளாதாரம், நிறுவனங்களில் பெண்ணின் உழைப்பு சுரண்டப்படுதலும், பெண்ணை இன உற்பத்திக் கருவியாகவும் பொருளாகவும், பார்ப்பதாலும் நிலவுடைமைச் சமூகம் முதல் இன்று வரை பெண்கள் அடிமைபடுத்தப்பட்டு உள்ளனர். ஆணாதிக்கத்தின் கடுமையான அடக்கு முறையிலிருந்து விடுதலை பெறுவதற்காகப் பெண்கள் போராடி வருகின்றனர். இமையத்தின் படைப்புகள் கோவேறு கழுதைகள் ,ஆறுமுகம் ,செடல், செல்லாப் பணம், ஆகிய ஐந்து நாவல்களும் மண்பாரம் வீடியோ மாரியம்மன், கொலைச்சேவல் ஆகிய மூன்று சிறுகதை

[1]The author is a Head of Department, Sri Krishna Arts and Science College, Coimbatore, Tamil Nadu, India.

[2] The author is a research scholar in Sri Krishna Arts and Science College, Coimbatore, Tamil Nadu, India. saralafromkovai@gmail.com

தொகுப்புகளையும் எழுதியிருக்கிறார். இவரின் நாவல்களில் பெண்களின் நிலையை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

முதலாளித்துவ அமைப்பில் பெண் நிலை

நிலவுடைமைச் சமூகம் வளர்ச்சி பெற்ற பின்பு,குடும்பம்,பொருளாதாரம்,, அரசு நிறுவன அமைப்பு வரலாற்று அடிப்படையிலான ஆணாதிக்கப் போக்கினைப் பற்றி ஏங்கல்ஸ் குறிப்பிடுவது வரலாற்றுக்கு முந்திய புராதனமான சமூகங்களில் பெண்ணுக்குச் செயலூக்கமான பங்கிருந்தது. அது பின்னர் வேளாண்மைச் சமூக மாற்றத்தால் புதிதாக உருவான குடும்பம், நிலவுடைமை,அரசு ஆகியவற்றால் ஆணின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட நிலைமையே பெண்ணுக்கான முழு வாழ்வாக அமையலாயிற்று என்று ஏங்கல்ஸ் கூறுகிறார்.

பெண் எல்லா இடங்களிலும் அனைத்துச் சமூகத்திலும் ஒடுக்கப்பட்டாள். நவீன முதலாளித்துவத்தில் மேலும் ஒடுக்கப்பட்டாள். பெண்கள் குறைந்த கூலி பெறும் தொழிலாளர்களாய் நியமனம் செய்யப்பட்டு, சுரண்டப்பட்டார்கள். பலர் வீட்டு வேலை செய்பவர்களாய் மாறினர். பணம்,மதிப்பீடுகளை முடிவு செய்கிற போது பெண் வெளியே சென்று பணி செய்ய வேண்டிய நிர்பந்தம் நேர்ந்தது. நாள் முழுவதும் செய்யப்படுகிற வீட்டு வேலைகளுக்குச் சம்பளமில்லாததால்இ அவள் உழைப்பிற்கு மதிப்பில்லாமல் போனது. முதலாளித்துவச் சமுதாயம் தேவை. இனவேறுபாடு போன்றே பாலின வேறுபாடும் முதலாளித்துவச் சமூகத்திற்கு முக்கியமாய் அமைந்து, பெண்கள் குறைந்த கூலிக்கு வரும் உழைப்பாளிகளாக்கப்பட்டு அவர்களைப் பயன்படுத்தி லாபம் பெறுவது முதலாளித்துவப் போக்காகிவிட்டது.

மார்க்சு, ஏங்கல்சு ஆகியோர் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தில் பெண்ணைப்பற்றி, பெண்ணின் சமூகத் தகுதி நிலையைப் பற்றி விளக்கும்போது, உயிர் உற்பத்தி செய்வதிலும், சமூகத்தில் உற்பத்தி சக்திகளை உருவாக்குவதிலும், சுதந்திரமாகவும் சமஉரிமை பெற்றும் வாழ்ந்து வந்த பெண்கள் மேற்கூறிய முதலாளித்துவத்தின் போக்கினாலும் தனிச் சொத்துரிமையாலும், துணை நிலையினராகவும்இ சார்பு மாந்தராகவும் மாறிப் போயினர். இம்மாற்றம் வரலாற்று நிகழ்ச்சியில் தவிர்க்கவியலாத மாற்றமாகியது என விளக்குகின்றனர்.

## பெண்களும் சமூகக் கட்டமைப்புகளும்

பண்டைய கால மன்னர் சமுதாயக் கட்டமைப்பினை வெளிப்படுத்திய இலக்கண நூலான தொல்காப்பியம் அகம், புறம் சார்ந்த செயல்பாடுகளையும் எடுத்தியம்புகிறது. அன்றைய காலத்தில் அதிகாரத்தில் இருந்தோர்கள், பெண்களுக்கெனப் பல கட்டுபாடுகளை சமூக பண்பாடுகளாய் விதித்து, பெண்களுக்கு எதிரான பல்வேறு வகையான ஒடுக்குமுறைகளையும், அரங்கேற்றியிருப்பதைத் தொல்காப்பிய இலக்கண வழியும் அறிய முடிகிறது.

*"பெண்ணிற்குரிய தகுதிகளாக,*

*அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்*

*நிச்சமும் பெண்பாற் குரிய என்ப" (தொல்,காவு96)*

இந்நூற்பாவின் வழி பெண்களுக்கு அச்சம், நாணம், மடம் ஆகிய மூன்றும் அடிப்படைத் தகுதிகளாக இலக்கணம் வகுத்துள்ளது. அவற்றை கட்டுடைக்கின்றனர் இவரின் படைப்பில் வரும் பெண்கள்.

*'வெள்ளிக்கிழமயில என்னெப் பெத்தியே மாதாவே*

*உன் வெள்ளி வயித்திலியும் நான் கருவா தரிச்சதும்*

*பச்ச கற்பூரமெல்லாம் தீஞ்சதும்*

*அன்னிக்கி இந்தக் கருவக் கலச்சியிருந்தா*

*எனக்கு இன்னிக்கி இந்தக் கலகம் வந்து*

*நேராது*

*அந்தக் கருவ சிசுவாக்கி இந்தப் பொல்லாத சீமையில*

*என்னெக் களங்கப்பட வச்சியம்மா.....' (செடல் p.147)*

இந்த பாட்டு செடல் நாவலில் வருகிறது. இப்பாடலை செடல்தான் பாடினாள். அதனால் அவளுக்கு மட்டும்தான் இந்தப்பாடல் பொருந்தும் என்று சொல்ல முடியாது. இவரின் நாவல்களில் வரும் பெண்கள் பாடியதாகவும் கொள்ளமுடியும். அப்பெண்களுக்கும் இப்பாடல் பொருந்துவதாகவும் கொள்ளமுடியும்.

## சமூகத்தில் பெண்கள் நிலை

*"சொல்லெதிர் சொல்லல் அருமைத் தாகலின்*

*அல்ல கூற்றுமொழி அவள்வயி னான (தொல்,களவு108)*

தலைவன் சொல்லிற்கு எதிர்சொல் பேசுதல் அருமையானது எனக் கூறிஇ பின்னர் பேசாது நிற்பதே தலைவியிடம் நிகழும் நிகழ்வாகும் என்பதன் மூலம்இ தவறு செய்த தலைவனைப் பேசுதல் அருமையானது தான் ஆனால் பேசக்கூடாது என மறைமுகமாய்க் கட்டளையிடப்படுவதைக் காணமுடிகிறது.

*'உயிரினும் சிறந்தன்று நானே நாணினும்*

*செயிர்தீர் காட்சிக் கற்புசிறந் தன்றெனத்*

*தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு*

*காமக் கிழவன் உள்வழிப் படினும்*

*தாவில் நன்மொழி கிளவி கிளப்பினும்*

*ஆவகை பிறவும் தோன்றுமென் பொருளே"*

*(தொல், களவு111)*

உயிரை விடச் சிறந்தது நாணம். நாணத்தை விடச் சிறந்தது கற்பு என்ற முன்னோர் கூற்றோடு தவறு செய்த தலைவனைத் தலைவி வருத்தமுற பேசாது ''கற்பு' எனும் ஒன்றுமில்லா நிலைக்குப் பொருள் கூறி உயிரையும் விட சிறந்ததாக உடையது கற்பு என உருவாக்கி அது முன்னோர் மொழியெனவும் தவறு செய்த கணவனை எதிர்த்து எதுவும் பேசக்கூடாது எனவும் அப்படிப் பேசினால் அது கற்பிற்கு இலக்கணமாய் இருக்காது என்றும் 'கற்பு' என்ற வெற்று இலக்கணத்தைப் பண்டைய ஆணாதிக்கச் சமுதாயம் பெண்களின் மீது திணித்து பெருங் கொடுமையைச் சுமத்தியதை அறிய முடிகிறது.

ஆனால் இமையம் காட்டும் பெண்கள் அதிகம் படித்தவர்கள் அல்ல. பெண் உடல், பெண் அரசியல், உடல் அரசியல், பெண் மொழி பேசுபவர்கள் அல்ல. ஆங்கிலம் படித்தவர்களோ, தத்துவ விசாரங்களில் ஈடுபடுபவர்களோ அல்ல. பெரிய அழகிகளும் அல்ல. சமூகம் சார்ந்து பேசக்கூடிய சிந்தனாவாதிகளோ, புரட்சிப்பெண்களோ அல்ல. இவர் பெண்கள் வாயாலும் வயிற்றாலும் உருவானவர்கள், அதே மாதிரி வாயாலும் வயிற்றாலும் வாழ்பவர்கள். வாழ் நாளெல்லாம் வாயையும் வயிற்றையும் நிரப்புவதற்காக போராடுபவர்கள். போராட்டத்தில் ஓயாமல் தோற்றுக்கொண்டே இருப்பவர்கள். இந்த பெண்களுக்கு கனவுகள்கூட வருவதில்லை. மீறிவந்தாலும் வயிறு நிறைய சாப்பிட்டதுபோலவே கனவு காண்பவர்கள். காரணம் வயிறுதான் அவர்களுக்கு வாழ்க்கை.

உயர்ந்த சாதி இல்லை. உயர்ந்த பண்புகள் இல்லை. சொத்து இல்லை. நகைகள் இல்லை. சமூக அந்தஸ்து இல்லை. அழகாகவும் இல்லை. குடும்ப பாதுகாப்பு அற்றவர்கள். கணவன்இ குழந்தைகள் என்ற பாதுகாப்புக்கூட அற்றவர்கள். தமிழ்ச்சமூகம், இந்திய சமூகம் உருவாக்கி வைத்திருக்கும் ஒழுக்கப் பண்புகளோஇ அறப்பண்புகளோ இல்லாதவர்கள். சமூகத்தின் கேலிக்கும் கிண்டலுக்கும், ஏளனத்திற்கும் ஆளான பெண்கள். சமூகத்தின் இழிவு சின்னங்களாக இருக்கக்கூடியவர்கள். இந்த பெண்கள் லட்சியப் பெண்களோ, புதுமை பெண்களோ

அல்ல. சராசரிக்கும் சற்று கீழே உள்ளவர்கள்.

இவர்கள் குடும்பப் பெண்கள் அல்ல. "பத்தினி பெண்டீர் அல்லோம்" என்று மாதவிக்கு அவளுடைய தாய் சித்திராபதி கூறுவாள். அத்தகைய பெண்கள்தான். சமூகத்திற்காக சமூகம் உருவாக்கிய பெண்கள். அதாவது பொது சொத்து. சமூகத்திற்காக சமூகத்தால் பலிகொடுக்கப்பட்ட பெண்கள். சமூகத்தின் உழைப்பிற்காகவும், சமூகத்தின் உல்லாசத்திற்காகவும், சமூகத்தின் நம்பிக்கைகளுக்காகவும் பலியிடப்பட்ட பெண்கள். இப்பெண்கள்தான் இன்று தமிழ்ச் சமூக வாழ்க்கையாகஇ தமிழின் பண்பாட்டு கலாச்சார அடையாளமாக இருக்கிறார்கள்.

இமையம் படைக்கப்படட பெண்கள் குடும்பப் பெண்கள் மாதிரி வீடும், தெருவும் என்று மட்டுமே இருக்கக்கூடியவர்கள் அல்ல. பல ஊர் சனங்கள் திரண்டு இருக்கக்கூடிய சபையில் ஆடக்கூடியவர்கள்,பாடக்கூடியவர்கள். பேசக்கூடியவர்கள். எந்த நிலையிலும் தேங்கிப் போகக்கூடியவர்கள் அல்ல. தண்ணீர் மாதிரி ஓடிக்கொண்டேயிருப்பவர்கள். ஒவ்வொரு கணத்தையும் ஆசை தீர வாழ துடிப்பவர்கள். இவர்களில் பெண்களில் ஒருவர்கூட தற்கொலை செய்துகொண்டவர்கள் அல்ல. மாதா மாதம் உதிரத்தைப் பார்க்கிறவர்கள் பெண்கள். ஒவ்வொரு பிரசவத்தின்போதும் உதிரத்தைப் பார்க்கிறவர்கள். ஆனால் தன் குழந்தையின் கையில் ஒரு துளி ரத்தத்தை கண்டதும் துடித்துப்போகிறவர்களும் பெண்கள்தான்.

"ஆரோக்கியம் மேரி வாடி இருப்பதை கண்டு துடிக்கிறாள் ஆனால் மற்றப் பெண்களை வெகு சாதாரணமாக சரிசெய்துவிடுகிறாள்"

## பெண்ணும் துணிச்சலும்

சமூக ஒழுக்க, நீதி, நெறிஇ அறப் பண்புகளை எல்லாம் பெண்ணை மையப்படுத்தியே சமூகம் வைத்திருக்கிறது. பெண் ஓடிவிடுவாளோ என்ற தனிமனித அச்சம், சமூக அச்சம்தான் பெண்களைப்பற்றி எழுத வைக்கிறது. முன்பின் தெரியாத ஒரு ஆணோடு வாழ்வதற்குப் போகிறாள் பெண். பதினாறு பதினேழு வயதிலேயே ஒரு பெண்ணால் குழந்தையை பிரசவிக்க முடிகிறது. எவ்வளவு பெரிய தைரியம் இது? துணிச்சல் இது. இந்த தைரியத்தில்இ துணிச்சலில் நூறில் ஒரு பங்குகூட ஆணிடம் இல்லை. இமையத்தின் படைப்புகளில் படைக்கப்படட பெண்கள் தைரியமானவர்கள் துணிவு மிக்கவர்கள் பெண்ணிற்குரிய தகுதிகளாக சங்க இலக்கியம் சொன்ன இலக்கணத்தை தகர்த்தவர்கள்

நம்முடைய புராண, இதிகாச,கதைகள், வாய் மொழிக் கதைகள், எல்லாமும் ஏன் பெண்ணுக்கான ஒழுக்கத்தை, அறத்தைப்பற்றி மட்டுமே பேசுகின்றன? பத்தினி சொன்னால் மழை வரும், பத்தினி சொன்னால் மாநகரம் எரியும், பத்தினி கட்டளையிட்டால் பஞ்ச பூதங்களும் கைகட்டி நிற்கும் என்று எதற்காக சொன்னார்கள் என்றால் பெண் வலிமையானவள். மனரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், உடல் ரீதியாகவும். அதனால் அவளை வெல்ல முடியாது. அதனால் ஆண்கள் தந்திரம் செய்தார்கள். அந்த தந்திரங்கள்தான் இவை.

இமையம் உருவாக்கிய பெண்களில் ஒருத்தி கோவேறு கழுதைகள் நாவலில் வரும் ஆரோக்கியம், வண்ணாத்தி. அவள் மூலமாகத்தான் ஊர் துணிகள் வெளுக்கப்படுகின்றது. அவளுடைய உதவியால்தான் ஊரில் குழந்தைகள் பிறக்கின்றன. பிறந்த குழந்தைகளின் பீ துணி மூத்திரத் துணி அலசப்படுகிறது. பிள்ளைப் பெற்ற பெண்ணின் தீட்டுத்துணியை அவள்தான் அலசிதர வேண்டும். பிள்ளை பெற்ற பெண்களுக்கு மார்கட்டிக் கொண்டால் அவள்தான் வைத்தியம் செய்ய வேண்டும். பிள்ளைக்கு பால் கொடுக்க தாய்க்கு சுரக்கவில்லை என்றால் வண்ணாத்தியின் மார்பகத்தில்தான் பிள்ளை பால் குடிக்க வேண்டும். பெண் பிள்ளை வயசுக்கு வந்தால் சடங்கு

முடியும்வரை நாள்தோறும் தீட்டுத்துணியை எடுத்துக்கொண்டு போய் அலச வேண்டும். ஊரில் யார் செத்தாலும் முதலில் அவள்தான் போக வேண்டும். எழவு சொல்ல வாய்க்கரிசி தூக்க பாடை கட்ட குடம் உடைக்க பால் தெளிக்க என்று அவள்தான் போக வேண்டும். அறுவடை காலத்தில் ஒவ்வொரு வீட்டுக்கும் களம் தூற்ற அவள்தான் போக வேண்டும். இரவில் ஒவ்வொரு வீட்டுக்கும் சோறு எடுக்க அவள்தான் போக வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக திருட்டுப் பிள்ளை வாங்கும் பெண்களின் கருவை கலைக்கவும் ஆரோக்கியம் வேண்டும். ஊர் ஆண்கள் செய்யும் பாலியல் தொல்லைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தன் மகள் மேரி எதிர்கொள்ளும் வன்புணர்ச்சியையும் அவள் சகித்துக்கொள்கிறாள்.

ஆரோக்கியத்தை யார் உருவாக்கினார்கள் இந்தச் சமூகம். ஊரின் நலனுக்காக பொது சொத்தாக்கப்பட்ட, பலியாக் கப்பட்ட, பலிகொடுக்கப்பட்ட பெண். அவளைத் தெரியாமல் அந்த ஊரில் யாராவது இருக்க முடியுமா? ஆண்களே இல்லையா, ஆண்கள் வேலையே செய்யவில்லையா என்றால் நாவலில் ஆண்கள் இருக்கிறார்கள். தாய் ஆட்டுக்குப் பின்னால் ஓடும் குட்டியாடுகள் மாதிரி. ஆரோக்கியத்தின் பின்னால் சவுரி. மேரியின் பின்னால் அவளுடைய புருசன். மனைவியின் பேச்சுக்கு மறு பேச்சில்லாமல் கையைக்கட்டிக்கொண்டு சின்ன சேலத்திற்கு ஓடுகிறான் ஜோசப்.

கோவேறு கழுதைகள் நாவலில் ஆரோக்கியம் மட்டும்தான் சமூகம் பலி கொடுத்த பெண் என்று சொல்ல முடியாது. ஆறுமுகம் நாவலில் வரக்கூடிய தனபாக்கியம், சின்னப்பொண்ணு, வசந்தா, அபிதா எல்லாருமே தனது உல்லாசத்திற்காக சமூகம் பலி கொடுத்த சமூகத்தின் பொது சொத்தாக்கிய பெண்கள். பாலியல் தொழிலாளிகள். இந்த நாவலில் ஆண்கள் நிறையவே இருக்கிறார்கள். ஆள் பிடித்துவரும் தரகர்கள், பெண்களை வைத்து தொழில் செய்யும் எஜெண்ட்டுகள், போலீஸ்ஸ்டேஷன், கோர்ட் என்று அலையும் ஆண்கள் இருக்கிறார்கள். எல்லாருமே தனபாக்கியம் சின்னப்பொண்ணு, வசந்தா, அபிதா என்ற பெயர்களுக்குப் பின்னால் இருக்கும் நிழல்கள். இவரின் நாவல்களில், ஆண்கள் நிறையவே இருக்கிறார்கள். எப்படி இருக்கிறார்கள்? பெண்களுடைய ஏவல் ஆட்களாக, எடுபிடிகளாக. பெண்கள் உழைக்கிறவர்கள், உழைப்பையே வாழ்க்கையாக கொண்டவர்கள். அதனால் சுதந்திரம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். உழைப்பு அவர்களுக்கு வலிமையைக் கொடுக்கிறது.

## நகரத்தில் பெண் நிலை

நகரமயமாதல் பெண்களை ஒரு வகையில் சுதந்திரமானவர்களாக மாற்றுகிறது. அதே நேரத்தில் பெண்களை இரட்டை உழைப்புக்கு ஆளாக்குகிறது. கிராமத்தில் மட்டுமல்ல நகரத்திலும் பெண்களுக்கு குறைந்த சம்பளம் தரப்படுகிறது. பெண்களை வேலைக்கு எடுப்பதே குறைந்த சம்பளம் கொடுக்கலாம் என்பதற்காகத்தான். அதிக உழைப்பு. குறைந்த சம்பளம். பெண்கள் என்றால் போராட்டமும் வராது. பாலியல் சீண்டலும் செய்யலாம். ஆறுமுகம் நாவலில் வரக்கூடிய பெண்களில் ஒருத்திகூட பாலியல் சீண்டலுக்கு பாலியல் வக்கிரத்திற்க்கு ஆளாகாதவள் என்று யாரையும் அடையாளம் காட்ட முடியாது. இது நகரமயமாதல் பெண்களுக்கு தந்த வெகுமதி. இதைத்தான் வளர்ச்சி என்றும் முன்னேற்றம் என்றும் போற்றுகிறோம். அதிவேக வளர்ச்சி அதிவே சீரழிவு.

கோவேறு கழுதைகள் நாவலின் ஆரோக்கியம். ஒரு கிராமத்தின் சொத்தாக, ஒரு கிராமத்திற்காக மட்டுமே பலியிடப்பட்டவளாக இருக்கிறாள். ஆறுமுகம் நாவலில் வரும் தனபாக்கியம், சின்னப்பொண்ணு வசந்தா, அபிதா ஒரு நகரத்தின் சொத்தாக, பலியிடப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

செடல் நாவலில் வரும் செடல், பாஞ்சாலி, லட்சுமி ஆகியோர் கிராமம், நகரம் என்ற எல்லையை மீறி பல ஜில்லாவிற்கும் பலி கொடுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். செடலுக்கு முப்பது கிராமங்கள் பட்டயம் எழுதி தருகிறது. அதே மாதிரி பாஞ்சாலிக்கும் இருபது கிராமங்கள் பட்டயம் எழுதி தருகிறது. இருவருமே கிராம தெய்வத்திற்கு பொட்டுக்கட்டி விடப்பட்டவர்கள். பொட்டுக்கட்டி விடப்பட்ட கோவில்களில் ஆடுவதோடு ஜில்லாவிட்டு ஜில்லா சென்று தெருக் கூத்து ஆடுகிற ஆட்டத்தினால் பல ஜில்லாவிலும் புகழ்பெற்ற பெண்களாக இருக்கிறார்கள். சமூகம் அவர்களை எப்படி பார்த்திருக்கும்? எப்படி நடத்தியிருக்கும்? எப்படி அதை இப்பெண்கள் சகித்துக் கொண்டார்கள்.

## முடிவுரை

பெண்கள் என்றாலே நம் சமூகத்தின் பொது புத்தியில் பல்வேறு இலக்கணங்கள் வகுத்து ஒரு கட்டுக்கோப்பை உருவாக்கி வைத்திருக்கிறார்கள் ஆனால் இமையம் படைத்திருக்கும் பெண்களும் இதே சமூகத்தில் வாழும் பெண்கள்தான் அவர்கள் தங்களுக்கென எந்த கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமாக வாழ்ந்தாலும் இந்த சமூகம் அவர்களை பலியாக்குவதையும் நாம் பார்க்கிறோம் ஒரு கிராமத்தின் தேவைக்காக பலியிடப்பட்ட பெண் ஆரோக்கியம். நகரத்தின் தேவைக்காக பலியிடப்பட்டவர்கள் தனபாக்கியம் வசந்தா சின்னப்பொண்ணு, அபிதா. சமூகத்தின் சாதிய சமய நம்பிக்கைகளுக்காக கலாச்சார பண்பாட்டு கூறுகளுக்காக பலியிடப்பட்ட செடலும் பாஞ்சாலியும். பொது உழைப்பிற்கு ஆரோக்கியம், பொது உல்லாசத்திற்கு தனபாக்கியம் பொது நம்பிக்கைக்கு செடல். இப்பெண்களின் வாழ்க்கையை தீர்மானித்தது சம்பந்தப்பட்ட பெண்கள் அல்ல. சமூகம்.என்பதை மிக அழகாக தன படைப்புகளை மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார் .

## References


Adiyarku Nallaar Urai, *Silapathikara Mulamum Uraiyum*.

Imaiyam. (1999). *Arumugam*. Chennai: Kriya.

Imaiyam. (2006). *Koveru Kaluthaigal*. Chennai: Kriya.

Imaiyam. (2006). *Sedal*. Chennai: Kriya.

Karl Marx. (2003). *Mulathanam: Arasiyal porulathara Vimarsanap Pakupaivu*. Chennai: New Century Book House.

Mallika, Aranga. (2002). *Tamil Ilakiyamum Penniyamum*. Chennai: New Century Book House.

Sivasubramanian, A. (2005). *Tamilakathin Adimaimurai*. Chennai: Klasuvadu Pathipakam.

*Tholkappiyam Porulathikara Mulamum Nachinarkiniyar Uraiyum.* (2007). Chennai: Ulakath Thamilaraichi Niruvanam.